*அத்தியாயம் 1*

# பொருளாதாரச் செயலாற்றம், தோற்றப்பாடு, விடயங்களும் கொள்கைகளும்

## 1.1 அறிமுகம்

*உள்நாட்டில் நிச்சயமற்ற தன்மைகளினால் சீர்குலைக்கப்பட்ட நிலையில் பாதகமான உலக பொருளாதார சூழல் ஒன்று 2001ஆம் ஆண்டை இலங்கையின் பொருளாதாரத்துக்கு கடினமான ஆண்டொன்றாக மாற்றியது. பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை இல்லாமல் செய்த தொடர்ச்சியான வெளிநாட்டு அதிர்ச்சிகளினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. அண்மைக்கால பன்முகப்படுத்தல்களுக்கு மத்தியிலும் பொருளாதாரத்தின் பாதிப்படையும்தன்மை அதிகரிப்பதை இது பிரதிபலித்தது. எனவே பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கும் ஆற்றலை அதிகரிப்பதற்கும் உறுதிப்பாட்டுடன் நிலைத்து நிற்கக்கூடிய உயர் வளர்ச்சியினை எய்துவதற்கும் உறுதியான கொள்கைச் சீராக்கங்களினது துணிகரமான அமைப்புச் சீராக்கங்களினதும் தேவையை அது தெளிவாகக் காட்டியது. இலங்கைத் தயாரிப்புகளுக்கான கேள்வியையும் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளையும் கடுமையாகக் குறைவடையச் செய்த உலக பொருளாதாரத்தின் மெதுவடைவானது ஐக்கிய அமெரிக்கநாடுகளின் மீது செத்தெம்பர் 11ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலினால் மேலும் மோசமடைந்தது. 2000ஆம் ஆண்டில் நிலவிய வரட்சியானது 2001ஆம் ஆண்டிலும் தொடர்ந்து உள்நாட்டு விவசாய வெளியீட்டின் குறைப்புக்கும் உள்நாட்டு உணவு விலைகளின் அதிகரிப்புக்கும் நீர்மின்வலு உருவாக்கத்தின் வீழ்ச்சிக்கும் காரணமாகியது. நீர் மின்வலு உருவாக்கம் குறைவடைந்தமையானது ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மின்வெட்டுக்கு இட்டுச் சென்றதுடன் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளிலும் தடங்கல்களை ஏற்படுத்தியது. இந்த நெருக்கடியை மேலும் மோசமாக்கும் வகையில் கட்டுநாயக்க சருவதேச விமான நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலினால் சுற்றுலா வருகைகள கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டு, வாணிப நம்பிக்கையை நலிவடையச் செய்து வெளிநாட்டு வர்த்தகம் கணிசமாகக் குறைவடைவதற்குக் காரணமாகியது. தாக்குதலைத் தொடர்ந்து அதன் இறுதி விளைவாக கப்பல்கள் மற்றும் விமானக் கம்பனிகளின் மீது அதிஉயர் யுத்த இடர்நேர்வு காப்புறுதி மிகைக் கட்டணம் ஒன்று விதிக்கப்பட்டது. இதே வேளையில் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் நிலவிய நிச்சயமற்ற அரசியல் நிலைமைகள் ஒரு புறத்தில் முதலீட்டாளர் நம்பிக்கையை தாழ்வடையச் செய்து மறுபுறத்தில் அமைப்புச் சீராக்கங்களின் நடைமுறைப்படுத்தலை பின்போடச் செய்தன. ஏற்கனவேயுள்ள அமைப்புமுறை நலிவுகள், கொள்கை விடயங்களின் தாமதங்கள் முரண்பாடான கொள்கை நடவடிக்கைகள், திசெம்பர் பொதுத் தேர்தலுக்கு தயாராகும்போது கொள்கை உபாயங்களின் நேர்மாற்றம் என்பனவற்றினால் இந்த நிலைமைகளின் எதிர்க்கணிய தாக்கம் மேலும் பெரிதுபடுத்தப்பட்டது. இந்தப் பின்னணியில் செலாவணி வீதத்தைத் தீர்மானிப்பதில் சந்தை சார்ந்த தாக்குவதற்கான நகர்வின் மேலுமொரு நடவடிக்கையாக 2001 சனவரியில்சுயாதீனமாக மிதக்கும் செலாவணி முறைக்குப் படிப்படியாகச் செல்லுதலும் சருவதேச நாணய நிதியத்துடன் துணைநில் ஒழுங்குபடுத்தல்களான ஒப்பந்தத்தில் ஈடுபட்டமையும் நிதியியல் சந்தையின் உறுதிப்பாட்டை ஓரளவு மேம்படுத்தியும் வெளிநாட்டு ஒதுக்குகளின் இழப்பினை நேர்மாற்றம் செய்தும் வெளிநாட்டு அதிர்ச்சிகளின் சுமையிலிருந்து விடுபடுவதற்கு நாட்டுக்கு இயலச்செய்தன. எனவே நடுத்தர காலத்தில் உறுதிப்பாட்டுடனான உயர்வளர்ச்சிக்கு மேடையாக அமையவுள்ள பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டிற்காக ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.*

*மிதமான நேர்க்கணிய உண்மை வளர்ச்சி, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை வலுப்படுத்தல் போன்றவற்றை எய்துவதற்கான எதிர்பார்ப்புக்களை ஏமாற்றச் செய்து 2001இன் பெறுபேறுகள் அதிகரித்த பணவீக்கத்துடன் பேரண்டப் பொருளாதார சமமின்மைகளை மோசமடையச் செய்த எதிர்க்கணிய உண்மை வளர்ச்சியாகும். உயர்வான பணவீக்கத்துடன் அனைத்து முக்கிய துறைகளிலும் எதிர்கணிய வளர்ச்சியைப் பதிவு செய்து பொருளாதாரத்தின் சுருக்கமானது பரந்தளவில் காணப்பட்டது. அது தலைக்குரிய உண்மை வருவாயைக் குறைவடையச் செய்து சேமிப்பதற்கான இயலுமையை நலிவடையச் செய்தது. உண்மை நியதிகளில் வீழ்ச்சியடைந்து அதன் மூலம் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களையும் தொழில் வாய்ப்புக்களையும் மட்டுப்படுத்தியது. முன்னர் நிலவிய பணவீக்கத்தின் வீழ்ச்சியடையும் போக்கின் நேர்மாற்றமானது பணவீக்க எதிர்பார்ப்புக்களை அதிகரிக்கச் செய்து பேரண்டப் பொருளாதாரத்தில் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதை மேலும் கடினமாக்கியது. ஏற்றுமதிகளைவிட இறக்குமதிகளில் கடுமையான குறைப்பு ஒன்று காணப்பட்டமையானது வெளிநாட்டு வர்த்தகப் பற்றாக்குறையினையும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினையும் கணிசமாகக் குறைவடையச் செய்து சென்மதி நிலுவையில் சிறிய மிகையொன்றினை ஏற்படுத்தியபோதிலும் வெளிநாட்டுத்துறையின் நிகழ்வுகளும் அவற்றின் தாக்கமும் வெளிநாட்டு அதிர்ச்சிகளினால் பொருளாதாரம் தொடர்ச்சியாகப் பாதிப்புக்குள்ளாகும் தன்மை அதிகரிப்பதை குறித்துக்காட்டியது.*

அரசிறை நிலைமை கணிசமாக மோசமடைவதானது இவ்வாண்டின் பொருளாதாரச் செயலாற்றத்தில் காணப்பட்ட இன்னுமொரு முக்கிய பண்பாகும். அரசின் அரசிறைப் பற்றாக்குறை மூல இலக்கினை கணிசமாக விஞ்சியதுடன் அரசின் உயர் கடன்பாட்டுக்கும் இட்டுச் சென்றது. உண்மையில் சம்பளங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் இறுக்கமான தன்மையினைப் பிரதிபலிக்கும் வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.9 சதவீதத்திற்குச் சமமான தொகையை அரசாங்கம் கடனாகப் பெற்றது. மேலும் தாமதமின்றி உறுதியான அரசிறைச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டால் அன்றி நடுத்தரகால அரசிறை உறுதிப்பாடு சம்பந்தமாக அரசதுறை நிகழ்வுகள் கவலைகளை அதிகரித்தன. அரசதுறையினால் வங்கிக் கடன்பாடுகளின் கடுமையான அதிகரிப்புக்களின் மத்தியிலும் தனியார்துறையின் கொடுகடன் கேள்வி நலிவுற்றமையினால் நாணய விரிவாக்கம் மிதமான மட்டமொன்றில் காணப்பட்டு கேள்வியினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் சாத்தியப்படுவதை கட்டுப்படுத்தின. மிதக்கும் செலாவணிவிதமானது மத்திய வங்கி அதிஉயர் வட்டி வீதங்களை பேண வேண்டிய தேவையை அகற்றியது. இதனைப் பிரதிபலிக்கும் வகையில் குறுகியகால சந்தை வட்டிவீதங்கள் தாழ்ந்த மட்டமொன்றினை எய்தின. எனினும் நிதியியல் முறையில் வட்டிவீத சீராக்க செயல்முறையில் கீழ்நோக்கிய சீராக்கங்களின் இறுக்கமான தன்மையினைப் பிரதிபலிக்கும் வகையில் உண்மைக் கடன் வழங்கல் வீதங்கள் உயர்வாகக் காணப்பட்டு தற்போதைய அமைப்புமுறை விடயங்களை கருத்திற் கொள்ளுவதற்காக நிதியியல்துறை சீர்திருத்தங்களை விரைவுபடுத்தவேண்டிய தேவையை அறிவுறுத்திக்கூறின.

வெளிநாட்டு அதிர்ச்சிகளுக்கு இலங்கைப் பொருளாதாரம் எளிதில் பாதிப்புக்குள்ளாவதையும் பொருளாதாரத்தின் நிலைத்து நிற்கும் ஆற்றலை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளின் தேவையையும் 2001ஆம் ஆண்டில் நிகழ்வுகள் தெளிவாக எடுத்துக்காட்டின. இதற்கான அடிப்படைத் தேவையானது உறுதியானதும் ஒளிவு மறைவற்றதுமான வரைச் சட்டமொன்றினுள் தனியார் துறையின் செயலாற்றத்துக்கான அடிப்படை ஒன்றாக பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை நிறுவுவதாகும். அரசாங்கத்தின் பங்கானது செயல்திறன் மிக்க சந்தைகளையும் திருப்திகரமான உட்கட்டமைப்பினை வழங்குவதுமானதாகும். இத்தகைய நிலைமைகளில் தனியார்துறையானது அரசாங்கத்தின் உதவியிலும் பாதுகாப்பிலும் பெருமளவு தங்கியிராது பாதகமான வெளிநாட்டு அதிர்ச்சிகளுக்கு பயனுறும் வகையில் பதிலிறுக்கக்கூடும்.

நிலைத்து நிற்கக்கூடிய வகையில் தொழில்வாய்ப்பின்மையும் வறுமையும் 2002ஆம் ஆண்டில் விரைந்த பொருளாதார மீட்சி, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை வலுப்படுத்தல், எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களை மேம்படுத்தல் என்பவற்றை உறுதி செய்துகொள்வதற்காக உறுதியான கொள்கை சீராக்கங்களினதும் துணிகரமான பொருளாதார சீர்திருத்தங்களின் அவசரத் தேவையை இது தெளிவாக்கியுள்ளது. கடந்த காலத்தில் இலங்கை உண்மையான உள்ளார்ந்த வளர்ச்சியினை அடையமுடியாமல் போனமைக்கு பொருத்தமான பேரண்டப் பொருளாதாரத்தினையும், அமைப்பியல் சீராக்கக் கொள்கைகளையும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தாமையே காரணமாகும். பேரண்டப் பொருளாதார முகாமைத்துவமானது பெருமளவு அறைகூவலைக் கொண்டுள்ள வேளையில் பொருளாதாரச்சீர்திருத்தங்கள் மிக அவசரமான விடயங்களாக மாறியுள்ளன. எனினும் 2001ஆம் ஆண்டு திசெம்பரில் புதிய அரசாங்கமொன்று தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அத்தகைய கொள்கைச் சீராக்கங்களின் அறிமுகப்படுத்தலுக்கும் பெருமளவு தேவையான நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் மற்றும் கட்டுப்பாடு அகற்றல் என்பனவற்றையும் உள்ளடக்கிய விரைந்த அமைப்புச் சீராக்கங்கள் மேற்கொள்ளல் மற்றும் அரசாங்க கொள்கைகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களின் ஒளிவுமறைவு இன்மை மற்றும் வகைகூறல் என்பன தொடர்பாக கவனம் செலுத்துதல் என்பனவற்றுக்கான சந்தர்ப்பம் ஒன்று தோன்றியுள்ளது.

உண்மையான முன்னேற்றமானது இலங்கையில் சமாதானம் மீள நிறுவப்படுவதிலேயே தங்கியுள்ளது. யுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளுவதானது மனிதவலு மற்றும் மூலவளங்கள் என்பனவற்றின் நியதிகளில் நாட்டுக்கான பாரிய இழப்பொன்றாகும். இதற்கும் மேலதிகமாக அது வளர்ச்சியின் உள்ளார்ந்த வளத்தினையும் முடக்கி வைத்துள்ளது. பொருளாதார நியதிகளில் தொடர்ச்சியான யுத்தமொன்றின் செலவினை நாட்டுக்கு ஏற்க முடியாது உள்ளதோடு முரண்பாட்டுக்கு விரைவாக தீர்வு காணவேண்டியது அத்தியாவசியமாகும். தொடர்ச்சியாக இடம்பெற்றவரும் யுத்தம் மனித மற்றும் மூலவள நியதிகள் இரண்டிலும் இந்நாட்டின்மீது எண்ணற்ற இழப்புக்களை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும், இது பொருளாதாரத்தின் உள்ளார்ந்த வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க மந்தநிலையைத் தோற்றுவித்திருக்கிறது. பொருளாதார நியதிகளில், நீண்டகாலப் போரின் செலவுகளை நாட்டினால் தொடர்ந்தும் தாங்கமுடியாது. எனவே இம் மோதலுக்கு விரைந்த ஒரு தீர்வு இன்றியமையாததாகவுள்ளது. பரந்தளவிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆதரவுடனான தற்போதைய சமாதான முயற்சிகள் நிரந்தர தீர்வு ஒன்றுக்கான நம்பிக்கையை உருவாக்கியுள்ளன. சருவதேச சமூகமானது இலங்கையின் நிரந்தர சமாதானத்துக்கான முயற்சிக்கு மட்டுமன்றி அதனைத் தொடர்ந்து வரவுள்ள புத்தாக்கத்துக்கும் மீளமைப்புக்கும் இணக்கப்பாட்டுக்கான முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்குவதற்கு உறுதி பூண்டுள்ளது. எனினும், இலங்கை தற்போது எதிர்நோக்கும் அனைத்து பொருளாதார சமூக விடயங்களுக்கு இலங்கையே தீர்வுகளைக் காணவேண்டியதோடு உண்மையாகவே நடைமுறைப்படுத்தவும் வேண்டும். சருவதேச சமூகம் உதவிகளை மட்டுமே வழங்கமுடியும்.

2001ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு சருவதேச சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2001ஆம் ஆண்டு ஏப்பிறலில் சருவதேச நாணய நிதியத்தினால் ஒப்புதல் வழங்கப்பட்ட துணைநில் ஒப்பந்த ஒழுங்குபடுத்தல்கள் உறுதியான பெறுபேறுகளை விளைவித்தன. வெளிநாட்டு ஒதுக்குகளின் இழப்புகள் நேர்மாற்றம் செய்யப்பட்டு வெளிநாட்டு சீராக்கங்களும் நிதியியல் உறுதிப்பாடும் எய்தப்பெற்றதன் மூலம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் இது தெளிவாகியது. 2001ஆம் ஆண்டு சனவரி 23ஆம் நாள் அறிமுகப்படுத்தப்பட்ட சுயாதீனமாக மிதக்கும் செலாவணி முறையின் கீழ் கூடிய பெறுமதியை எய்திய செலாவணிவீதம் குறுகிய காலப்பகுதியொன்றினுள் உறுதியடைந்து நிதியியல் சந்தைகளின் உறுதிப்பாட்டை மேம்படுத்தியது. புதிய செலாவணிவீத முறையின் கீழ் சந்தை அனுபவங்களைப் பெற்றுக் கொண்டமையினால் புதிய செலாவணிவீத முறையுடன் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னெச்சரிக்கை வழிமுறைகள் பலவற்றினை மத்திய வங்கி அகற்றியது. இறக்குமதிகள் பெருமளவில் குறைவடைந்தமையின் காரணமாக வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை கணிசமான அளவுக்கு குறுகியதுடன் நலிவடைந்த ஏற்றுமதிகளின் தாக்கத்தினை தேவைக்கும் மேலாக எதிரீடு செய்தது. இதன் விளைவாக எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நிதியிடலும் தனியார் மயமாக்கல் பெறுகைகள் முழுமையாகப் பெறப்படாதபோதிலும் வெளிநாட்டு ஒதுக்குகள் அதிகரித்தன. எனினும் துணைநில் ஒழுங்குபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் மீது 2001ஆம் ஆண்டு ஓகத்திலும் திசெம்பரிலும் அட்டவணையிடப்பட்ட மீளாய்வுகள் 2001ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் இடம்பெற்ற பாதகமான அரசியல் நிகழ்வுகளின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட கடப்பாடுகளின் நடைமுறைப்படுத்தலில் ஏற்பட்ட தாமதங்களினால் முற்றுப்பெறாததோடு துணைநில் ஒழுங்குபடுத்தல்களின் எதிர்பார்க்கப்பட்ட முழுமையான பயனையும் எய்துவதில் தாமதங்களை ஏற்படுத்தின.

ஆண்டின் முதலரைப்பகுதியில் 0.9 சதவீதத்திற்குச் சுருக்கமடைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி இரண்டாம் அரைப்பகுதியில் மேலும் வீழ்ச்சியடைந்து முழுமையான ஆண்டுக்குமாக 1.4 சதவீத எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது ஆண்டின் தொடக்கத்தில் எறிவு செய்யப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட 4.5 சதவீத வளர்ச்சிக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இதுவே 1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து பதிவு செய்யப்பட்ட முதலாவது எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சியாகும். இது தொடர்பாக இலங்கை

**அட்டவணை 1.1**
**தெரிந்தெடுக்கப்பட்ட பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகள்**

| விடயம் | 1980–89 | 1990–96 சராசரி | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 (அ) |
|---|---|---|---|---|---|---|---|
| மொ.உ.உ. (உண்மை) வளர்ச்சி வீதம் | 4.2 | 5.3 | 6.3 | 4.7 | 4.3 | 6.0 | -1.4 |
| மொ.உ.உ. உட்கிடை | 11.8 | 11.5 | 8.6 | 8.4 | 4.4 | 6.7 | 13.0 |
| மொ.உ.உ. (பெயரளவு) தலைக்குரிய, ரூபாய்கள் | 9,608 | 29,157 | 50,386 | 56,899 | 60,901 | 68,309 | 74,997 |
| மொ.உ.உ. (பெயரளவு) தலைக்குரிய, ரூபாய்கள் | 362 579 | 854 | 881 | 865 | 901 | 839 | |
| தொழிலற்றோர் வீதம் சதவீதம் | வி.கி | 13.4 | 10.5 | 9.2 | 8.9 | 7.6 | 7.8(ஆ) |
| வெளிநாட்டுச் சொத்துக்களை அடக்கிய இறக்குமதி மாதங்கள் | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | வி.கி | வி.கி | 6.4 | 5.9 | 5.2 | 3.5 | 4.5 |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் | 1.8 | 3.9 | 4.2 | 4.0 | 3.3 | 1.7 | 2.7 |
| | | | மொ.உ.உ.இன் சதவீதமாக | | | | |
| மொத்த உள்நாட்டு முதலீடு | 26.2 | 24.4 | 24.3 | 25.1 | 27.1 | 28.0 | 22.2 |
| மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 12.9 | 14.7 | 17.3 | 19.1 | 19.8 | 17.4 | 15.3 |
| வெளிநாட்டுச் சேமிப்புக்கள் (இ) | 13.3 | 9.7 | 7.0 | 6.0 | 7.3 | 10.6 | 6.7 |
| சென்மதி நிலுவை, நடைமுறைக் கணக்கு | -8.1 | -6.2 | -2.6 | -1.4 | -3.6 | -6.4 | -2.4 |
| வரவு செலவுத் திட்டம், நடைமுறைக் கணக்கு | 2.7 | -2.0 | -2.2 | -2.4 | 1.0 | -3.4 | -4.9 |
| வரவு செலவுத் திட்டம், திரண்ட நிலுவை | -12.4 | -9.8 | -7.9 | -9.2 | -7.5 | -9.9 | -10.9 |
| பண நிரம்பல் ($M_{2b}$), சதவீத மாற்றம் (ஈ) | வி.கி | வி.கி | 15.6 | 13.2 | 13.4 | 12.9 | 13.6 |
| கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் சதவீத மாற்றம் | 12.8 | 12.7 | 9.6 | 9.4 | 4.7 | 6.2 | 14.2 |
| செலாவணி வீதம் (ஐ.அ.டொ) சதவீத மாற்றம் (உ) | -9.1 | -4.8 | -7.1 | -9.6 | -6.0 | -9.9 | -11.3 |


(அ) தற்காலிகமானவை.
(ஆ) 2001, 3ஆம் காலாண்டு
(இ) தேறிய இறக்குமதிப் பொருட்களும் காரணியல்லாப் பணிகளும்
(ஈ) வெ.நா.ப. தொழில் பிரிவுகள் உட்பட திரட்டிய பணநிரம்பல் $M_{2b}$ தரவுகள் 1994 இலிருந்து மட்டுமே கிடைக்கின்றன.
(உ) ஆண்டு இறுதியில் செலாவணி வீத மாற்றங்கள்; எதிர்க்கணிய அடையாளங்கள் தேய்மானத்தை எடுத்துக்காட்டின.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

விதிவிலக்கானதொன்றாகக் காணப்படவில்லை. ஏனெனில் 2001ஆம் ஆண்டில் உலகின் வேறுபல நாடுகளும் எதிர்க்கணிய வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன. தயாரிப்பு மற்றும் வெளிநாட்டு வர்த்தகத் துறையின் செயலாற்றத்தை மோசமாகப் பாதித்து வெளியீட்டு இழப்பின் மூன்றில் இரண்டு பங்கிற்கு வகைகூறியது. விவசாய வெளியீடு மற்றும் நீர்மின்வலு உருவாக்கம் என்பனவற்றின் மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்த நீண்ட வரட்சியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 13 சதவீத குறைப்புக்கு நேரடியாக வகைகூறிய இரண்டாவது முக்கிய காரணியாக அமைந்தது. சுற்றுலா வருகைகளை குறைவடையச்செய்து துறைமுக மற்றும் விமானப் பணிகளிலும் தடங்கல்களை ஏற்படுத்திய பயங்கரவாதத் தாக்குதலையும் உள்ளடக்கிய ஏனைய காரணிகள் எஞ்சியதற்கு வகைகூறின. விவசாயம் (-3.0 சதவீதம்) கைத்தொழில் (-2.0 சதவீதம்) பணிகள் (-0.5 சதவீதம்) ஆகிய முக்கிய மூன்று துறைகளிலும் வெளியீட்டினைக் குறைவடையச் செய்த பொருளாதாரத்தின் மெதுவடையும் தன்மை பரவலாகக் காணப்பட்டது.

கூட்டுச் செலவுப் பக்கத்தில், முதலீட்டாளர் நம்பகத்தன்மை நலிவடைந்தமை மற்றும் பொதுமுதலீடு எதிர்பார்த்தைவிட குறைவடைந்தமை என்பனவற்றின் காரணத்தினால் முதலீடு/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2000ஆம் ஆண்டின் 26.2 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 22.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. (வானூர்திகளில் செய்யப்பட்ட முதலீடுகளுக்கான சீராக்கம் இல்லாமல் 28.0 சதவீதம்) இதே வேளையில் சேமிப்புக்கள் /மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதமும் 2000ஆம் ஆண்டின் 21.5 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 19.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமை அரசாங்க குறைச் சேமிப்புக்களின் மீது வருமானச் சுருக்கத்தின் தாக்கத்தினையும் பிரதிபலிப்பதாக இருந்தது. பொருளாதார வளர்ச்சியும் முதலீட்டு விரிவாக்கமும் மெதுவடைந்தமையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொழில்வாய்ப்புக்களின் உருவாக்கத்தினை குறைவடையச் செய்து தொழில்வாய்ப்பின்மை வீதத்தினை 2000ஆம் ஆண்டின் 7.5 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 7.8 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரிக்கச் செய்தது.

வரைபடம் 1.1
பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகள்



நலிவடைந்த கூட்டுக் கேள்வியின் மத்தியிலும் பணவீக்க வீதம் அதிகரித்து 2001ஆம் ஆண்டில் கூட்டு விலைச் சுட்டெண்களில் 11 - 14 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. வரட்சியினால் வழிநடத்தப்பட்ட வழங்கல் பற்றாக்குறைகள் மற்றும் நிருவகிக்கப்பட்ட விலைகளின் மேல்நோக்கிய சீராக்கங்கள் அதிஉயர் இறக்குமதி விலைகள் என்பனவற்றின் காரணமாக உணவுகளின் விலை அதிகரிப்பின் தாக்கத்தினை இது முக்கியமாக பிரதிபலிப்பதாக இருந்தது.

2001ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் அரசிறைத் திரட்சிக்காகவும் 2000ஆம் ஆண்டின் அரசிறை ஒழுக்கல்களை சரி செய்வதற்காகவும் உருவாக்கப்பட்டது. எனினும் அரசிறை நிலைமையில் கணிசமான மோசமடைதல் ஒன்று காணப்பட்டது. வருவாய் பற்றாக்குறையும் (ரூ.33 பில்லியன்) நடைமுறைக் கணக்கு மேற் செலவும் (ரூ.19 பில்லியன்) வரவு செலவுத் திட்ட மொத்தப் பற்றாக்குறையை வரவு செலவுத்திட்ட மொத்தப் பற்றாக்குறையை வரவு செலவுத் திட்ட மூலமதிப்பீடுகளான மொத்த உற்பத்தியின் 8.5 சதவீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10.9 சதவீதத்திற்கு அதிகரிக்கச் செய்தன. அதிகரித்த அரசிறைப் பற்றாக்குறை, தனியார் மயமாக்கல் பெறுகைகளின் வீழ்ச்சிகள் (ரூ.16 பில்லியன்) மற்றும் வெளிநாட்டு நிதியிடலின் தாழ்ந்த பயன்பாடு (ரூ.21 பில்லியன்) என்பனவற்றுடன் இணைந்து வரவு செலவுத்திட்ட மதிப்பீடான ரூ.57 பில்லியனுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டுப் பற்றாக்குறை நிதியிடலை ரூ.124 பில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 8.8 சதவீதம்) அதிகரிக்கச் செய்தது. இதன் விளைவாக அரசின்படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 103.6 சதவீதத்திற்கு உயர்வடைந்து வட்டிச் செலவினை வரவு செலவுத் திட்டத்தின் பாரிய செலவு மூலகமாக மாற்றியது.

முன்னைய இரு ஆண்டுகளிலும் அனுபவித்த வெளிநாட்டு ஒதுக்குளின் இழப்புக்கள் 2001ஆம் ஆண்டில் நேர் மாற்றம் செய்யப்பட்டது. எனினும் சென்மதி நிலுவையில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகள் எதிர்பார்த்ததைவிட குறைவாகவே காணப்பட்டன. ஏற்றுமதிச் சுருக்கத்தினை (12.8 சதவீதம்) இறக்குமதிக் குறைப்பு (14.9 சதவீதம்) விஞ்சியதால் வர்த்தகப் பற்றாக்குறையும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையும் குறுகின. எனினும் வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல், தனியார் மயமாக்கல் பெறுகைகளின் தேறல், மற்றும் வெளிநாட்டு உதவிகளின் பயன்பாடு என்பன எதிர்பார்த்ததைவிடக் கீழாக வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக எதிர்பார்த்த மிகையான ஏறத்தாழ ஐ.அ.டொலர் 500 மில்லியனுடன் ஒப்பிடுகையில் சென்மதி நிலுவையின் மேம்பாடு ஐ.அ.டொலர் 220 மில்லியன் கொண்ட மிகையில் மட்டுப்படுத்தப்பட்டது. நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 2,238 மில்லியனுக்கு (ஏறத்தாழ 4.5 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானது) மேம்பாடடைந்தது. எனினும் தேவைப்படும் இலக்குகளுக்குக் குறைவாகவே காணப்பட்டது. புதிய செலாவணி முறையின்கீழ் குறுகிய காலத்தினுள் செலாவணி வீதம் உறுதியடைந்தமை, இலங்கை மத்திய வங்கிக்கு சந்தையில் வெளிநாட்டுச் செலாவணியினை கொள்வனவு செய்வதற்கு இயலச் செய்ததோடு அதன் மூலம் அலுவல்சார் ஒதுக்குகளை ஐ.அ.டொலர் 1,049 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,338 மில்லியனுக்கு மேம்படுத்துவதற்கு வங்கியை இயலச் செய்தது.

அதிகரித்த வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை அரச தொழில் முயற்சிகளின் பாரிய இழப்புக்கள் என்பனவற்றின் விளைவாக அரசதுறையின் அதிஉயர் வங்கிக் கடன்பாடுகளின் மத்தியிலும் 2001ஆம் ஆண்டில் நாணய விரிவாக்கம் ஏறத்தாழ 13 சதவீதத்தில் மிதமாகக் காணப்பட்டது. தனியார்துறையின் கொடுகடன் விரிவாக்கம் மெதுவடைந்தமையே இதற்கான காரணமாகும். மேம்பட்ட நிதியியல் சந்தை உறுதிப்பாடும் மிதமான நாணய விரிவாக்கம் தொடர்ந்தமையும் ஆண்டின் தொடக்கத்திலான உயர்மட்டங்களிலிருந்து 2001ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் அதனது வட்டி வீதங்களை கணிசமான அளவில் குறைப்பதற்கு வங்கிக்கு இயலச் செய்தன. சந்தையிலிருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் மத்திய வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்தமையானது 2000ஆம் ஆண்டில் தொடர்ந்து காணப்பட்ட திரவத்தன்மைப் பற்றாக்குறையை முழுமையாக அகற்றி ரூபாத் திரவத்தன்மையினை மேம்படுத்தியது. எனினும் 2001ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.38 பில்லியனுக்கு உயர்வடைந்த அரச வங்கிகள் இரண்டுடனான மேலதிகப்பற்று வசதிகளையும் உள்ளடக்கி அதிகரித்த அரசகடன்பாடுகளின் காரணமாக நாணய முகாமைத்துவம் பெருமளவு அறைகூவல்களைக் கொண்டிருந்தது. பொருளாதாரத்தில் கேள்வியினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தத்தின் தாக்கத்தினை தடைசெய்து பொதுவான நாணய விரிவாக்கமும் அதேபோன்று ஒதுக்குப்பண விரிவாக்கமும் உறுதிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலக்கிடப்பட்ட மட்டங்களுக்குள் காணப்பட்டன. பணவீக்க அழுத்தம் மெதுவடைந்தமை மற்றும் நிதியியல் சந்தையின் உறுதிப்பாடு என்பனவற்றைத் தொடர்ந்தும் அதேபோன்று பொருளாதார வளர்ச்சி சுருக்கமடைந்தமையை கருத்திற் கொண்டும் மத்திய வங்கி அதன் கடன் வழங்கல் வீதங்களை இவ்வாண்டில் 800 - 900 அடிப்படைப் புள்ளிகளினால் படிப்படியாகக் குறைத்தது. அனைத்து சந்தை வட்டி வீதங்களையும்

**அட்டவணை 1.2**
**உலகப் பொருளாதார தோற்றப்பாட்டு எறிவுகளின் பொதுநோக்கு**
**( ஆண்டு சதவீத மாற்றம்)**

| | உண்மை | | எறிவுகள் |
|---|---|---|---|
| | 2000 | 2001 | 2002 |
| உலக வெளியீடு | 4.7 | 2.5 | 2.8 |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 3.9 | 1.2 | 1.7 |
| ஐக்கிய அமெரிக்கா | 4.1 | 1.2 | 2.3 |
| சேர்மனி | 3.0 | 0.6 | 0.9 |
| ஐக்கிய இராச்சியம் | 2.9 | 2.2 | 2.0 |
| யப்பான | 2.2 | -0.4 | -1.0 |
| அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் | 5.8 | 4.0 | 4.3 |
| அபிவிருத்தி அடைந்து வரும் ஆசியா | 6.8 | 5.6 | 5.9 |
| உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்) | 12.4 | -0.2 | 2.5 |
| இறக்குமதிகள் | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 11.6 | -1.5 | 2.1 |
| அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரம் | 16.0 | 2.9 | 6.4 |
| ஏற்றுமதிகள் | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 11.7 | -1.3 | 0.9 |
| அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரம | 15.0 | 3.0 | 4.8 |
| நுகர்வோர் விலைகள் | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 2.3 | 2.2 | 1.3 |
| அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரம் | 6.1 | 5.7 | 5.8 |
| ஐ.அ.டொலர் வைப்புக்கள் மீது ஆறுமாத இ.வ.கி.வ.வீதம் | 6.6 | 3.7 | 2.8 |

மூலம்: உலகப் பொருளாதார தோற்றப்பாடு
ப.நா.நிதியம்

குறைவடையச் செய்து நிதியியல் சந்தைகள் நேராக பதிலிறுத்தன. எனினும் பொதுவான கடன்வழங்கல் காலம் கடந்ததாக காணப்பட்டு வட்டிவீதச் சீராக்கங்களின் கீழ்நோக்கிய இறுக்கமான தன்மையினை பிரதிபலித்தன.

## 1.2 சருவதேச சூழல்

2000ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் தொடங்கிய உலக பொருளாதாரத்தின் மெதுவடையும் தன்மை 2001ஆம் ஆண்டில் மேலும் அதிகரித்து உலகின் அனைத்து பிரதேசங்களும் பரவலான பின்னடைவைப் பதிவு செய்தன. இதனைத் தொடர்ந்து, உண்மையிலேயே உலக பொருளாதாரம் பின்னடைவினைக் கொண்டுள்ளது [அ] என்பதை உட்கிடையாகக் கொண்டு உலக வெளியீட்டின் விரிவாக்கம் 2000ஆம் அண்டின் 4.7 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 2.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இந்த மெதுவடைவு இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் மிகப் பரவலானது எனக் கருதப்படுகின்றது. சருவதேச வர்த்தகம் மற்றும் பணிகள் என்பனவற்றின் வரிவாக்கத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, கணிசமான அளவில் தாழ்ந்த பண்ட விலைகள், தோற்றம் பெறும் சந்தைப் பொருளாதாரங்கள் மற்றும் வளர்முக நாடுகளுக்கான தாழ்ந்த சருவதேச மூலதன உட்பாய்ச்சல்கள் என்பனவற்றை இதுகொண்டிருந்தது. பொருளாதாரத்தின் விசனமான இந்த நிலைமைகள் சருவதேச அமைப்புக்களையும் மற்றும் பல நாடுகளையும் 2001ஆம் ஆண்டுக்கான தமது ஆண்டு வளர்ச்சி எறிவுகளை கீழ்நோக்கித் திருத்தவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கின. சருவதேச நாணய நிதியம் 2001ஆம் ஆண்டில் உலக பொருளாதார வளர்ச்சிக்கான அதனது எறிவுகளை 2001ஆம் ஆண்டு திசெம்பரில் நான்காவது தடவையாக 3.2 சதவீதத்திலிருந்து (2001ஆம் ஆண்டு மே மாதம்) 2.4 சதவீதத்திற்கு கீழ்நோக்கித் திருத்தியது. இது 2000ஆம் ஆண்டில் எய்தப்பெற்ற வளர்ச்சி வீதத்தின் அரைப்பகுதியாகும். (2001ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி வீதம் 2.5 சதவிதமாக இருக்குமென 2002 ஏப்பிறலில் மதிப்பிடப்பட்டது) ஜீ7 நாடுகள் 2001ஆம் ஆண்டுக்கான தமது வளர்ச்சி எறிவுகளை பலதடவைகளில் ஆண்டின் தொடக்கத்திலான 2.7 சதவீதத்திலிருந்து ஆண்டின் இறுதியில் 1.2 சதவீதத்திற்குக் குறைத்தன. ஐக்கிய அமெரிக்க நாடுகள் 3 சதவீதத்திலிருந்து 1.2 சதவீதத்திற்கும், ஐக்கிய இராச்சியம் 2.6 சதவீதத்திலிருந்து 2.2 சதவீதத்திற்கும், ஐரோப்பிய ஒன்றியம் 2.7 சதவீதத்திலிருந்து 1.7 சதவீதத்திற்கும், யப்பான் 1.8 சதவீதத்திலிருந்து எதிர்கணிய 0.4 சதவீதத்திற்கு குறைந்தன.

மெதுவடையும் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கைத்தொழில் நாடுகளின்

(அ) 2.5 சதவீதத்துக்கும் குறைவான உலக பொருளாதாரத்தின் ஆண்டு வளர்ச்சி பின்னடைவு எனக்கருதப்படுகின்றது.

நாணயக்கொள்கைகள் கணிசமான அளவு இலகுவாக்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசர்வ் 2001ஆம் ஆண்டில் பதினொரு தடவைகள் அதனது ரிசர்வ் வீதத்தினை 475 அடிப்படைப் புள்ளிகளினால் மிகவும் தாழ்ந்த மட்டமான 1.75 சதவீதத்திற்குக் குறைத்தது. இதேபோன்று ஐரோப்பிய ஒன்றியமும், ஐக்கிய இராச்சியமும் 2001ஆம் ஆண்டில் அவற்றினது முதன்மை கொள்கை வீதங்களை முறையே 150 அடிப்படைப் புள்ளிகளினாலும் 200 அடிப்படைப் புள்ளிகளினாலும் தாழ்த்தின. செத்தெம்பர் 11 தாக்குதலின் பின் யப்பானும் அதனது அலுவல்சார் கழிவு வீதத்தினை பூச்சியத்துக்கு அண்டிய மட்டத்துக்கு (0.10 சதவீதம்) தாழ்த்தியது. இந்த வழிமுறைகள் பாதகமான தாக்கத்தினை ஓரளவுக்குத் தணிப்பதற்கு உதவியபோதிலும் மெதுவடையும் பொருளாதாரத்தை நேர்மாற்றம் செய்வதற்கான சக்தியினைக் கொண்டிருக்கவில்லை.

சம்பந்தப்பட்ட ஏனைய பல நிகழ்வுகளில் உலக பொருளாதாரம் மெதுவடைவதன் தாக்கம் வெளிக்காட்டப்பட்டது. (i) உலக வர்த்தக அளவுகளில் கடுமையான குறைப்பு, (ii) முதலீட்டாளர்களின் இடர் நேர்வு பற்றிய அச்சமும் தோற்றம் பெறும் சந்தைகள் சிலவற்றில் பொருளாதார அடிப்படைகள் மோசமடைந்தமையும் தோற்றம் பெரும் சந்தைகளுக்கான மூலதனப் பாய்ச்சல்களின் மீது வீழ்ச்சியுறும் சருவதேச வட்டி வீதங்களின் பயனான நன்மைகளை பெருமளவில் இல்லாமல் செய்தன. (iii) முக்கிய பொருளாதாரங்களில் அதிகரித்துச்செல்லும் செலாவணி வீத பொருத்தமின்மைகளுடன் பாரிய அளவிலான பேரண்டப் பொருளாதார சமமின்மைகளின் ஒன்று சேரல், மற்றும் (iv) வளர்முக நாடுகளின் வர்த்தக மாற்று வீதம் மோசமடைதல்

உலகளாவிய பொருளாதார மெதுவடைவுக்கு இசைந்து செல்லும் வகையில் 2001ஆம் ஆண்டில் உலக வர்த்தகமும் கடுமையாக வீழ்ச்சியடைந்து வர்த்தக அளவுகளின் விரிவாக்கத்தை (பொருட்களும் பணிகளும்) 2000ஆம் ஆண்டின் 12.4 சதவீதத்திலிருந்து 0.2 சதவீதத்துக்கு குறைவடையச் செய்தது. இக் காலப்பகுதியில் மேம்பட்ட பொருளாதாரங்களின் இறக்குமதி அளவு 11.6 சதவீதத்திலிருந்து 1.5 எதிர்கணிய வீதமொன்றுக்கும் வளர்முக நாடுகளின் இறக்குமதி அளவு 16.0 சதவீதத்திலிருந்து 2.9 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் ஏற்றுமதி அளவுகளின் வளர்ச்சி மேம்பட்ட பொருளாதாரங்களில் 11.7 சதவீதத்திலிருந்து எதிர்கணிய 1.3 சதவீதத்திற்கும் வளர்முக நாடுகளின் இறக்குமதி அளவுகள் 15.0 சதவீதத்திலிருந்து 3 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.

உலக கேள்வி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து முக்கியமாக முதன்மைப் பண்டங்களின் ஏற்றுமதிகளின் அளவில் தங்கியிருக்கும் வளர்முக நாடுகளுக்கான பிரதிகூலங்களுடன் பண்டவிலைகள் வீழ்ச்சியடைந்தன. 2000ஆம் ஆண்டின் 1.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் எரிபொருள் அல்லா பண்டங்களின் விலைகள் 5.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் 2000ஆம் ஆண்டில் 57 சதவீத அதிகரிப்பை பதிவு செய்து மேல்நோக்கிய போக்கினைக் கொண்டிருந்த எண்ணெய் விலைகள் 2001ஆம் ஆண்டில் 14.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து அப்போக்கினை நேர்மாற்றம் செய்தது.

உலக பொருளாதாரத்தின் பாதகமான இந்த நிகழ்வுகள் இலங்கையையும் உள்ளடக்கிய, வர்த்தகத்தில் பெருமளவில் தங்கியிருக்கும் நாடுகளின் மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. சீனாவும், இந்தியாவும் தவிர்ந்த அனைத்து ஆசிய நாடுகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டதோடு வளர்ச்சிக்கான அவற்றின் எறிவுகளை கீழ்நோக்கித் திருத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டன. 2001ஆம் ஆண்டில் இலங்கையின் வர்த்தக மாற்று வீதம் மூன்றாவது தொடர்ச்சியான ஆண்டாக 1.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் ஏற்றுமதி அளவுகள் 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து கடுமையான வெளிநாட்டு அதிர்ச்சி ஒன்றினை விளைவித்தது.

எண்ணெய்க்கான நலிவடைந்த உலக கேள்வி மற்றும் எண்ணெய் விலைகளின் குறைப்பு என்பனவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் 2001ஆம் ஆண்டில் உலகின் பல பிரதேசங்களில் பணவீக்கம் தாழ்வாகக் காணப்பட்டது. வட்டி வீதங்களின் தொடர்ச்சியான குறைப்பு மற்றும் அரசிறை ஊக்குவிப்புப் பொதிகள் என்பனவற்றின் மத்தியிலும் முன்னேற்றமடைந்து நாடுகளின் பணவீக்கம் 2000ஆம் ஆண்டின் 2.3 சதவீதத்திலிருந்து 2001இல் 2.2 சதவீதத்திற்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இது அந்தப் பொருளாதாரங்களின் பேரண்ட நிலைமைகளின் உறுதிப்பாட்டை பிரதிபலித்தது.

மேலதிக விலையிடப்பட்ட பங்குச் சந்தைகளின் திருத்தங்கள் மற்றும் செத்தெம்பர் 11ஆம் நாளின் தாக்குதல்கள் என்பன சில தளம்பல்களை ஏற்படுத்திய போதிலும் 2001ஆம் ஆண்டில் சருவதேச நிதியியல் சந்தைகள் சார்புரீதியில் முனைப்புக் குன்றியும் மந்தமாகவும் காணப்பட்டன. ஐக்கிய அமெரிக்க பொருளாதாரம் மெதுவடைந்த போதிலும் அனைத்து முக்கிய நாணயங்களுக்கு எதிராகவும் ஐ.அ.டொலர் வலுவடைந்து ஐரோப்பிய ஒன்றியத்தினதும், யப்பானினதும் பொருளாதார நலிவுகளை பிரதிபலிப்பதாக இருந்தது. முக்கிய சருவதேச நாணயங்களின் அடிக்கடி மாறுபடும் தன்மையானது உலக பொருளாதார மெதுவடைவின் காரணமாக

**சிறப்புக்குறிப்பு -1**

## அதிர்ச்சிகளின் பேரண்டப் பொருளாதார தாக்கம்

2001ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்ச்சிகளுக்கு உள்ளாகியது. ஆண்டறிக்கையின் ஏனைய இடங்களில் விபரிக்கப்பட்டது போன்று இவை பொருளாதாரத்தின் மீது பாதகமான தாக்கங்களைக் கொண்டிருந்தன. இந்தப் பகுப்பாய்வானது பேரண்டப் பொருளாதார அதிர்ச்சிகளின் தாக்கத்தினை வகுத்துக்காட்டுவதற்கு முயற்சி செய்கின்றது. ஏனைனில் வெளிநாட்டு அதிர்ச்சிகளின் தொடர் விளைவுகளையும் பல்வேறுபட்ட துறைகள் பாதிப்புக்குள்ளாகும் தன்மையினையும் விளங்கிக் கொள்ளுவதற்கு அத்தகைய பகுப்பாய்வுகள் உதவக்கூடும்.

தெளிவாகவே, அத்தகைய வகையிலான வகுத்துக்காட்டலானது மிக அண்மித்த மதிப்பீடுகளை மட்டுமே தரக்கூடியதாக இருக்கும். இதற்கு மேலதிகமாக அதிர்ச்சிகளின் நேரடித் தாக்கங்களுக்கு மேலதிக இந்த அதிர்ச்சிகளின் ஒருங்கிணைப்பினால் கொண்டு வரப்பட்ட மறைமுக அல்லது இரண்டாம் சுற்று தாக்கங்களும் காணப்படலாம். எனவே தரப்படும் எண் தொகைகளிலிருந்து பெறப்படும் ஏதேனும் முடிவுகள் அத்தகைய முன்னெச்சரிக்கைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

### உண்மைத் துறை

2001ஆம் ஆண்டில் பொருளாதாரம் ஆண்டின் தொடக்கத்தில் எறிவு செய்யப்பட்ட ஏறத்தாழ 4.5 சதவீத வளர்ச்சி வீதத்திற்கும் கடந்த 10 ஆண்டுகளில் (அதாவது உள்ளார்ந்த வளர்ச்சி) பதிவு செய்யப்பட்ட 5.0 சதவீத ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதத்திற்கு நேர்மாற்றமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.4 சதவீத சுருக்கத்தினைப் பதிவு செய்தது. வளர்ச்சியின் சுருக்கத்திற்கு இட்டுச்சென்ற முக்கிய காரணிகளாக உலகளாவிய பொருளாதார பின்னடைவு, கடும் வரட்சி மற்றும் இலங்கையிலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும்

அதிர்ச்சியின் தாக்கம்

| பொருளாதார மாறிலி/ துணை | உலக பின்னடைவு | பயங்கரவாதத் தாக்குதல் | வரட்சி | இரண்டாம் நிலைத் தாக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. உண்மைத்துறை வெளியீட்டு இழப்பு (ரூபா பில்) | | | | | |
| விவசாயம் | - | - | 5.0 | 2.0 | 7.0 |
| கைத்தொழில் | 14.9 | - | 2.3 | 2.7 | 19.9 |
| பணிகள் | 20.6 | 1.0 | - | 7.1 | 28.7 |
| மொத்தம் | 35.5 | 1.0 | 7.3 | 11.8 | 55.6 |
| மொ.உ.உ. வளர்ச்சியின் மீதான தாக்கம் | -4.1 | -0.1 | -0.9 | -1.4 | -6.4 |
| 2. விலைகள் | | | | | |
| விலை அதிகரிப்புக்களின் மாற்றம் (%) | - | - | - | | 4.1 |
| 3. வெளிநாட்டு வருவாய் இழப்புக்கள் | | | | | |
| ஏற்றுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | -1,132 | - | -43 | | -1,175 |
| % | (-20.5) | - | (-0.8) | | (-21.3) |
| சுற்றுலா வருவாய்கள் ஐ.அ.டொலர் | -13 | -58 | - | | -71 |
| % | (-5.2) | (-23.0) | - | | (-28.2) |
| 4. அரசிறை | | | | | |
| வருவாய் இழப்பு ரூபா பில்லியன் | 20.3 | 0.1 | 4.5 | | 25.8 |
| மொ.உ.உ வின் சதவீதமாக | 1.44 | 0.01 | 0.32 | | 1.83 |
| செலவு அதிகரிப்பு ரூபா பில்லியன் | - | 5.4 | 0.2 | | 5.6 |
| மொ.உ.உ வின் சதவீதமாக | - | 0.4 | 0.01 | | 0.41 |
| வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை அதிகரிப்பு ரூ.மில் | 20.3 | 5.5 | 4.7 | | 31.4 |
| மொ.உ.உ வின் சதவீதமாக | 1.44 | 0.4 | 0.33 | | 2.23 |
| அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன்பாடுகளின் அதிகரிப்பு ரூ. மில் | 20.3 | 5.5 | 4.7 | | 31.4 |
| மொ.உ.உ வின் சதவீதமாக | 1.44 | 0.4 | 0.33 | | 2.23 |
| பொதுப்படுகடன் அதிகரிப்பு | 20.3 | 5.5 | 4.7 | | 31.4 |
| மொ.உ.உ வின் சதவீதமாக | 1.44 | 0.4 | 0.33 | | 2.23 |

## சிறப்புக்குறிப்பு -1 (தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல் என்பன விளங்கின. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மீது செத்தெம்பர் 11ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் ஏற்பட்ட பின்னடைவு ஒன்றாக மோசமாக்கப்பட்ட ஆண்டின் தொடக்கத்திலிருந்து காணப்பட்ட உலக பொருளாதாரத்தின் மெதுவடைவானது முதன்மைக் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உலகப் பின்னடைவானது தயாரிக்கப்பட்ட பொருட்களின் கேள்வியின் மீது அதிஉயர் தீங்கினைக் கொண்டிருந்ததுடன் மறுபுறத்தில் அது இலங்கையின் சருவதேச வர்த்தகத்தில் அதிகூடிய சுருக்கமொன்றை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து எறிவு செய்யப்பட்ட வெளியீட்டின் மூன்றில் இரண்டு பங்கு இழப்புக்கு உலகளாவிய பின்னடைவே காரணமாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளையில் கடும் வரட்சியானது முதன்மையாக விவசாயம் மற்றும் மின்சாரத்தில் நேரடித்தாக்கத்தினைக் கொண்டிருந்ததோடு வெளியீட்டு வீழ்ச்சியின் ஏறத்தாழ 13 சதவீதத்திற்கு வகைகூறியது. அதனது எதிர்க்கணிய வீழ்ச்சியானது மறைமுக பாரியளவிலான பாதகங்களை விளைவித்திருக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும் கட்டுநாயக்கா தாக்குதலின் நேரடித்தாக்கம் சிறிதளவானதே என மதிப்பிடப்பட்டுள்ளது. (வெளியீட்டின் ஏறத்தாழ 2 சதவீத வீழ்ச்சி) இந்த அதிர்ச்சிகளின் இரண்டாம் நிலை மற்றும் மறைமுக தாக்கங்கள் அனைத்துத் துறைகளின் மீதும் அதிர்அலைத் தாக்கங்களைக் கொண்டிருந்ததோடு வெளியீட்டு இழப்பின் ஐந்தில் ஒரு பாகத்திற்கும் மேலாக பொறுப்புடையதாக இருந்தது. இவ்வனைத்து அதிர்ச்சிகளினதும் ஒன்றிணைந்த தாக்கமானது ஏறத்தாழ ரூபா.56 பில்லியன் அல்லது 2001ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.5 சதவீதப் புள்ளிகளான வெளியீட்டு இழப்பினை ஏற்படுத்தியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.


### விலைகள்

1997ஆம் ஆண்டிலிருந்து விலைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியுறும் போக்கு 2001ஆம் ஆண்டில் நேர்மாற்றம் செய்யப்பட்டது. குறிப்பாக சருவதேச விலை மாற்றங்களுக்கு சீராக்கம் செய்வதற்காக நிருவகிக்கப்பட்ட விலைகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள், வரட்சியின் காரணமாக உள்நாட்டு உணவு விடயங்களின் வழங்கலில் காணப்பட்ட கட்டுப்பாடுகள், சருவதேச விலை அதிகரிப்புக்களின் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் விலை அதிகரிப்புக்கள், இறக்குமதிகளின் மீதான தீர்வைகளும் மிகைக் கட்டணங்களும், பண்டங்களின் சருவதேச விலைகளின் அதிகரிப்பு மற்றும் நாணய பெறுமதித்தேய்வின் தாக்கம் போன்ற பல காரணிகள் இதற்குப் பொறுப்பாக இருந்தன. பொதுவான உள்ளார்ந்த காரணிகள் காணப்பட்டிருக்குமாயின் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையிலான சராசரி பணவீக்கமானது அடையப்பட்ட 14.2 சதவீத சராசரி பணவீக்கத்திற்கு எதிராக 7.5 சதவீதமாக இருந்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே இந்த 6.7 சதவீதப் புள்ளிகளிலான வேறுபாடு அதிர்ச்சிகளின் நேரடி மற்றும் மறைமுக தாக்கங்களினதும் நிருவகிக்கப்பட்ட விலைகளின் அதிகரிப்பின் தாக்கங்களினதும் காரணமாக ஏற்பட்டிருக்கும். 1997ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் நிலவிய மட்டங்களில் நிருவகிக்கப்பட்ட விலைகள் இருந்திருப்பின் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் சராசரி அதிகரிப்பு 11.6 சதவீதமாகும். (அதாவது கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் சராசரி பெறுமதி அதிகரிப்பின் 2.6 சதவீதப் புள்ளிகளுக்குத் தாழ்வாக) எனவே அதிர்ச்சிகளின் காரணமாக கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் சராசரி அதிகரிப்பு 4.1 சதவீதப் புள்ளிகளாகும்.

### வெளிநாட்டு வருவாய்கள்

2001ஆம் ஆண்டின் நிகழ்வுகள் வெளிநாட்டுத் துறையில் ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஆகிய இரு முக்கிய விடயங்களின் மீது பாரிய அளவிலான நேரடித் தாக்கங்களைக் கொண்டிருந்தன. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்றுமதிகளின் சராசரி வளர்ச்சி ஏறத்தாழ 8 சதவீதமாக இருந்தது. ஆண்டின் தொடக்கத்தில் உலக பொருளாதாரம் மிதமடையும்

மொத்த வெளியீட்டு இழப்பு - 2001



### சிறப்புக்குறிப்பு -1 (தொடர்ச்சி)

என்ற எதிர்பார்ப்புக்கு இடமளித்த பின்னரும் 2001ஆம் ஆண்டில் ஏற்றுமதிகள் ஏறத்தாழ 8.5 சதவீதத்தினால் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்டது. உறுதிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தொடர்ந்து போட்டித்தன்மை மேம்படும். மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு அனுமதிப்பங்கு அற்ற நுழைவு என்பனவற்றின் அடிப்படையில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டது. உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளில் கடுமையான வீழ்ச்சி வரட்சியின் காரணமாக தேயிலை உற்பத்தியின் வீழ்ச்சி என்பன இறுதியில் ஏற்றுமதிகளின் சுருக்கத்துக்கு இட்டுச்சென்றன. ஆண்டின் முதலரைப்பகுதியில் சுற்றுலா வருகைகள் 10.5 சதவீத வளர்ச்சியினை அனுபவித்தமையின் நோக்கில் 2001ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை மிகச் சிறப்பான செயலாற்றத்தைக் கொண்டிருக்கும் எனவும், ஏறத்தாழ 450,000 சுற்றுலா வருகைகள் காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் யூலையில் கட்டுநாயக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் செத்தெம்பர் 11ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுமே செயல்முறையில் சுற்றுலாக் கைத்தொழிலை தம்பித நிலைக்குக் கொண்டுவந்தன. வெளிநாட்டு அதிர்ச்சிகளின் காரணமாக ஏற்றுமதி வருவாய்கள் 2001ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட வருவாய்களை விட ஐ.அ.டொலர் 1175 மில்லியன் தாழ்வாகக் காணப்பட்டதாக மதிப்பிடப்பட்ட வேளையில் சுற்றுலா வருவாய்கள் எதிர்பார்த்ததைவிட ஐ.அ.டொலர் 70 மில்லியன் குறைவாகக் காணப்பட்டது.

#### அரசிறைச் செயலாற்றம்

அரசிறைப் பக்கத்தில் ஏற்றுமதிகளின் குறைப்பும், உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளின் சுருக்கமும் அரசாங்க வருவாய்களை நேரடியாகவே கீழே கொண்டுவந்தன. இதேவேளையில் பாதுகாப்பின் மீதான அதிகரித்த செலவும் பொருளாதாரத்துக்கு புத்துயிர் அளிப்பதற்காக வழங்கப்பட்ட நிவாரண பொதிகளும் செலவு அதிகரிப்புக்கு நேரடியாகவே பொறுப்பாயிருந்தன. வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையின் அதிகரிப்பானது கடன்பாடுகளின் செலவுகளுக்கான அதிகரிப்புடன் அதிகரித்த கடன்பாடுகளுக்கு இட்டுச்சென்றது. இது அரசபடுகடனின் மட்டத்தினை தவிர்க்கமுடியாத வகையில் உயர்த்தியது. மூன்று வெளிநாட்டு அதிர்ச்சிகளினதும் வருவாய் இழப்பானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 1.8 சதவீதப் புள்ளிகள் என மதிப்பிடப்பட்டுள்ள வேளையில் செலவு அதிகரிப்பு மிக உயர்வாகக் காணப்பட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 3.2 சதவீதப் புள்ளிகளாக இருந்தது. இதன்படி அரசிறை வெளிப்பாடு வரவு செலவுத் திட்ட மதிப்பைவிட மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 2.2 சதவீத புள்ளிக்கு மேலான அரசிறைப் பற்றாக்குறையை விளைவித்திருக்கும். இது மூலதனச் செலவின் கணிசமான குறைப்பினால் கட்டுப்படுத்தப்பட்டது. எனினும் இது மூலதன ஆக்கத்தின் குறைப்பால் நீண்டகால பாதகமான தாக்கங்களுக்கு இட்டுச் செல்வதோடு அதனால் எதிர்காலத்தில் வெளியீட்டு ஆற்றலையும் பாதிக்கின்றது. மேலே தரப்பட்ட பகுப்பாய்வானது குறிப்பாக பலதரப்பட்ட அதிர்ச்சிகள் ஒன்று சேர்ந்து வலுவாக்கும்போது அதிர்ச்சிகளுக்கு பொருளாதாரம் எளிதில் பாதிக்கப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது. அத்தகைய பாதிப்புக்குள்ளாகும் தன்மையினை குறைப்பதற்கும் அத்தகைய அதிர்ச்சிகளை எதிர்கொள்ளுவதற்காக தாக்குப்பிடிக்கும் தன்மையினை அபிவிருத்தி செய்வதற்குமான முன்மொழிவுகள் இந்த அறிக்கையின் ஏனைய இடங்களில் தரப்பட்டுள்ளன.

ஏற்கனவே பாதிக்கப்பட்ட வளர்முக நாடுகள் பலவற்றின் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தினை மேலும் கடினமாக்கியது. தோற்றம் பெறும் சந்தைப் பொருளாதாரங்களுக்கும் வளர்முக நாடுகளுக்குமான தனியார் மூலதன உட்பாய்ச்சல்கள், கிழக்காசிய அதனைத் தொடர்ந்து ருசியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் உருவான நாணய நெருக்கடியினைத் தொடர்ந்து வீழ்ச்சியடையத் தொடங்கின. இவ்வீழ்ச்சியானது தொடர்ந்து காணப்பட்டது. ஆசிய மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்கள் குறிப்பாக நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட ஆசியப் பொருளாதாரங்கள் அந்நாடுகளில் நிலவிய நிச்சயமற்ற சந்தை நிலைமைகளின் காரணமாக மூலதன வெளிப்பாய்ச்சலின் தாக்கத்தினை உணர்ந்தன.

## 1.3 வெளியீட்டு வளர்ச்சியும் துறைவாரியான செயலாற்றமும்

2001இல் மொ.உ.உற்பத்தி, அதன் நீண்டகால ஆண்டு வளர்ச்சிப் போக்கான ஏறத்தாழ 5 சதவீத வளர்ச்சியிலிருந்தும் பிறழ்ந்து 1.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமை, வெளிநாட்டு அதிர்வுகளின் எதிர்க்கணிய விளைவுகளின் தீவிரத்தினை பிரதிபலிப்பதாகவுள்ளது. எதிர்கணிய அதிர்வுகளின் தாக்கங்கள் ஒன்று சேர்ந்த நிரம்பல் பக்கத்தினூடாகவும்


**சிறப்புக்குறிப்பு - 2**

## உலகளாவிய பொருளாதர பின்னடைவும் வளர்முக நாடுகளுக்கான பாதிப்புக்களும்

உலக பொருளதாரம் 2000ஆம் ஆண்டின் 4.7 சதவீத உயர் வளர்ச்சியிலிருந்து 2001ஆம் ஆண்டில் 2.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தொழில்நுட்பத்தின்படி 2001[1]ஆம் ஆண்டில் உலக பொருளாதாரம் பின்னடைவினைக் கொண்டுள்ளது என்பதை இது உட்கிடையாகக் கொண்டுள்ளது. சருவதேச வர்த்தகம் மற்றும் பணிகளின் விரிவாக்கத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி கணிசமான அளவில் தாழ்ந்த பண்ட விலைகள், தோற்றம் பெறும் சந்தைப் பொருளாதாரங்களுக்கான தனியார் மூலதன உட்பாய்ச்சல்களின் குறைப்பு என்பனவற்றுடன் உலகளாவிய மெதுவடைவு உடன்சென்றது. இந்தப் பின்னடைவானது இரண்டாம் உலகமகாயுத்தத்தின் பின்னர் நாடுகளுக்கிடையில் ஒரே நேரத்தில் நிகழ்ந்ததொன்றாகக் கருதப்படுகின்றது. 2000ஆம் ஆண்டில் எண்ணெய் விலைகளின் கடுமையான அதிகரிப்பு, தகவல் தொழில்நுட்ப நீர்க்குமிழ் வெடித்தமை, யப்பான் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற முக்கிய கைத்தொழில் பொருளாதாரங்களினால் அமைப்புச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட தாமதம் போன்ற வெளிநாட்டு அதிர்ச்சிகளை பலர் இதற்குக் காரணமாகக் கூறுகின்றனர். கைத்தொழில் நாடுகளில் குறிப்பாக ஐக்கிய அமெரிக்க நாடுகளில் பொருளாதாரத்தின் மிகைச் செயலாற்ற நிலைமைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மிக இறுக்கமான நாணயக் கொள்கைகள் உலகளாவிய மெதுவடையும் தன்மையினை உருவாக்கி இருக்கக்கூடிய வேளையில் அதிகரித்த உலகளாவிய சூழல் ஒன்றில் நிதியியல் மற்றும் கூட்டுத்துறைகளின் அதிகரித்த ஒருங்கிணைப்பானது உலகளாவிய ரீதியில் விரைந்த வேகமொன்றில் உந்துவிசையைப் பரப்புவதற்கான பங்கினை ஆற்றியது.

கடந்த பத்து ஆண்டுகளில் உலக பொருளாதார வளர்ச்சிக்கு தலைமை தாங்கிய ஐக்கிய அமெரிக்க நாடுகள் 2000ஆம் ஆண்டின் 4.1 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 1.2 சதவீதத்துக்கான கடுமையான வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. நலிவடையும் வளர்ச்சி, வங்கி முறிவுகளின் அதிகரிப்பு, உறுதியாக நலிவடையும் நிதியியல் முறை போன்ற விஷச்சுழற்சியில் சிக்கியுள்ள யப்பான் 2001ஆம் ஆண்டில் 0.4 சதவீத எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவு செய்தது. முன்னைய ஆண்டில்3.4 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த ஐரோப்பிய ஒன்றியம் 2001ஆம் ஆண்டில் 1.7 சதவீதத்துக்கு மெதுவடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. வேறும் பல பிராந்தியங்களிலும் இதே போன்ற மெதுவடையும் தன்மைகள் காணப்பட்டுள்ளன.

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (1995 - 2001)




உலகளாவிய மெதுவடையும் தன்மைக்கு இசைந்து செல்லும் வகையில் 2001ஆம் ஆண்டில் உலக வர்த்தகமும் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இறக்குமதி அளவுகளின் வளர்ச்சி 2000ஆம் ஆண்டின் 11.6 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் -1.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள வேளையில் வளர்முக நாடுகளில் அது 16.0 சதவீதத்திலிருந்து 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளையில் 2001ஆம் ஆண்டில் ஏற்றுமதி அளவுகளின் வளர்ச்சி முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் 11.7 சதவீதத்திலிருந்து -1.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள வேளையில் 2001இல் வளர்முக நாடுகளில் 15.0 சதவீதத்திலிருந்து 3.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் பொருளாதார மெதுவடையும் தன்மையானது முன்னர் எதிர்பார்க்கப்பட்டதை விட பரவலானதும் நீண்டதுமாக இப்பொழுது எறிவு செய்யபட்டுள்ளதோடு உலக பொருளாதார வளர்ச்சியும் பொருட்கள் பணிகளின் சருவதேச வர்த்தகமும் 2002ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியிலேயே மீட்சி அடையும் என இப்பொழுது எதிர்பார்க்கப்படுகின்றது.


1. உலகளாவிய பொருளாதார பின்னடைவு என்பதற்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தெளிவான வரைவிலக்கணம் ஒன்று காணப்படாவிட்டாலும் கூட ஆண்டொன்றுக்கு 2.5 சதவீதத்திற்குக் குறைவான வளர்ச்சி உலகளாவிய பின்னடைவு என சருவதேச நாணய நிதியத்தினால் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது.

## சிறப்புக்குறிப்பு - 2 (தொடர்ச்சி)

உலகளாவிய பொருளாதாரத்தின் மெதுவடையும் தன்மையானது வளர்முக நாடுகளின் மீது குறிப்பாக இலங்கை போன்ற வர்த்தகத்தில் பெருமளவு தங்கியிருக்கும் நாடுகளின் மீது கடுமையான தொடர் விளைவுகளை கொண்டிருந்தது. குறிப்பாக ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம், யப்பான் போன்ற ஏற்றுமதிச் சந்தைகளிலும் சுற்றுலாவிலும் பெருமளவு தங்கியிருக்கும் நாடுகள் அவற்றின் வளர்ச்சி விசைவினையும் வருமான மட்டங்களையும் பேணுவதில் கடுமையான கட்டுப்பாடுகளை எதிர்நோக்குவதாகத் தென்படுகின்றது. 1948ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கை 1.3 சதவீத எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சி வீதத்துடன் முதன்முறையாக பின்னடைவினைப் பதிவு செய்தது. தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நியதிகளில் 2001ஆம் ஆண்டில் இலங்கைப் பிரசை ஒருவரின் சராசரி வருமானம் 1997ஆம் ஆண்டின் மட்டத்திற்கும் கீழாக வீழ்ச்சியடைந்துள்ளதை இது உட்கிடையாகக் கொண்டுள்ளது.

வளர்முக பொருளாதாரங்கள் பல முனைகளில் மோசமாகப் பாதிக்கப்பட்டன. முக்கிய சருவதேச பொருளாதாரங்களின் நம்பிக்கை இழப்பின் முதன்மைக் காரணத்தினால் உலக கேள்வியின் கடுமையான வீழ்ச்சியானது சருவதேச வர்த்தக விரிவாக்கத்தில் கணிசமான மெதுவடையும் தன்மையினை ஏற்படுத்தியது. இது மறுபுறத்தில் வளர்முக நாடுகளின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் தொழில்வாய்ப்பு உருவாக்கம் மற்றும் அரசாங்க வரிவருவாய்கள் என்பனவற்றில் பாதகமான தாக்கங்களைக் கொண்டிருந்தது. 70 சதவீதத்திற்கும் மேலான வர்த்தக/ மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தைக் கொண்ட இலங்கை ஏற்றுமதிகளுக்காக

பன்னாட்டு வர்த்தகம் (1995 - 2001)





ஒருசில நாடுகளிலும் ஒருசில உற்பத்திப் பொருட்களிலும் மட்டுமே கவனம் செலுத்தும். (ஐக்கிய அமெரிக்க நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் முறையே 41 சதவீதத்திற்கும், 27 சதவீதத்திற்கும் வகைகூறுகின்றன) இலங்கையானது ஏற்றுமதி அளவுகளிலும் (8.0 சதவீதம்) இறக்குமதி அளவுகளிலும் (10.7 சதவீதம்) பெருமளவிலான வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டவாறு இந்த வகையிலான மோசமான அதிர்ச்சிகளினால் எளிதில் பாதிப்புக்கு உட்படுத்தப்படக் கூடியதாகும். வளர்முக நாடுகள் பாதிக்கப்படும் இன்னுமொரு வழி என்னவெனில் அவற்றின் ஏற்றுமதி வருவாய்களை குறைவடையச் செய்யும் சருவதேச சந்தைகளில் வீழ்ச்சியடையும் பண்ட விலைகளாகும். வளர்முக நாடுகளினால் முக்கியமாக ஏற்றுமதி செய்யப்படும் எரிபொருள் அல்லாப் பண்டங்களின் விலைகள் வர்த்தகமாற்று வீதத்தின் நேரிணையான வீழ்ச்சியுடன் 2001ஆம் ஆண்டில் பெரும்பாலும் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அளவுகளினதும் விலைகளினதும் இந்த மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் நாட்டின் ஏற்றுமதி வருவாய்கள் 12.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் இறக்குமதிகள் மீதான செலவு 14.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

தோற்றம் பெறும் சந்தைகள் பெருமளவில் திறந்து விடப்பட்டுள்ள சுற்றுலாத்துறை குறிப்பாக ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மீது செத்தெம்பர் 11ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன் உலகளாவிய சுற்றுலாவின் விரைந்த மீட்சியானது தற்போதைக்கு இடம்பெற மாட்டாது போல் தோன்றுகின்றது. 2001ஆம் ஆண்டு யூலையில் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலினால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட இலங்கை இந்த நிகழ்வுகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்டு ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் சுற்றுலா வருகைகளின் 44 சதவீத வீழ்ச்சியை அனுபவித்தது. இதேபோன்று அண்மிய நாடுகளில் பொருளாதாரம் மெதுவடைந்தமையானது மாற்றுக் கப்பலேற்றல் மற்றும் துறைமுகம் சார்ந்த பணிகளில் பாதகமான தாக்கமொன்றைக் கொண்டிருந்தன.

இதற்கு மேலதிகமாக, கணிசமான அளவில் அதிகரிக்கப்பட்ட காப்புறுதிக் கட்டுப்பணம் மற்றும் குறிப்பாக செத்தெம்பர் 11ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின் அதிகரித்த

## சிறப்புக்குறிப்பு - 2 (தொடர்ச்சி)

மூலதனப் பாய்ச்சல்கள் (1995 - 2001)




பாதுகாப்புக்கான அக்கறை என்பன கொடுக்கல் வாங்கல் செலவுகளை ஏற்கனவே அதிகரிக்கச் செய்து நீண்டகால வளர்ச்சி வளத்தின் மீது எதிர்க்கணிய தாக்கங்களைக் கொண்டிருந்தன. ஆண்டின் இறுதியளவில் காப்புறுதிக் கட்டுப்பணத்தின் குறைப்பின் மத்தியிலும் இன்னும் ஓரளவு காலத்துக்கு பல நாடுகளில் பாதுகாப்புக்கான அக்கறைகள் தொடர்ந்து காணப்படும். அதிஉயர் இடர்நேர்வு மிகைக் கட்டணங்களை விளைவித்த செத்தெம்பர் 11ஆம் நாள் தாக்குதலின் பின்னர் சருவதேச முதலீட்டாளர்கள் இடர்நேர்வுக்கான அச்சத்தினை பெருமளவில் கொண்டுள்ளனர். அபிவிருத்தி நோக்கங்களுக்காக வெளிநாட்டு மூலதனத்தில் பெருமளவு தங்கியுள்ள இலங்கை போன்ற சந்தைப் பொருளாதாரத்தக்கு இது நீண்டகால பாதிப்புக்களைக் கொண்டிருக்கும். வெளிநாட்டு மூலதனத்தின் பற்றாக்குறையானது உள்நாட்டு முதலீடுகளைக் குறைவடையச்செய்து எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களில் பாதிப்பைக் கொண்டிருக்கும்.

பிரச்சனைகளையும் இடர்களையும் வெற்றிகொள்ளுவதற்கு கூட்டுமுயற்சி மேற்கொள்ளப்படாவிட்டால் மேலே குறிப்பிடப்பட்ட கரிசனைகளின் விளைவாக விரைந்த வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்கும் ஊடகமாக பொருட்கள் பணிகளினதும் நிதியியல் சொத்துக்களினதும் நாடுகளுக்கிடையேயான பாய்ச்சல் ஒருபடி பின்தள்ளப்படும். இதற்கு மேலதிகமாக கைத்தொழில் நாடுகளினால் பயங்கரவாதத்தைக் கட்டுப் படுத்துவதற்காக மூலவளங்களைப் பயன் படுத்துவதானது சருவதேச மூலதனச் சந்தைகளில் மூலதனத்தை திரட்டுவதற்கான மாற்று வழிமுறையொன்றாக பல வளர்முக நாடுகள் தங்கியிருக்கும் அலுவல்சார் அபிவிருத்தி உதவியினைக் குறைப்பது மட்டுமன்றி எதிர்கால வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஒதுக்கப்பட்டுள்ள மூலவளங்களிலும் குறைப்பினை ஏற்படுத்தும்.

2001ஆம் ஆண்டின் நிகழ்வுகள் உலக பொருளாதாரத்துக்கு, வருமானம் மற்றும் தொழில் இழப்பு மற்றும் குறைந்த நலன்புரி என்பனவற்றின் நியதிகளில் குறிப்பாக வளர்முக நாடுகளுக்கும் கடுமையான பின்னடைவாகும். உலக பொருளாதார மீட்சியின் மெதுவான முன்னேற்றமானது குறிப்பாக ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் வளர்ச்சியானது வளர்முக நாடுகளின் மீட்சிக்கான காலத்தை நீடிக்கச்செய்யும். இதன் கருத்து யாதெனில் இலங்கையை உள்ளடக்கிய வளர்முக நாடுகள் தமது பொருளாதாரங்களை பொதுவான வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டுவருவதில் கடினமான காலப்பகுதியொன்றினை எதிர்நோக்க வேண்டியேற்படும் என்பதாகும்.

குறிப்பாக, உலக பொருளாதார வளர்ச்சிக்கான எந்திரமாக செயற்படும் ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் யப்பான் போன்ற முக்கிய பொருளாதார வட்டங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டு அணுமுறையானது உலக பொருளாதாரத்துக்கு புத்துயிரளிப்பதற்கு மிகவும் அத்தியவசியமானதாகும். தீர்வையல்லாத் தடைகளை இல்லாதொழித்து வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளுக்காக தமது சந்தைகளைத் திறந்துவிடுவது உட்பட அவற்றினது பொருளா தாரங்களை இயங்கவைப்பதற்கான மேலதிக நிதி உதவியையும் வழங்குவதன் ஊடாக கைத்தொழில் நாடுகள் வளர்முக நாடுகளினது கரிசனைகள் சம்பந்தமாக கவனம் செலுத்தவேண்டியது அத்தியவசியமாகும். இது மறுபுறத்தில் செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி மேலும் விரிவடைய ஆகக்குறைந்ததாக்கி ஒரு பூகோளத்தில் இரண்டு உலகங்கள் உருவாவதற்கான சாத்தியங்களைக் கட்டுப்படுத்தி அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு சிறந்த வளத்தினைப் பெற்றுத்தரும். வளர்முக நாடுகள் அவற்றின் பக்கத்திலிருந்து சிலவேளைகளில் கடினமாக இருந்தபோதும் பொருத்தமான முன்மதியுடைய பேரண்டப் பொருளாதார கொள்கைக் கலவை ஒன்றை மேற்கொள்ளுவதன் மூலமும், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உறுதிப்பாட்டைப் பாதிக்காத வகையில் தமது பொருளாதாரத்தை வளப்படுத்துவதற்கான அமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுவதன் மூலமும் பெருமளவு மாறுபடும் தன்மை கொண்டதும் நிச்சயமற்றதுமான வெளிநாட்டுச் சூழலை வலுப்படுத்தி இதற்கு ஆதரவு வழங்கலாம்.

**அட்டவணை 1.3**
**நிலையான காரணிச் செலவு விலைகளில் (1996) மொத்த தேசிய உற்பத்தி (ஆண்டு சதவீத மாற்றம்)**


| விடயம் | 1990-99 மாற்றம் (அ) | 2000 | 2001 (அ) |
|---|---|---|---|
| 1. விவசாயமும் காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழில் | 2.6 | 1.8 | -3.0 |
| 1.1 விவசாயம் | 2.5 | 1.7 | -3.7 |
| தேயிலை | 4.0 | 7.8 | -3.4 |
| இறப்பர் | -0.7 | -9.7 | -1.8 |
| தெங்கு | 1.5 | 8.0 | -9.7 |
| நெல் | 4.2 | -0.3 | -5.7 |
| ஏனையவை | 2.6 | 0.9 | -2.0 |
| 1.2 காட்டுத்தொழில் | 1.4 | 1.6 | 5.0 |
| 1.3 மீன்பிடித்தொழில் | 4.2 | 2.5 | -4.0 |
| 2. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 2.6 | 4.8 | 0.7 |
| 3. தயாரிப்பு | 8.0 | 9.2 | -4.0 |
| 3.1 தேயிலை, இறப்பர், தெங்கு பதனிடல் | 2.3 | 4.2 | -5.3 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 9.3 | 10.4 | -3.9 |
| 3.3 சிறு கைத்தொழில் | 5.9 | 5.5 | -3.5 |
| 4. கட்டடவாக்கம் | 5.2 | 4.8 | 2.5 |
| 5. வலு,வாயு,நீர், சுகாதாரப்பணிகள் | 8.1 | 4.5 | -2.9 |
| 5.1 மின்வலு | வி.கி | 4.5 | -3.7 |
| 5.2 நீர், வாயு | வி.கி | 4.5 | 2.1 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 6.3 | 7.8 | 5.2 |
| 6.1 துறைமுகப்பணிகள் | வி.கி. | 0.4 | 0.0 |
| 6.2 தொலைத்தொடர்பூட்டல் | வி.கி | 25.1 | 25.2 |
| 6.3 போக்குவரத்து | வி.கி. | 4.1 | -0.5 |
| 7. மொத்த மற்றும் சில்லறைவியாபாரம் | 5.2 | 8.7 | -6.5 |
| 7.1 இறக்குமதிகள் | 7.1 | 12.9 | -10.7 |
| 7.2 ஏற்றுமதிகள் | 9.6 | 18.3 | -8.0 |
| 7.3 உள்நாடு | 2.5 | 2.4 | -1.6 |
| 8. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 7.9 | 6.4 | 5.0 |
| 9. வதிவிடங்களின் உடைமை | 1.3 | 1.7 | 1.4 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 3.4 | 4.2 | 1.1 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 5.7 | 2.3 | 2.2 |
| 11.1 சுற்றுலாவிடுதிகளும் உணவகமும் | வி.கி | -1.1 | -5.5 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 5.2 | 6.0 | -1.4 |
| 13. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் | -6.9 | -20.3 | 8.0 |
| 14. மொத்த தேசிய உற்பத்தி | 5.3 | 5.8 | -1.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) தறிகாலிகமானவை

ஒன்று சேர்ந்த கேள்விப் பக்கத்தினூடாகவும் உணரப்பட்டது. 2000ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 7.3 சதவீதங்கொண்ட உச்ச வளர்ச்சியிலிருந்து தொடங்கிய பொருளாதார வளர்ச்சியின் வீழ்ச்சியானது 2001ஆம் ஆண்டிலும் தொடர்ந்ததுடன், நாட்டின் ஏற்றுமதிகள் மீது உலக பொருளாதாரத்தின் பின்னடைவின் தொடர்ச்சியான தாக்கத்தினையும் வேளாண்மை மற்றும் நீர்மின்வலு உருவாக்கத்தின்மீது நீண்டகால வரட்சியின் மோசமான விளைவுகளையும் பிரதிபலித்தது. பின்னரைப்பகுதியில் நிலைமை மேலும் மோசமடைந்தமைக்கு தொடர்ச்சியான வரட்சியின் காரணமாக உருவான மின்வெட்டு, கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் யூலையிலும் ஐக்கிய அமெரிக்காவில் செத்தெம்பர் 11இலும் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதிகளின் தாக்குதல், ஒகத்தில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் நாட்டில் காணப்பட்ட குழப்ப நிலைமை என்பன காரணமாக அமைந்தன. இவ்வனைத்து மோசமான நிகழ்வுகளினதும் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் காலாண்டுப் பொருளாதார வளர்ச்சி மூன்றாம் காலாண்டில் 3.7 சதவீதத்திற்கு கடுமையாக வீழ்ச்சியடைந்ததுடன் நான்காம் காலாண்டில் மேலும் சய 3.4 சதவீதங் கொண்ட எதிர்கணிய வளர்ச்சிக்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக உண்மை மொ.உ.உற்பத்தியின் மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறு, ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி 2000ஆம் ஆண்டின் 6 சதவீதங்கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2001

**வரைபடம் 1.2**
**காலாண்டு உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிவீதங்கள்**
**1997 - 2001**





**அட்டவணை 1.4**
**நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொத்த உள்நாட்டுஉற்பத்தி (துறைகளின் பங்குகள் சதவீதத்தில்)**

| | 1998 | 1999 | 2000 | 2001 (அ) |
|---|---|---|---|---|
| 1.விவசாயம், காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழில் | 21.1 | 20.7 | 19.4 | 19.4 |
| 2.கைத்தொழில் | 27.5 | 27.3 | 27.3 | 26.5 |
| 2.1 கல்லுடைத்தலும் சுரங்கமகழ்தலும் | 1.9 | 1.8 | 1.9 | 1.9 |
| 2.2 தயாரிப்புத் தொழில் | 16.516.4 | 16.8 | 15.8 | |
| 2.3 மின்வலு, வாயு, நீர் | 1.5 | 1.5 | 1.2 | 1.3 |
| 2.4 கட்டடவாக்கம் | 7.6 | 7.6 | 7.3 | 7.5 |
| 3.பணிகள் | 51.4 | 52.0 | 53.3 | 54.1 |
| 3.1 போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | 11.1 | 11.4 | 11.7 | 12.3 |
| 3.2 மொத்த சில்லறை வர்த்தகம் | 21.5 | 21.2 | 22.6 | 21.9 |
| 3.3 வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 7.6 | 8.1 | 8.1 | 8.4 |
| 3.4 வதிவடங்களின் உடைமை | 1.9 | 1.8 | 1.8 | 1.8 |
| 3.5 பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 5.3 | 5.3 | 5.2 | 5.5 |
| 3.6 பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 4.0 | 4.1 | 4.0 | 4.1 |
| 4. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| 7. வெளிநாடுகளிலிருந்தான தேறிய காரணி வருவாய் | (1.3) | (-1.8) | (-2.1) | (-2.0) |
| 8. மொத்த தேசிய உற்பத்தி | 98.7 | 98.2 | 97.9 | 98.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

வரைபடம் 1.3
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளமைப்பு




ஆம் ஆண்டில் 1.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்திற்காக சீராக்கம் செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தி என வரைவிலக்கணம் செய்யப்பட்ட மொ.தே.உற்பத்தி 2000ஆம் ஆண்டின் 5.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் 1.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

அனைத்து முக்கிய துறைகளான வேளாண்மை 3 சதவீதத்தினாலும், கைத்தொழில் 2.0 சதவீதத்தினாலும் பணிகள் அரை சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து பொருளாதார மெதுவடைவு பரவலாயிற்று. 2001இல் கட்டுமானம் வங்கித்தொழில், போக்குவரத்து தொடர்பூட்டல் போன்ற ஒருசில துணைத்துறைகள் சாதகமான உண்மை வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தபோதும் இச் சாதகமான வளர்ச்சி வீதங்களும் முன்னைய ஆண்டின் வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே இருந்தன.

நடைமுறைச் சந்தை விலைகளில் 2001இல் மொ.உ.உற்பத்தி 11.3 சதவீதத்தினால் ரூ.1,400 பில்லியனுக்கு உயர்வடைந்த வேளையில் மொ.தே.உற்பத்தி ரூ.1,377 பில்லியனுக்கு உயர்வடைந்தது. உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியும், உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியும் எதிர்க்கணிய வளர்ச்சியை பதிவு செய்தமையினால் உண்மை நியதிகளில் இந்த அதிகரிப்புகளுக்கு விலைகளின் அதிகரிப்பே காரணமாகியது. இதே வேளையில் 2001ஆம் ஆண்டில் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 20 ஆண்டுகளின் பின்னர் நடாத்தப்பட்ட வீடமைப்பு மற்றும் குடித்தொகை மதிப்பு நடுவாண்டுக் குடித்தொகை 18.73 மில்லியன்[அ] எனக் காட்டியது. பெயரளவு நியதிகளில் (தலைக்குரிய) மொ.உ.உற்பத்தி 2001இல் ரூ.74,760 இற்கு 9.8 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி 13 சதவீத விலைப் பணவீக்கத்தைப் பிரதிபலிக்கையில் ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி சராசரி செலாவணி வீதத்தில் ஏற்பட்ட 15.1 சதவீதங் கொண்ட தேய்மானத்தினைத் தொடர்ந்து ஐ.அ.டொலர் 899 இலிருந்து ஐ.அ.டொலர் 837 இற்கு 6.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனவே 2001ஆம் ஆண்டில் இலங்கையர்களின் சராசரி வாழ்க்கைத்தரம் மோசமடைந்ததது சாத்தியமானதே.

## வேளாண்மையும் இணைந்த நடவடிக்கைகளும்

ஆண்டு முழுவதும் நிலவிய கடுமையான வரட்சியினால் வேளாண்மைத்துறையின் செயலாற்றம் மோசமாகப் பாதிக்கப்பட்டது. 2001இல் முக்கிய வேளாண்மை உற்பத்திகளின் வெளியீடு வீழ்ச்சியடைந்து வேளாண்மையின் கூட்டப்பட்ட பெறுமதியினை முன்னைய ஆண்டின் 2 சதவீதங் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக, 3 சதவீதத்தினால் சுருக்கமடையச் செய்தது. மோசமான வானிலை நிலைமைகளினால் 1992 இலும் 1996இலும் இத்துறை எதிர்கணிய வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்துள்ளமையானது வானிலை மாற்றங்களினால் இது பாதிக்கப்படும் தன்மையினையும் பிரதிபலிப்பதாக உள்ளதோடு அதன் மீட்சியை மேம்படுத்துவதற்கான நவீனப் பயிர்ச்செய்கை நடைமுறைகளை (சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் பச்சை இல்லங்கள்) விரிவாக்குதல், மற்றும் குறைந்த நீரைப் பயன்படுத்தத்தக்க பயிர்களைப் பயிர் செய்தல் போன்ற வழிமுறைக்கான தேவைகளையும் குறித்துக்காட்டுவதாக இருந்தது.

(அ) 2001ஆம் ஆண்டில் தொகை மதிப்புப் புள்ளிவிபர திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட குடித்தொகை மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பீட்டைத் தொடர்ந்து தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின் அடிப்படையில் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்கள் திருத்தப்பட்டுள்ளன.

17 MAY
LIBRARY
Information Department

பருவக்காற்று போதியளவு மழை வீழ்ச்சியைக் கொண்டு வருவதற்குத் தவறியது மட்டுமன்றி, மழைவீழ்ச்சி ஒரு குறுகியகாலப் பகுதிக்குள் மிகச் செறிந்து காணப்பட்டமையும் வரட்சியின் கடுமையை மேலும் அதிகரித்தது. நிரந்தரப் பயிர்களின் உற்பத்தியைக்கூட நீண்டவரட்சி பாதித்துள்ளது. 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உருளைக்கிழங்கு தவிர்நத தேயிலை, இறப்பர், தெங்கு, நெல் மற்றும் ஏனைய களப்பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. எனினும் கால்நடைத்துறையின் அனைத்து முக்கிய வகைகளும் அதாவது பால், முட்டை, கோழித்தீன் என்பனவற்றின் உற்பத்தி 2001இல் அதிகரித்தமையினால் இத்துறை சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.

1992இல் அரசிற்குச் சொந்தமான பெருந் தோட்டங்கள் தனியார்மயமாக்கப்பட்டதிலிருந்து மேம்பட்ட வேளாண்மை நடைமுறைகள் மற்றும் முகாமைத்துவ நடைமுறைகளின் பயன் காரணமாக தேயிலை உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட மேல் நோக்கிய போக்கு 2001இல் மாற்றமடைந்து, வரட்சியின் மோசமான தாக்கத்தினைப் பிரதிபலித்தது. 2000ஆம் ஆண்டில் 306 மில்லியன் கி.கிறாம் கொண்ட முன்னெப்பொழுதுமில்லாத உச்சமட்ட வெளியீட்டைக் கொண்டிருந்த தேயிலை உற்பத்தி 2001இல் 295 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு 3.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

தாழ்நிலப் பிரதேசங்களின் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்பு உயர் மற்றும் மத்திய உயரப் பிரதேசங்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியை எதிரீடு செய்யப்போதுமானதாக இருக்கவில்லை. சிறு உடைமையாளர் துறையின் சராசரி விளைச்சல் (எக்டேயர் ஒன்றுக்கு 2,212 கி.கிராம்) பாரிய பெருந்தோட்டத்துறையின் விளைச்சலைவிட (எக்டேயர் ஒன்றுக்கு 1365 கி.கிராம்) கணிசமான அளவு உயர்வாகக் காணப்பட்டு விவசாய பிரயோகங்களை மேம்படுத்துவதன் மூலமும் உயர்விளைச்சலைக் கொண்ட தேயிலைப் பயிர்களினால் பழைய தேயிலைத் தோட்டங்களில் மாற்று நடுவதன் மூலமும் விளைச்சலை அதிகரிப்பதற்காக உள்ளார்ந்த வாய்ப்புக்கள் காணப்படுவதை பிரதிபலித்தது. அதேவேளை வெட்டிக்கிழித்து சுருட்டப்பட்ட தேயிலை உற்பத்தி சிறிதளவு பின்னடைவினைக் கொண்டிருந்தமைக்கு அதிகரித்த உலக நிரம்பலின் விளைவாக அவற்றின் விலைகள் சாதகமற்று இருந்தமையே காரணமாகும்.

வெளியீட்டில் குறைப்புக் காணப்பட்டபோதும், கொழும்பு ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட தேயிலையினதும் அளவு 2001இல் அதிகரித்தமையானது இருப்புக்களில் குறைப்பொன்றினை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. கொழும்பு ஏலங்களில் ஆண்டுச் சராசரி விலை ரூபா நியதிகளில் கி.கிறாமிற்கு ரூ.143.96 இற்கு 6 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், இது ஐ.அ.டொலர் நியதிகளில் கி.கிறாமிற்கு ஐ.அ.டொலர் 1.61இற்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து. கென்யாவில் தேயிலை உற்பத்தியின் எழுச்சி உலகப் பொருளாதாரத்தின் பின்னடைவின் விளைவாக கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் விளைவாக பன்னாட்டு சந்தையில் தேயிலை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.

தேயிலை ஏற்றுமதியின் அளவு 295 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு 2 சதவீதத்தினால் அதிகரித்து, தொடர்ந்தும் ஐந்தாண்டுகளாக தேயிலையின் மிகப் பெரிய ஏற்றுமதியாளர் என்ற நிலையைக் கிடைக்கச் செய்தது. ருசியா, ஐக்கிய அரபு எமிறேட்ஸ் மற்றும் சிரியா என்பன மூன்று பெரும் வாங்குனர்களாக இருந்தன. தொகை வடிவிலான தேயிலை ஏற்றுமதியின் பங்கு 63 சதவீதத்திலிருந்து 2001இல் 60 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளின் பங்கு 37 சதவீதத்திலிருந்து 40 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. எனவே பெறுமதி கூட்டப்பட்ட தேயிலையைக் கூடுதலாக உற்பத்தி செய்வதன் மூலம் தேயிலை ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதற்கு இன்னமும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் கொண்டிருந்த இறப்பர் உற்பத்தி, 2001இல் முன்னெப்பொழுதுமில்லாத மிகக் குறைந்த மட்டமான 86 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு மேலும் 1.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. வீழ்ச்சி முழுவதும் சிறு உடைமையாளர் துறையிலேயே பிரதிபலிக்கப்பட்டது. கவர்ச்சியற்ற விலைகளின் காரணமாக பாலெடுத்தல் கைவிடப்பட்டமையே இவ் வெளியீட்டில் வீழ்ச்சி ஏற்பட முக்கிய காரணமாகும். அதேவேளை இறப்பர் மரங்களுக்கான கேள்வியும் அதிகரித்துச் செல்வது இறப்பர் பயிர்செய்கையின் கீழான நிலப்பரப்பை மேலும் குறைத்துவிட்டது. மந்தமான இறப்பர் விலைகள் தொடர்ந்து காணப்படுவதும் வளமாக்கிப் பாவனையை ஊக்கம் குன்றச் செய்து அதன் மூலம் இறப்பர் விளைச்சலைக் குறைத்துவிடுகிறது. இலங்கை உலகின் பாரிய கைத்தொழில் டயர் தயாரிப்பாளராகவுள்ளது. மேலும் கையுறைகள் காற்றடைக்கும் டயர்கள் மற்றும் டியூப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பரந்த அளவிலான இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் முக்கிய உள்ளீடாக இயற்கை இறப்பரையே பயன்படுத்தின. தயாரிக்கப்பட்ட உற்பத்திகளுக்கான நலிவுற்ற ஏற்றுமதிக் கேள்வியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் உள்நாட்டுக் கைத்தொழில்துறையில் இறப்பரின்

நுகர்வு 2001இல் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று நலிவுற்ற கேள்வியின் காரணமாக இறப்பர் மரக் கைத்தொழிலும் பின்னடைவினைக் கொண்டிருந்தன.

2000ஆம் ஆண்டில் 3,096 மில்லியன் காய்களிலான உச்சமட்ட வெளியீட்டினைக் கொண்டிருந்த தெங்கு உற்பத்தி 2,796 மில்லியன் காய்களுக்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தொடர்ச்சியான வரட்சி, முன்னைய ஆண்டுகளில் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளமாக்கிப் பாவனையின் காலங்கடந்த தாக்கம் என்பன வீழ்ச்சிக்கான முக்கிய உதவுகாரணிகளாக இருந்தன. இவ்வீழ்ச்சி 2001இல் உள்ளூர்ச் சந்தையில் தேங்காயின் விலைகள் கடுமையாக உயர்வடையக் காரணமாயிற்று. எனினும் ஐ.அ.டொலர் நியதிகளில், 2000ஆம் ஆண்டில் 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த உள்ளீட்டு உற்பத்திகளின் சராசரி ஏற்றுமதி விலை மேலும் 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து உள்நாட்டுச் சந்தையில் தேங்காய் விலைகளின் மீதான அழுத்தத்தினைக் குறைத்தது. இருந்தபோதும் சமையல் எண்ணெய்யின் இறக்குமதி மீதான உயர்ந்த தீர்வையின் மூலம் வழங்கப்பட்ட பாதுகாப்பின் கீழ் தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்பு உள்நாட்டு தேங்காய் விலைகளின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தியது. உள்நாட்டு நிரம்பலில் ஏற்பட்ட பற்றாக்குறையினை ஈடுசெய்யும் பொருட்டு, உள்நாட்டுச் சந்தையில் அதிகரிக்கும் தேங்காய் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இவ்வாண்டில் உலர்த்திய தேங்காயை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது.

பெரும்போகம் வரட்சியினால் பாதிக்கப்பட்டதன் காரணமாக 2001இல் நெல் உற்பத்தி 5.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இரு போகங்களிலும் விதைக்கப்பட்ட பரப்பும் அறுவடை செய்யப்பட்ட பரப்பும் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைவான மழை வீழ்ச்சியே காரணமாக இருந்தது. எனினும் நீர்ப்பாசன நிலங்களின் பயிர்ச்செய்கையில் மிகக்கூடியளவு கவனம் செலுத்தப்பட்டமையும் இலாபம் குறைந்த நிலங்கள் பயிர் செய்யப்பட்டமையும் சராசரி விளைச்சலை அதிகரிக்கச் செய்து எக்டேயருக்கான சராசரி விளைச்சல் எக்டேயரொன்றிற்கு பெரும்பாலும் 4 மெற்றிக் தொன் கொண்ட உச்சமட்டத்திற்கு அதிகரிக்கச் செய்தது. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி, உரிமத் தேவைப்பாடுகள் மூலமான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பன உள்நாட்டுச் சந்தையில் அரிசியின் விலைகளைக் கடுமையாக உயர்த்தின. இவ்வதிகரித்துச் செல்லும் விலைகளின் பின்னணியில் ஆண்டின் இறுதியில் கூ.மொ.விற்பனை நிலையமும், தனியார் துறையும் தீர்வையற்ற அடிப்படையில் அரிசியை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டன. நெற்துறையை அபிவிருத்தி செய்வதற்கு பயிர்ச்செய்கையாளருக்கும் அதேபோன்று ஆலையாளர்களுக்கும் தூண்டுதலை அளிக்கக்கூடிய சூழலை உருவாக்கும் விதத்தில் உரிமைத் தேவைப் பாடுகள் ஒழிக்கப்பட்டு, கடந்த காலங்களைப் போன்று அவ்வப்போதைய தேவைகளுக்கு சீராக்கம் செய்வதனை விடுத்து, உயர்ந்தமட்ட தீர்வைகளினூடாக மட்டும் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும்.

ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் 2001இல் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டின. இத்துறை முக்கிய ஏற்றுமதி உழைப்பாளராக மாறியுள்ளதுடன் இறப்பர் மற்றும் தெங்கு என்பனவற்றின் இணைந்த ஏற்றுமதி வருவாய்களைவிட விஞ்சிக் காணப்பட்டன. இவ்வகையில் முக்கிய பயிர்களிடையே கறுவா, கராம்பு என்பனவற்றின் உற்பத்தி அதிகரித்த வேளையில் மிளகு உற்பத்தி கடுமையாக வீழ்ச்சியடைந்து அபரிமித உற்பத்தியின் பின்னர் விளைச்சல் குறைவடைந்து போவதனைப் பிரதிபலித்தது.

2001இல் ஏனைய களப்பயிர்த்துறையும் மோசமான செயலாற்றத்தினைக் கொண்டிருந்தமைக்கு உருளைக்கிழங்கு தவிர்ந்த அனைத்து முக்கிய பயிர்களினதும் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். உருளைக்கிழங்கு இறக்குமதியின் மீது குறித்துரைக்கப்பட்ட தீர்வை விதிக்கப்பட்டமையின் மூலம் வழங்கப்பட்ட மிகக்கூடிய பாதுகாப்பின் காரணமாக உருளைக்கிழங்கின் உற்பத்தி 19 சதவீதத்தினால் அதிகரித்தது.

இவ்வாண்டில் மீன் உற்பத்தி 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து கடல் மற்றும் பண்ணை மீன் இரண்டினதும் உற்பத்தி குறைவடைந்தமையைப் பிரதிபலித்தது. இதன் விளைவாக உள்நாட்டுச் சந்தையில் மீனின் விலைகள் அதிகரித்தன. பாற்பண்ணை மற்றும் கோழி வளர்ப்பு ஆகிய துணைத்துறைகளை முக்கியமாக உள்ளடக்கிய கால்நடைத்துறை 2001இல் மேம்பாட்டினைப் பதிவு செய்தது.

## கைத்தொழில்

நலிவடைந்த கேள்வி, மின்வெட்டு மற்றும் அதிகரித்த உற்பத்திச் செலவு என்பனவற்றினால் 2001இல் கைத்தொழில்துறையின் செயலாற்றம் பாதிக்கப்பட்டது. தயாரிப்புத்துறையில், பாரிய துணைத்துறையான தொழிற்சாலைக் கைத்தொழில்துறை 3.9 சதவீதம் கொண்ட வெளியீட்டு வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களின் வெளியீட்டில் ஏற்பட்ட கடுமையான குறைப்பும் உள்நாட்டுச் சந்தைக்கு பொருட்களை வழங்கும் கைத்தொழில்களில் ஏற்பட்ட கணிசமான பின்னடைவுமே காரணங்களாகும். கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக

7 சதவீதத்திற்கு மேற்பட்ட சராசரி ஆண்டு வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்து தொடர்ச்சியான அதிகரிப்பினைக் கொண்டிருந்த தயாரிப்பு வெளியீடு 2001இல் முதற்தடவையாக வீழ்ச்சியடைந்தது. கைத்தொழில் துணை வகைகளிடையே குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் ஆடை மற்றும் புடவைகள் (8.5 சதவீதம்), மட்பாண்ட உற்பத்திகள் (11.9 சதவீதம்) மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் (11.3 சதவீதம்) என்பனவற்றில் பதிவு செய்யப்பட்டன.

தயாரிப்புத்துறையில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களின் மோசமான செயலாற்றமே முக்கிய காரணமாகும். நுகர்வோர் செலவினத்தில் கீழ் நோக்கிய திருத்தங்கள் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவில் உள்ள முக்கிய வாங்குனர்களும் சிறப்பு அங்காடிகளும் இருப்புக்களில் செய்த குறைப்பு ஆடைகள் மற்றும் புடவை உற்பத்திக்கான ஏற்றுமதிக் கட்டளைகளைக் குறைவடையச் செய்தன. அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியச் சந்தையிலுள்ள வாங்குனர்கள் பாரிய விலைக் கழிவுகளைக் கோரியமையும் உயர் பெறுமதி கூட்டப்பட்ட ஆடைகளுக்கான சராசரி ஏற்றுமதி விலையைக் குறைத்தன. கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் செத்தெம்பர் 11இல் ஐக்கிய அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் இலங்கையின் தயாரிப்பு ஏற்றுமதிகளினால் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளை மேலும் மோசமாக்கின.

தயாரிப்புத்துறையிலுள்ள மிகப்பெரும் துணைத்துறையான ஆடை மற்றும் புடவைகள் ஏற்றுமதித்துறை பன்னாட்டுச் சந்தையில் கடுமையான போட்டியை எதிர்நோக்கியது. சில ஆபிரிக்க மற்றும் கரிபியன் நாடுகளுக்கு ஐக்கிய அமெரிக்கா வழங்கிய சிறப்புச் சலுகைகளும் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள செலவு குறைந்த தயாரிப்பு நாடுகள் மற்றும் சீனா என்பனவற்றிலிருந்தான அதிகரித்த நிரம்பலும் இலங்கை ஆடை மற்றும் புடவை ஏற்றுமதியாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட போட்டியை மேலும் அதிகரித்தது. துணிகளையும் துணைத் தயாரிப்புக்களையும் சொந்தமாகத் தயாரிக்கும் அடித்தளம் பாரிய இயலளவு, ஒப்பீட்டு ரீதியில் மலிவான தொழிலாளர் என்பனவற்றுடன் 2001இல் உலக வர்த்தக அமைப்பினை சீனா அடையக்கூடியதாக இருந்ததன் பின்னர், பன்னாட்டுச் சந்தையில் அது வலுவுடன் நுழைந்தமையானது இலங்கை போன்ற சிறிய நாடுகளினால் எதிர்நோக்கப்பட்ட போட்டி மேலும் தீவிரமடைந்தது.

நலிவடைந்த நுகர்வோர் செலவினம் காரணமாக உள்நாட்டுச் சந்தைக்குப் பொருட்களை வழங்குகின்ற கைத்தொழில்களின் உற்பத்தி விரிவாக்கம் 2001இல் வீழ்ச்சியடைந்தது. மந்தமடைந்த உள்நாட்டுச் சந்தையில் சில தயாரிப்பாளர்கள் பல்வேறுபட்ட விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளையும், ஊக்குவிப்புக்களையும் அறிமுகப்படுத்தி தமது இலாப அளவுகளைப் பெற்றுக்கொண்டனர். நலிவடைந்த கேள்வி, அதிகரித்த உற்பத்திச் செலவு மற்றும் கடுமையான தொழிலாளர் சட்டங்கள் என்பன 2001இல் தயாரிப்புத்துறையின் இலாபத்தினை பாதித்தன. முதலீட்டுச் சபையல்லா கைத்தொழில் துறையின் மீதான கைத்தொழில் அளவீடு 2000ஆம் ஆண்டின் 13.7 சதவீதத்திலிருந்து 2001இல் 10.4 சதவீதத்திற்கு இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்தமையை எடுத்துக்காட்டியது.

கைத்தொழில் கொள்கையைப் பொறுத்தவரையில் அரசாங்கம் தனியார்துறையினால் வழிநடாத்தப்படும் ஏற்றுமதி சந்தை சார்ந்த கைத்தொழில் கொள்கையினையே தொடர்ந்தும் கொண்டிருந்தது. 2001ஆம் ஆண்டில் அடைந்த அனுபவமானது வெளிநாட்டு அதிர்ச்சிகளிலிருந்து மீட்சிபெறும் ஆற்றலை அதிகரிக்கும் விதத்தில் அதிகரித்துச் செல்லும் பன்னாட்டுப் போட்டியை எதிர்கொள்வதற்கு உற்பத்தியாக்க காரணிகளை மேம்படுத்துவதற்கும் கைத்தொழில் உற்பத்தித் தளத்தினையும் ஏற்றுமதிச் சந்தை நாடுகளையும் பன்முகப்படுத்துவதற்குமான தேவையை எடுத்துக்காட்டின. இதேபோன்று உலகசந்தையின் மாற்றங்களுக்கேற்ப கைத்தொழில்களை மீள அமைப்பதற்கான வசதிகளை வழங்க நெகிழ்ச்சித்தன்மை கொண்ட தொழிலாளர் ஒழுங்குவிதிகள் அவசியமானவையாகும்.

2001இல் வலுத்துறையில் கடுமையான நெருக்கடிகள் காணப்பட்டன. வலு வழங்கலில் கடுமையான பற்றாக்குறை காணப்பட்டமைக்கு நீரேந்து பிரதேசங்களில் பெறப்பட்ட குறைந்த மழை வீழ்ச்சியின் விளைவாக நீர்மின்வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, வலுப்பொறிகளை பழுதுபார்ப்பதில் ஏற்பட்ட காலதாமதம் மற்றும் வாடகை வலுப் பொறிகளை இடைநிறுத்தியமை என்பன காரணங்களாகும். இந் நிலைமைகள் ஆண்டின் பின்னரைப்பகுதியில் நீண்ட மின்வெட்டிற்கு வழிவகுத்து, பொருளாதார நடவடிக்கைகளைத் தடைப்படுத்தியது. இணைந்த சுற்று வலுப்பொறி (110 மெவா) தொடங்கப்பட்டதுடன் 2001 மொத்தவலு உருவாக்க இயலளவு 1901 மெ.வா.இற்கு 7 சதவீதத்தினால் அதிகரித்தமையின் மூலம் நீர் மின்வலுவில் தங்கியிருக்கும் அளவு 61 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. எனினும், உண்மையில் பெறப்படுகின்ற இயலளவு உள்ளார்ந்த இயலளவிலும் பார்க்க மிகக்குறைவாக இருப்பதற்கு நீர்த்தேக்கங்களின் குறைந்த நீர் மட்டங்களே காரணமாக இருந்தன.

மின்வலு நுகர்வு வலயமைப்பு ஏறத்தாழ 7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மின்னூட்டலைப் பெற்ற குடியிருப்பாளர்களின் பங்கினை 65 சதவீதத்திற்கு அதிகரித்தது. விரிவடைந்து செல்லும் நுகர்வோர் வலயமைப்பு மற்றும் பொருளாதாரத்தில் அதிகரித்துச் செல்லும் வலுவின் பாவனை மின்வலு உருவாக்க இயலளவின் விரிவினை விட விரைவான வீதத்தில் இருப்பது ஆகியவற்றின் காரணமாக மின்வலுவிற்கான கேள்வி அதிகரித்துள்ளது. நாட்டில் ஏற்கனவே காணப்பட்ட வலுப் பற்றாக்குறையை இந்நிலைமை மேலும் பெரிதாக்கியது.

இலங்கை மின்சபை 2001இல் இரு நெருக்கடிகளை எதிர்கொண்டது. வலு நெருக்கடி ஒன்று. திரவப்பிரச்சனை மற்றொன்று. வெப்பவலுவிலும் வாடகை வலுவிலும் பெருமளவிற்கு தங்கியிருந்தமையின் காரணமாக வலு உருவாக்கச் செலவு விரைவாக உயர்வடைந்ததெனினும் இம் மேலதிக செலவுகளை ஈடுசெய்யும் விதத்தில் வலுத்தீர்வைகள் போதுமானளவிற்கு உயர்த்தப்படவில்லை. தொடர்ச்சியான சராசரித் தீர்வைகள் (அலகொன்றிற்கு ரூ.5.53) சராசரிச் செலவிலும் பார்க்க (அலகொன்றிற்கு 7.20) குறைவாக இருந்தமையானது இலங்கை மின்சபைக்கு ஏறத்தாழ ரூ.12 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு இழப்பினை விளைவித்து வங்கிக் கடன்பாடுகளினால் நிதியிட வேண்டி ஏற்பட்டது. அறிவிக்கப்பட்ட முகாமைத்துவ செயற்திறன் இன்மைகளும் மூலவளங்களில் தவறான பயன்பாடு என்பன இதற்கான காரணங்களாக இருந்திருக்கலாம். அதேவேளை மின்வலு கடத்தி முறைகளின் இழப்பில் சிறிதளவு வீழ்ச்சி காணப்படுமிடத்தும் இழப்பு ஏறத்தாழ 21 சதவீதமாக இருந்தமை நிதியியல் நெருக்கடிகளை மேலும் அதிகரித்தது.

2001இல் காணப்பட்ட வலு நெருக்கடி 1996இல் காணப்பட்டதை ஒத்த நெருக்கடியாக விளங்கி வலுக்கொள்கையில் தொடர்ச்சியான நலிவுகளைப் பின்பற்றப்படாமையையும் திட்டமிடப்பட்ட வலுச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் காணப்பட்ட காலதாமதத்தினையும் தெளிவாக எடுத்துக்காட்டின. வலு நெருக்கடியினைக் கையாள்வதற்கு பல வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். குறுங்காலத்தில் இலங்கை மின்சபையின் பழுதடைந்த பொறிகளை இயலுமானவரையில் விரைவாக திருத்திக்கொள்ள வேண்டியதுடன் மின்மாணி இல்லாத நுகர்வோருக்கு மாணிகளைப் பொருத்துவதன் மூலமும் வலுத் திருட்டுக்களைத் தடுப்பதன் மூலமும் வலு இழப்புக்களைக் குறைத்தல் என்பனவற்றுடன் வெளிப்படையான தன்னியக்க வலுத்தீர்வைச் சீராக்க முறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதேவேளை காலதாமதமாகும் திட்டமிடப்பட்ட வலுச் செயற்றிட்டங்களை விரைவுபடுத்த வேண்டும். ஏற்கனவே முதலீட்டு வேலைகள் நடைபெற்றுவரும் மேலதிக புதிய வலுச் செயற்றிட்டங்களை மேலும் தாமதிக்காமல் உடன் தொடங்க வேண்டும்.

நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலப் பகுதியொன்றினுள், அதிகரித்துச்செல்லும் கேள்வியை நியாயமான விலையொன்றில் ஈடுசெய்வதற்கு ஏற்ற விதத்தில் நம்பகமான வலு வழங்கலை உருவாக்கும் பொருட்டும் அதேபோன்று வலுத்துறையின் நிதியியல் ஆற்றலை அடைந்து கொள்வதற்கும் நிலக்கரி, மின்வலு போன்ற குறைந்த செலவினைக் கொண்ட வலு உருவாக்கத்தினை அபிவிருத்தி செய்வது இன்றியமையாததாகும். பொருளாதார ரீதியில் சிக்கனமான நிலக்கரி வலுப்பொறியினை பூரணப்படுத்திக் கொள்வதற்கு 4-5 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலப்பகுதி தேவையான அளவில் உத்தேச 300 மெகவாட் நிலக்கரி வலு பொறியினை மேலும் தாமதமின்றி உடன் ஆரம்பிக்கின்ற வேளையில், வலு இயலளவு விரிவாக்க நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள 300 மெ.வா. நிருமாணித்து வெளியீடுகளைக் கொண்ட மற்றைய இரு நிலக்கரிப் பொறிகளையும் கட்டிக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட வேண்டும். அதேநேரம் இலங்கை மின்சபை ஆற்றல் வாய்ந்த வர்த்தக அமைப்பாக மாறுவதற்கு அவசரமான மீளமைப்பு நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக உயர்வாகக் காணப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வி 1993இன் பின்னர் முதற் தடவையாக 2001இல் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. பொருளாதார நடவடிக்கைகளில் பின்னடைவு, அதிகரித்த உள்நாட்டுப் பெற்றோலிய விலைகள், வெப்பவலு உருவாக்கத்தில் ஏற்பட்ட குறைப்பு என்பன இவ்வீழ்ச்சிக்கு முக்கிய பொறுப்பாக இருந்தன. 2001 செத்தெம்பர் வரை உயர்வாகக் காணப்பட்ட பன்னாட்டு மசகெண்ணெய் விலைகள் ஐக்கிய அமெரிக்காவில் பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து கைத்தொழில் நாடுகளின் பொருளாதாரப் பின்னடைவு மேலும் ஆழமடைந்ததைத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, மசகெண்ணெய் சராசரி இறக்குமதி விலை (கொ.க) 2001இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 24.47 இற்கு 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் வெளிநின்ற கடன்களின் ஒரு பகுதியினைக் குறைப்பதற்கு அதனை இயலச் செய்ததுடன் சென்மதி நிலுவைக் கொடுப்பனவுகளின் சுமையினையும் குறைத்தது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் இழப்புக்களை ஈடுசெய்வதற்காக டீசல் மற்றும் உலைஎண்ணெய்யின் விலைகள் ஏப்பிறலில் இலீற்றர் ஒன்றிற்கு முறையே ரூ.3.00 இனாலும், ரூ.1.80 இனாலும் உயர்த்தப்பட்டன. இலங்கை மின்சபை வாடகை வலுக் கொள்வனவை இடைநிறுத்தியமை, பொருளாதாரப் பின்னடைவின் விளைவாக போக்குவரத்து நடவடிக்கைகள் பின்னடைந்தமை என்பன மொத்தப் பெற்றோலிய நுகர்வில் 50 சதவீதத்திற்கு வகைகூறும் டீசல் நுகர்வில் 3 சதவீத வீழ்ச்சியை விளைவித்தன. அதேவேளை மண்ணெண்ணெய்யின் நுகர்வில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு 2001இல் மின்வெட்டினைத் தொடர்ந்து மண்ணெண்ணெய்க்கான கேள்வி புதுப்பிக்கப்பட்டமையின் காரணமாக நிறுத்தப்பட்டது.

ஒன்றுசேர்ந்த பாரிய இழப்புக்களும் தொடர்ச்சியான செயல் திறன் இன்மையும் பெற்றோலியத்துறையில் முக்கிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையினை வலியுறுத்தின. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நீண்ட காலத்திற்கு முன்பே செய்திருக்க வேண்டிய பெற்றோலிய உற்பத்திக்கான நெகிழ்ச்சியான விலையிடல் கொள்கையை 2001 இறுதியில் அறிமுகப்படுத்தியது. புதிய விலையிடல் கொள்கையின் கீழ், முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகள், உற்பத்திச் செலவினது மாற்றங்களின் அடிப்படையில் மாதாந்தம் திருத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ் விலையிடல் முறையின் காரணமாக, பன்னாட்டு மசகெண்ணெய் விலைகளின் தளம்பல்கள், செலாவணி வீதம் அல்லது வேறு ஏதாவது உள்ளீடுகளின் காரணமாக ஏற்படும் ஏதாவது இலாபம் அல்லது இழப்பு சூத்திரம் ஒன்றின்படி நுகர்வோர் மீது சுமத்தப்படும். படுகடன் மீளப்பெறல் சீராக்கக் காரணியும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏறத்தாழ ரூ.19 பில்லியன் கொண்ட தற்போதுள்ள கடனை தீர்க்கும் பொருட்டு விலையிடல் சூத்திரமொன்றிற்கு ஒருங்கிணைக்கப்பட்டது. தனியுரிமைக் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து திரவப் பெற்றோலியச் வாயுச் சந்தையில் புதிய உள்ளூர் கம்பனியொன்று நுழைந்ததைத் தொடர்ந்து சந்தையில் போட்டி உருவானது. குறைந்த விலைகள் மற்றும் மேம்பட்ட பணிகள் என்பனவற்றினூடான போட்டித்தன்மையிலிருந்து நுகர்வோர் ஏற்கனவே நன்மைகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பெற்றோலிய உற்பத்திகளுக்கு கூடியளவிற்குப் போட்டிச் சந்தையினை உருவாக்குவதற்கு இத்துறையில் முக்கிய சீர்திருத்தங்கள் அவசியமானவையாக உள்ளன. பெற்றோலியத் துறையின் வினைத்திறனையும் போட்டித்தன்மையினையும் மேம்படுத்துவதற்காக சுத்திகரிக்கப்பட்ட உற்பத்தி இறக்குமதிகள், கப்பல் மற்றும் விமான எரிபொருள் வழங்கல்கள், சுத்திகரிப்புத் தொழிற்பாடுகள் மற்றும் பெற்றோலிய பகிர்ந்தளிப்புக்கள் என்பனவற்றை வெவ்வேறாகப் பிரித்து நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்ட நீரின் மொத்த அளவு 3 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் வழங்கப்பட்ட புதிய இணைப்புக்களின் எண்ணிக்கை 14 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வாண்டில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை 46 தரமுயர்த்தல் மற்றும் புத்தாக்கச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது. தண்ணீருக்காக அதிகரித்துவரும் கேள்வியை அரசதுறை முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களினூடாக மாத்திரம் ஈடுசெய்வது கடினமாகையால் நீர்வழங்கல் அபிவிருத்தியில் தனியார் துறையும் ஈடுபடுவது இன்றியமையாததாகும். எடுத்துக்காட்டாக, தேசிய வடிகாலமைப்புச் சபையின் இலக்கினை எய்துவதற்கான அதாவது பாதுகாப்பான குடிநீருக்கான தற்போதைய கிடைப்பனவு மட்டமான 67 சதவீதத்திலிருந்து 80 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கும், வருவாய் தராத நீரின் தற்போதய உயர்ந்த மட்டமான 35 சதவீதத்திலிருந்து குறைப்பதற்கும், 24 மணிநேர தடங்கலற்ற குழாய் வழிநீரை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதற்குமான மொத்த முதலீட்டுத் தேவைப்பாடுகள் தண்ணீருக்கான அடுத்த சில ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட அரசமுதலீடான ஏறத்தாழ ரூ.45 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.85 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

### பணிகள்

மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 53 சதவீதத்திற்கு வகைகூறும் பணிகள் துறையும் 2001இல் 0.5 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவு செய்தது. போக்குவரத்து, தொடர்பூட்டல் மற்றும் நிதியியல் பணிகள் ஆகிய துறைகளின் வளர்ச்சிவீதம் 2000ஆம் ஆண்டிலும் பார்க்க குறைவாக இருந்தபோதும், மிதமான சாதகமான வளர்ச்சியைக் கொண்டிருந்தன. எனினும் பாரிய துணைத்துறையான மொத்த விற்பனை, சில்லறை விற்பனை கடுமையான வீழ்ச்சியைப் பதிவுசெய்து பொதுவாக பணிகள் துறையில் ஏற்பட்ட சுருக்கத்தின் விளைவாக வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை முக்கியமாகப் பிரதிபலித்தது. சுற்றுலா மிக மோசமாகக் பாதிக்கப்பட்ட துணைத்துறையாக விளங்கி, 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, வெளிநாட்டு அதிர்ச்சிகளினால் அது பாதிக்கப்படக் கூடிய தன்மையினைப் பிரதிபலித்தது.

1996இலிருந்து உறுதியாக வளர்ச்சிடைந்து வருகின்ற தொலைத்தொடர்பூட்டல்துறை 2001இல் 25.5 சதவீதம் கொண்ட மிக உயர்ந்த வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்தது. இவ்வுயர்ந்த வளர்ச்சிக்கு கைத் தொலைபேசிகள் 55 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக அதிகரித்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். பாரிய முதலீடுகள், போட்டி அடிப்படையிலான விலை, தீவிரமான விளம்பர நடவடிக்கைகள் மற்றும் புதிய வசதிகள் என்பன இவ்வுயர்ந்த வளர்ச்சியை அடைய உதவின. எனினும், இவ்வியக்க ஆற்றல் மிக்க துறையில் உச்ச வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதனை இயலச்செய்வதற்கு செயற்திறன்மிக்க ஒழுங்கு விதிகளினால் எய்தப்படக்கூடிய நியாயமானதும் செயல்திறன்மிக்கதுமான போட்டித் தன்மையை ஊக்குவிப்பதன் மூலமான மேலும் சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன.

2001இல் வீதி மற்றும் புகைவண்டிப் போக்குவரத்துக்களின் பொதுவான செயலாற்றம் சிறிதளவு முன்னேற்றத்தினைக் காட்டியவேளையில் வான் மற்றும் கடல் போக்குவரத்துக்கள் யூலையிலும், செத்தெம்பரிலும் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்களவிற்கு பின்னடைந்தன. பயணிகள் வீதிப்போக்குவரத்து ஊர்தித் தொகுதி அதிகரிப்பு ஒன்றைக் காட்டியது. ஆனால் போக்குவரத்திற்கான அதிகரித்துவரும் கேள்வியிலும் பார்க்க மிகக் கீழேயே இது இருந்தது. தொடர்ச்சியான தொழிற்பாட்டு இழப்புக்களை ஏற்படுத்திய நலிவுற்ற புகைவண்டி உட்கட்டமைப்பு மற்றும் மோசமான பேணல் என்பன 2001இல் பெருமளவு தாமதங்கள், தடம்புரளல்கள் மற்றும் பலமரணவிபத்துக்கள் என்பனவற்றிற்கு இட்டுச்சென்றன. இந் நிகழ்வுகளினால் சீர்திருத்துவதற்கான அவசியம் வலியுறுத்தப்படுகிறது. விரைவான பொருளாதார அபிவிருத்திக்கு வினைத்திறன் மிக்க உயர்ந்த தர போக்குவரத்துப் பணிகள் அவசியமாகையால், இத்துறையில் தற்போது காணப்படும் செயல்திறன் இன்மையை அகற்றுவதன் மூலம் தனியார்துறைப் பங்கேற்பினை மேலும் அதிகரிப்பதன் மூலம் போக்குவரத்துத் துறையில் சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

2001இல் துறைமுக நடவடிக்கைகளின் பொதுவான செயலாற்றம் எதிர்க்கணிய வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. ஆண்டின் முதலரைப்பகுதியில் வளர்ச்சியைப் பதிவு செய்த துறைமுகப்பணிகள் யூலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்ற பயங்கரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இலங்கைத் துறைமுகங்களுக்கு வரும் கப்பல்கள் மீதும் கொழும்பைச் சுற்றிச்செல்லும் கப்பல்கள் மீதும் சில முக்கிய கப்பற்படுத்தல் கம்பனிகளினால் விதிக்கப்பட்ட யுத்த இடர்நேர்வு காப்புறுதி மேலதிக கட்டணத்தின் காரணமாக இரண்டாம் அரைப்பகுதியில் மிகக் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. யுத்த இடர்நேர்வு மிகைக் கட்டணம் குறைக்கப்பட்டமை மற்றும் முக்கிய கப்பற்படுத்தல் நிறுவனங்களின் கொழும்புத் துறைமுகத்திற்கு மீண்டும் வரத்தொடங்கியமை என்பனவற்றுடன் ஆண்டின் இறுதியில் நிலமை திருந்தியது.

2001இல் கொழும்பு, காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் கையாளப்பட்ட மொத்தச் சரக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கொள்கலனிலிடப்பட்ட சரக்கு அதிகரித்து 2001இன் மொத்தச் சரக்கில் ஏறத்தாழ 71 சதவீதத்திற்கு வகைகூறியது. மொத்தக் கொள்கலன் தொகுதியில் ஏறத்தாழ 69 சதவீதத்திற்கு வகைகூறும் கொள்கலன் மாற்றுக் கப்பலேற்றல் சிறிதளவு அதிகரித்தமைக்கு கொழும்புத் துறைமுகம் ஆண்டின் முதலரைப்பகுதியில் முக்கிய கப்பல் நிறுவனங்களைக் கவர்ந்தமையே காரணமாகும்.

வர்த்தகத்தில் உயர்ந்தளவிற்கு தங்கியிருக்கும் நாடு என்ற வகையில், வினைத்திறன் மிக்க உயர்தர துறைமுகப்பணிகள் கிடைக்கத்தக்கதாக இருப்பது இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும். இப் பிராந்தியத்தில் கொழும்புத் துறைமுகத்தினை ஒரு வினைத்திறன் மிக்க கப்பற்படுத்தல் மையமாக அபிவிருத்தி செய்யத்தவறுமிடத்து அல்லது தாமதிக்குமிடத்து, அயலிலுள்ள நாடுகள் முக்கியமான கப்பற்படுத்தல் நிறுவனங்களை கவரக்கூடுமாகையால் கொழும்புத் துறைமுகத்தின் மைய அந்தஸ்திற்கு இடர்ப்பாடு நேரக்கூடும். வரையறுக்கப்பட்ட சவுத்ஏசியா கேட்வே டெர்மினலின் தொழிற்பாடுகள் தொடங்கப்பட்டதுடன் கொழும்புத் துறைமுகத்தில் காணப்பட்ட மேம்பட்ட போட்டியானது துறைமுகப் பணிகளின் வினைத்திறன் மேம்படுத்துவதற்கான இயலச்செய்யும் சூழலை உருவாக்கியிருக்கிறது. மணித்தியாலமொன்றிற்கு கையாளப்படும் கொள்கலன்களின் எண்ணிக்கை முக்கிய வழிக் கொள்கலன்கள் துறைமுக மேடைக்கு வருவதற்காக காத்திருக்கும் நேரம் போன்ற உற்பத்தியாக்க குறிகாட்டிகள் கடந்த சில ஆண்டுகளாக மேம்பட்டபோதும் சிங்கப்பூர் போன்ற வினைத்திறன் மிக்க துறைமுகங்களின் தரத்திற்கு மிகக் கீழேயே காணப்படுகிறது. மேலும் பிராந்திய துறைமுகங்களின், குறிப்பாக மாற்றுக் கப்பலேற்றல் பணிகளில் எதிர்க்காலப் போட்டியை எதிர்நோக்குவதற்கு வினைத்திறனிலும் உற்பத்தியாக்கத்திலும் மேலும் மேம்பாட்டினை அடைவதற்கு அவசியமானதாகும்.

அஞ்சல் வலையமைப்பில் சில முன்னேற்றங்கள் காணப்பட்டன. எனினும், அரச வரவு திட்டத்தின்மீது ஏற்படுத்துகின்ற தொழிற்பாட்டு இழப்புக்கள் விநியோகித்தலில் காணப்படும் தாமதங்கள் செயற்பாட்டின் போது இழக்கப்படும் பொருட்கள், என்பன அஞ்சல் திணைக்களத்தில் பாரிய சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியமானது என்பதனைத் தெளிவாக எடுத்துக்காட்டியது. இந்தத் துறையில் போட்டித்தன்மையை அறிமுகப்படுத்துவதற்கு உண்மையான விலையிடல் அத்தியாவசிய முற்தேவையாகும். இந்த அடிப்படையில் பொதுப்பணியின் பணிகளினதும் செயலாற்றம் சார்ந்த நடவடிக்கைகளினதும் பன்முகப்படுத்தல் அவசியமானதாகலாம்.

2001இல் வீதி வலையமைப்பில் திருத்தமும் பேணலும் தொடர்ந்தும் இடம்பெற்றன. எனினும் நாட்டின் வீதி வலயமைப்பில் நான்கிலொரு பங்கு மட்டுமே இன்னமும் தளம் பதிக்கப்பட்டதாக இருப்பதுடன், இவ்வீதிகளில் பெரும்பாலானவை, குறிப்பாக மாகாண மட்டத்திலுள்ளவை ஒழுங்கான முறையில் பேணப்படாதுள்ளன. அதிகரித்துவரும் வாகனத் தொடர்களுடன் நகரங்களில் போக்குவரத்து நெரிசல்கள் கடுமையாக அதிகரித்து பயண தாமதங்கள், மனித மணித்தியாலயங்களின் இழப்பு அதிகரித்துச்செல்லும் மாசடைதல் என்பனவற்றினைத் தோற்றுவிப்பதும் அவதானிக்கப்படுகின்றமையினால் நிவாரண நடவடிக்கைகளுக்காக தேவை வலியுறுத்தப்படுகின்றது. ஏற்கனவே தொடங்கிவிட்ட இந்தச் செயற்றிட்டங்களுக்கு வெளிநாட்டு நிதியிடல் உள்ளபோதும் முக்கிய நெடுஞ்சாலை நிருமாண வேலைகளின் (கொழும்பு-கட்டுநாயக்கா மற்றும் கொழும்பு-மாத்தறை) முன்னேற்றம் மிக மெதுவாக இருந்தது.


2001இல் கல்வி மற்றும் நலத்துறை நடவடிக்கைகள் மேலும் விரிவடைந்த வேளையில் துறைவாரியான சீர்திருத்தங்கள் தொடர்ந்தும் மெதுவான வேகத்தில் காணப்பட்டன. 585 அரச வைத்தியசாலைகளுக்கு மேலதிகமாக, ஏறத்தாழ 7000 படுக்கை இயலளவுடன் கூடிய 160 தனியார் வைத்தியசாலைகளும் நலப்பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்தன. இவ்வியலளவு 2002இல் நவீன வசதிகளுடன் பாரிய தனியார்துறை வைத்தியசாலை திறக்கப்பட்டதுடன் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரிக்கும். மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை 2001இல் மேலும் அதிகரித்ததெனினும், அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகள் இரண்டிலும் தகுதிவாய்ந்த தாதிமார் மற்றும் துணைமருத்துவ அலுவலர்களுக்கும் கடுமையான பற்றாக்குறை காணப்பட்டது. முக்கிய ஆளணியில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட பற்றாக்குறையானது நாட்டின் நலத்துறை மனித வலுத் தேவைப்பாட்டினை எதிர்கொள்ளுவதற்காக நாட்டில் பயிற்சி வாய்ப்புக்களை விரிவாக்குவதற்கான தேவையினை வலியுறுத்துகின்றது. நலத்துறைச் செலவினத்தில் தனியார் துறையினரின் பங்கு அதிகரித்து வருவதினை அண்மைய ஆய்வுகள் எடுத்துக்காட்டுவதுடன் இது தற்பொழுது ஏறத்தாழ 50 சதவீதமாக இருந்தது. தனியார் நலத்துறைச் செலவினம் நலத்துறைக் காப்புறுதி முறைகளினூடாக ஈடுசெய்யப்படுகின்ற அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போலன்றி இலங்கையில் தனியார் நலச்செலவினம் பெரும்பாலும் முழுமையாகவே பயன்பாட்டாளரினாலேயே ஏற்கப்படுகின்றது. இது நலத்துறையில் நாட்டில் நலக்காப்புறுதிப் பணிகளை விரிவாக்குவதற்கு தற்போதுள்ள வாய்ப்புக்களை தெளிவாக எடுத்துக்காட்டுவதாகவுள்ளது.

பொது மற்றும் பல்கலைக்கழகக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்பொழுது நடைபெற்றவரும் கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு கல்விச் சீர்திருத்த நடைமுறைப்படுத்தல் கண்காணிப்பு பிரிவு ஒன்று நிறுவப்பட்டது. வேறுபட்ட மாவட்டங்களில் கிடைக்கத்தக்கதாகவுள்ள கல்வி வசதிகளில் காணப்படும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள், பயிற்சி பெற்ற ஆசிரியப் பணிகளின் கிடைப்பனவிற்கும் கேள்விக்குமிடையிலான பொருத்தப்பாடின்மை மற்றும் தொழிலாளர் சந்தையில் தொடர்ச்சியாகக் காணப்படும் நிரம்பல் கேள்விகளுக்குகிடையிலான பொருத்தப்பாடின்மை என்பன கல்வி முறையின் அனைத்து மட்டங்களிலும் முக்கிய சீர்திருத்தமொன்றிற்கான தேவையை வலியுறுத்தி நிற்கின்றன. இறை வரையறைகளையும் தேவைப்படுத்தப்பட்ட வினைத்திறன் மேம்பாடுகளையும் கருத்திற் கொள்கையில் தனியார்துறைப் பங்கேற்பினை ஊக்குவிப்பதும் போட்டித்தன்மைக்கு வசதியளிப்பதும் கல்விச் சீர்திருத்தங்களைப் பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு இன்றியமையாததாகும்.

## 1.4 நுகர்வு, சேமிப்பு மற்றும் முதலீடு

செலவினப் பக்கத்தில், நுகர்வு தொடர்பான பங்கு அதிகரித்து உயர்வானதாகக் காணப்பட்டது. தற்காலிக பொருளாதாரப் பின்னடைவின்போது, பொதுவாக, நுகர்வோர் சீராக்கம் நுகர்வினை விட சேமிப்பில் முக்கியமாகப் பிரதிபலிக்கப்பட்டது. இதன்படி, நிலையான விலைகளில் (1996) மொத்த நுகர்வுச் செலவினம் 0.4 சதவீதத்தினால் சிறிதளவு உயர்வடைந்து அதன் பங்கினை 2000ஆம் ஆண்டின் 76 சதவீதத்திலிருந்து 2001இல் 79.3 சதவீதத்திற்கு உயர்த்தியது.

வரைபடம் 1.4
முதலீடும் சேமிப்புக்களும்




இதன் விளைவாக, தேசிய சேமிப்பு/மொ.உ.உற்பத்தி விகிதம் அண்மைய உச்சமட்டமான 1999இன் 23.5 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 21.5 சதவீதத்திற்கும், 2001இல் 19.5 சதவீதத்திற்கும் மேலும் வீழ்ச்சியடைந்து 1997 இற்குப் பின்னர் மிகத்தாழ்ந்த விகிதத்தினைப் பதிவு செய்தது. இதையொத்த வீழ்ச்சிப்போக்கு உள்நாட்டுச் சேமிப்பு/மொ.உ.உற்பத்தி விகிதத்திலும் அவதானிக்கப்பட்டது. அதிகரித்துச் செல்லும் நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையில் பிரதிபலிக்கப்பட்ட அதிகரித்த அரசகுறைச் சேமிப்புக்கள் முக்கிய உதவு காரணியாக விளங்கி 2001ஆம் ஆண்டில் ஏற்பட்ட இவ் வீழ்ச்சியில் ஏறத்தாழ 71.6 சதவீதத்திற்கு வகைகூறியது. தனியார்துறை சேமிப்பு/மொ.உ.உற்பத்தி விகிதம் 2000ஆம் ஆண்டின் 20.9 சதவீதத்திலிருந்து 2001இல் 20.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

2000ஆம் ஆண்டில் 9.9 சதவீதத்தினால் (1996 விலைகளில்) வளர்ச்சியடைந்த மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 2001இல் 17.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து முதலீட்டு/மொ.உ.உ.விகிதத்தினை 28 சதவீதத்திலிருந்து (சிறிலங்கன் எயார்லைன்சின் மீள்தொகுதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான மூன்று வானூர்திகளிலும் செய்யப்பட்ட முதலீடுகளுக்காக சீராக்கம் செய்யப்பட்டபொழுது (26.2 சதவீதம்) 22.0 சதவீதத்திற்கு குறைவடையச் செய்தது. அரச வரவு செலவுத் திட்டத்தில் உயர்ந்து செல்லும் நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையிலிருந்து தோன்றிய இறைப் பற்றாக்குறையின் விரிவினைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாக மூலதனச் செலவினம் குறைக்கப்பட்டமையால் இதே காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தியின் விகிதமாக அரசதுறை (அரசு மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்) முதலீடுகள் 6.6 சதவீதத்திலிருந்து 5.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும், 2000ஆம் ஆண்டின் சிறிலங்கன் எயார்லைன்சின் மீள்தொகுதிப்படுத்தல் முதலீட்டிற்காக சீராக்கம் செய்யப்பட்ட பின்னரும் கூட தனியார் முதலீடுகளில் பாரிய குறைப்பொன்று பிரதிபலிக்கப்பட்டு இரு ஆண்டுகளுக்குமிடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 19.7 சதவீதத்திலிருந்து 16.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பொருளாதார நடவடிக்கைகளின் பின்னடைவு, நலிவடைந்த வியாபார நம்பிக்கைகள், புதிய மூலவளங்களைத் திரட்டுவதற்கு தூண்டுதலளிக்காத மந்தமடைந்த பங்குச்சந்தை நிலைமைகள், உயர்ந்த வட்டிவீதங்கள், குறைந்த வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்கள் மற்றும் நாட்டில் காணப்பட்ட குழப்பநிலை என்பன தனியார்துறை முதலீடுகளில் குறைப்பு ஏற்பட்டமைக்கான முக்கிய ஏதுக்காரணிகளாக விளங்கின. 8 சதவீதத்திற்கு மேலாக சராசரி ஆண்டுப் பொருளாதார வளர்ச்சியினைப் பெறுவதற்காக நடுத்தர காலத்தில் 30 சதவீத பொதுவான முதலீட்டினை எய்துவதற்காக இது நேர்மாற்றம் செய்யப்பட்டு மொ.உ.உற்பத்தியின் 25 சதவீதத்திற்கு அதிகரிக்கப்படவேண்டும்.

1999இன் 3.8 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 6.5 சதவீதத்திற்கு அதிகரித்த மொ.உ.உற்பத்தியின விகிதமான சேமிப்பு முதலீட்டு இடைவெளி 2001இல் 2.5 சதவீதத்திற்கு சுருக்கமடைந்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மூலவள இடைவெளியினைக் குறைத்தது. எனினும் இவ்வீழ்ச்சி குறைக்கப்பட்ட தனியார் முதலீடு/மொ.உ.உற்பத்தி விகிதத்திலிருந்து தோன்றியதாகையால் இதன் மூலம் தேசிய சேமிப்பு/மொ.உ.உற்பத்தி விகிதத்தில் அதிகரிப்புக்களை விளைவிப்பதிலும் பார்க்க வெளியீட்டின் விரிவாக்கத்திற்கான எதிர்கால வாய்ப்புக்கள் குறைவடையுமாகையால் இது சாதகமானதொரு அபிவிருத்தியல்ல. ஆகவே அரச துறையின் குறைச்சேமிப்புக்கள் நேர்மாற்றமடைவது,

பொருளாதார வளர்ச்சி வீதத்தினை விரைவுபடுத்துவதற்கு தேவைப்படும் உயர் முதலீட்டு தேவைப்பாடுகளுக்கு நிதியிடுவதற்கான மொத்த உள்நாட்டு சேமிப்புக்களை அதிகரிப்பதற்கு அவசியமானதாகும்.

மொ.உ.உற்பத்தி (உள்நாட்டு மூலவளங்கள்) மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய நிலையான விலைகளில் (1996) மதிப்பீடு செய்யப்பட்ட பொருளாதாரத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்த மூலவளம் 2001இல் 4.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட 1.4 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியும் இறக்குமதிகள் மற்றும் காரணியல்லாப் பணிகளில் ஏற்பட்ட 10.1 சதவீதம் கொண்ட சுருக்கமும் இக் குறைப்பிற்குப் பொறுப்பாக இருந்தன. மூலவளப் பயன்பாட்டுப் பக்கத்தில், உண்மை நியதிகளில் நுகர்வு 0.4 சதவீதத்தினால் மிகச்சிறிதளவு வளர்ச்சியடைந்த வேளையில் முதலீடுகளும் பொருள்கள் மற்றும் காரணியல்லா பணிகளினதும் ஏற்றுமதிகளும் முறையே 17.1 சதவீதத்தினாலும், 6.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. இதனால், மொத்த கேள்விப் பக்கத்தில், வெளிநாட்டுக் கேள்வி (அதாவது பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகள்) மற்றும் உள்நாட்டு முதலீட்டு கேள்வி என்பன 2001இன் நலிவடைந்த பொருளாதார செயலாற்றத்திற்குப் பெருமளவு பொறுப்பாக இருந்தன.

## 1.5 விலைகள்

நலிவடைந்த மொத்தக் கேள்வி காணப்பட்டபோதும், பணவீக்கவீதம் 2001இல் இரட்டை இலக்கத்திற்கு அதிகரித்து, நிருவகிக்கப்பட்ட விலைகளில் செய்யப்பட்ட மேல்நோக்கிய சீராக்கங்கள், உயர்ந்த இறக்குமதி விலைகள், மிகையான தீர்வைகள் சில முக்கிய உணவு விடயங்களுக்கான தீர்வை மாற்றம் தீர்வையல்லாப் பாதுகாப்பு, இறக்குமதிக் கட்டணம், வரட்சியின் காரணமாக உள்நாட்டில் உற்பத்தியாகும் முக்கிய உணவுப் பொருட்களின் தற்காலிக நிரம்பல் பற்றாக்குறை என்பனவற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்தன. பெற்றோலிய விலைகளில் செய்யப்பட்ட மேல்நோக்கிய திருத்தம், தண்ணீர்த்தீர்வை மற்றும் கோதுமை மாவின் விலை மற்றும் மின்வலுத் தீர்வை மீதான மேலதிக கட்டண விதிப்பு என்பனவற்றின் நேரடித்தாக்கமும் மறைமுக விளைவும் 2001இல் அவதானிக்கப்பட்ட உயர்ந்த விலை அதிகரிப்புக்களுக்கு ஓரளவு பொறுப்பாக இருந்தன. இறக்குமதி செய்யப்பட்ட சில உணவு விடயங்களுக்கான உயர்ந்த பன்னாட்டு விலைகளுக்குப் புறம்பாக, 40 சதவீத இறக்குமதிக் கட்டணங்களின் விதிப்பு இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய் மற்றும் உருளைக்கிழங்கிற்கான உயர்ந்த தீர்வைப் பாதுகாப்புக்கள், அரிசி இறக்குமதி மீதான உரிமக் கட்டுப்பாடுகள் என்பனவும் 2001இன் உயர்ந்த விலை அதிகரிப்புக்களுக்கு காரணமாயின. சமயல் எண்ணெய்யின் மீதான உயர்ந்த தீர்வை, உள்நாட்டு தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட குறைப்புடன் சேர்ந்து தேங்காய் விலைகளைக் கடுமையாக உயர்த்தியவேளையில் அரிசி இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் உள்நாட்டு நெல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் சேர்ந்து அரிசியின் விலைகளில் கடுமையான அதிகரிப்பினை விளைவித்தன. எனவே 2001இன் உயர்ந்த விலை அதிகரிப்புக்களுக்கு முக்கியமாக நிரம்பல் பற்றாக்குறை மற்றும் செலவினால் உந்தப்பட்ட காரணிகள் காரணமாக இருந்தன. நாணய விரிவாக்கம் 2000ஆம் ஆண்டிலும், 2001ஆம் ஆண்டிலும் காணப்பட்ட பெயரளவு வருமானத்தின் அதிகரிப்பிற்கு இணக்கமான மட்டமொன்றில் கட்டுப்படுத்தப் பட்டமையினால் பணவீக்கத்தினை அதிகரிக்கக்கூடிய குறிப்பிடத்தக்க கேள்வி அழுத்தம் காணப்படவில்லை.

மொத்த விலை மாற்றங்களின் அனைத்து வழிமுறைகளும் 2000ஆம் ஆண்டினைவிட உயர்வாக 2001இல் 10-14 சதவீத வீச்சினைக் கொண்ட உயர்ந்த அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. (நிருவகிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களின் நேரடித் தாக்கத்தினை நீக்கிவிடுமிடத்து 9-12 சதவீதமாக இருங்கது). கொழும்பு மாநாகரசபை பிரதேசத்திலுள்ள தாழ்ந்த வருமான குடியிருப்பாளர்களின் நுகர்வு விடயங்களை உள்ளடக்குகின்ற, நுகர்வோர் விலை வீக்கத்திற்கான அலுவல்சார் சுட்டெண்ணான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 1999இன் 4.7 சதவீதத்துடனும் 2001ஆம் ஆண்டின் 6.2 சதவீத அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2001இல் 14.2 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி வளர்ச்சியைப் பதிவு செய்தது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலும் பார்க்க, பரந்த புவியியல் பிரதேசத்தினை உள்ளடக்கிய மொத்த நுகர்வோர் விலைச்சுட்டெண் மட்டத்தின் மாற்று அளவீடான கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண் முன்னைய ஆண்டின் 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2001இல் 11 சதவீதம் கொண்ட ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தது. கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலும் பார்க்க பரந்த உள்ளடக்கத்தினைக் கொண்ட கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண் 2001ஆம் ஆண்டில் 10.3 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பினை பதிவு செய்தது. முதனிலைச் சந்தை மட்டங்களில் விலை மாற்றங்களை அறவிடுகின்றதும் அனைத்து மூன்று வகை பொருட்களை (நுகர்வு, இடைநிலை மற்றம் முதலீடு) உள்ளடக்குகின்றதுமான மொத்த விற்பனை விலைச்சுட்டெண் 2000ஆம் ஆண்டின் 1.7 சதவீதத்துடன்

ஒப்பிடுகையில் 2001இல் 11.7 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அனைத்து பொருளாதாரத் துறைகளையும் உள்ளடக்குகின்ற மேலே குறிப்பிடப்பட்ட அனைத்திலும் பார்க்க பரந்ததொரு அளவீடான மொ.உ.உற்பத்திச் சுருக்கி முன்னைய ஆண்டின் 6.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 13 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

அனைத்து நுகர்வோர் விலைச்சுட்டெண்களிலும் பாரிய நிறையைக் கொண்டுள்ள (58 சதவீதத்திற்கும் கூடுதலான) உணவுத் துணைச்சுட்டெண் 2001இன் மொத்த அதிகரிப்புக்களில் ஏறத்தாழ 66-67 சதவீதத்திற்குப் பங்களித்தது. எரிபொருள் மற்றும் வெளிச்சத் துணைச்சுட்டெண்ணும், பல்வகைத் துணைச்சுட்டெண்ணும் உயர்ந்த அதிகரிப்புக்களுக்குப் பங்களித்த மற்றைய முக்கிய சுட்டெண்களாக விளங்கின. மொத்த விலை அதிகரிப்பதற்கான ஆடைத் துணைச்சுட்டெண்களின் பங்களிப்பு ஒரு சதவீதத்திற்கும் குறைவானதாக அமைந்து, நலிவுற்ற ஏற்றமதிக் கேள்வி மற்றும் ஆடைக் கைத்தொழிலின் மிகை இயலளவு என்பனவற்றின் காரணமாக உள்நாட்டுச் சந்தைக்கான அதிகரித்த வழங்கலைப் பிரதிபலித்தது.

### 1.6 கூலிகள்

அரசதுறை, தனியார்துறை ஆகிய இரண்டினதும் ஊழியர்கள் 2001ஆம் ஆண்டில் கூலி அதிகரிப்புக்களைப் பெற்றனர். எனினும் பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளினாலும் அனுபவிக்கப்பட்ட பாதகமான பொருளாதார நிலைமைகளினால் தனியார்துறையின் அதிகரிப்புக்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

மத்திய அரசு ஊழியர்களுக்கான மொத்த கூலிச் சுட்டெண் 2000ஆம் ஆண்டின் 8.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் 21 சதவீத பெயரளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2000ஆம் ஆண்டு ஓகத்து ஒத்தோபர் மாதங்களில் வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்புக்கள் 2001ஆம் ஆண்டில் அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட ரூ.1200 அதிகரிப்பு என்பனவற்றின் முழு ஆண்டுத் தாக்கம் 2001ஆம் ஆண்டுக்கான அரசதுறை ஆண்டுக்கூலிச் சுட்டெண்ணில் உயர் அதிகரிப்பொன்றினை பிரதிபலித்தது. அரசதுறை கூலிச் சுட்டெண்ணில் சிற்றூழியர்களுக்கான சுட்டெண்ணானது பதவி நிலை அல்லா அலுவலர்களின் 19 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் அதிஉயர் 23 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. சராசரி பணவீக்க அதிகரிப்பு வீதத்தினைவிட கூலி அதிகரிப்புக்கள் உயர்வாகக் காணப்பட்டமையால் அரச ஊழியர்களுக்கான உண்மைக் கூலிகள் 5- 9 சதவீதங்களுக்கிடையில் அதிகரித்தன. உற்பத்தியாக்க மேம்பாடுகளுடன் தொடர்பற்ற அரசியலினால் உந்தப்பட்ட அவ்வப்போதைய கூலி அதிகரிப்புக்கள் ஏற்கனவே உயர்வாகவுள்ள அரசாங்க கூலிப்பட்டியலை உயர்த்துவது மட்டுமன்றி அரசதுறையில் செயலாற்ற அடிப்படையிலான கூலிச் சீராக்க முறையொன்றின் அறிமுகப்படுத்தலையும் தாமதப்படுத்துகின்றது. அத்தகைய அதிகரிப்புக்கள் தொழில்களை எதிர்பார்த்திருப்போருக்கு தவறான சமிக்ஞைகளை வழங்குவதோடு தனியார்துறை தொழில்களைவிட அரசதுறை தொழில்களின் பக்கமாக அவர்களை இட்டுச்செல்லுகின்றது.

முறைசார்ந்த தனியார்துறையின் பெயரளவுக் கூலிகள் பல்வேறுபட்ட வகையினருக்கு பல்வேறுபட்ட வீதங்களில் அதிகரிக்கப்பட்டன. கூலிச்சபையின் கீழான தனியார்துறை ஆகக்குறைந்த கூலிச்சுட்டெண்களின் மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறான பெயரளவுக் கூலிகள் 2000ஆம் ஆண்டின் 2.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.9 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. துணைத்துறைகளுள் பணித்துறை 17.5 சதவீதம் கொண்ட உயர்ந்த அதிகரிப்பினைப் பெற்ற வேளையில் அதனை அடுத்து 7.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பு கைத்தொழில் வர்த்தகத் துறையிலும், 2.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பு வேளாண்மைத்துறையிலும் காணப்பட்டது. இதனால் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளின் கூலி அதிகரிப்புக்கள் ஆண்டுப் பணவீக்கத்தினை விடக்குறைவாக இருந்தமையின் மூலம் அவர்களது உண்மை கூலிகளைக் குறைத்த வேளையில் பணிகள் துறையிலுள்ள ஊழியர்கள் உண்மைக் கூலி அதிகரிப்புக்களை அனுபவித்தனர்.


வேளாண்மை மற்றும் கட்டடவாக்க நடவடிக்கைகளைக் கொண்ட முறைசாராத் துறையிலுள்ள ஊழியர்கள் 2001இல் 6 சதவீதத்திலிருந்து 19 சதவீதம் வரையான பெயரளவு கூலி அதிகரிப்புக்களைப் பெற்றமையானது அவர்களின் உண்மைக் கூலிகள் மீது கலப்பான தாக்கத்தினை ஏற்படுத்தியது. முறைசாராத் துறையில் தெங்குத்துறையிலுள்ள ஊழியர்கள் 11 சதவீதத்திலிருந்து 19 சதவீதம் வரையான அதிகரிப்புக்களை பெற்றவேளையில் தேயிலைத்துறைத் தொழிலாளர்கள் 13 இலிருந்து 14 சதவீதம் வரையான அதிகரிப்புக்களைப் பெற்றமையானது சாதகமான வெளியீட்டு விலைகளின் காரணமாக தாங்கக் கூடியதாக இருந்தது. நெல் துறையில் அதிகரிப்புக்கள் 8 தொடக்கம் 13 சதவீதம் வரையில் காணப்பட்டன. ஆகக்குறைந்த அதிகரிப்பான 6 சதவீதம் இறப்பர் துறையில் பதிவு செய்யப்பட்டு தொடர்ச்சியான தாழ்ந்த விலைகளின் காரணமாக அதிகரிப்புக்களை வழங்குதலில் காணப்பட்ட இடர்ப்பாடுகளைப் பிரதிபலித்தது.

## 1.7 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

2001இல் தொகை மதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களம் 20 ஆண்டுகால இடைவெளிக்குப் பின் நிறைவு செய்துள்ள குடித்தொகை வீடமைப்பு தொடர்பான தொகைமதிப்பு பயனுள்ள குடித்தொகையியல் தகவல்களைத் தருகின்றது. தொகைமதிப்பு-2001 இனால் மதிப்பிடப்பட்டவாறு மொத்த குடித்தொகை 18.7 மில்லியன் ஆட்களாகவும் குடித்தொகையின் ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் 1981இலிருந்து 2001 வரையான 20 ஆண்டு காலப்பகுதியில் 1.2 சதவீதமாகவும் இருந்தது. பிரதேசங்களுக்குள்ளேயே அதிகரிக்கின்ற நகர்வுகள், வயது வந்தோர் குடித்தொகை, மாற்றமடைந்து வரும் பால் விகிதாசாரம் என்பன தொகைமதிப்புப் பெறுபேறுகளிலிருந்து அவதானிக்கக்கூடிய மிக முக்கியமான குடித்தொகையியல் அபிவிருத்திகளாகும். உயர்ந்த குடித்தொகை அதிகரிப்புக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சில மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளமையானது மோதல் நடைபெறும் பிரதேசங்களிலிருந்து மக்கள் குடிபெயர்ந்தமையைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. அதேபோன்று உயர்ந்த குடித்தொகை வளர்ச்சி வீதங்கள் கம்பகா மற்றும் கொழும்பு போன்ற பொருளாதார நடவடிக்கைகள் குவிந்து காணப்படும் மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டு பொருளாதாரக் காரணங்களுக்கான உள்ளக குடிப்பெயர்வுகளை பிரதிபலித்தது. உயர் வயதுத் தொகுதியிடல் அதிகரித்துச்செல்லும் குடித்தொகையானது எதிர்காலக் கல்வியிலும் சமூகத்தின் நலத் தேவைப்பாடுகளிலும் மாற்றத்திற்கான அவசியத்தினை எடுத்துக்காட்டின. இதேபோன்று குடித்தொகையில் ஒவ்வொரு 100 பெண்களுக்கான ஆண்களின் எண்ணிக்கை என வரைவிலக்கணம் செய்யப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் பால் வீதம் 1981 இன் 103.9 இலிருந்து 2001இல் 97.9 இற்கு வீழ்ச்சியடைந்து எதிர்கால தொழிற்படைப் பங்கேற்பு வீதத்திலும் தொழிற்படை உள்ளமைப்பிலும் சாத்தியமாகக்கூடிய மாற்றங்களை எடுத்துக்காட்டியது.

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் தொழிற்படை 6.7 மில்லியன் என மதிப்பிடப்பட்டது. 1998இன் 51.7 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 50.3 சதவீதத்திற்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்த தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 2001ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 48.3 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 1.5
தொழிற்படைப் பங்கேற்பும் தொழில் வாய்ப்பின்மை வீதமும்




பொருளாதார வளர்ச்சியிலும் முதலீட்டு நடவடிக்கைகளிலும் காணப்பட்ட பின்னடைவு ஒருசில தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதில் மட்டுமே பிரதிபலித்தமையின் மூலம் தொழிலின்மை வீதத்தை அதிகரித்தது. சுற்றுலா, அதனுடன் தொடர்பான பணிகள், ஆடை ஏற்றுமதிகள் போன்ற மோசமாகப் பாதிக்கப்பட்ட சில துறைகள் தற்காலிக ஆட்குறைப்பினை கூட நாடவேண்டியிருந்தன.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின்படி, வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு 2000ஆம் ஆண்டின் 181,000இலிருந்து 2001இல் 184,000 இற்கு உயர்வடைந்தது. வெளிநாட்டு தொழில்வாய்ப்பில் ஆண் மற்றும் பெண் ஊழியர்களின் தொடர்பான பங்கு முன்னைய ஆண்டுகளை ஒத்ததாக முறையே 32 சதவீதமாகவும், 68 சதவீதமாகவும் காணப்பட்டன. வெளிநாட்டு தொழில்வாய்ப்பு வகைகளும் குறிப்பிடத்தக்க மாற்றமெதனையும் எடுத்துக் காட்டாததுடன் வீட்டுப்பணிப் பெண்கள் முக்கிய பங்கிற்கு (50-60 சதவீதம்) வகைகூறிய வேளையில் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் மொத்தத்தில் ஏறத்தாழ 20சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறினர்.

## 1.8 இறைக்கொள்கை,வரவுசெலவுத்திட்ட தொழிற்பாடுகள் மற்றும் அரசபடுகடன்

தொடர்ந்து காணப்படும் உயர்ந்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை தாக்குப் பிடிக்கக்கூடியதாக இல்லாமையால் 2001ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இறைக்கொள்கையானது அரசிறைத் தொழிற்பாடுகளை வலுப்படுத்தல், வரவு செலவுத்திட்ட வெளிப்பாட்டை நடுத்தரகால தாக்குப்பிடிக்கக்கூடிய வழியில் இட்டுச் செல்லுதல் என்பனவற்றுக்காக 2000ஆம் ஆண்டில் அனுபவிக்கப்பட்ட ஒழுக்கல்களை சரிசெய்யும் என எதிர்பார்க்கப்பட்டது.

அரசிறையை திரட்டி, நடைமுறைச் செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையினைக் குறைக்கின்ற வேளையில் உயர்ந்த மட்ட அரச முதலீடுகளைப் பேணுவதினையும் வரவுசெலவுத்திட்ட வழிமுறைகள் இலக்காகக் கொண்டிருந்தன. அரச முதலீடுகள் முக்கியமாக வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மொ.உ.உற்பத்தியின் 8.5 சதவீதம் கொண்ட முழு இறைப் பற்றாக்குறையும் வெளிநாட்டுக்கடன்கள், தனியார் மயமாக்கல் பெறுகைகள் மற்றும் உள்நாட்டு வங்கியல்லா நிதியிடல் என்பனவற்றின் மூலம் நிதியிடுவதற்கும், உள்நாட்டு நிதியியல் மூலவளங்களில் போதுமான தொகையைத் தனியார்துறைக்காக விட்டுவைப்பதற்கும் திட்டமிடப்பட்டது. உண்மையில், வரவுசெலவுத்திட்டம் அரசபடுகடனில் ரூ.11 பில்லியன் கொண்ட தொகை உள்நாட்டு வங்கித்தொழில் முறைக்கு செலுத்தப்படும் என எதிர்பார்த்தது.

அரசிறைப் பக்கத்தில், வரி மற்றும் வரியல்லா அரசிறை இரண்டினையும் திரட்டுவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டனர். முக்கியமான அரசிறை வழிமுறைகளாக இறக்குமதிகள் மீதான 40 சதவீத மேலதிகக் கட்டணம், கம்பனி வருமான வரி மீதான 20 சதவீத மேலதிகக் கட்டணம், தேசிய பாதுகாப்புத்தீர்வை ஒரு சதவீதப் புள்ளியினால் 7.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமை என்பன விளங்கின. வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றைய வழிமுறைகளாக இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களுக்கு வழங்கப்பட்ட விலக்கல்கள் அகற்றப்பட்டமை அரச ஊழியர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஊர்தி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட இறக்குமதித் தீர்வைச் சலுகை இடைநிறுத்தப்பட்டமை, வரி நிருவாகத்தில் மேம்பாடுகள் மற்றும் வரியல்லா மேலதிகக் கட்டணங்களும் கட்டணங்கள்/ தீர்வைகளில் அதிகரிப்புக்கள் என்பன விளங்கின.

**அட்டவணை 1.5**

அரசிறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு

(மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)

*(மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக)*

| விடயம் | (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1980 | 1985 | 1990 | 1995 | 1999 | 2000 | 2001(அ) |
| 1.அரசிறை | 19.6 | 22.3 | 21.1 | 20.4 | 17.7 | 16.8 | 16.5 |
| 2.செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கலும் | 41.8 | 34.1 | 31 | 30.5 | 25.2 | 26.7 | 27.3 |
| 2.1 நடைமுறைச் செலவினம | 18.5 | 20.1 | 22.3 | 23.1 | 18.7 | 20.2 | 21.4 |
| 2.2.1 பாதுகாப்பு | 1.3 | 4.5 | 4.1 | 6.5 | 4.4 | 5.6 | 4.9 |
| 2.2.2 வட்டி | 3.4 | 4.6 | 6.4 | 5.7 | 5.6 | 5.7 | 6.7 |
| 2.2.3 கூலிகள் (ஆ) | 4.5 | 3.6 | 3.9 | 3.4 | 3.0 | 3.2 | 3.4 |
| 2.2.4 உதவுதொகைகளும் மாற்றல்களும் | 8.4 | 5.5 | 6.5 | 6.1 | 4.2 | 4.2 | 4.7 |
| 2.2.5 ஏனையவை | 0.9 | 1.9 | 1.4 | 1.4 | 1.4 | 1.6 | 1.7 |
| 2.2 மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 23.3 | 13.9 | 8.7 | 7.4 | 6.5 | 6.5 | 5.9 |
| 2.2.1 அரச முதலீடு | 18.5 | 13.8 | 8.3 | 7.9 | 6.5 | 6.4 | 5.9 |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 7.9 | 4.5 | 3.7 | 3.4 | 3.0 | 2.6 | 2.4 |
| மூலதன மாறறல்கள் | 9.4 | 8.6 | 2.3 | 2.9 | 2.5 | 2.8 | 2.5 |
| கடன் வழங்கல் | 1.2 | 0.6 | 2.2 | 1.7 | 1.0 | 1.1 | 1.1 |
| 2.2.2 ஏனையவை | 4.7 | 0.2 | 0.4 | -0.5 | - | 0.1 | 0.0 |
| மீள் சந்தைப் படுத்தல் செலவு | 0.0 | 0.0 | 0.0 | 0.5 | 0.4 | 0.3 | 0.3 |
| ஏனையவை | 4.7 | 0.2 | 0.4 | -1.0 | -0.4 | -0.2 | -0.3 |
| 3.நடைமுறைக் கணக்கு நிலுவை | 1.1 | 2.2 | -1.2 | -2.7 | -1.0 | -3.4 | -4.9 |
| 4.கொடைகளுக்குமுன் மற்றும் தனியார் மயமாக்கல் நீங்கலான திரண்ட பற்றாக்குறை | -22.2 | -11.7 | -9.9 | -10.1 | -7.5 | -9.9 | -10.8 |
| 5.நிதியிடல் | 22.2 | 11.7 | 9.9 | 10.1 | 7.5 | 9.9 | 10.8 |
| 5.1 வெளிநாட்டு நிதியிடல் | 9.2 | 6.4 | 5.7 | 4.5 | 0.7 | 0.4 | 1.4 |
| 5.1.1 கடன்கள் | 5.3 | 4.4 | 3.6 | 3.2 | 0.1 | 0.0 | 1.0 |
| 5.1.2 கொடைகள் | 3.9 | 2.0 | 2.1 | 1.4 | 0.6 | 0.4 | 0.4 |
| 5.2 உள்நாட்டு நிதியிடல் | 13.0 | 5.3 | 4.2 | 5.1 | 6.8 | 9.4 | 8.8 |
| 5.2.1 வங்கிகள | 9.8 | 2.9 | 0.1 | 1.1 | 2.4 | 4.3 | 3.5 |
| 5.3 தனியார் மயப்படுத்தல் | 0.0 | 0.0 | 0.0 | 0.4 | - | - | 0.6 |
| 6.பொதுப்படுகடன் | 77.6 | 80.2 | 96.6 | 95.5 | 95.1 | 97.1 | 103.4 |
| 6.1 உள்நாட்டு | 44.2 | 38.6 | 41.6 | 43.2 | 49.1 | 53.9 | 58.2 |
| 6.2 வெளிநாட்டு | 33.5 | 41.7 | 55.0 | 52.3 | 45.9 | 43.2 | 45.2 |
| முக்கிய குறிப்பு: | | | | | | | |
| மொத்த கூலிப் பட்டியல் | 5.0 | 4.2 | 4.9 | 5.2 | 5.3 | 5.5 | 5.6 |
| மொத்த பாதுகாப்புச் செலவினம் (ஆ) | 1.3 | 4.5 | 4.1 | 6.5 | 4.9 | 6.1 | 5.5 |

மூலங்கள்: நிதி அமைச்சு
இலங்கை மத்தி வங்கி.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) பாதுகாப்பு அலுவலர்களுக்குச் செலுத்தப்பட்டவை நீங்கலாக.
(இ) பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் சீராக்கங்கள் உட்பட.

செலவினப்பக்கத்தில் வீண்விரயங்களையும் முன்னுரிமையல்லா மீண்டெழும் செலவினங்களையும் குறைப்பதன் மீது முக்கிய வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. செலவினக் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான முக்கிய வழிமுறைகளாக பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட அலுவலர்களின் ஊர்திகளின் பயன்பாடு, தொலைபேசி மற்றும் பயணங்கள் என்பன தொடர்பான செலவினங்களின் மீது வரையறைகளை விதித்தமை, அரச நிறுவனங்களின் மீண்டெழும் செலவினங்களைக் கட்டுப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டமை, பொருளாதார ரீதியில் ஆற்றலற்ற 35 அரச முயற்சிகளையும் அத்துடன்/அல்லது தற்போதைய கொள்கை சூழலின் கீழ் தேவையற்றனவற்றையும் மூடிவிடுவதற்கான திட்டங்கள், உணவு கொள்வனவு மற்றும் கண்காணிப்பு பிரிவினை நிறுவுதல், சம்பளங்கள் தவிர்ந்த அனைத்து செலவினங்களின் மீது குறைந்தது 10 சதவீத வெட்டினை விதித்தல் மற்றும் திறைசேரி காசு முகாமைத்துவத்தினை மேம்படுத்துதல் என்பன காணப்பட்டன.

அரச முதலீட்டுப் பக்கத்தில், உற்பத்தித் திறனற்ற மற்றும் தேவையற்ற செலவின நிகழ்ச்சித் திட்டங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மிகுந்த நுட்பமான ஆய்வுகளுக்கு உட்பட்டிருந்தன. 2001இன் முதலரைப்பகுதியில் எதிர்நோக்கப்பட்ட மூலவளத் தடைகளைக் கருத்திற்கொண்டு வரவுசெலவுத்திட்டம் முன்னுரிமையல்லா கட்டுமான வேலைகளை ஆறு மாத காலத்திற்கு பிற்போடுவதற்கு முன்மொழிந்தது.


வரவுசெலவுத்திட்டமானது பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்துவதனை மட்டுப்படுத்தி கூடியளவிற்கு தனியார் மயமாக்கல் பெறுகைகளின் மீதும் (ரூ.25 பில்லியன்) பன்னாட்டுச் சந்தைகளிலிருந்தான ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட வர்த்தகக் கடன்கள் உட்பட வெளிநாட்டு நிதியிடலின் மீதும் தங்கியிருப்பதனை இலக்காகக் கொண்டிருந்தது. இது வரவுசெலவுத்திட்ட தொழிற்பாடுகளின் குறைப்பதனையும், பணவீக்க நிதியிடலைத் தடுப்பதனையும் அதேபோன்று உள்நாட்டு வட்டி வீதங்களின் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதனையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

எனினும், அனைத்து இறைக் கூட்டுக்களும் அவற்றின் இலக்கிலிருந்தும் குறிப்பிடத்தக்களவிற்கு பிறழ்ந்து போனமையினால் 2001இல் இறைநிலைமை குறிப்பிட்டத்தக்களவிற்கு மோசமடைந்தது. அரசிறையில் வீழ்ச்சி, மீண்டெழும் செலவின அதிகரிப்பு, குறைந்த மூலதனச் செலவினம், உயர்ந்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை, தனியார் மயமாக்கல் பெறுகைகளில் வீழ்ச்சி, தாழ்ந்த வெளிநாட்டு நிதியிடல், உயர்ந்த உள்நாட்டுக் கடன்பாடுகள் மற்றும் அரசபடுகடனில் அதிகரிப்பு என்பனவே இறுதிப் பெறுபேறுகளாகக் காணப்பட்டன.

வரவுசெலவுத்திட்ட இலக்குகளுடன் ஒப்பிடுகையில், பாரிய அரசிறை வீழ்ச்சிகளும் (ரூ.33 பில்லியன்) மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் (ரூ.19 பில்லியன்) நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 3.7 சதவீதப் புள்ளிகளினால் (ரூ.52 பில்லியன்) 4.9 சதவீதத்திற்கும் திரண்ட இறைப்பற்றாக்குறையை மொ.உ.உற்பத்தியின் 2 சதவீதப் புள்ளிகளினால் (ரூ.29 பில்லியன்) 10.9 சதவீதத்திற்கும் அதிகரிக்கச் செய்தன. அதிகரித்த இறைப்பற்றாக்குறை எதிர்பார்க்கப்பட்ட தனியார் மயமாக்கல் பெறுகைகள் (ரூ.16.4 பில்லியன்) வெளிநாட்டு நிதியிடல் (ரூ.20.6 பில்லியன்) சலுகைரீதியான மற்றும் வர்த்தகக் கடன்பாடுகள் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சிகளுடன் சேர்ந்து பெருமளவு கடன்பாடுகளை உள்நாட்டு மூலங்களிலிருந்து மேற்கொள்ள அரசினை நிர்ப்பந்தித்தன. உள்நாட்டுக் கடன்பாடுகள் வரவுசெலவுத்திட்ட இலக்கான மொ.உ.உற்பத்தியின் 4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 8.8 சதவீதமாக இருந்தது. உள்நாட்டு வங்கியல்லா மூலங்களின் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையினால், ஆரம்ப மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட மீள்கொடுப்பனவிற்கு (ரூ.11 பில்லியன்) மாறாக, இது அரசின் உள்நாட்டு வங்கிக் கடன்பாடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட வழிவகுத்தது. அதிகரித்த உள்நாட்டுக் கடன்பாடுகள் உள்நாட்டு வட்டி வீதங்களின் மீது தொடர்ந்து அழுத்தத்தினை ஏற்படுத்தியதுடன் தனியார்துறைக்கு கிடைக்கத்தக்கதாக இருந்த மூலவளங்களையும் வெளிச்செல்லச் செய்தது. இதன் விளைவாக, வெளிநின்ற அரச படுகடனை ரூ.231.9 பில்லியனால் ரூ.1450.6 பில்லியனுக்கு கடுமையாக அதிகரிக்கச் செய்து அரசபடுகடன்/மொ.உ.உ.விகிதத்தினை 2001 இறுதியில் 103.6 சதவீதத்திற்கு உயர்வடையச் செய்து அரசபடுகடன் சுமை ஏறத்தாழ மிக மோசமான நிலை அடைந்தமைக்கான எச்சரிக்கை சமிக்ஞையைக் காட்டியதுடன் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு வலுவான இறைச்சீராக்கங்கள் தேவைப்படுவதனை மிகத் தெளிவாகக் காட்டியது.

2001இல் இறைத்துறையின் மோசமான தன்மைக்கு மூன்று முக்கிய நிகழ்வுகள் காரணமாக இருந்தன. முதலாவது, உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள்

வரைபடம் 1.6
இறைத் துறைக் குறிகாட்டிகள்




சுருக்கமடைந்தமையும் இறக்குமதிகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியும் அரசிறைச் சாதனைகளையும் தனியார் மயமாக்கல் இலக்குகளையும் மிகமோசமாகப் பாதித்தது. அரசின் பெறுகைகளை ஏறத்தாழ ரூ.43.8 பில்லியனினால் குறைவடையச் செய்தவேளையில் அரச நிவாரணச் செலவுகளை அதிகரித்தன. இரண்டாவது, வரவுசெலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட இறைச் சீராக்கங்களில் சில நடைமுறைப்படுத்தப்படாமையின் காரணமாக செலவின சேமிப்புக்களை அடையவிடாமல் தடுத்து விட்டமையின் மூலம் மீண்டெழும் செலவினம் ஏறத்தாழ ரூ.15.3 பில்லியன் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டது. மூன்றாவது வரிகளைக் குறைத்தல் மற்றும் அரச பணிகளின் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்களை அதிகரித்தல் என்பனவற்றின் மூலம் முதலீட்டாளர்களுக்கும் பாதிக்கக்கூடிய தொகுதியினருக்கும் வழங்கப்பட்ட நிவாரணங்களைக் கொண்ட 2001 ஒத்தோபரில் அறிவிக்கப்பட்ட இறைப்பொதி ரூ.9 பில்லியன் கொண்ட மேலதிக செலவினை விளைவித்தது. இது ரூ.5.4 பில்லியன் கொண்ட அரசிறை இழப்புக்களையும் ரூ.3.7 பில்லியன் கொண்ட மேலதிக செலவினங்களையும் உள்ளடக்கியிருந்தது.

அரசிறைப் பக்கத்தில், மொத்த அரசிறை ரூ.33 பில்லியன் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கு இறக்குமதியுடன் தொடர்பான வரி அரசிறையினால் ஏற்பட்ட கணிசமான குறைப்பும் 2001 ஒத்தோபரில் அறிமுகப்படுத்தப்பட்ட இறைப்பொதியின் காரணமான வரி இழப்புக்களுமே காரணமாகும். மேலும், அரச தொழில் முயற்சிகளின் மோசமான செயலாற்றமும் வரியல்லா அரசிறையைக் குறைத்துவிட்டன.

செலவினப் பக்கத்தில், நடைமுறைச் செலவினம், ஆரம்ப வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டினை ஏறத்தாழ ரூ.19 பில்லியனால் உயர்த்தியமைக்கு பாதுகாப்புச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ஓய்வூதியக் கொடுப்பனவுகள், அதிகரித்த வட்டிச் செலவு, சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான மாற்றல் கொடுப்பனவுகள், வளமாக்கி உதவுதொகை, உயர்ந்த தொழிற்பாட்டு இழப்புக்களை ஏற்படுத்திய இலங்கை புகைவண்டிப்பகுதி என்பன காரணங்களாக இருந்தன. எனினும் மூலதனக் கணக்கில் காணப்பட்ட ஏறத்தாழ ரூ.22.9 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க குறைச்செலவு நடைமுறைச்செலவினத்தில் காணப்பட்ட அதிகரிப்பினை எதிரீடு செய்ததுடன் மொத்த செலவினத்தை ரூ.3.9 பில்லியனால் குறைவடையச் செய்தது.

குறைந்த அரசிறைத் திரட்டல்கள் உயர்ந்த நடைமுறைச் செலவினம் என்பனவற்றின் இணைந்த விளைவாக நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை வரவுசெலவுத்திட்ட இலக்கான 1.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 4.9 சதவீதமாகக் காணப்பட்டது. அதிகரித்த அரச குறைச் சேமிப்புக்கள் 2001ஆம் ஆண்டில் நாட்டின் மொத்தச் சேமிப்பு/ மொ.உ.உற்பத்தி விகிதத்தினை குறைத்துவிட்டது. ஆரம்ப பற்றாக்குறை (வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலான செலவினத்தினைக் கழித்த அரசிறை) வரவுசெலவுத்திட்ட இலக்கான 2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 2.2 சதவீதப் புள்ளிகளினால் உயர்வடைந்து, மொ.உ.உற்பத்தியின் 4.1 சதவீதமாகக் காணப்பட்டது. இறுதியாக, திரண்ட பற்றாக்குறை வரவுசெலவுத்திட்ட இலக்கான மொ.உ.உற்பத்தியின் 8.5 சதவீதத்துடனும் 2000ஆம் ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 9.9 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 2.4 சதவீதத்தினால் மொ.உ.உற்பத்தியின் 10.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

2001இல் வெளிநாட்டுக் கொடைகள் மற்றும் கடன்களைப் பயன்படுத்தி பற்றாக்குறையை நிதியிடுவது வரவுசெலவுத்திட்ட இலக்கான மொ.உ.உற்பத்தியின் 2.8 சதவீதத்துடன் (ரூ.40.6 பில்லியன்) ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 1.4 சதவீதமாக மாத்திரம் (ரூ.20 பில்லியன்) காணப்பட்டமையானது பன்னாட்டு வர்த்தகச் சந்தைகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வர்த்தகக் கடன்பாடுகள் பிற்போடப்பட்டமையும் சலுகை ரீதியான வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்துவதில் காணப்பட்ட தாமதங்களையும் முக்கியமாகப் பிரதிபலித்தது. பற்றாக்குறையை நிதியிடுவதற்காகப் பெறப்பட்ட தனியார் மயமாக்கல் பெறுகைகள் இலக்கிடப்பட்ட ரூ.25 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.8.6 பில்லியனாகக் காணப்பட்டன. இப் பாரிய வீழ்ச்சிக்கு சாதகமற்ற சந்தை நிலைமைகளினால் இலங்கை ரெலிகொம்மின் பங்குகளை விற்க முடியாமல் போனமையே காரணமாகும்.

இதன் விளைவாக, உள்நாட்டுப் பற்றாக்குறையின் நிதியிடல் ஆரம்ப இலக்கான ரூ.57 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியில் 4 சதவீதம்) ரூ.123.6 பில்லியனுக்கு உயர்வடைந்து (மொ.உ.உற்பத்தியில் 8.8 சதவீதம்) மொத்த பற்றாக்குறை நிதியிடலில் ஏறத்தாழ 80 சதவீதத்திற்கு வகைகூறியது. உள்நாட்டு வங்கியல்லா மூலவளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவைக் கவனிக்கையில் அதிகரித்த உள்நாட்டுக் கடன்பாடுகளில் பெரும்பகுதி வங்கி நிதியிடலில் பிரதிபலிக்கப்பட்டது. மொ.உ.உற்பத்தியில் இது 3.5 சதவீதமாகும். இது டொலரில் குறித்துரைக்கப்பட்ட முறிகளின் (இலங்கை அபிவிருத்தி முறிகள்) வழங்கலினூடாக கடன்படப்பட்ட ஐ.அ.டொலர் 158.5 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. எனினும் அரசின் பற்றாக்குறை நிதியிடலின் விரிவுத்தாக்கமானது இருந்திருக்க வேண்டிய அளவிற்கு கடுமையாகக் காணப்பட்டமைக்கு வங்கிக் கடன்பாடுகள் முழுவதும் உயர்வலு நாணயத்தை உருவாக்கியிருக்கக் கூடிய மத்திய வங்கியிலன்றி வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டமையே காரணமாகும். உண்மையில், 2001இல் மத்திய வங்கி ரூ.6.4 பில்லியன் கொண்ட மீள் கொடுப்பனவு ஒன்று காணப்பட்டது. பற்றாக்குறையை நிதியிடுவதற்கு உள்நாட்டு மூலவளங்களைத் திரட்டுவதனைப் பொறுத்தவரை சந்தை வட்டி வீதங்களின் எந்த ஒரு மோசமான தாக்கத்தினையும் கட்டுப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் ரூபாக்கடன்கள் போன்ற குறைந்தளவிற்கு சந்தை சார்ந்த படுகடன் கருவிகளில் கூடியளவிற்கு தங்கியிருந்தது. இது கூடியளவிற்கு சந்தை சார்ந்த படுகடன் கருவிகளுக்கு படிப்படியாக நகரும் அரசின் கடன்பாட்டு உபாயத்திலிருந்தும் விலகிச் செல்வதாக இருக்கிறது. மேலும், திறைசேரி முறிகள் போன்ற சந்தைப்படுத்தத்தக்க கருவிகளூடாக நிதியத்தினை திரட்டக் கூடியதாக இருந்தாலும் கூட உயர்ந்த வட்டி உழைக்கும் நீண்டகாலப் படுகடன் கருவிகளின் மீதான கவனத்தைத் தடுக்கும் விதத்தில் ஒப்பீட்டுரீதியில் குறுங்கால முதிர்ச்சிகளைக் கொண்ட கருவிகளை வழங்கியது. இதன் விளைவாக, 2001இல் அரசாங்கம் ரூபாக்கடன்களினூடாக ரூ.28.9 பில்லியனையும் திறைசேரி முறிகளூடாக ரூ.21 பில்லியனையும திரட்டியது. ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் இவை தொடர்பான பெறுமதிகள் முறையே ரூ.1.8 பில்லியனாகவும், ரூ.90 பில்லியனாகவும் காணப்பட்டன. இதேபோன்று அரசாங்கம் மூலவள இடைவெளியை நிதியிடுவதற்கு திறைசேரி உண்டியலின் மீது பெருமளவிற்கு தங்கியிருந்தமை வெளிநின்ற திறைசேரி உண்டியல் மட்டத்தினை ரூ.36 பில்லியனிலிருந்து ரூ.171 பில்லியனுக்கு உயர்த்தியது. மேலும், அரசாங்கம் இரு அரச வங்கிகளுடனும் அதன் மேலதிகப்பற்று வசதிகளைப் பயன்படுத்தத் தொடங்கியமையானது வெளிநின்ற மட்டத்தினை ஆண்டின் தொடக்கத்தில் ரூ.19 பில்லியனிலிருந்து 2001 இறுதியில் ரூ.38 பில்லியனுக்கு அதிகரித்தது. இது உயர்ந்த செலவினைக் கொண்ட கடன்பாட்டுக் கருவி மட்டுமன்றி இது வழமையான அரசபடுகடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு வெளியேயுள்ளவையாக இருப்பதனால் வினைத்திறன் மிக்க நாணய முகாமைத்துவத்தினையும் இது மோசமாகப் பாதிக்கும்.

எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மூலவளத் தேவைப்பாடுகள் உயர்வாக இருந்தமையையும் எதிர்பார்க்கப்பட்ட வர்த்தகக் கடன்பாடான ஐ.அ.டொலர் 200 மில்லியன் பிற்போடப்பட்டமையும் கருத்திற்கொண்டு அரசாங்கம் ரூபாச்சந்தையில்

அதிகரித்த பற்றாக்குறை நிதியிடலின் அழுத்தத்தினைக் குறைப்பதற்காக வேறுபட்ட வட்டி வீதங்களில் ஐ.அ.டொலர் 158.5 மில்லியன் பெறுமதி கொண்ட ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட முறிகளை (இலங்கை அபிவிருத்தி முறிகள்) வழங்கியது.

அரச படுகடன் இருப்பு மட்டம் (ரூ.1450.6 பில்லியன்) 2001இல் அதன் தேசிய வருமானத்தை விஞ்சி பெயரளவு மொ.உ.உற்பத்தியிலும் பார்க்க படுகடன் இருப்பில் விரைவான வளர்ச்சி ஏற்பட்டமையைப் பிரதிபலித்தது. 1990களின் நடுப்பகுதியில் வீழ்ச்சியடைந்த படுகடன்/ மொ.உ.உ.விகிதம் 1997 இலிருந்து தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து 2001 இறுதியில் 103.6 சதவீதத்தினை அடைந்தது. விரிவடைந்த இறைப்பற்றாக்குறையின் காரணமாக உள்நாட்டுக் கடன்பாடுகளில் ஏற்பட்ட கடுமையான விரிவு, செலாவணிவீத தேய்வின் காரணமாக வெளிநாட்டுப் படுகடனின் ரூபாப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன படுகடன் இருப்பில் ஏற்பட்ட இவ் உயர்விற்கு முக்கிய ஏதுக்காரணிகளாக விளங்கின. மொத்த அரசபடுகடன் இருப்பில், உள்நாட்டுப்படுகடன் 4.5 சதவீதப் புள்ளிகளினால் மொ.உ.உற்பத்தியின் 58.3 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் 2001இல் வெளிநாட்டுப்படுகடன் 2.2 சதவீதப் புள்ளிகளினால் மொ.உ.உற்பத்தியின் 58.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. வெளிநாட்டுக் கடன்பாடுகளில் பெரும்பகுதி (ஏறத்தாழ 95 சதவீதம்) உயர் சலுகை நியதிகளைக் கொண்டவையாக இருந்தபோதும் அரச படுகடனில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்பு உயர்வடைந்து செல்லும் படுகடன் பணிச் சுமையுடனும், உயர்ந்த இறைப் பற்றாக்குறையுடனும் சேர்ந்து நடுத்தரகால இறை உறுதிப்பாடு சம்பந்தப்பட்ட விடயங்களை எழுப்பின. ஆகவே நடுத்தர காலமொன்றில் உறுதியான இறைப் பாதையொன்றை நோக்கி பயணிக்கும் பொருட்டு இறைப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துதல், அரசின் படுகடன் முகாமைத்துவதத்தினை மேம்படுத்துதல், வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகளை எச்சரிக்கையாக அணுகுதல் ஆகியன அவசியமானவையாக இருப்பதுடன் இதில் மேலும் தாமதமொன்று ஏற்படக் கூடாது.

மொத்த அரச துறைப் பற்றாக்குறை இறைப்பற்றாக்குறையிலும் பார்க்க உயர்வாக இருந்தமைக்கு இழப்புக்களை ஏற்படுத்தும் அரச முயற்சிகளே காரணமாக இருந்தன. 2001இல் முழு அரசதுறைப் பற்றாக்குறையும் மொ.உ.உற்பத்தியின் 11 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டது. இதேபோன்று அரச கூட்டுத்தாபனங்கள் வசமுள்ள ரூ.40.8 பில்லியன் தொகை கொண்ட படுகடனையும் உள்ளிட்ட மொத்த வெளிநின்ற அரசதுறைப் படுகடன் ரூ. 1491.4 பில்லியனாக (மொ.உ.உற்பத்தியில் 106.5 சதவீதம்) காணப்பட்டது. ஆகவே அரசதுறைப் படுகடன் பிரச்சனைகளைத் பயன்தரு முறையில் கட்டுப்படுத்துவதற்கு அரச கூட்டுத்தாபனங்களின் நிதியியல் நிலைமையினை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலம் அவற்றின் ஏற்கனவேயுள்ள உயர்ந்த படுகடன் இருப்புக்களைக் குறைப்பது அவசியமானதாகும். அரசதுறைப் படுகடன் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தன்னியக்க விலையிடல் முறை, பாரிய தொழில் முயற்சிகளை வெவ்வேறாகப் பிரித்தல் மற்றும் தனியார் மயமாக்கல் என்பனவற்றை உள்ளடக்கிய ஒரு வலுவான அரச தொழில் முயற்சி சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் இன்றியமையாததாகவுள்ளது.

## 1.9 செலாவணி வீதமும் வெளிநாட்டுத்துறையும்

உலக பொருளாதாரப் பின்னடைவு, செத்தெம்பர் தாக்குதலினைத் தொடர்ந்து ஏற்பட்ட பாதுகாப்புத் தொடர்பான கரிசனைகள், நாட்டில் நிலவிய நீண்டகால வரட்சி, யூலையில் கட்டுநாயக்கா வானூர்தி நிலயத்தில் இடம்பெற்ற பயங்கரவாதிகளின் தாக்குதல் மற்றும் ஆண்டின் பின்னரைப்பகுதியில் காணப்பட்ட உள்நாட்டு அரசியல் குழப்பநிலை என்பன 2001ஆம் ஆண்டில் இலங்கையின் சென்மதிநிலுவையை மிக மோசமாகப் பாதித்தன. ஏற்றுமதி இறக்குமதி இரண்டும் கடுமையாக வீழ்ச்சியடைந்த வேளையில் சுற்றுலாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. எனினும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை இறக்குமதிகள் விரைவாக வீழ்ச்சியடைந்தமையால் சுருக்கமடைந்தது. வெளிநாட்டு மூலதனக் கணக்கும் நிதியியல் கணக்கும் மிகைகளைப் பதிவு செய்தன. இம் மாற்றங்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கடந்த இரு ஆண்டுகளாகத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட பற்றாக்குறையைத் தொடர்ந்து சென்மதிநிலுவையிலுள்ள திரண்ட நிலுவை மிகையைப் பதிவு செய்ததெனினும் இது ஆரம்ப இலக்கினை விட மிகக் குறைவாகவே இருந்தது. இதன் விளைவாக, வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகளும் அதேபோன்று நாட்டின் மொத்த ஒதுக்குகளும் அவற்றின் வீழ்ச்சியடைந்து சென்ற போக்கிற்கு மாறாக, அதிகரித்து, செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினைக் குறைத்தன. 2001 சனவரியில் சுதந்திரமாக மிதக்கின்ற செலாவணிவீத அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதன் கீழ் ஆரம்பத்தில் மிகையான அளவிற்கு உயர்ந்து பின்னர் உறுதியடைந்த செலாவணி வீதங்கள் படிப்படியாக முன்னேற்றமடைந்ததுடன், முன்னெச்சரிக்கை வழிமுறைகளை நீக்கப்பட்டதன் காரணமாக முன்னோக்கிய சந்தை நடவடிக்கைகளும் அதிகரித்தன. இச் சாதகமான அபிவிருத்திகள் யாவும் காணப்பட்டபோதும், ஏற்றுமதிப் பெறுகைகளும்

**அட்டவணை 1.6**
வெளிநாட்டுத்துறைக் குறிகாட்டிகள்

| விடயம் | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(அ) |
|---|---|---|---|---|---|
| ஆண்டு மாற்றங்கள் (%) | | | | | |
| ஏற்றுமதி அளவுகள் | 10.6 | 0.1 | 5.0 | 18.3 | -8.0 |
| இறக்குமதி அளவுகள் | 12.3 | 12.4 | 0.2 | 12.9 | -10.7 |
| ஏற்றுமதி அலகுப் பெறுமதி | 9.3 | 11.6 | -8.5 | 1.5 | -5.2 |
| இறக்குமதி அலகுப் பெறுமதி | 2.4 | -2.2 | -3.5 | 8.1 | -3.6 |
| வர்த்தக மாற்று விகிதம் | 6.8 | 14.2 | -5.0 | -6.1 | -1.7 |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக | | | | | |
| வர்த்தகப் பற்றாக்குறை/ மொ.உ.உ | -8.1 | -6.9 | -8.7 | -10.9 | -7.4 |
| நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை/ மொ.உ.உ | -2.6 | -1.4 | -3.6 | -6.4 | -2.4 |
| திரண்ட சென்மதி நிலுவை / மொ.உ.உ | 1.1 | 0.2 | -1.7 | -3.2 | 1.4 |
| வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | |
| மொத்த அலுவல்சாா ஒதுக்குகள் | 1,103 | 923 | 942 | 1,083 | 1,338 |
| மொத்த ஒதுக்குகள் | 3,132 | 2,907 | 2,582 | 2,126 | 2,238 |
| ?வெளிநாட்டுப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | | | | | |
| ஒன்று சேர்ந்த கொடுப்பனவுகள் | 430 | 517 | 583 | 622 | 698 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 303 | 289 | 296 | 331 | 276 |
| செலாவணிவீத சுட்டெண் (காலமுடிவில்) (ஆ) | | | | | |
| பெயரளவு தாக்குமுள்ள செலாவணிவீதம் | 126.1 | 111.5 | 110.2 | 111.6 | 112.2 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) 24 கூடை நாணயங்கள், 1995=100

மூலம்: இலங்கை மத்திய வங்கி.


சுற்றுலா வருகைகளும் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக 2001ஆம் ஆண்டிற்கான சென்மதி நிலுவை கவலைக்குரிய நிகழ்வுகளைக் காட்டி வெளிநாட்டு அதிர்ச்சிகளினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு விடுகின்ற தன்மையைப் பிரதிபலித்த வேளையில் தனியார் உட்பாய்ச்சல் வீழ்ச்சியடைந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நலிவுற்ற மனோநிலையை எடுத்துக்காட்டியது.

2000ஆம் ஆண்டில் வலுவாக மீட்சியடைந்த பின்னர் 2001இல் உலக பொருளாதாரம் நலிவடைந்தமையினால் வெளிநாட்டு சூழல் குறிப்பிடத்தக்களவு மோசமடைந்தது. மெதுவான வளர்ச்சிக்கு ஐக்கிய அமெரிக்காவில் காணப்பட்ட கடுமையான நலிவு, ஐரோப்பிய ஒன்றியத்தின் மிதமான வளர்ச்சி, வீழ்ச்சியடையக் கூடிய நிலையில் உள்ள யப்பானின் பொருளாதாரம் என்பன காரணங்களாக இருந்தன. முன்னேற்றம் கண்ட நாடுகளில் குறிப்பாக, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளின் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பன்னாட்டு வர்த்தகத்திலும், இலங்கை உட்பட வர்த்தகத்தில் தங்கியுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வளர்ச்சி வாய்ப்புக்களிலும் மோசமான எதிர் விளைவுகளைத் தோற்றுவித்தன. குறைவடைந்த எண்ணெய் விலைகள் மற்றும் பன்னாட்டு வட்டிவீதக் குறைப்பு போன்ற சாதகமான பன்னாட்டு அபிவிருத்திகள் இலங்கையின் பொருளாதாரத்தின் மீது கொண்டிருந்த தாக்கமானது ஏற்றுமதிக் கேள்வியினால் ஏற்பட்ட கடுமையான குறைப்பு, சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, தனியார் மூலதன உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் மோசமான தாக்கங்களினால் தேவைக்கும் மேலாக எதிரீடு செய்யப்பட்டது. சுதந்திரமாக மிதக்கின்ற செலாவணி வீத அமைப்பிற்கு மாறியமையும் ப.நா.நிதியத்துடன் துணைநில் ஒழுங்குமுறைக்குள் நுழைந்து கொண்டமையும் வெளிநாட்டு நிகழ்வுகளின் மோசமான தன்மையைத் தணிப்பதற்கு உதவின.

பொருட்கள் மற்றும் பணிகளின் பன்னாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட கடுமையான குறைப்பு, குறிப்பிடத்தக்களவிற்கு குறைவான வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, சென்மதிநிலுவையின் திரண்ட பற்றாக்குறையில் காணப்பட்டதொரு மிகை, அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளில் தோற்றுவித்த தொடர்பான அதிகரிப்பு, நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்பட்ட மேம்பாடு மற்றும் ரூபாவில் ஏற்பட்ட தேய்மானம் என்பன 2001ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டுத்துறை நிகழ்வுகளில் காணப்பட்ட முக்கிய பண்புகளாக இருந்தன.

2001ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டுத்துறை ( ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள்) கடுமையான பின்னடைவைக் கொண்டிருந்து ஐ.அ.டொலர் நியதிகளில் 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதிக் கேள்விகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியும் மோசமடைந்த வர்த்தகமாற்று விகிதமுமே காரணங்களாகும். எனினும் வர்த்தகப் பற்றாக்குறை 2000ஆம் ஆண்டின் மெ.உ.உற்பத்தியின்

வரைபடம் 1.7
தெரிந்தெடுக்கப்பட்ட துறைக் குறிகாட்டிகள்




10.8 சதவீதத்திலிருந்து 2001இல் மொ.உ.உற்பத்தியின் 7.4 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 12.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த ஏற்றுமதியிலும் பார்க்க இறக்குமதி 14.9 சதவீதம் கொண்ட கடுமையான சுருக்கத்திற்கு உட்பட்டமையே (2000ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மூன்று வானூர்திகளுக்கான சீராக்கம் இல்லாமல் 18.4 சதவீதம்) காரணமாக இருந்தது. ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது அளவுகளில் ஏற்பட்ட 8 சதவீத வீழ்ச்சியினதும் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட 5.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும். ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக ஆடைகள் புடவைகள் (14.7 சதவீதம்) ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் (10.3 சதவீதம்) வேளாண்மை உற்பத்திகள் (7.2 சதவீதம்) என்பனவற்றில் முக்கியமாகப் பிரதிபலிக்கப்பட்டது. ஆடை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மட்டும்மொத்த ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் 62 சதவீதத்திற்கு கூடுதலான பங்கிற்கு வகைகூறியது.

இலங்கை ஏற்றுமதிகளின் உள்ளமைப்பும் அவை சென்றடையும் நாடுகளின் பகிர்வும் மோசமான வெளிநாட்டு அதிர்ச்சிகளுக்கு நாடு பாதிப்படைகின்ற தன்மையினை எடுத்துக்காட்டுவதாக உள்ளதுடன் நாட்டின் ஏற்றுமதி அபிவிருத்தி உபாயத்தினையும் இரு பரிமாணங்களில் மீண்டும் பரீட்சிக்கத் தூண்டுவதாகவுள்ளது. முதலாவது, மொத்த ஏற்றுமதிகளில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்கிற்கு வகைகூறும் ஆடை மற்றும் புடவை ஏற்றுமதிகளில் அதிகளவிற்கு அதிகமாக தங்கியிருப்பதானது பன்னாட்டுச் சந்தையில் இத்துறையில் ஏற்படும் மோசமான மாற்றங்களினால் அதிகளவிற்கு பாதிப்படையச் செய்கிறது. கரிசனைக்குரிய இக் கருத்து 2005ஆம் ஆண்டளவில் பல்நூழிழை உடன்படிக்கையைக் கட்டம்கட்டமாக நீக்குவதன் மூலம் எதிர்கொள்ளப்படும் பிரச்சனையுடன் குறிப்பாக தொடர்புபட்டதாகும். இரண்டாவது, ஏற்றுமதிகளில் பெரும்பங்கு ஒருசில முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் ஒன்றாக குவிந்திருப்பதும் இச் சந்தைகளின் தளம்பல்களினால் இலங்கையை உயர்ந்தளவிற்கு பாதிப்படையச் செய்கிறது. இலங்கை ஏற்றுமதிகளின் மிகப்பெரும் சேரிடமான ஐக்கிய அமெரிக்கா ஏறத்தாழ 41 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் இரண்டாவது பாரிய

சந்தையான ஐரோப்பிய ஒன்றியம் ஏறத்தாழ 27 சதவீதத்திற்கு வகைகூறி, இவ்விரு சந்தைகளிலும் காணப்பட்ட மோசமான நிகழ்வுகளினால் இலங்கை பாதிக்கப்பட்டமையை வெளிப்படுத்தியது வர்த்தகத்தில் பெருமளவிற்கு தங்கியுள்ள இலங்கை போன்றநாடானது பண்ட வகைப்படியும் சரி, சந்தை நாடுகளைப் பொறுத்த வரையிலும் சரி, அளவிற்கதிகமாக இடர்நேர்வுகளுக்கு உட்படுவதனால்[அ] பன்முகப்படுத்தலினூடாக இதனை அடைந்துகொள்ளும் தேவை காணப்படுவதுடன் பொருளாதாரத்தின் புத்துயிர்ப்பினை வலுப்படுத்துவதற்கு மட்டுமன்றி ஒப்பீட்டுரீதியான அனுகூலங்களை அடைந்துகொள்வதற்கும் உதவும் வேளையில் மாற்றமடைந்து செல்லும் உலகளாவிய போக்கிற்கு ஏற்ப இணைத்துச் செல்லவும் உதவும்.

இறக்குமதியில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சிக்கு பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட பின்னடைவு, நலிவுற்ற ஏற்றுமதிக் கேள்வியின் விளைவாக இடைநிலை இறக்குமதிகளுக்கான கேள்வி குறைவுற்றமை, இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட மேலதிகக் கட்டணம், குறைந்த பெற்றோலிய விலைகள் என்பன முக்கிய காரணங்களாக விளங்கின. இறக்குமதிப் பெறுமதியில் ஏற்பட்ட குறைப்பு சராசரி இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட 4 சதவீதமான வீழ்ச்சி மற்றும் அளவுகளில் ஏற்பட்ட 11 சதவீதமான குறைப்பு என்பனவற்றின் இணைந்த விளைவாகும். பெற்றோலியம் புடவைகள் மற்றும் சில முதலீட்டுப் பொருட்களுக்கான குறைந்த பன்னாட்டு விலைகள், சராசரி இறக்குமதி விலைகள் குறைவடையப் பங்களித்தன. உணவு, நீண்டகாலப் நுகர்வுப் பொருட்களுக்கான குறைந்த பன்னாட்டு விலைகள் (சீனி, கோதுமை, பால் உற்பத்திகள், உந்து ஊர்திகள், வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள்) இடைநிலைப் பொருட்கள் (புடவைகள், பெற்றோலிய உற்பத்திகள், வைரங்கள், இரசாயனம் மற்றும் பிளாத்திக்கு) முதலீட்டுப் பொருட்கள் (கட்டடப் பொருட்கள் மற்றும் பொறிகள்) என்பனவற்றின் தாழ்ந்த இறக்குமதிகளே இறக்குமதி அளவில் ஏற்பட்ட குறைப்பிற்கு முக்கிய காரணமாக இருந்தன. எனவே, வீழ்ச்சி அனைத்து மூன்று முக்கிய இறக்குமதி வகைகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. மிகப்பெரிய வீழ்ச்சியான 37.8 சதவீதம் முதலீட்டு வகையில் காணப்பட்ட வேளையில் (வானூர்திக்காக சீராக்கம் செய்யப்பட்டபோது 24.9 சதவீதம்) இடைநிலைப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் வகைகள் முறையே 12.3 சதவீதத்தினாலும், 11 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. ஆண்டு முழுவதும் முதலீட்டுப் பொருட்களில் காணப்பட்ட கடுமையான வீழ்ச்சி எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களை தடங்கலுறச் செய்யுமாகையில் இது முக்கிய கரிசனைக்குரியதொன்றாக இருந்தது. பன்னாட்டு பண்ட விலைகளில் காணப்பட்ட சாதகமான அபிவிருத்திகளில் ஒன்று யாதெனில் இவ்வாண்டுக் காலத்தில் பெற்றோலிய விலைகள் ஏறத்தாழ 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை யேயாகும். இது மட்டும் இலங்கையின் இறக்குமதிச் செலவில் ஐ.அ.டொலர் 125 மில்லியனைச் சேமிக்கச் செய்தது. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு இன்றியமையாதனவல்லா நுகர்வுப் பொருட்களின் மீது விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டணம் ஓரளவு காரணமாக இருந்தது. உந்து ஊர்திகளின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு சலுகை நியதிகளில் உந்து ஊர்திகளை இறக்குமதி செய்ய அரச ஊழியர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்ட வசதி இடைநிறுத்தப்பட்டமையே காரணமாகும்.

இந்தியா, இலங்கைக்கான தனி ஒரு பாரிய ஏற்றுமதியாளராக (11 சதவீதம்) மாறியதுடன் அதனைத் தொடர்ந்து கொங்கொங்கும் (9 சதவீதம்), சிங்கப்பூரும் (8 சதவீதம்) காணப்பட்டன. தொகுதியாகப் பார்க்கையில் ஆசிய நாடுகள் இலங்கையின் இறக்குமதிகளில் ஏறத்தாழ 56 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் நாட்டின் ஏற்றுமதிகளில் 8 சதவீதத்தினை மட்டுமே அவை ஈர்த்துக்கொண்டன. இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான முன்னேற்றங்கள் கூட மிக மெதுவாகவே காணப்படுகின்றன.

பணிகள் கணக்கில் காணப்பட்ட மிகை சிறீலங்கன் எயார்லைன்சுக்கு கிடைத்த ஐ.அ.டொலர் 90 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலில் முக்கியமாகப் பிரதிபலித்தது. இக் குறித்துரைக்கப்பட்ட உட்பாய்ச்சலை நீக்குமிடத்து பணிகள் கணக்கின் மிகை 2000ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 38 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 18 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு சுற்றுலாவிலிருந்தான பெறுகைகளில் ஏற்பட்ட 18 சதவீத (ஐ.அ.டொலர் 39 மில்லியன்) வீழ்ச்சியும் யூலையிலும், செத்தெம்பரிலும் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலினைத் தொடர்ந்து துறைமுகம் மற்றும் வான் போக்குவரத்துடன் தொடர்பான பணிகளிலிருந்தான வருவாய்களில் காணப்பட்ட பின்னடைவும் முக்கிய காரணங்களாக இருந்தன. வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் அதிகரிப்பொன்று காணப்பட்டபோதும், தேறிய வருமானக் கொடுப்பனவுகள் 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, பன்னாட்டு வட்டி வீதங்களில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளைக் குறைவடையச் செய்தமையே காரணமாகும்.

அதேவேளை, தேறிய நடைமுறை மாற்றல்கள் ஐ.அ.டொலர் 960 மில்லியனுக்கு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, வளைகுடாப் போரினால் பாதிக்கப்பட்ட

(அ) ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத் தொகை / மொ.உ.உ. விகிதம் 70 சதவீதமாகும்.

தொழிலாளருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் முற்றுப்பெற்றமையின் காரணமாக தேறிய தனியார் மாற்றல்கள் குறைவடைந்தமையைப் பிரதிபலித்தன. இச் சிறப்பு விடயத்தை நீக்கிவிடுமிடத்து, தேறிய தனியார் மாற்றல் பெறுகைகள் 2001இல் ஏறத்தாழ 1 சதவீதத்தினால் அதிகரித்தன. வர்த்தகம், பணிகள், வருமான மற்றும் மாற்றல் கணக்குகளில் காணப்பட்ட மாற்றல்கள் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையை மொ.உ.உற்பத்தியின் 6.4 சதவீதத்திலிருந்து (ஐ.அ.டொலர் 1065 மில்லியன்) 2001இல் மொ.உ.உற்பத்தியின் 2.4 சதவீதத்திற்கு (ஐ.அ.டொலர் 371 மில்லியன்) கடுமையாகச் சுருக்கமடையச் செய்து திரண்ட சென்மதிநிலுவையில் மிகையொன்றை பதிவுசெய்ய இயலச் செய்ததுடன் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினையும் குறைத்தது.

அரசிற்கான கடன் மூலதனத்தில் அதிகரிப்பும் முன்னைய ஆண்டைவிட குறுங்கால மூலதனப் பாய்ச்சலில் குறிப்பிடத்தக்க மேம்பாடும் ஏற்பட்டமையின் காரணமாக மூலதன மற்றும் நிதியியல் கணக்குகள் சில மேம்பாடுகளைப் பிரதிபலித்தன. வெளிநாட்டு நேரடி முதலீடு (தேறிய) கடுமையாக வீழ்ச்சியடைந்தமைக்கு முதலீட்டாளர் நம்பிக்கை குறைவடைந்தமையும் பன்னாட்டு முதலீட்டாளர்கள் தமக்கு ஏற்படக்கூடிய இடர்நேர் தன்மையை மிகக்குறைக்கும் பொருட்டு உயர்தர முதலீடுகளுக்கு நகர்ந்து கொண்டமையும் காரணங்களாக இருந்தன. சொத்துப்பட்டியல் முதலீடுகள் தொடர்ந்து நான்காவதாண்டாக தேறிய வெளிப்பாய்ச்சலை (ஐ.அ.டொலர் 11 மில்லியன்) பதிவு செய்ததெனினும் வெளிப்பாய்ச்சல் முன்னைய ஆண்டிலும் பார்க்க மிகக் குறைவாக (ஐ.அ.டொலர் 45 மில்லியன்) காணப்பட்டது. தனியார் மயமாக்கல் பெறுகைகள் ஐ.அ.டொலர் 90 மில்லியனாக விளங்கி பிறிமா மாவாலைக் கொடுக்கல் வாங்கல்களில் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 65 மில்லியன், எயர்லங்கா கொடுக்கல்வாங்கல் தொடர்பான சென்மதிநிலுவையின் பேரிலான ஐ.அ.டொலர் 25 மில்லியன் என்பனவற்றின் பெறுகைகளை உள்ளடக்கியிருந்தன. கடந்த இரு ஆண்டுகளுடனும் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகக் காணப்பட்டபோதும், இது எதிர்பார்க்கப்பட்ட ஐ.அ.டொலர் 275 மில்லியன் கொண்ட தொகைக்கும் மிகக் குறைவாகவே இருந்தது. சாதகமற்ற பன்னாட்டுச் சந்தை நிலைமைகளின் காரணமாக இலங்கை ரெலிகொம்மின் மேலும் ஒருபகுதியை விற்பனை செய்வதில் ஏற்பட்ட தாமதமே இக்குறைப்பிற்கு முக்கிய காரணமாக இருந்தது. நடைமுறைக்கணக்கு, நிதியியல் மற்றும் மூலதனக் கணக்குகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் முன்னைய இரு ஆண்டுகளாக காணப்பட்ட பற்றாக்குறைக்கு மாறாக, சென்மதிநிலுவையின் திரண்ட பற்றாக்குறையில் ஐ.அ.டொலர் 220 மில்லியன் கொண்ட மிகையைத் தோற்றுவித்தன. எனினும், பெறப்பட்ட மிகை ஆரம்ப இலக்கான ஐ.அ.டொலர் 340 மில்லியனை விடக் (நிகழ்ச்சித்திட்ட நிதியிடலான ஏறத்தாழ ஐ.அ.டொலர் 525 மில்லியனுடன்) குறைவாகவே காணப்பட்டன.

இதன் விளைவாக, மொத்த அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 1338 மில்லியனுக்கு 28 சதவீதத்தினால் உயர்வடைந்து, முன்னைய இரு ஆண்டுகளிலும் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக, 2001 இறுதியில் 2.7 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தன. மத்திய வங்கி ஆண்டின் தொடக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க கூடுதலாக ஐ.அ.டொலர் 126 (தேறிய) மில்லியனை சந்தையிலிருந்து கொள்வனவு செய்தது. இவ்வாறிருந்தும் கூட, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட முன்னேற்றம் இலக்கான ஐ.அ.டொலர் 1500 மில்லியனுக்கும் குறைவாக இருந்தமைக்கு தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தில் காணப்பட்ட வீழ்ச்சி ப.நா.நிதியத்தினால் உதவியளிக்கப்பட்ட துணைநில் ஒழுங்குமுறைபடுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட மீளாய்வுகள் முற்றுப்பெறுவதிலும் நிதி உதவிகளின் பகிர்ந்தளிப்பிலும் காணப்பட்ட தாமதம் என்பனவே காரணங்களாகும். நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2001 இறுதியில் 5 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 2238 மில்லியனுக்கு அதிகரித்து இறக்குமதிகளில் 4.5 மாதங்களுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தன.

இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பு 5 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 8,566 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தனியார் துறைப் படுகடனில் ஏற்பட்ட வீழ்ச்சி (சிறீலங்கன் எயார்லைன்ஸ் கடன்களின் தீர்ப்பனவு) வெளிநாட்டுக் கடன்களின் மெதுவான பகிர்ந்தளிப்பு, குறுக்கு செலாவணி வீதத் தாக்கங்கள் என்பனவே காரணங்களாகும். எனினும், 2001இல் வெளிநாட்டுப் படுகடன்/மொ.உ.உற்பத்தி விகிதம் 2000ஆம் ஆண்டின் 54.5 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 54.7 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு ஐ.அ.டொலர் நியதிகளில் மொ.உ.உற்பத்தி சுருக்கமடைந்தமையே காரணமாகும். படுகடன் இருப்பில் பெரும்பங்கு சலுகைரீதியான நீண்டகாலப்படுகடனை (74 சதவீதம்) உள்ளடக்கியிருந்தது. பொருட்கள் பணிகள் வருவாய் மற்றும் நடைமுறை தனியார் மாற்றல்களில் இருந்தான மொத்தப் பெறுகைகளில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் நாட்டின் வெளிநாட்டுப்படுகடன் பணி வீதம் 12.2 சதவீதத்திலிருந்து 11.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து பன்னாட்டு வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.

முன்னைய முறையிலிருந்து 2001 சனவரி 23ஆம் நாளன்று சுதந்திரமாக மிதக்கின்ற செலாவணிவீத முறைக்கு நகர்ந்தமையானது 2001இல் காணப்பட்ட முக்கிய கொள்கை மாற்றமாக இருந்தது. செலாவணி வீதமானது, புதிய செலாவணிவீத அமைப்பின் கீழ் முதல் ஒருசில நாட்களாகக் காணப்பட்ட மிதமான மற்றும் மிகையான உயர்வுகளுக்குப் பின்னர் குறுங்காலப் பகுதியில் உறுதியடைந்தது. மற்றைய நாடுகளில் காணப்பட்ட அனுபவங்களுடன் ஒப்பிடுகையில் மிகை உயர்வு மிக மிதமாகக் காணப்பட்டமைக்கு வீச்சு அமைப்பின் கீழ் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் மற்றும் இடையீட்டு பிரிவினை விசாலித்தமை என்பனவற்றினூடாக செலாவணிவீத சந்தையின் அழுத்தம் குறைக்கப்பட்டமையே காரணமாகும். புதிய முறையானது வீதத்தின் மிகையான தளம்பல்களை ஆகக் குறைக்கும் பொருட்டு காலத்திற்குக்காலம் மத்திய வங்கியின் அவ்வப்போதைய தலையீடுகளுடன் சந்தைக்கேள்வி மற்றும் நிரம்பல் விசைகளினால் செலாவணிவீதம் நிர்ணயிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. மத்திய வங்கி, சந்தையில் நிலவும் வீதங்களில் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்வதன் மூலம் அதன் அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பங்குபற்றியது. முன்னைய இரு ஆண்டுகளிலும் தாழ்வடைந்து காணப்பட்ட அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக புதிய செலாவணிவீத முறையின் கீழ் பெருமளவு கொள்வனவுகளை மேற்கொள்ளுவதற்கு மத்திய வங்கிக்கு இயலுமாக இருந்தது.

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் ஒழுங்கான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தும் விதத்தில் பல முன்னெச்சரிக்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் வழிமுறைகள் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஒழுங்கான நடத்தையைப் பேணுவதனையும் ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதிப் பெறுகைகளை மீளப்பெற்றுக் கொள்வதனை ஊக்குவிப்பதனையும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் விரைவான உறுதிப்பாடு ஏற்பட உதவுவதனையும் இலக்காகக் கொண்டிருந்தது. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் உறுதிப்பாட்டுக்கான முன்னேற்றம் எய்தப் பெற்றமையைத் தொடர்ந்து இவ்வனைத்து வழிமுறைகளும் அகற்றப்பட்டன. அல்லது தளர்த்தப்பட்டன. இவ் வழிமுறைகள் அகற்றப்பட்டதன் காரணமாக முன்னோக்கிய சந்தையின் நடவடிக்கைகள் படிப்படியாக அதிகரித்தவேளையில், உள்நாட்டு குறுங்கால வட்டி வீதங்களுக்கும் டொலர் மற்றும் இடர்நேர் கட்டணங்களுக்குமான பன்னாட்டு வட்டி வீதங்களுக்குமிடையிலான வட்டிவீத வேறுபாடுகளை இணங்குவிக்கும் பொருட்டு முன்னோக்கிய கட்டணம் வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று, வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் மேம்பட்ட உறுதிப்பாட்டினை பிரதிபலிக்கின்ற விதத்தில் இவ்வாண்டில் வங்கிகளுக்கிடையிலான சந்தையிலும் வங்கிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்குமிடையிலும் வெளிநாட்டுச் செலாவணியின் வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களுக்கிடையிலான வீச்சு வீழ்ச்சியடைந்தது.

இத்தகைய பின்னணியில், 2001இல் இலங்கை ரூபா யப்பானிய யென் தவிர்ந்த அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் தேய்வடைந்தது. பொதுவாகப் பார்க்கையில் ஐ.அ.டொலருக்கெதிராக இது 11.3 சதவீதத்தினாலும், புதிய செலாவணிவீத அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் முழுமையாக 8.6 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது. 2001இல் இது யூரோ (6.7 சதவீதம்) பவுண் இசுடேர்லிங் (8.7 சதவீதம்) இந்திய ரூபா (8.3 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராகத் தேய்வடைந்தவேளையில் யப்பானிய யென்னுக்கெதிராக 1.5 சதவீதத்தினால் உயர்வடைந்தது. பொதுவாகப் பார்க்கையில் இவ்வாண்டுக் காலத்தில் ரூபா முழுமையாக சிஎஉ இற்கெதிராக 7.9 சதவீதத்தினாலும் 2001 சனவரி 23 இன் பின் 5.5 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது. இதன் விளைவாக, ஐந்து கூடை நாணயங்களுக்கெதிரான இலங்கை ரூபாவின் பெயரளவு பயன்தரு செலாவணிவீதம் 7.1 சதவீதம் கொண்ட தேய்வினைப் பதிவுசெய்த வேளையில், வர்த்தகப் பங்காளர் மற்றும் போட்டி நாடுகள் இரண்டினையும் உள்ளடக்கிய இருபத்துநான்கு கூடை நாணயங்களுக்கெதிராக 7.3 சதவீதத்தினால் தேய்வடைந்தது. அதேவேளை, ஐந்து கூடை நாணயங்களுக்கெதிரான உண்மைப் பயன்தரு செலாவணிவீதம் 1.4 சதவீதம் கொண்ட உயர்வினை எடுத்துக்காட்டிய வேளையில் இருபத்துநான்கு கூடை நாணயங்களுக்கெதிராக இது 2001இல் 2 சதவீத தேய்வினைக் காட்டி, சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணிவீதமுறை, நாட்டின் வெளிநாட்டுப் போட்டித்தன்மை மீது நாட்டின் உயர்ந்த உள்நாட்டு பணவீக்கம் கொண்டிருந்த மோசமான தாக்கத்தினை மிகக் குறைத்து விட்டமையை எடுத்துக்காட்டியது.

## 1.10 நிதியியல் துறை

### நாணயக்கொள்கை

செலாவணிவீத அமைப்பு சுதந்திரமாக மிதக்கும் முறைக்கு மாறிக் கொண்டமையானது, விலை உறுதிப்பாட்டின் மீது கவனம் செலுத்துவதற்கு நாணயக் கொள்கைக்கு வசதியளித்ததெனினும், 2001ஆம் ஆண்டில் நாணய முகாமைத்துவம் பொருளாதாரத்தில் காணப்பட்ட மோசமான நிகழ்வுகளிலிருந்து தோன்றிய முரண்பாடான கோரிக்கைகளினால் நாணய

முகாமைத்துவத்திற்காக ஒரேயொரு (அதாவது செலாவணிவீத) வழியை நாடவேண்டிய விதத்தில் 2001இல் மிகுந்த அறைகூவல்களுக்கு உட்பட்டதாக மாறியது. பொருளாதாரப் பின்னடைவும் முன்னைய வீச்சுப் பொருளாதார அமைப்பின் கீழ் செலாவணிவீதத்தின் மீதான அழுத்தத்தினைக் தடுப்பதற்காக வட்டி வீதங்களில் செய்யப்பட்ட அதிகரிப்புக்களும் நாணயக்கொள்கையில் தளர்த்தல்களை தேவைப்படுத்திய வேளையில் அப்போது நிலவிய பணவீக்கப் போக்கும் உயர்ந்த அரசதுறைக் கடன்பாடுகளும் இறுக்கமான நாணயக்கொள்கை நிலையைத் தேவைப்படுத்தின. இம் முரண்பாடான தேவைப்பாடுகளைச் சமப்படுத்திய வேளையில் 2001இல் எதிர்நோக்கப்பட்ட கடுமையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இடர்ப்பாடுகளை எதிர்கொள்வதற்கு நாணயக்கொள்கையானது எதிர்கால விலை உறுதிப்பாடு, நிதியியல் சந்தைகளில் உறுதிப்பாட்டினைப் பேணுதல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு உதவுதல் என்பனவற்றின் மீது கூடியளவு வலியுறுத்தல்களை மேற்கொள்ளும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, 2000ஆம் ஆண்டின் பின்னரைப்பகுதியிலும் 2001 சனவரியிலும் உயர்த்தப்பட்ட அதன் முதன்மை வட்டி வீதங்களை மிக எச்சரிக்கையுடன் படிப்படியாக ஆனால் தொடர்ச்சியாகக் குறைத்தது. போதுமான திரவத்தன்மையின் வழங்கலானது நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் குறைக்கப்பட்டமையின் மூலமும், செலாவணி வீதத்தில் மேலதிக அழுத்தங்களைத் தோற்றுவிக்காமல் அரசாங்கத்திடமிருந்தும் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலும் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்தமையின் மூலமும் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக முன்னைய ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகக் காணப்பட்ட உயர்ந்த திரவத்தன்மை பற்றாக்குறை மிகக்கூடுதலாக வீழ்ச்சியடைந்து 2001 இறுதியில் சமநிலையொன்றினை அடைந்தது. அனைத்து சந்தை வட்டி வீதங்களும் வீழ்ச்சியடைந்தபோதும் கடன் வழங்கல் வீதங்கள் மெதுவான வேகத்தில் சீராக்கப்பட்டமையானது வட்டிவீத சீராக்க செய்முறையில் காணப்படுகின்ற தற்போதைய கடுமையான தன்மையினை பிரதிபலித்தது. 2001ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்ட பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்டவாறு ஒதுக்குப் பண நிகழ்ச்சித் திட்டம் செயற்பாட்டு நிலையில் இருந்தவேளையில் பொருளாதாரத்தில் கேள்வியினால் உந்தப்படும் பணவீக்க அழுத்தம் இல்லாமல் முழுமையான நாணய விரிவாக்கம் பெயரளவு வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்களுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் மிதமாக அமைந்திருந்தது.

இலங்கை மத்திய வங்கி 2001 சனவரி 23ஆம் நாளன்று சுயாதீனமாக மிதக்கும் செலாவணிவீத அமைப்பிற்கு மாறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் அதன் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களை 300 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 20 சதவீதத்திற்கும், 23 சதவீதத்திற்கும் உயர்த்தியது. எனினும், நிதியியல் சந்தை உறுதிப்பாடு மேம்பட்டதன் காரணமாக இவ்வீதங்கள் ஆறு தடவைகள் 800-900 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டன. இக் குறைப்பில் பெரும்பகுதி, நிதியியல் சந்தையிலும் அதேபோன்று பணவீக்கப் பக்கத்திலும் ஏற்பட்ட அபிவிருத்திகளைத் தொடர்ந்து ஆண்டின் பின்னரைப்பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டது. இதேபோன்று வங்கிவீதமும், மற்றைய சந்தை வீதங்களில் செய்யப்பட்ட குறைப்புடன் இணங்கிச்செல்லும் விதத்தில் 25 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. சந்தை ரூபாத் திரவத்தன்மையினை அதிகரிப்பதனையும் அதன் மூலம் வர்த்தக வங்கிகளின் கடன்வழங்கல் இயலளவை அதிகரிப்பதனையும் நோக்கமாகக் கொண்டு மத்திய வங்கி வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை 1 சதவீத புள்ளியினால் 10 சதவீதத்திற்குக் குறைத்தது. இக்குறைப்பு வங்கித்தொழில் துறையின் இடைச்செலவுகளைக் குறைவடையச் செய்வதன் மூலம் வங்கிகள் அவற்றின் கடன் வழங்கல் செலவுகளை குறைக்க இயலச் செய்யும் என்ற எண்ணத்தையும் கொண்டிருந்தது.

சனவரியில் செலாவணிவீத அமைப்பிற்குச் செய்யப்பட்ட மாற்றங்களுடன் சேர்ந்து அறிமுகப்படுத்தப்பட்ட தற்காலிக முன்னெச்சரிக்கை வழிமுறைகள், புதிய செலாவணிவீத அமைப்பின் கீழான அனுபவங்களைப் பெற்றுக்கொண்டதன் விளைவாக நிதியியல் சந்தையின் உறுதிப்பாட்டில் மேம்பாடுகள் அடையப்பட்டதுடன், படிப்படியாக அகற்றப்பட்டன. தண்டங்கள் எதுவும் உறப்படாமல் ஏற்றுமதிக் கொடுகடனை தீர்ப்பனவு செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட காலப்பகுதி வழமையாக நீண்டகால கொடுகடன் வழங்கப்படுகின்ற விடயங்களைப் பொறுத்தவரை அவற்றிற்கு நீடிக்கப்பட்டதுடன், வர்த்தகக் கொடுகடனுக்குப் பதிலாக வங்கிகளின் மூலதனம் மற்றும் ஒதுக்குகள் என்பன மீதான வரையறையை மீளத்தளப்படுத்தல் மூலம் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய மிகைக் கொடுப்பனவு நிலைமைகள் முன்மதியுடைய ஒழுங்கு விதியாக மாற்றல் செய்யப்பட்டது. முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் மீது விதிக்கப்பட்ட 50 சதவீத இலாபத் தேவைப்பாடுகள் இரு சமமான நடவடிக்கைகள் மூலம் அகற்றப்பட்டதுடன், அத்துடன் இறக்குமதி உண்டியல்களை முன்கூட்டியே கொடுப்பனவு செய்வதன் மீதான தடையும் புறக்கீடு செய்யப்பட்டது.

மிதக்கும் செலாவணிவீத அமைப்பிற்கு மாறிக் கொண்டமையுடன், மிக முக்கியமானதாக இருந்த செலாவணிவீதத்தின் பங்கு குறைந்துபோயிற்று. இதன் விளைவாக, பொதுவான நாணய நிகழ்ச்சித் திட்டத்தில் விலை உறுதிப்பாட்டு குறிக்கோளினை மேம்படுத்துவதற்காக இடைநிலை இலக்காக உள்ள ஒதுக்குப் பணத்தின் மீது இலங்கை மத்திய வங்கி பெருமளவு வலியுறுத்தல்களைக் கொண்டிருந்தது. மத்திய வங்கி நாணய நிலைமைகளை கணிப்பிடுவதற்கு நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்கள், சந்தை வட்டி வீதங்களில் மாற்றங்கள் மற்றும் நாணய நிலைமைகளின் சுட்டெண் என்பன உள்ளிட்ட பல வழிமுறைகளின் மீது தொடர்ந்தும் தங்கியிருந்தது. கொள்கைக் கருவிகளை தெரிவுசெய்யும்போது மீள்கொள்வனவு, நேர்மாற்று மீள்கொள்வனவு, கழிவு மற்றும் மீள்கழிவு வீதங்கள் என்பன மீதான மாற்றங்களுடனான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீது மிகக் கூடியளவிற்கு கவனம் செலுத்தப்பட்டன. வங்கியும் நாணய எறிவுகளின் பரப்பல்களையும் கொள்கை தீர்மானங்களுடன் தொடர்பான தகவல்களையும் மேலும் மேம்படுத்தும் பொருட்டு வங்கியில் நாணயக்கொள்கை குழுவொன்றினை உருவாக்குவதன் மூலம் நாணயக்கொள்கைப் பிரச்சனைகள் மீதான கொள்கைக் கலந்துரையாடல்களை விரிவாக்குவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது.

நடுத்தரகால மற்றும் நீண்டகால பணவீக்க இலக்கிடலுக்கு நகருவதற்காக விலை அசைவுகளை மிக அருகிலிருந்து கவனிக்கும் நோக்கில் இலங்கை மத்திய வங்கி பணவீக்க இலக்கிடல் குழு ஒன்றை நிறுவியதுடன் தலைப்புப் "பணவீக்க" நடத்தையையும் அடிப்படைப் பணவீக்க சம்பந்தப்பட்ட ஏதுக்காரணிகளையும் பகுப்பாய்வு செய்வதற்கான கருமங்களை அது தொடங்கியது.

வங்கிகளுக்கிடையிலான திரவநிலைமைகள் பாரிய பற்றாக்குறையிலிருந்து 2001இல் சிறிதளவு மிகைக்கு நேர் மாற்றமடைந்தது. மத்திய வங்கியிலிருந்து வர்த்தக வங்கிகளினால் செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவுகள் வெளிநாட்டு அரச படுகடனின் தீர்ப்பனவு, வங்கித்தொழில் முறையிலிருந்து அரசின் பாரிய கடன்பாடுகள் என்பன 2000 இறுதியில் ஏறத்தாழ ரூ.30 பில்லியன் கொண்ட திரவப் பற்றாக்குறையை விளைவித்ததுடன் இது 2001 இல் தொடக்கப்பகுதி வரை தொடர்ந்தது. வர்த்தக வங்கித்தொழில் முறை நேர்மாற்று மீள்கொள்வனவு முறையின் முறையூடாக சுழலும் அடிப்படையில் திரவப்பற்றாக்குறையை ஈடுசெய்தன. எனினும் சந்தையிலிருந்து வெளிநாட்டு நாணயங்களைக் (ஐ.அ.டொலர் 126 மில்லியன் ஏறத்தாழ ரூ.11.3 பில்லியனுக்கு சமமானது) கொள்வனவு செய்தமையூடாக மத்திய வங்கி ரூபாத் திரவத்தன்மையினை உள்ளீடு செய்தமை இலங்கை அபிவிருத்தி முறிகளின் டொலர் தொகையை (ஐ.அ.டொலர் 158.5 மில்லியன்) அதாவது ரூ.14.3 மில்லியன்) கொள்வனவு செய்தமை, அரசிடமிருந்தான தனியார் மயமாக்கப் பெறுகைகள் ஐ.அ.டொலர் 90 மில்லியன் அதாவது ரூ.8.1 பில்லியன்) என்பன உள்நாட்டுச் சந்தையின் திரவத் தன்மையினை அதிகரித்தன. நியதி ஒதுக்குத் தேவைப்பாடு குறைக்கப்பட்டமையும், மத்திய வங்கியில் வர்த்தக வங்கிகள் வைத்திருக்கவேண்டுமெனத் தேவைப்படுத்திய வைப்புக்களை ஏறத்தாழ ரூ.3.7 பில்லியனால் குறைத்தமையின் மூலம் திரவத்தன்மையை மேம்படுத்த உதவின. இத் திரவத்தன்மை உள்ளீடுகள், வெளிநாட்டு அரச படுகடன் மீள்கொடுப்பனவுகளினால் ஏற்பட்ட திரவத்தன்மைக் குறைப்பின் தாக்கத்தினை எதிரீடுசெய்த பின்னர், சந்தைத் திரவத்தன்மையினை அதிகரித்து பற்றாக்குறையினை 2001ஆம் ஆண்டு இறுதியில் ஏறத்தாழ ரூ.1 பில்லியன் கொண்ட மிகைக்கு மாற்றியது.

**பணநிரம்பல்**

அரசதுறைக் கடன்பாடுகளில் கடுமையான அதிகரிப்புக் காணப்பட்டபோதும், 2001இல் நாணய விரிவாக்கம் ஏறத்தாழ 13 சதவீதத்தில் உறுதியாகக் காணப்பட்டமைக்கு தனியார்துறைக்கான கொடுகடன் விரிவாக்கம் மிதமாகக் காணப்பட்டமையும், வருடாந்த நாணய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவாக இருந்தமையும் காரணங்களாகும். இதன் மூலம், விரிந்த பணநிரம்பலிலும் ($M_2b$) அதேபோன்று ஒதுக்கு நாணய விரிவாக்கத்திலும் ஏற்பட்ட பொதுவான வளர்ச்சி ஆரம்ப எறிவுகளுடன் ஒத்துக்கொள்வதாக இருந்தன. எனினும், நாணய வளர்ச்சிக்கான ஏதுக்காரணிகளின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றமடைந்தன. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ரூ.7.5 பில்லியன் கொண்ட அதிகரிப்புக்கள் பெறப்பட்டமை ரூ.32.4 பில்லியன் கொண்ட தனியார்துறைக் கொடுகடன் என்பன 2001ஆம் ஆண்டிற்கான நாணய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட முறையே ரூ.62.3 பில்லியன் மற்றும் ரூ.35.4 பில்லியன் கொண்ட தொடர்பான பெறுமதிகளுடன் பார்க்கையில் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாக இருந்தவேளையில், அரசதுறைக் கொடுகடனின் ரூ.56.7 பில்லியன் கொண்ட உண்மையான அதிகரிப்பு எறிவு செய்யப்பட்ட மீள்கொடுப்பனவான ரூ.22 பில்லியனிலும் பார்க்க மிக உயர்வாக இருந்தது.

2001இல் குறுகிய பணநிரம்பலின் ($M_1$)விரிவாக்கம் 2000ஆம் ஆண்டின் 9.1 சதவீதத்திலிருந்து 3.2

**அட்டவணை 1.7**
**நிதியியல் புள்ளி விபரங்கள்**

| விடயம் | 2001 முடிவில் ரூ.பில் | மாற்றம் 2000 தொகை ரூ.பில் | % | 2001 தொகை ரூ.பில் | % |
|---|---|---|---|---|---|
| நாணயக் கூட்டுக்கள் | | | | | |
| குறுகிய பணநிரம்பல் ($M_1$) | 122.2 | 9.9 | 9.1 | 3.7 | 3.2 |
| விரிந்த பணநிரம்பல் ($M_2$) | 450.7 | 46.6 | 13.0 | 46.0 | 11.4 |
| திரட்டப்பட்டவிரிந்த பணநிரம்பல் ($M_{2b}$) | 549.1 | 55.1 | 12.9 | 65.7 | 13.6 |
| ஏதுக்காரணிகள் (அ) | | | | | |
| உள்நாட்டுக் கொடுகடன் | 639.0 | 117.0 | 27.0 | 89.1 | 16.2 |
| அரசிற்கு (தேறிய) | 201.4 | 53.4 | 56.8 | 54.1 | 36.8 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 40.8 | 25.2 | 193.2 | 2.5 | 6.7 |
| தனியார் துறைக்கு | 396.8 | 38.4 | 11.8 | 32.4 | 8.9 |
| வெளிநாட்டுச் சொத்துக்கள் (தேறிய) | 77.1 | -32.6 | -31.9 | 7.6 | 10.9 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -166.9 | -24.9 | -27.5 | -30.9 | -22.7 |
| ஒதுக்குப் பணம் | 112.5 | 4.7 | 4.7 | 7.4 | 7.0 |
| அரசிற்கு (தேறிய) | 84.5 | 44.8 | 96.1 | -7.1 | -7.8 |
| வர்த்தக வங்கிகள் (தேறிய) | 0.2 | -0.2 | -30.5 | -0.3 | -60.0 |
| வெளிநாட்டு சொத்துக்கள் (தேறிய) | 84.3 | -31.4 | -35.2 | 26.4 | 45.6 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -56.5 | -8.6 | -23.7 | -11.6 | -25.8 |
| | **2000 முடிவில்** | **2001 முடிவில்** | | | |
| **வட்டி வீதங்கள் (ஆண்டு முடிவில்)** | | | | | |
| 3 மாத திறைசேரி உண்டியல்கள் | 17.77 | 12.92 | | | |
| வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி முதற் கடன் வழங்கல்(%) | 21.46 | 14.31 | | | |
| பங்குச் சந்தை | | | | | |
| அனைத்து பங்குவிலைச் சுட்டெண் (1985=100) | 447.6 | 621.0 | | | |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ.பில்லியன்) | 88.8 | 124.0 | | | |

(அ) ($M_2$) உடன் தொடர்பானது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

சதவீதத்திற்கு கடுமையாக வீழ்ச்சியடைந்தது. இதற்கு பரந்தளவிலான பொருளாதாரச் சுருக்கத்தின் விளைவாக பணத்திற்கு குறைந்தளவு கொடுக்கல் வாங்கல் கேள்விகள் காணப்பட்டமையும் வட்டி உழைக்காத நிதியியல் சொத்துக்களை வைத்திருப்பதனால் ஏற்படும் உயர்ந்த அமயச் செலவினைக் கருத்திற்கொண்டு வட்டி உழைக்கும் நாணயச் சொத்துக்களுக்கு மாறிக்கொண்டமையும் பெருமளவிற்குக் காரணங்களாகும். மேலும், நிதியியல் கொடுக்கல் வாங்கல்களில் தொழில்நுட்பம் சார்ந்த தன்மைகளைப் பயன்படுத்துவது அதிகரித்து வருவதும் அதன் விளைவாக தன்னியக்க கூற்றுப் பொறிகளையும் கொடுகடன் அட்டைகளையும் பயன்படுத்துவது அதிகரித்து வருவதும் குறுகிய பணத்திற்கான கேள்வியைக் குறைத்துவிட்டது. அதேவேளை, நிதியியல் அளவீட்டினை அடிப்படையாகக் கொண்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்குப் புறம்பாக, உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் மற்றும் நிதிக்கம்பனிகளினதும் தொழிற்பாடுகளை உள்ளடக்கிய விரிந்த பணநிரம்பல் 2000ஆம் ஆண்டு இறுதியின் 12.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2001 இறுதியில் 13.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. ஒதுக்குப் பணவிரிவாக்கம், அதிகரித்த பணப்பெருக்கி இரண்டும் 2001ஆம் ஆண்டின் நாணய விரிவாக்கத்திற்குப் பங்களித்தன. ஒதுக்குப்பணம் 2000ஆம் ஆண்டின் ரூ.4.7 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ.7.4 பில்லியனால் அதிகரித்து, வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்புடன் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் முன்னைய இரு ஆண்டுகளிலும் காணப்பட்ட நிகழ்வுகளுக்கு மாறாக மேம்படுகின்றமையையும் பிரதிபலித்தன. உண்மையில், நியதி ஒதுக்குத் தேவைப்பாடு குறைக்கப்பட்டதன் காரணமாக மேலும் 3.7 பில்லியன் உயர்வலு நாணயம் சந்தைக்கு கிடைக்கச் செய்யப்பட்டது. இது முன்னர் மத்திய வங்கியினால் நீக்கப்பட்டிருந்தது. அதேவேளை, நாணயப்பெருக்கி 2000ஆம் ஆண்டின் 4.60 இலிருந்து 2001இல் உயர்வடைந்தது. நியதி ஒதுக்கு தேவைப்பாடு 1 சதவீதப் புள்ளியினால் குறைக்கப்பட்டதன் தாக்கத்தினை பிரதிபலிக்க வைத்திருப்பதன் மூலம் நாணய விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி நாணயத்தினை

வைத்திருப்பதன் உயர்ந்த அமையச் செலவினைப் பிரதிபலித்தது. அதேவேளை நாணயச் சுழற்சி வேகம் 2.79 இலிருந்து 2.76 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.. பொதுமக்களின் பணவீக்க எதிர்பார்ப்புக்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை எடுத்துக்காட்டாதபோதும் செலவு அதிகரிப்புக் காரணிகள் 2001இல் பணவீக்க வீதத்தினை அதிகரித்தன.

நாணய விரிவாக்கத்திற்கான முக்கிய பங்களிப்பு (86 சதவீதம்) தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் இருந்து பெறப்பட்ட அரசதுறைக்கான பாரிய கொடுகடன் விரிவாக்கலைப் பிரதிபலித்ததுடன் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பானது 2001இல் ஏறத்தாழ 11 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு வகைகூறின. வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ.7.5 பில்லியனால் அதிகரித்தமையானது மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ.29.3 பில்லியன் அதிகரித்தமையினதும் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ.21.8 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமையினதும் இணைந்த விளைவாக இருந்ததுடன், அரசிற்கு வழங்கப்பட்ட டொலரில் குறித்துரைக்கப்பட்ட கடன்களைப் பெருமளவிற்குப் பிரதிபலித்தது.

அரசிற்கான உயர்ந்த கொடுகடன் விரிவாக்கமும் (36.8 சதவீதம்), அரசகூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறைக்கான மிதமான கொடுகடன் விரிவாக்கம் (முறையே 6.7 சதவீதம் மற்றும் 8.9 சதவீதம்), 16.2 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தினை ஏற்படுத்தின. 2001ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட ரூ.17 பில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் அரசதுறை ரூ.56.7 பில்லியனை அதாவது 2001ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் 64 சதவீதத்தினை ஈர்த்துக்கொண்டது.

அதிகரித்த வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை, தனியார் மயமாக்கல் பெறுகைகளிலும் வெளிநாட்டு நிதியிலும் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சியுடன் இணைந்து, எதிர்பார்க்கப்பட்ட அரச மீள்கொடுப்பனவுகளுக்கு மாறாக தேறிய மேலதிக உள்நாட்டு வங்கிக் கடன்பாடுகளை ஏற்படுத்தியதன் மூலம் நாணய முகாமைத்துவத்திற்கு பெரும் இடர்ப்பாடுகளைத் தோற்றுவித்தது. அதேவேளை ரூ.7 பில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்ட அரசகூட்டுத்தாபனங்களிலிருந்து வங்கித்தொழில் துறைக்கு எதிர்பார்க்கப்பட்ட மீள்கொடுப்பனவு ரூ.2.6 பில்லியன் கொண்ட புதிய மேலதிக கடன்பாடுகளுக்கு மாற்றமடைந்தமைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காசுப்பாய்ச்சலில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் காணப்படாமை, தொழிற்பாட்டு செலவையாவது மீட்டுக்கொள்ளக் கூடியளவிற்கு மின்வலுக் கட்டணங்களை சீராக்கம் செய்வதில் காணப்பட்ட தாமதங்கள், இலங்கை மின்சபையின் இழப்புக்களை அதிகரித்தமை, கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் அதிகரித்த கடன்பாடு என்பன காரணங்களாக அமைந்தன. அரச கூட்டுத்தாபனங்களுக்கான வெளிநின்ற வங்கிக் கொடுகடனில் இம் மூன்று முக்கிய அரசதொழில் முயற்சிகளும் 91 சதவீதத்திற்கு வகைகூறின. 2001ஆம் ஆண்டு இறுதியில் இத் தொகை ரூ.40.8 பில்லியனாக விளங்கி இத் தொழில் முயற்சிகளில் வலுவான மீளமைத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டின.


தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி மிதமாக அமைந்து, பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட பின்னடைவின் தாக்கத்தையும், வாணிப நம்பிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியையும், உயர்ந்த உண்மையான கடன்வழங்கல் வீதத்தினையும் வர்த்தக வங்கிகள் அவற்றின் சொத்துப்பட்டியலுள்ள உயர்ந்தளவு தொழிற்படா கடன்களில் காரணமாக அவை இடர்நேர் முகாமைத்துவத்தினை எச்சரிக்கையுடன் அணுகியமை என்பனவற்றை பிரதிபலித்தது. தனியார்துறைக்கான ஆண்டுக் கொடுகடன் விரிவாக்கம் 1998இன் 12 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 11.8 சதவீதத்திற்கும், 2001 இறுதியில் மேலும் 8.9 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. உண்மையான நியதிகளில் தனியார்துறைக்கான கொடுகடன் 2000ஆம் ஆண்டின் ரூ.38 பில்லியனுக்கு எதிராக 2001இல் ரூ.32 பில்லியனால் அதிகரித்தது. பொதுவாக பார்க்கையில் நிதியியல் முறையினால் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட மொத்த கொடுகடன் வசதிகள் 2001இல் ரூ.40 பில்லியனால் அல்லது 8.3 சதவீதத்தினால் அதிகரித்தன. தனியார்துறைக்கான நோக்க அடிப்படையிலான கொடுகடன் விரிவாக்கமானது நுகர்வு, வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி மற்றும் பணிகளுக்கான கொடுகடன் வளர்ச்சியடைந்ததைக் காட்டிய வேளையில் கைத்தொழில்கள், வர்த்தகம் மற்றும் வேளாண்மைத் துறைக்கான கொடுகடன் வீழ்ச்சியடைந்தது.

## வட்டி வீதங்கள்


வட்டி வீதங்கள் 2000ஆம் ஆண்டில் காணப்பட்ட உயர்ந்து சென்ற போக்கிற்கு மாறாக 2001இல் குறிப்பிடத்தக்களவிற்கு கீழ்நோக்கி குறைவடைந்தன. குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் விளைவு வளைகோடு கீழ்நோக்கிப் பெயர்ந்தது. இது கொள்கை வட்டி வீதங்களில் மேற்கொள்ளப்பட்ட கீழ்நோக்கிய சீரமைப்புக்கள், அதிகரித்த ரூபாத் திரவத்தன்மை மற்றும் பன்னாட்டு வட்டிவீதங்களில் குறைப்பு என்பனவற்றின் விளைவாகும்.

**வரைபடம் 1.8**
**நிதியியல் துறைக் குறிகாட்டிகள்**


**வரைபடம் 1.8.1**
**நாணயக் கூட்டுக்களின் விரிவு**




**வரைபடம் 1.8.2**
**வட்டி வீதங்கள்**




**வரைபடம் 1.8.3**
**பங்குச் சந்தைச் சுட்டெண்கள்**




நிதியியல் சந்தையில் மேம்பட்டு வரும் உறுதிப்பாடு மிதமான பணவீக்க அழுத்தம், மற்றும் வீழ்ச்சியடைந்து செல்லும் பன்னாட்டு வட்டி வீதங்கள் என்பனவற்றைத் தொடர்ந்து மத்திய வங்கி அதன் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தினை 900 அடிப்படைப் புள்ளிகளினாலும், மீள்கொள்வனவு வீதத்தினை 800 அடிப்படைப் புள்ளிகளினாலும் வங்கி வீதத்தினை 700 அடிப்படைப் புள்ளிகளினாலும் பல தடவைகளில் குறைத்தது. சந்தையில் ஏற்பட்ட திரவத்தன்மை அதிகரிப்புக்களினால் உதவியளிக்கப்பட்ட இக்குறைப்புக்கள் குறுங்கால சந்தை வட்டி வீதங்களில் மேலும் குறைப்புக்களை விளைவித்தன. வங்கிகளுக்கிடையிலான சராசரி அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் பாரிய குறைப்பினைப் பதிவுசெய்து 2000ஆம் ஆண்டு இறுதியின் 25.9 சதவீதத்திலிருந்து 2001இல் 12.7 சதவீதத்திற்கு அதாவது ஏறத்தாழ 1320 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தன. வர்த்தக வங்கிகளின் முதன்மைக் கடன்வழங்கல் வீதங்களும் சந்தை சார்ந்த அரச பிணையங்கள் மீதான விளைவுவீதங்களும் கொள்கை வீதங்களில் செய்யப்பட்ட குறைப்பிற்கு இணையாக ஏறத்தாழ 800-900 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தன. வர்த்தக வங்கிகளின் பொதுவான கடன்வழங்கல் வீதங்கள் குறைவான அளவிலும் மெதுவான வேகத்திலும் வீழ்ச்சியடைந்தமை உண்மை நியதிகளில் உயர்ந்த கடன்வழங்கல் வீதங்கள் காணப்படுவதற்கு காரணமாயின. வைப்பு வீதங்களிலும் சில குறைப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. இவ்வனைத்து மாற்றங்களையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் அரச பத்திரங்கள் மீதான விளைவு வளைகோடு கீழ்நோக்கிப் பெயர்ந்து, ஆண்டின் இறுதியில் மேல்நோக்கிச் சந்தை விளைவு வளைகோடு மீள உருவானது.

நாணய கொள்கை மாற்றங்களுக்குப் புறம்பாக, இறை வழிமுறைகள் அதாவது வங்கித்தொழில் மற்றும் நிதியியல் கருவிகளின் மீதான 1 சதவீதம் கொண்ட மொத்த புரள்வு வரி புறக்கீடு செய்யப்பட்டமை, தேசிய பாதுகாப்பு தீர்வை 7.5 சதவீதத்திலிருந்து 6.5 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டமை முத்திரைத்தீர்வை 2 சதவீதத்திலிருந்து 1 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டமை என்பன வர்த்தக வங்கிகளின் கடன்வழங்கல் செலவுகளைக் குறைக்கக் கூடிய ஓரளவு தாக்கத்தினைக் கொண்டிருந்தன. அதேவேளை, அரசதுறையின் உயர் மட்ட கடன்பாடுகள் சந்தைவீதங்களில் உண்மையில் ஏற்படவேண்டிய வீழ்ச்சிக்கு எதிராக பாரிய அளவிலும் விரைவாகவும் தொழிற்பட்டன.

கொள்கை சந்தை வட்டி வீதங்களிலும் வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதங்களிலும் பாரிய குறைப்புக்கள் காணப்பட்டபோதும் பொதுவான வட்டி வீதங்களில் காணப்பட்ட மெதுவான மற்றும் சிறிய சீராக்கங்கள், தொடர்ந்து காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டிவீத வீச்சுக்களுடன் சேர்ந்து நெகிழ்ச்சித்தன்மையற்ற பண்புகளையுடைய பெயரளவு சந்தை வட்டி வீதங்களைப் பிரதிபலித்தன. முதலாவது, சொத்துப்பட்டியலில் ஏறத்தாழ 17 சதவீதத்தினைக் கொண்டு ஒப்பீட்டுரீதியில் செயற்படாச் சொத்துக்கள் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டமையானது உயர்ந்த தொழிற்படாச் செலவுகளுடன் இணைந்து வங்கிகளின் கடன்வழங்கல் வீதங்களின் கீழ்நோக்கிய சீராக்கங்களில் தடைகளை ஏற்படுத்தின. இரண்டாவது, குடியிருப்பாளர்கள் நிலையான வீத வைப்புக்களுக்கு

முன்னுரிமையளித்தமையானது குறுங்காலத்தில் வட்டி வீதங்களைக் குறைப்பதற்கான வங்கிகளின் நெகிழ்ச்சித்தன்மையினைக் குறைத்து அவர்களின் சீராக்க வேகத்தினையும் குறைக்கிறது. மூன்றாவது, பொதுவாக குறைந்த வட்டி உயர்வுகளைக் கொண்ட தொடர்ச்சியான பாரிய அளவு சந்தைக் கடன்பாடுகள் தேவைப்படுவதும் கடன்வழங்கல் வீதங்களில் விரைவானதும் பாரியதுமான வீழ்ச்சிகளைத் தடைசெய்தன. மேலும், சந்தை எதிர்பார்ப்புக்கள் இறைத்திரட்சிகளை அறிவிப்பதற்கு குறைந்த உணர்வுகளைக் கொண்டிருந்ததுடன், உண்மையான அரசதுறைக் கடன்பாடுகள் ஆரம்ப இலக்குகளிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாக இருப்பதனால் அரசபடுகடன்பாட்டு இலக்குகள் வட்டி வீதங்களின் மீது அழுத்தத்தினை தோற்றுவிக்கின்றன. மத்திய வங்கி நியதி ஒதுக்கு வீதத்தினை தொடர்ச்சியாகக் குறைப்பதானது திறந்த சந்தை தொழிற்பாடுகளின் மீது கூடியளவு நம்பிக்கை கொள்ளச் செய்வதுடன். வட்டி வீத வீச்சின் உள்ளடக்கத்தில் கொள்கைத்தூண்டல் செலவுகளையும் குறைக்கிறது. மேலும், நிதிச்சந்தையில் போட்டித்தன்மையினை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய வங்கி நிறுவனரீதியான கருவிகள் மூலம் வட்டிவீத தகவல்களை வெளியிடத் தொடங்கியுள்ளது.

2000ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்த பங்குச்சந்தை நடவடிக்கை 2001ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு வரையிலும் தொடர்ந்தும் குறைவடைந்து காணப்பட்டு பொருளாதார நடவடிக்கைகளின் பின்னடைவு, நலிவுற்ற வாணிப நம்பிக்கை மற்றும் நலிவடைந்த வெளிநாட்டு முதலீட்டாளர் கேள்வி என்பனவற்றைப் பிரதிபலித்தது. 2001 ஏப்பிறல் தொடக்கம் கம்பனி வருமான வரியின் மீது விதிக்கப்பட்ட 20 சதவீத மேலதிக்கட்டணமும் இரண்டாம் காலப்பகுதியில் அவை வீழ்ச்சியடைந்து காணப்பட்டபோதும் தொடர்ந்து காணப்பட்ட உயர்ந்த வட்டிவீதங்கள் மற்றும் மூலதன சந்தைகளில் நிறுவன அமைப்பு முறையில் காணப்பட்ட நலிவுகள் என்பன பங்குச்சந்தை நடவடிக்கையில் காணப்பட்ட நலிவுற்ற செயலாற்றத்தினை ஏற்படுத்திய காரணிகளாக விளங்கின. அரசியல் மாற்றத்தினால் சந்தை எதிர்பார்ப்புக்கள் புதுப்பிக்கப்பட்டமை, வட்டி வீதங்களில் காணப்பட்ட கீழ்நோக்கிய அசைவுகளைத் தொடர்ந்து நிலையான வருமானப் பிணையங்கள் மீதான வருவாய் குறைவடைந்தமை என்பனவற்றின் காரணமாக இறுதிக் காலாண்டில் பங்குச்சந்தை நடவடிக்கையின் போக்கில் மாற்றமொன்று பதிவு செய்யப்பட்டது. அதேவேளை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை 2001 செத்தெம்பரில் "பங்குக்கடன்பாடும் கடன்வழங்கலும்" என்பதனை அறிமுகப்படுத்தியது. இது செயற்படாச் சொத்துக்களின் வர்த்தகத்தினைத் தூண்டும். மூன்று கம்பனிகள் கடனீட்டுப் பத்திரங்களை வழங்கியமையின் காரணமாக இவ்வாண்டில் கம்பனி முறிகளின் சந்தை மேலும் விரிவடைந்ததுடன் அக் கம்பனிகளிலொன்று பட்டியலிடலையும் பெற்றுக்கொண்டது. சந்தைக் கருவிகளினூடாக தனியார்துறை அதன் நீண்டகால மூலதனத் தேவைப்பாடுகளைத் திரட்டிக்கொள்ள இயலச் செய்வதற்கு உள்நாட்டு தனியார் படுகடன் சந்தையை அபிவிருத்தி செய்வதும் வினைத்திறன் மிக்கதும் போட்டித்தன்மை கொண்டதுமான பங்குச்சந்தையை உருவாக்குவதும் இன்றியமையாததாகும். இதனைப் பொறுத்தவரை, தொடர்பான விளைவு வளைகோட்டினை நிறுவுதல் நிறுவனங்களுக்கும் அதேபோன்று கருவிகளுக்கும் கொடுகடன் தரமிடல் பெற்றுக்கொள்வது பிரபலமடைந்து வருதல் மற்றும் சந்தை அபிவிருத்திகளைத் கூடுதலாகத் தூண்டுவதற்கு மூலதனச் சந்தையின் நிறுவனரீதியான அமைப்பினை மீள்ஒழுங்கமைத்தல் என்பன அவசியமாகவுள்ளன.

## 1.11 அமைப்பியல் சீர்திருத்தம்

முன்னேற்றம் மெதுவாக இருந்தபோதும் அமைப்பியல் சீர்திருத்தங்கள் 2001இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. கல்வி, வரிநிருவாகம் தேவையற்ற அரசதுறை நிறுவனங்களை மூடிவிடுதல். அரச கூட்டுத்தாபனங்களினால் வழங்கப்படும் உற்பத்திப் பொருட்களுக்கும் பணிகளுக்குமான விலைகள் மற்றும் கட்டணங்களின் சீராக்கம் என்பனவற்றுக்கு பெருமளவு கவனம் செலுத்தப்பட்டது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இழப்புக்கள் மற்றும் உயர் படுகடன் சுமை என்பனவற்றினைக் கருத்திற்கொண்டு பெற்றோலிய உற்பத்திகளின் உள்ளூர் விலைகள் 2001 ஏப்பிறலில் உயர்த்தப்பட்டதன் காரணமாக டீசல், மண்ணெண்ணெய் மற்றும் உலை எண்ணெய்யின் விலைகள் அதிகரித்தபோதும், மசகெண்ணெய்யின் விலைகள் வீழ்ச்சியடைந்தமையைத் தொடர்ந்து 2001 இறுதியில் மண்ணெண்ணெய் மற்றும் டீசலின் விலைகள் குறைக்கப்பட்டன. அவ்வவ்போது செய்யப்படுகின்ற விலை மாற்றங்களையும் ஒன்றுசேர்ந்த இழப்புக்களையும் தடுப்பதற்காக எப்பொழுதோ மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய தன்னியக்கப் பெற்றோலிய விலைகள் 2001 இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்டமையானது பெற்றோலிய இறக்குமதி விலைகளில் மிகச் சிரமமாகச் செய்யப்படும் மாற்றங்களை உள்நாட்டுச் சந்தையில் சுமத்துவதற்கு அனுமதிக்கிறது. எனினும் கொண்டுசெல் செலவுகளையும் சந்தை விலைகளைப் பிரதிபலிப்பதற்கு அனுமதித்தாலொழிய பெற்றோல் விலை மாற்றங்களின் முழுத்தாக்கத்தினையும் உணரமுடியாது. இலங்கை மின்சபை 2001 மார்ச்சில் 25 சதவீத எரிபொருள் சீராக்க கட்டணத்தினை விதித்தபோதும் இது அதிகரித்த செலவினை ஈடுசெய்வதற்கும் போதுமானதாக இருக்கவில்லை. இரு அரச வங்கிகளினதும் பணிப்பாளர்

சபைகளுக்கு அனுபவமுள்ள தனியார்துறை உறுப்பினர்களையும் மற்றும் முக்கியமான முகாமைத்துவ பதவிகளிலுள்ள அனுபவமுள்ளவர்களையும் புதிதாக சேர்த்துக் கொள்வதன் மூலம் அவற்றை மாற்றியமைப்பதன் மூலம் அவ்வங்கிகளை சீர்திருத்துவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள் ஏற்கனவே சாதகமான பெறுபேறுகளை காட்டியுள்ளன. 2001 வரவு செலவுத் திட்டத்தில் பட்டியலிடப்பட்ட 35 அரசதுறை நிறுவனங்களில் 28 நிறுவனங்களை அரசாங்கம் மூடிவிட்டது. மேலும் 51 சதவீதப் பங்குகளை விற்பனை செய்தமையின் மூலம் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கப்பட்டமை அரச உடமையை விற்பனை செய்தமையின் மூலம் பிறிமா மாவாலை உடன்படிக்கை கட்டுதொழிற்படுத்து மாற்றல் என்ற நிலைக்கு மாற்றல் செய்யப்பட்டமை, மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை என்பன பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கான மூலவளங்களை வழங்கின. அதேவேளை கட்டுமானம், நிதியியல் மற்றும் பொதுவசதிகள் ஆகிய துறைகளில் மேலும் வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதனை இயலச்செய்வதற்காக நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் மீது இன்னமும் எஞ்சியுள்ள கட்டுப்பாடுகளை அகற்றிவிடுமாறு மத்திய வங்கி அமைச்சரவைக்கு விதந்துரைத்தது. பெறுமான விகித தீர்வைகளுக்குப் பதிலாக உயர்ந்த குறித்துரைக்கப்பட்ட இறக்குமதித்தீர்வை வீதங்களை விதித்தமையும் அவ்வப்போதைய அடிப்படையில் அமைந்த இறக்குமதி உரிமங்கள் மீதான கட்டணங்களும் வேளாண்மைத்துறையிலும் அதேபோன்று அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு விலைகளிலும் மோசமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன.

எனினும், அமைப்பு சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் இன்னும் கூடுதலான வேகத்தில் தொடரப்பட வேண்டும். குறிப்பாக, அரசதுறை நிதியியல் நிறுவனங்களினை வலுப்படுத்துதல், தொழிற்சந்தையின் நெகிழ்ச்சித் தன்மையினை மேம்படுத்துதல், காணிப்பதிவுகளை மேம்படுத்துதல், இலங்கை மின்சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பனவற்றை மீளமைத்தல், துறைமுகங்களின் வினைத்திறனை மேம்படுத்தல் அரசதுறைக் கூட்டுத்தாபனங்களில் தன்னியக்க மற்றும் வெளிப்படையான விலை சீராக்க முறைகளை அறிமுகப்படுத்தல், புகைவண்டி மற்றும் அஞ்சல் பணிகளை வர்த்தக மயப்படுத்தல், ஓய்வூதிய சீர்திருத்தங்கள், தனியார் ஓய்வூதிய தொழிற்பாட்டிற்கு வசதியளித்தல், குடியியல் பணி சீர்திருத்தங்கள் என்பனவற்றுடன் தொடர்பான சீர்திருத்தங்களை மேலும் தாமதமின்றி நடைமுறைப்படுத்துவது அவசியமானதாகும். இதேபோன்று பொருளாதாரத்தின் வினைத்திறனையும் நெகிழ்ச்சித்தன்மையினையும் மேம்படுத்தும் பொருட்டு நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட நிறுவனரீதியான சீர்திருத்தங்களையும் கட்டுப்பாடுகளை அகற்றல்/மீள் ஒழுங்கு விதிப்படுத்தல் என்பனவற்றை விரைவுபடுத்துவதிலும் கூடியளவு கவனம் செலுத்தப்படவேண்டும்.

## 1.12 2002ஆம் ஆண்டுக்கான பொருளாதார தோற்றப்பாடும் நடுத்தரகால வாய்ப்புக்களும்

### பொதுநோக்கு

2002ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வாய்ப்புக்கள் வெளிநாட்டுச் சூழல், வானிலை நிலைமைகள், பேரண்டப் பொருளாதார கொள்கைகள், பொருளாதார சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல், அரசியல் நிலைமைகள் என்பனவற்றில் தங்கியுள்ளன. எனவே முதல் இரண்டு காரணிகளைத் தவிர ஏனைய அனைத்தும் கொள்கை வகுப்பாளர்களினதும் பொதுமக்களினதும் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளன. ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பொதுவான வானிலை நிலைமைகள் மேம்படும் எனவும் சருவதேச பொருளாதார சூழலில் மேம்பாடு ஒன்று காணப்படும் எனவும் ஊகித்துக்கொண்டாலும் கூட பேரண்டப் பொருளாதார சீர்திருத்தங்கள், முக்கிய பொருளாதார மற்றும் அரசியல் விடயங்களில் தேசிய ஒருமைப்பாட்டினை விருத்திசெய்தல், சருவதேச சமூகத்திலிருந்து உதவிகளுக்கான உத்தரவாதம் மற்றும் சமாதான செயல்முறையில் முன்னேற்றம் என்பன 2002ஆம் ஆண்டில் விரைந்த பொருளாதார மீட்சியை உறுதி செய்துகொள்ளுவதற்கும் முதலீட்டாளர் நம்பகத்தன்மையினை வலுப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தின் ஆற்றலையும் செயல்திறனையும் மேம்படுத்துவதற்காக நடுத்தர காலத்தில் தாக்குப்பிடிக்கக்கூடிய அதிஉயர் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படையை வகுப்பதற்கும் அத்தியவசியமானவையாகும்.

அழிவை ஏற்படுத்தும் செலவினை அரைவாசிக்குக் குறைப்பதற்கும் சாதகமான நிலைமையொன்றினை உருவாக்கி அளவிடமுடியாத மானிட அவலங்களை தவிர்ப்பதற்குமாக தற்போதைய இன முரண்பாட்டுக்கு பேச்சுவார்த்தைகளின் மூலம் நிரந்தர தீர்வு ஒன்றைக் காணுவதானது பொருளாதார வாய்ப்புக்களை கணிசமாக மேம்படுத்தும். எனவே இயலுமான வகையில் இணக்கமொன்றின் மூலம் முரண்பாட்டுக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய இணக்கப்பாட்டினை விருத்தி செய்வதற்கு அரசியல் உறுதிப்பாடு அத்தியவசியமாகும்.

அதேபோன்று குறுகிய காலத்தில் கடினமானது எனினும் அத்தியாவசியமான பேரண்டப் பொருளாதார

சீராக்கங்களையும் துணிகர பொருளாதார சீர்திருத்தங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கும் தேசிய இணக்கத்தினை கட்டியெழுப்புவதும் ஒளிவுமறைவுவற்ற தன்மையினையும் வகைகூறலையும் மேம்படுத்துவதும் மிக முக்கியமானதாகும்.

## 2002ஆம் ஆண்டின் உலக பொருளாதார வாய்ப்புக்கள்

2001ஆம் ஆண்டில் உலக பொருளாதரத்தின் எதிர்பார்த்ததை விடவும் கூடுதலான மெதுவடைவின் மத்தியிலும் 2003ஆம் ஆண்டுக்கான உலக பொருளாதார வாய்ப்புக்கள் பெருமளவு சாதகமானதாக மாறியுள்ளதோடு வர்த்தகத்தில் தங்கியிருக்கும் நாடுகளுக்கு சாதகமான வெளிநாட்டுச் சூழல் ஒன்றையும் உருவாக்கியுள்ளது. 2001ஆம் ஆண்டில் கடுமையாக வீழ்ச்சியடைந்த உலக பொருளாதார வளர்ச்சி 2002ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மீட்சிபெறும் என எதிர்பார்க்கப் படுவதோடு 2003ஆம் ஆண்டில் மேலும் மேம்பாடடையும். பல சுற்றுக்களில் வட்டிவீதக் குறைப்பு மற்றும் அரசிறைத் தூண்டல் வழிமுறைகள் என்பனவற்றையும் உள்ளடக்கி முக்கிய பொருளாதாரங்களில் குறிப்பாக ஐக்கிய அமெரிக்க நாடுகளிலான தீவிர பேரண்டப் பொருளாதார கொள்கை பதிலிறுப்புக்கள் மெதுவடைதலைக் கட்டுப்படுத்தியுள்ளதாகத் தென்படுகின்றது. 2001ஆம் ஆண்டின் இறுதியளவில் நுகர்வோர் மற்றும் வாணிப நம்பகத்தன்மை மேம்பாடடைந்தமையும் நிச்சயமற்ற தன்மைகள் இலகுபடுத்தப்பட்டமையுமே இதற்கான காரணமாகும். உலக மந்த நிலையிலிருந்து வெளியேறுவதற்கான அதிகரித்த சமிக்ஞைகள் பெரும்பாலான கைத்தொழில் நாடுகளின் பெரும்பாலான முக்கிய சுட்டெண்களில் பிரதிபலிக்கப்பட்டன. மேம்பட்ட பொருளாதாரங்கள் பலவற்றில் கைத்தொழில் உற்பத்தி நேர்மாற்றமொன்றைப் பிரதிபலித்த வேளையில் சருவதேச வர்த்தகப் பாய்ச்சல்கள் உறுதியடைந்தள்ளன. உடனடியாக எதிர்காலத்தில் நேர்மாற்றமொன்றுக்கான வாய்ப்புக்களுடன் தகவல் தொழில்நுட்ப துறை மீட்சி பெறுவதற்கான வாய்ப்புக்கள் தென்படுகின்றன. பின்னையது குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறையில் பெருமளவு தங்கியுள்ள கிழக்காசியாவின் தோற்றம்பெறும் சந்தைகளில் பொருளாதார நடவடிக்கையைத் தூண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. முதிர்வடைந்த மற்றும் தோற்றம் பெறும் சந்தைகள் ஆகிய இரண்டிலும் நிதியியல் சந்தைகளில் குறைவடைந்த இடர்நேர்வு வீச்சுக்களுடன் பொருளாார மீட்சிக்கான குறிகாட்டிகள் தென்படுகின்றன. நடைமுறை மட்டத்தில் எண்ணெய் விலைகள் உறுதியடையும் என்ற எதிர்பார்ப்பும் உலக பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சிக்கு போதுமான ஆதரவினை வழங்கும்.

இந்தப் பின்னணிக்கெதிராக 2002ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உலக பொருளாதாரம் மீட்சியடையும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டில் 2.8 சதவீதத்தில் உலக வெளியீடு வளர்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேம்பட்ட பொருளாதாரங்கள் 1.7 சதவீதத்தில் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படும் வேளையில் வளர்முக நாடுகளின் பொருளாதாரம் 4.3 சதவீதத்தினால் வளர்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 2001ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 4 சதவீத வளர்ச்சியை விட சிறிதளவான அதிகரிப்பொன்றாகும். பொருட்பட்டியலில் உள்ள பொருட்கள் தீர்ந்துவிட்டமை, உள்நாட்டுக் கேள்வியில் அதிகரிப்பு மற்றும் 2001ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசிறைக் தூண்டல்கள் ஆகியவற்றின் காரணமாக ஐக்கிய அமெரிக்காவில் உறுதியான நேர்மாற்றமொன்றினால் கைத்தொழில் நாடுகளின் பொருளாதார மீட்சி வழிநடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மிகப் பிந்திய எதிர்வு கூறல்களின்படி ஐக்கிய அமெரிக்கப் பொருளாதாரம் 2002ஆம் ஆண்டில் 2.3 சதவீதத்தினாலும் 2003ஆம் ஆண்டில் 2.8 சதவீதத் தினாலும் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப படுகின்றது. இதேவேளையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதார வளர்ச்சி 2002ஆம் ஆண்டின் 1.4 சதவீதத்திலிருந்து 2003ஆம் ஆண்டில் 2.9 சதவீதத்திற்கு மேம்பாடடையும் என எறிவு செய்யப்பட்டுள்ள வேளையில் யப்பானின் பொருளாதாரச் சுருக்கம் (-1.0 சதவீதம்) 2003ஆம் ஆண்டில் 0.8 சதவீத உறுதியான வளர்ச்சி வீதத்திற்கு நேர்மாற்றம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி இலங்கையின் முக்கிய ஏற்றுமதிச் சந்தைகள் 2002ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மேம்பாடடையும் எனவும் 2003ஆம் ஆண்டில் மேலும் வலுவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தாழ்ந்த எண்ணெய் விலைகளும் உற்பத்தியும் நாணயங்களின் உண்மைப் பெறுமான அதிகரிப்பின் காலம்கடந்த தாக்கம் மற்றும் அமைப்புச் சீர்திருத்தங்களின் தாமதம் போன்ற பல காரணங்களினால் மாற்றமடைந்துவரும் நாடுகள் 2002ஆம் ஆண்டில் 5.0 சதவீதத்திலிருந்து 3.9 சதவீதத்திற்கு மெதுவடையும் எனவும் 2003ஆம் ஆண்டில் 4.4 சதவீதத்திற்கு மட்டுமே மீட்சிபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் தொடர்ச்சியான தாக்குபிடிக்கும் ஆற்றல் மற்றும் ஏசியான்-4 நாடுகளின் பகுதியளவான மீட்சி என்பனவற்றைப் பிரதிபலிக்கும்

வகையில் ஆசியாவின் வளர்முக நாடுகள் 2002ஆம் ஆண்டில் 5.9 சதவீதத்தினையும் 2003ஆம் ஆண்டில் 6.4 சதவீதத்தினாலும் மீட்சிபெறும் எதிர்பார்க்கப் படுகிறது. தகவல் தொழில்நுட்பத்துறையில் எதிர்பார்க்கப்படும் மீட்சியுடனும் அதிகரித்த உலக கேள்வியுடனும் புதிய கைத்தொழில் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 2001ஆம் ஆண்டின் 0.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2002ஆம் ஆண்டில் 3.6 சதவீதத்தினாலும், 2003ஆம் ஆண்டில் 5.1 சதவீதத்தினாலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக கேள்வியில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடு ஒன்றினைப் பிரதிபலிக்கும் வகையில் 2001ஆம் ஆண்டில் கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்த பொருட்கள் பணிகளின் சருவதேச வர்த்தகம் வர்த்தக அளவுகள் 2002ஆம் ஆண்டில் பகுதியளவிலும் 2003ஆம் ஆண்டில் முறையே 2.5 சதவீதத்தினாலும் 5.6 சதவீதத்தினாலும் கணிசமாக மீட்சிபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வர்த்தக விரிவாக்கத்திலிருந்து மேம்பட்ட பொருளாதாரங்களும் வளர்முக நாடுகளும் 2002ஆம் ஆண்டில் நன்மையடையும் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், இப்பிராந்தியத்தில் காணப்படும் தாழ்ந்த கேள்வியின் காரணமாக மாற்றமடைந்து வரும் நாடுகளின் வர்த்தகம் மெதுவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2002ஆம் ஆண்டில் அனைத்துப் பிராந்தியங்களிலும் நுகர்வோர் பணவீக்கம் தாழ்வாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பண்டங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் வர்த்தக மாற்று வீதத்தினை மேம்படுத்தும் வகையில் எரிபொருள் அல்லா பண்டங்களின் விலைகள் 2002ஆம் ஆண்டிலும் 2003ஆம் ஆண்டிலும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பீப்பாய் ஒன்று ஏறத்தாழ ஐ.அ.டொலர் 20இல்உறுதியடைந்த எண்ணெய் விலைகள் எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு நன்மைபயக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் 2002ஆம் ஆண்டு மாச்சு மாதத்தில் அவதானிக்கப்பட்டவாறு ஏதேனும் கணிசமான அதிகரிப்பானது எண்ணெய் இறக்குமதி செய்யும் வளர்முக நாடுகளுக்கு பிரச்சனைகளை உருவாக்கும். மத்திய கிழக்கில் நிலவும் கொந்தளிப்பு எண்ணெய் விலைகளை உயர்வடையச் செய்து எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

பொருளாதார நடவடிக்கைகளின் மேம் பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதற்காக தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கைகளின் தேவையைக் குறித்துக்காட்டும் வகையில் நடுத்தரகால வட்டி வீதங்கள் தாழ்ந்த மட்டங்களிலேயே காணப்படும். இதன்படி இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்தின் 6 மாத சராசரி 2001ஆம் ஆண்டின் 3.7 சதவீதத்திலிருந்து 2002ஆம் ஆண்டில் 2.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர்களின் வெளிநாட்டுக் கடன்களின் குறிப்பிடத்தக்க பாகமொன்று சலுகைக் கடன்களாகக் காணப்படுகின்றமையினால் உலக வட்டி வீதங்களின் இந்த வீழ்ச்சியானது தோற்றம்பெறும் சந்தைப் பொருளாதாரங்கள் பலவற்றின் படுகடன் பணிக்கொடுப்பனவுச் சுமை இலகுபடுத்தப்படும் வெளிநாட்டுத்துறையில் எதிர்பார்க்கப்படும் இந்த மேம்பாடுகளுடன் தோற்றம் சந்தைப் பொருளாதாரங்களுக்கான தனியார் மூலதன உட்பாய்ச்சல்கள் 2001ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 49 பில்லியனிலிருந்து 2002ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 68 பில்லியனுக்கு கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக பொருளாதாரத்தின் மெதுவடையும் தன்மை மாற்றமடைவதற்கான அதிகரித்த குறிகாட்டிகள் காணப்படுகின்றபோதும் அதற்கான இடர்நேர்வுகள் பல காணப்படுகின்றன. தாழ்ந்த பணவீக்க நிலைமைகள், குறிப்பாக யப்பானின் பணத்தளர்வு நிலைமை பெரிதளவு கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகக் காணப்படுகின்றது. பெரும்பாலான முக்கிய கைத்தொழில் நாடுகளின் மிகை இயலளவு பெருமளவு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாக மாறியுள்ளதோடு பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுவதற்காக தொடர்ச்சியான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளை அது வேண்டி நிற்கின்றது. பல நாடுகளில் பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளின் நடைமுறைப்படுத்தலில் நெகிழ்ச்சித்தன்மை காணப்படாமையானது இந்தப் பொருளாதாரங்களின் மீட்சிக்கான காலத்தை நீடிக்கச்செய்யும் முக்கிய கைத்தொழில் நாடுகளின் வளர்ச்சிப்போக்கு, நடைமுறைக்கணக்கு நிலுவைகள் மற்றும் செலாவணிவீத நகர்வுகளில் கணிசமான சமமின்மைகள் காணப்படுகின்றமையானது வளர்முக நாடுகளின் நிதியியல் மற்றும் செலாவணிச் சந்தைகளின் உறுதிப்பாட்டினை மோசமாகப் பாதித்து வளர்ச்சிச் செயல்முறையினை தடைப்படுத்தலாம். 2002ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிலவிய அதே விலைகளில் எண்ணெய் விலைகள் உறுதியாக இருக்கும் என்ற ஊகத்திலேயே தற்போதைய எறிவுகள் தங்கியிருக்கும். மத்திய கிழக்கில் உறுதிப்பாடு இன்மையின் காரணமாக தற்போதைய விலைகள் ஏற்கனவே உயர்வாக உள்ளன. வெளிநாட்டு அதிர்ச்சிகளுக்கு உடனடியாக பதிலிறுப்பதற்கு கொள்கை நெகிழ்ச்சி அத்தியாவசியமாவதோடு அதன்மூலம் இலகுவில் பாதிப்படையும் தன்மையினைக் குறைவடையச் செய்யலாம். குறிப்பாக முக்கிய கைத்தொழில் நாடுகளில்

உலகளாவிய பேரண்டப் பொருளாதார சமமின்மைகளை குறைவடையச் செய்யும் நோக்கிலான கூட்டு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட கொள்கைகளிலேயே உலக பொருளாதார மீட்சியின் வேகம் தங்கியுள்ளது.

## 2002ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதார தோற்றப்பாடு

ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் வெளிநாட்டுச்சூழலும் வானிலை நிலைமைகளும் மேம்பாடடையும் என்ற எதிர்பார்ப்புக்களும், 2002ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் குறித்துக்காட்டப்பட்டவாறான பேரண்டப் பொருளாதர கொள்கைச் சீராக்கங்களும் பொருளாதாரச் சீர்திருத்தங்களும் 2001ஆம் ஆண்டின் தாழ்ந்த மட்டத்திலிருந்து பொருளாதாரத்தை மீட்சியடையச் செய்யும் என 2002ஆம் ஆண்டுக்கான தற்போதைய எறிவுகள் குறித்துக்காட்டுகின்றன. பெருமளவு தொழில்வாய்ப்புக்கள், தாழ்ந்த பணவீக்கம் மற்றும் அரசதுறைப் பற்றாக்குறையின் கடுமையான குறைப்புடன் அரசதுறைக்கான கடனின் கேள்வியில் ஏற்படும் வீழ்ச்சி என்பனவற்றுடன் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதன் மூலம் அதிஉயர் முதலீடுகளும் சேமிப்புக்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. சென்மதி நிலுவையிலும் மேம்பாடுகள் எறிவு செய்யப்பட்டுள்ளதோடு இது பொதுவான மிகையொன்றினைப் பதிவு செய்கின்றவேளையில் நாணய விரிவாக்கமானது தனியார்துறைக்கு பணவீக்கமல்லாத போதியளவு கடனை வழங்கக்கூடியதாக இருக்கும். எனினும் 2002ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தரப்பட்டிருக்கும் அரசிறை இலக்குகளை எய்துதல் மற்றும் ஏற்கனவே அறவிக்கப்பட்டுள்ளவாறு கொள்கைச் சீராக்கங்களையும் பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் நடைமுறைப்படுத்துதல் என்பன எதிர்பார்க்கப்படும் பொருளாதார மீட்சியினையும் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டுக்காக எறிவு செய்யப்பட்டுள்ள மேம்பாடு என்பனவற்றை பெற்றுக்கொள்வதை உறுதிசெய்வதற்கு அத்தியவசிய மானதாகும்.

உலக பொருளாதாரம் இயக்க விசையினைப் பெற்றுக்கொள்ளுதல், முதலீட்டாளர் நம்பிக்கை மேம்படுதல் மற்றும் வானிலை நிலைமைகள் மேம்பாடடைதல் என்பவற்றுடனான உறுதியான மேம்பாட்டுடன் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உண்மை வெளியீடு 3.7 சதவீதத்தினால் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அனைத்து முக்கிய துறைகளிலும் நேர்க்கணிய வளர்ச்சி வீதங்கள் பதிவு செய்யப்பட்டு பரவலான மீட்சியொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டின் முதலாம் அரைப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் மழைவீழ்ச்சி உச்சத்தைவிடக் குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயத்துறை 2001/2002ஆம் ஆண்டின் மோசமான மழைவீழ்ச்சியின் காலங்கடந்த தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு மேலும் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தெங்கு தவிர்ந்த ஏனைய முக்கிய பயிர்களின் உற்பத்தி அதிகரிப்புடன் 2.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து மீட்சிபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வானிலை நிலைமைகள் மேம்படுவதனால் தேயிலை உற்பத்தி 3.7 சதவீதத்தினால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படும் வேளையில் சருவதேச விலைகளில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பினால் நன்மையடைந்து இறப்பர் உற்பத்தி 2 சதவீதத்தினால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2001ஆம் ஆண்டின் வீழ்ச்சியிலிருந்து பகுதியளவிலான மீட்சி ஒன்றினை மட்டுமே பதிவுசெய்து 2002ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 7 சதவீதத்தினால் மேம்பாடடையும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. 2001ஆம் ஆண்டில் பெருமளவு பயிர்களில் பதிவு செய்யப்பட்ட எதிர்க்கணிய வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் ஏனைய விவசாயப் பயிர்கள் நேர்க்கணிய வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகரித்த உள்நாட்டுக்கேள்வி மற்றும் சுற்றுலாத்துறையின் மீட்சி என்பனவற்றின் காரணத்தினால் கால்நடைத் துணைத் துறையில் அதிகரித்த வளர்ச்சி வீதமொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. சமாதானம் மேம்பாடடைதலும், வடக்கு கிழக்குப் பகுதியில் பொதுவான விவசாய நடவடிக்கைகளுக்கு வசதிசெய்து கொடுத்தலும் விவசாயத்துக்கும் மீன்பிடித்துறைக்கும் மேலும் உந்து சக்தியை வழங்கும்.

கைத்தொழில் நாடுகளில் குறிப்பாக பாரிய ஏற்றுமதிச் சந்தையான ஐக்கிய அமெரிக்க நாடுகளில் எதிர்பார்க்கப்படும் மீட்சியிலிருந்து நன்மைபெற்றும் முதலீட்டாளர் மற்றும் வாணிப நம்பிக்கையில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகளுடன் உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட உற்பத்திப் பொருட்களின் அதிகரித்த உள்நாட்டுக் கேள்வி என்பனவற்றுடன் 2002ஆம் ஆண்டில் கைத்தொழில் துறை 4.5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து மீட்சிபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. விவசாய பதனிடல் துறை அதிகரித்த விவசாய வெளியீட்டினால் நன்மையடைந்து நேர்க்கணிய வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்யும். ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களின் எறிவு செய்யப்பட்ட வளர்ச்சியானது ஏறத்தாழ 3.6 சதவீத நேர்க்கணிய வளர்ச்சியாக இருக்கும் எனினும் கைத்தொழில் நாடுகளின் தாமதமான மீட்சி மற்றும் தாழ்ந்த உற்பத்திச் செலவினைக் கொண்ட உற்பத்தி

நாடுகளினதும் ஏற்றுமதிகளுக்கு விஷேட சலுகைகளைப் பெறும் நாடுகளினதும் கடுமையான போட்டி என்பனவற்றினைப் பிரதிபலிக்கும் வகையில் 2000ஆம் ஆண்டின் வளர்ச்சி வீதத்தினை விட குறைவாகக் காணப்படும். முதலீட்டாளர் நம்பிக்கையில் மேம்பாடொன்றினை பிரதிபலிக்கும் வகையில் 2002ஆம் ஆண்டில் கட்டுமானத்துறை உயர் வளர்ச்சி வீதம் ஒன்றைக் காட்டும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. இது மறுபுறத்தில் சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல் துறையிலும் இதே அளவிலான வளர்ச்சிக்கு இட்டுச்செல்லும். மழைவீழ்ச்சியில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பும் வலுத்துறை விடயங்கள் சம்பந்தப்பட்ட தற்போதைய முயற்சிகளும் ஆண்டின் முதலரைப்பகுதியில் மின்வெட்டுக்கள் காணப்பட்டபோதும் வலுத்துறையில் அதிஉயர் உருவாக்கத்தைப் பதிவுசெய்வதற்கு இயலச் செய்யும்.

விவசாயம் கைத்தொழில் போன்ற முதன்மைப் பொருளதாரத் துறைகளின் மீட்சியும் சருவதேச வர்த்தகத்தில் ஏற்படும் விரிவாக்கமும் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் மற்றும் வர்த்தகத் துறைகளில் நேர்க்கணிய தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. அதிகரித்த கேள்வி மற்றும் குறிப்பாக அதனோடு தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப மேம்பாடு என்பனவற்றின் காரணமாக புதிய வசதிகளின் விரிவாக்கம் என்பனவற்றுடன் தொலைத்தொடர்பூட்டல் துறை 20 சதவீதத்திற்கும் மேலான அதனது உயர் வளர்ச்சி வீதத்தினை தொடர்ந்தும் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. புதிதாகத் திருத்தியமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சவுத் ஈஸ்ட் ஏசியா கேட்வே கொள்கலன் இறங்குதுறை அட்டவணையிடப்பட்டவாறு திறந்து வைக்கப்படுவதானது பிராந்திய பொருளாதார நடவடிக்கைகளின் மேம்பாட்டுடன் மாற்றுக் கப்பலேற்றல் கையாளலும் மேம்பாட்டு துறைமுகப் பணிகளில் வளர்ச்சி வாய்ப்பினை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலாவில் எதிர்பார்க்கப்படும் மீட்சியானது சுற்றுலா வருவாய்களை மட்டுமன்றி விமானப் பணிகளின் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களையும் மேம்படுத்தும். அதேபோன்று எதிர்பார்க்கப்படும் பொருளாதார மீட்சியும் மேம்பட்ட வாணிப உணர்வுகளும் நிதியியல் துறையின் வளர்ச்சி வீதத்தினை மேம்படுத்தும். சுருக்கமாகக்கூறின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அரைவாசிக்கு மேல் வகைகூறும் பொருளாதாரத்தின் பாரிய துறையாகிய பணிகள் துறை 2002ஆம் ஆண்டில் 4.4 சதவீத வளர்ச்சி வீதத்தினால் பதிவுசெய்யும் என எறிவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுக் கேள்விப் பக்கத்தில் உலக வர்த்தகத்தின் விரிவாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஏற்றுமதிகளில் எதிர்பார்க்கப்படும் மீட்சி, மேம்பட்டு வரும் வாணிப நம்பிக்கையின் காரணமாக முதலீட்டு அதிகரிப்பு, மேம்பட்ட கொள்வனவுச் சக்தியினால் நன்மையடைந்த நுகர்வோர் கேள்வியின் அதிகரிப்பு என்பன 2002ஆம் ஆண்டுக்காக எறிவு செய்யப்பட்ட 3.7 சதவீத வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அரசின் முதலீடுச் செலவினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 5.4 சதவீதத்துக்கு கட்டுப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளமையினால் முதலீட்டுக் கேள்வியில் எறிவு செய்யப்பட்டுள்ள அதிகரிப்பானது முழுமையாகவே தனியார் துறையிலிருந்தே பெறப்படும். எனினும் இன முரண்பாட்டு விடயத்தில் விரைவான தீர்வு காணலும் பாதுகாப்பு நிலைமை முன்னேற்றமடைதலும் மேலதிக கொடை வழங்குநர் ஆதரவுடன் அரசதுறை முதலீடுகளை எதிர்பார்த்ததைவிட அதிகரிக்கக்கூடும்.

உள்நாட்டு உணவு வழங்கலில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடு மற்றும் இறக்குமதி விலைகளின் மிதமான அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக 12 மாத புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் 7-8 சதவீத தாழ்ந்த வீதமொன்றில் ஆண்டுப் பணவீக்கம் ஏறத்தாழ 9 சதவீதமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தரகால தாக்குப்பிடிக்கக்கூடிய பணவீக்கமான 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது இன்னமும் உயர்வானதாகக் காணப்படுவதோடு நிருவகிக்கப்பட்ட விலைகளில் தேவையான சீராக்கங்கள் குறிப்பாக 2002ஆம் ஆண்டின் ஏப்பிறலில் இருந்தது ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்படும் மின்கட்டணங்களின் அதிகரிப்பு, போக்குவரத்துக் கட்டணங்களின் மற்றும் அஞ்சல் கட்டணங்களின் அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக 2002ஆம் ஆண்டில் மேலும் வீழ்ச்சியடைவதற்கான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. விலை அதிகரிப்புக்களுடன் 2001ஆம் ஆண்டில் தனியார்துறையின் சம்பள அதிகரிப்பு மெதுவாகக் காணப்பட்டமையினால் 2002ஆம் ஆண்டில் சம்பள அதிகரிப்புக்கான அழுத்தம் அதிகரிக்கப்படலாம். இந்தப் பின்னணியில் சம்பள விலை விஷச்சுழற்சிக்கு நகருவதை தடுப்பதற்காக அதிகூடிய சம்பள அதிகரிப்புக்களை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் காணபபடுகின்றது. உற்பத்தித்திறனின் மேம்பாட்டு அடிப்படையிலான ஏதேனும் சம்பள அதிகரிப்புக்களை உற்பத்தித்திறனின் மாற்றங்களுடன் இணைப்பதற்கு ஊக்குவிக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

சமாளிக்கக்கூடிய மட்டத்துக்கு நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்தி மொத்த நிலுவையில் உள்ளடக்கி நடைமுறைப் பெறுகைகளின் விகிதமொன்றாக வெளிநாட்டுப் படுகடன் பணி 2001ஆம் ஆண்டின் 12.9 சதவீதத்திலிருந்து 2002ஆம் ஆண்டில்

**சிறப்புக் குறிப்பு – 3**

## துணைநில் ஒழுங்குபடுத்தல்

பன்னாட்டு நாணய நிதியத்தின் அதிமுக்கிய நோக்கங்கள் செலாவணி வீத உறுதிப்பாட்டை மேம்படுத்தல் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு நம்பகத்தன்மையை வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்குகிறது. இவற்றை அடையும் பொருட்டு, பன்னாட்டு நாணய நிதியம் சென்மதி நிலுவை பிரச்சனைகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு வசதிகளை வழங்கி வருவதால், இந் நாடுகள் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உறுதிப்பாட்டை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரமுடியும். பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட நிதிஉதவி, இந் நாடுகள் அவற்றின் பன்னாட்டு ஒதுக்குகளை மீளக்கட்டியெழுப்புவதையும் அவற்றின் நாணயங்களை உறுதிப்படுத்துவதையும் மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடுகளையோ அல்லது மூலதனக் கட்டுப்பாடுகளையோ விதிக்காது இறக்குமதிகளுக்கான தொடர்ச்சியாக பணம் செலுத்துவதையும் இயலச்செய்தது. பன்னாட்டு நாணய நிதியம் உறுப்பினர் நாடுகளுக்கு பலவகையான வசதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் நிதி உதவியை வழங்குகிறது. கிடைக்கத்தக்கதாகவுள்ள பண உதவி, விதிக்கப்படும் வட்டி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் கொடுகடனின் மீள்செலுத்தும் காலப்பகுதிகள், வெளிநாட்டு நிதியிடலின் தேவையை எதிர்கொள்ளும் உறுப்பினரின் சென்மதி நிலுவைப் பிரச்சனைகளின் வகைக்குப் மிகச் சிறந்தளவிற்குப் பொருத்தமாக எடுத்துக்கூறும் வகையில் விதிக்கப்பட்ட வேறுபட்ட வசதிகள் மற்றம் நிபந்தனைகளைப் பொறுத்து மாறுபடுகிறது. கடன் வசதியை பெற்றுக்கொள்ளும் பொருட்டு நாடு எதிர்கொள்ள வேண்டிய நிபந்தனைகளை எடுத்தியம்பும் "ஒழுங்குபடுத்தல்" இன் பன்னாட்டு நாணயநிதிக் கடன்கள் கீழ் வழமையாக வழங்கப்படுகின்றன. அரசு பன்னாட்டு நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு "செயல் நோக்கக் கடிதம்" எனக் குறிப்பிடப்பட்ட அதன் எதிர்கால பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நிகழ்ச்சித் திட்டமொன்றையும் உருவாக்குகிறது. இக் கொள்கைகள் பொருத்தமானதும், நிலைத்திருக்கக் கூடியதுமெனக் கருதப்பட்டால், பன்னாட்டு நாணய நிதியத்தின் 183 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 24 பணிப்பாளர்கள் நிதிஉதவியை அங்கீகரிப்பார்கள்.

பன்னாட்டு நாணய நிதியம், ஒரு பெரிய மூலவளங்களின் தொகுதியைப் பேணிவருவதுடன், இதிலிருந்து அதன் உறுப்பினர்களின் சென்மதி நிலுவையிலான தற்காலிகச் சமமின்மைக்கு நிதிஉதவி வழங்குகிறது. இம் மூலவளங்கள் மீண்டும் மீண்டும் நிரம்பும் தன்மையைக் கொண்டிருந்ததுடன், இவை ஆரம்பத்தில் அதன் உறுப்பினர்களால் வைப்புச் செய்யப்பட்ட நாணயங்களிலிருந்து பெறப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியம் கடன்பெறுவதன் மூலம் இம் மூலவளங்களை குறைநிரப்ப முடியும். பன்னாட்டு நாணய நிதியத்தின் மூலவளங்களைப் பயன்படுத்துவதற்கான தேவையை, உறுப்பினர் ஒருவர் கட்டாயமாக நியாயப்படுத்த வேண்டும். இவை வழமையாக சென்மதி நிலுவைப் பிரச்சனைகளாகவோ அல்லது அதன் வெளிநாட்டு ஒதுக்குகளின் வெறுமையாக்கத்தாலோ ஏற்படலாம்.

ஒரு உறுப்பினர் நாட்டின் குறுகிய தவணை சென்மதி நிலுவைகளின் தேவைகள், பன்னாட்டு நாணய நிதியத்தால் அநேகமாக பரந்தளவில் பயன்படுத்தும் வசதியான இரண்டு வருட துணைநில் ஒழுங்குபடுத்தலால் வழமையாக உதவி செய்யப்படுகிறது. துணைநில் ஒழுங்குபடுத்தல் ஒன்றின் காலம் குறிப்பாக 12 இலிருந்து 18 மாதங்களாகும். துணைநில் ஒழுங்குபடுத்தலின் கீழான கடன்கள் ஆகக்கூடியது 5 வருடங்களினுள் மீளச் செலுத்தப்பட வேண்டும். ஆனால் நாடுகள் 2 தொடக்கம் 4 வருடங்களினுள் மீளச் செலுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட தவணை சென்மதி நிலுவைகள் உதவி, வழமையாக பரந்தளவிலான அமைப்பு ரீதியான சீர்திருத்தங்களை வேண்டி நிற்பதுடன், இவை, "நீடித்த நிதிய வசதி" கீழான 3 வருட நிகழ்ச்சித் திட்டத்தினால் உறுதிப்படுத்த முடியும். நீடித்த நிதிய வசதியின் கீழான நிதி உதவி, கடன்பெற்ற தினத்திலிருந்து 4 1/2 இலிருந்து 10 வருடங்கள் வரை செலுத்தப்பட முடியும். எனினும், இது 7 வருடங்களினுள் மீள்செலுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ் ஒழுங்குபடுத்தல்களின் கீழ் கடன்பெறக் கூடியளவு, தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் கூடிய தொகை கடன் வழங்கப்பட்ட போதிலும், வழமையாக உறுப்பினரின் வருடாந்த அனுமதிப்பங்கின் 100 சதவீதமாகவும், திரண்ட அளவில் 300 சதவீதத்தையும் பெறமுடியும்.

## சிறப்புக் குறிப்பு – 3 (தொடர்ச்சி)

சிஎஉ இன் வாராந்த வட்டி வீதத்தின் விகிதாசாரமாக நிர்ணயிக்கப்பட்ட கட்டண வீதத்தில் அடிப்படை பொது மூலவள கணக்கின் வரவிற்கு வட்டிகள் செலுத்தப்பட வேண்டியதுடன், இவை பன்னாட்டு நாணய நிதியத்தின் ஒவ்வொரு நிதியியற் காலாண்டில் வெளிநின்ற சகல பொது மூலவளக் கணக்கின் நாளாந்த நிலுவைக்கு பிரயோகிக்கப்பட்டன. துணைநில் ஒழுங்குபடுத்தல் மற்றும் நீடித்த நிதிய வசதி, உறுப்பினரின் அனுமதிப்பங்கு 200 சதவீதத்தை விஞ்சியவிடத்து கொடுகடனுக்கான அடிப்படைக் கட்டணத்தை விட 100 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட மிகைக் கட்டணத்தையும், அனுமதிப்பங்கு 300 சதவீதத்தை விஞ்சியவிடத்து 200 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட மிகைக் கட்டணத்தையும் கொண்டுள்ளது.

பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட ஏனைய கடன் வசதிகள், அதன் விரிவான உறுப்பினர்களின் விசேட நிலைப்பாடுகளில் தயார்செய்து வைக்கப்பட்டுள்ளன. பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட அவ்வாறான சலுகை ரீதியிலற்ற வசதிகள் குறைநிரப்பு ஒதுக்குவசதி, அவசர நிகழ்வுகளுக்கான கொடுகடன், இழப்பீட்டிற்கான நிதியிடல் வசதி மற்றும் அவசரகால உதவியை உள்ளடக்குகின்றன. பன்னாட்டு நாணய நிதியமும் முன்பு அமைப்பு சீராக்க வசதி என அழைக்கப்பட்ட வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி வசதியின் கீழ், இரட்டை நோக்கங்களான வறுமை ஒழிப்பு மற்றும் நீடித்திருக்கக் கூடிய அடிப்படையிலான உயர் வளர்ச்சியுடன் குறைந்த வருமானமுடைய உறுப்பினர்களுக்கு சலுகைரீதியிலான நீண்ட தவணை வசதிகளையும் வழங்குகிறது.

ஏனைய வசதிகளை விட துணைநில் ஒழுங்குபடுத்தல் பல நன்மைகளை வழங்குகிறது. துணைநில் ஒழுங்குபடுத்தலின் கீழ் வழங்கப்பட்ட நிதி உதவி, உறுப்பினர் நாடுகள் வர்த்தகம் மற்றும் கொடுப்பனவுக் கட்டுப்பாடுகளின்றி அவற்றின் தற்காலிக சென்மதி நிலுவைச் சமமின்மையைத் திருத்துவதற்கு அனுமதியளிக்கிறது. இது அதிகரித்த ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதன் மூலம் சந்தை நம்பகத் தன்மையை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கட்டியெழுப்புவதற்கு உதவுகிறது. போதியளவு ஒதுக்குகளை வைத்திருத்தல் அவசியமானது. ஏனெனில் இது இறக்குமதிகளுக்கான கேள்வியில் எதிர்பாராத அதிகரிப்புக்களை எதிர்கொள்வதற்கும் தனியார் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களை ஊக்குவிப்பதற்கும் உறுப்பினர் நாட்டுக்கு உதவுகிறது. நீண்ட நேரம் எடுக்கும் பேச்சுவார்த்தை முறை மூலமான இருபுடை மற்றும் பல்புடை கொடை வழங்குவோரிடமிருந்து பெறும் கடன்களைப் போலன்றி, துணைநில் ஒழுங்குபடுத்தலின் கீழ், பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து சபை அங்கீகாரம் பெற்றதும் ஏற்புடைய தொகையையோ அல்லது அதன் பகுதியையோ உடனடியாகப் பகிர்ந்தளிக்க முடியும். எனவே இது உறுப்பினர் நாட்டின் மீது மிக விரைவான தாக்கமொன்றைக் கொண்டிருக்கின்றது. அரசுக்குக் கடன் வழங்கும் ஏனைய பல்புடை மற்றும் இருபுடை கடன்களைப் போலல்லாது, துணைநில் ஒழுங்குபடுத்தல் நிதியங்கள், நாடுகளின் மத்திய வங்கிகளுக்கு கடன்களை வழங்குகின்றன. எனவே, இது நாட்டின் உள்நாட்டுப் பணவழங்கலைப் பாதிக்கவில்லை. இதில் மேலுமொரு அனுகூலம் யாதெனில் ஏனைய மூலங்களிலிருந்து மேலதிக நிதி உதவியை ஏற்படுத்துவதற்கான ஓர் மையமாகத் தொழிற்படும் பன்னாட்டு நாணய நிதியத்தால் உதவப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்றுக் கொண்டமையாகும்.

1950இல் பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்பினர் ஒருவராக வந்த இலங்கை 1961இலிருந்து பல சந்தர்ப்பங்களிலும், துணைநில் ஒழுங்குபடுத்தல் வசதிகளின் கீழ் இருமுறையும் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து உதவியைப் பெற்றது. இலங்கை சிஎஉ 93 மில்லியன் (அந்நேரத்தில் 94.9 சதவீத அனுமதிப்பங்கு) கொண்ட துணைநில் ஒழுங்குபடுத்தல் வசதியை திசெம்பர் 1977இல், அக்காலத்தில் அரசால் பொறுப்பேற்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களை நோக்காகக் கொண்டு பெற்றது. 1983 செத்தெம்பரில் துணைநில் ஒழுங்குபடுத்தல் வசதியின் கீழ் பன்னாட்டு நாணய நிதியம் மேலும் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக சிஎஉ 100 மில்லியனை (அந்நேரத்தில் அனுமதிப்பங்கின் 44.8 சதவீதம்) வழங்கியது. இவற்றில் 1983இல் சிஎஉ 30 மில்லியனும், 1984இல் சிஎஉ 20 மில்லியனுமாக சிஎஉ 50 மில்லியன் மட்டுமே எடுக்கப்பட்டது.

இலங்கைக்கான தற்போதைய துணைநில் ஒழுங்குபடுத்தல் நிகழ்ச்சித் திட்டம் பன்னாட்டு நாணய நிதியத்தின் சபையால் 2001 ஏப்பிறல் 20இல் அங்கீகரிக்கப்பட்டது. முன்னைய சந்தர்ப்பங்களில் உள்ளவாறே, எண்ணெய் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளிலான பாரிய அதிகரிப்பிலிருந்து எழுந்த வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் வரவுசெலவுத்திட்டச் செலவில் ஏற்பட்ட எதிர்பாராத அதிகரிப்புக்கள் காரணமாக அரசு இம்முறை பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில்

## சிறப்புக் குறிப்பு - 3 (தொடர்ச்சி)

ஒழுங்குபடுத்தல் வசதிகளைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானித்தது. அந் நேரத்தில் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஒப்புதலுக்கான, அனுமதி இன முரண்பாடு சார்பாக பன்னாட்டு சமுதாயத்தின் மனப்பாங்கிலிருந்து எழுந்த நாட்டின் மீதான எதிர்மறைத் தாக்கத்தைக் குறைப்பதற்கும் மற்றும் 2001இல் எதிர்பார்க்கப்பட்ட உலகளாவிய பொருளாதார மந்தநிலையை எதிர்கொள்வதற்கு பன்னாட்டு சமுதாயத்திலிருந்து உதவி பெறுவதற்கும் மிகவும் அதி முக்கியம் வாய்ந்ததாக விளங்கியது. இவ் ஒழுங்குபடுத்தலின் கீழ் நாட்டிற்கு சிஎஉ 200 மில்லியன் கொண்ட (கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 250 மில்லியன்) (நாட்டின் பன்னாட்டு நாணய நிதியத்தின் அனுமதிப்பங்கில் 48.4 சதவீதம்) 14 மாத கொடுகடன் வசதி, 2001-2002 இற்கான அரசின் பொருளாதார சீராக்க நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவுவதற்காக வழங்கப்பட்டது. இலங்கை சிஎஉ 103.4 மில்லியனை (பன்னாட்டு நாணய நிதியத்தின் அனுமதிப்பங்கின் 25 சதவீதத்திற்குச் சமமானது) 2001 ஏப்பிறல் 21இல் எடுத்தது. எஞ்சிய சிஎஉ 96.6 மில்லியன் நிரல்படுத்தப்பட்ட மீளாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்ட பின் ஒவ்வொன்றும் சிஎஉ 24.1 மில்லியன் கொண்ட நான்கு சமமான தொகுதிகளாக 30 ஓகத்து 2001, 30 நவெம்பர் 2001, 28 பெப்புருவரி 2002, 15 மே 2002 ஆகிய நாட்களில் பகிர்ந்தளிக்கப்படவிருக்கின்றன. இவ்வசதி, முதலாவது தொகுதி பகிர்ந்தளிக்கப்பட்ட நேரத்தில் காணப்பட்ட ஆண்டிற்கு 4.38 சதவீதமாக சிஎஉ வீதத்திற்குச் சமமான வட்டி வீதத்திற்குட்பட்டிருந்தது. இக் கடன் 5 வருடங்களில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன், நாட்டின் வெளிநாட்டு நிலைமை எதிர்பார்த்ததை விட விரைவாக முன்னேற்றமடைந்தால் இலங்கை அரசு கடனை முன்கூட்டியே தீர்ப்பனவு செய்யமுடியும். நாடு எதிர்கொள்ளும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இடர்கள் காரணமாக பகிர்ந்தளிப்புக்களுக்கு முன்பு தேவைப்பட்ட மீளாய்வுகள் பூர்த்தி செய்யப்படாததால் இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகள் எடுக்கப்படவில்லை. மீளாய்வுகள் 2002 மாச்சிற்கு முன் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

துணைநில் ஒழுங்குபடுத்தல் பரந்தளவிலான நிதியியற் பொதியின் ஒரு பகுதியாக விளங்கி, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, போன்ற பல்புடை கடன்வழங்கல் நிறுவனங்கள் அலுவல்சார் இருபுடை கொடை வழங்குனர்கள் மற்றும் தனியார்துறை போன்ற ஏனைய பன்னாட்டு கடன்வழங்கும் நிறுவனங்களிலிருந்தான பங்களிப்புக்களையும் உள்ளடக்கிறது. அண்ணளவாக ஐ.அ.டொலர் 520 மில்லியன் கொண்ட தொகை எதிர்பார்க்கப்படுகிறது. இந் நிகழ்ச்சித் திட்டம், அரச துறையின் நிலைமையை முன்னேற்றுவதன் மூலமும் மாறுபடும் செலாவணி வீதத்தால் உதவப்பட்ட அலுவல்சார் ஒதுக்குகளை மீளக் கட்டியெழுப்புவதன் மூலமும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மீள ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. இதன்படி அரசு சில துறைகளில் விசேட இலக்கை அடையுமெனவும் சில சீர்திருத்தங்களை அமுல்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வசதியின் எஞ்சிய பகிர்ந்தளிப்பு, மீளாய்வுகள் மூலம் அளவிடப்படும் செயலாற்ற இலக்குகளை எய்துவதைப் பொறுத்ததாகும்.

இலங்கை காலாண்டு ரீதியிலான பொருளாதார குறிகாட்டிகள் தொடர்பாக 11 இலக்குகளை எய்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டதுடன் இவற்றில் ஆறு செயலாற்ற பிரமாணத்திலான வையாவும் [1] மற்றும் ஐந்து குறியீட்டு இலக்குகளாகவும் காணப்பட்டன. 2001 யூன் இறுதியில், ஒரு குறிகாட்டி இலக்கு தவிர்ந்த சகல இலக்குகளும் பூர்த்திசெய்யப்பட்ட வேளையில் திசெம்பர் இறுதியில் செயலாற்ற பிரமாணத்திலான ஆறில் ஐந்தும் ஒரு குறிகாட்டி இலக்கும் பூர்த்தி செய்யப்பட்டது. எனினும், இது இலங்கை அதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் எழுந்த வெளிநாட்டு பாதகமான காரணிகளால் பெரும்பாலும் ஏற்பட்டமையின் காரணமாக பன்னாட்டு நாணயநிதியம் செயலாற்ற பரிமாணத்தினை நிறைவேற்றாமைக்கு தளர்த்தலை வழங்கி துணைநில் ஒழுங்கின் கீழ் வரவேண்டிய நிதி விடுவிக்கப்பட்டது.

துணைநில் ஒழுங்குபடுத்தல் பூர்த்தி செய்யப்பட்டதும் இலங்கை வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி வசதியின் கீழ் உதவப்பட்ட கணிசமான அமைப்பு ரீதியான சீர்திருத்தத்தின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி வசதியின் கீழான

*1 செயலாற்றுப் பிரமாணம், துணைநில் ஒழுங்குபடுத்தலின் கீழான தொடர்ந்துவரும் பகிர்ந்தளிப்புக்களுக்கு ஒரு நாடு தானாகவே தகைமை பெறுவதைத் தீர்மானிப்பதற்கான இலக்குகளாகும். செயலாற்றுப் பிரமாணத்தை கடைப்பிடிக்கத் தவறுதல், இவ் வசதியின் கீழ் மேலும் எடுப்பதிலிருந்து நாட்டை தகைமையற்றதாக்குகிறது. எனினும் செயலாற்றுப் பிரமாணத்தை எய்தத் தவறியமையை நியாயப்படுத்தி, அவ்வாறான நியாயப்படுத்தல் பன்னாட்டு நாணய நிதியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் கடன் பெறும் நாடு விலக்களிப்பொன்றுக்கு வேண்டுகோள் விடுக்கமுடியும். குறிகாட்டி இலக்குகள் விரும்பத்தக்க இலக்குகளாகும். ஆனால் இவை செயலாற்றுப் பிரமாணங்கள் போன்று நெருக்கடியானவை அல்ல. குறிகாட்டி இலக்குகளை எதிர்கொள்ளத் தவறுதல் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பங்களிப்பு தாக்கமொன்றைக் கொண்டிராது.*

### சிறப்புக் குறிப்பு - 3 (தொடர்ச்சி)

கடன்கள், மக்கள் சமுதாயம் மற்றும் ஏனைய பங்கேற்பாளர்கள் விசேடமாக உலக வங்கியின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்ட வறுமை ஒழிப்பு உபாய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டது. வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி வசதியின் கடன்களுக்கான வட்டி ஆண்டொன்றிற்கு 0.5 சதவீதமாக விளங்கியதுடன், கடன்கள் ஆகக்கூடிய காலப்பகுதியான 10 வருடங்களில் திருப்பிச் செலுத்தப்படலாம். வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி வசதிகளின் கீழ் பல வகையான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். அவ்வாறான சீர்திருத்தங்கள் தொடர்ச்சியான இறைத்திரட்சி, தொழிலாளர் சந்தைச் சீர்திருத்தங்கள், அரச முயற்சிகளின் மீளமைப்பும் தனியார் மயப்படுத்தலும், பொது நிருவாகச் சீர்திருத்தம், வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான தடைகளை நீக்கல், உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் மீது அரச செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றன. வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி வசதி, உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கும் கூடிய நீடித்திருக்கும் அடிப்படையில் அமைந்த வறுமைக் குறைப்பிற்கும் இட்டுச்செல்லும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய உயர்ந்த தரமான வளர்ச்சிக்கு துணைசெய்யும் புதுப்பிக்கப்பட்ட வளர்ச்சியை நோக்காகக் கொண்ட பொருளாதார உத்தியின் ஒரு முக்கிய பகுதியாக வறுமை ஒழிப்பு முயற்சிகளை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

மிகையொன்றினை உருவாக்கி வெளிநாட்டு ஒதுக்குகளை அதிகரிப்பதற்கு இயலச் செய்யும்வகையில் 2002ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் துறையில் மேலும் வலுப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. விவசாய ஏற்றுமதிகளின் அதிகரித்த வழங்கலினாலும் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கான அதிகரித்த கேள்வியினாலும் நன்மைபெற்று ஏற்றுமதி வருவாய்கள் 3.2 சதவீதத்தினால் அதிகரிக்கும் என எறிவு செய்யப்பட்டள்ளது. ஏற்றுமதி அலகு விலைச்சுட்டெண்ணின் மேம்பாடானது முக்கியமாக அளவுகளின் அதிகரிப்புக்களிலிருந்தே பெறப்படும். எனினும் முதலீட்டாளர் நம்பிக்கை அதிகரிப்பு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளில் தங்கியிருக்கும் கைத்தொழில்களின் மீட்சி என்பனவற்றின் காரணமாக இறக்குமதிகள் விரைந்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக அதிகரிக்கும் வர்த்தகப் பற்றாக்குறையினை மேம்பட்ட சுற்றுலா வருவாய்கள், சருவதேச தாழ்ந்த வட்டி வீதங்களின் காரணமாக வெளிநாட்டு வட்டி கொடுப்பனவுகளில் ஏற்படும் வீழ்ச்சி என்பனவற்றினால் பகுதியளவில் எதிரீடு செய்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. எனவே நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 2.3 சதவீதத்தில் காணப்படும் என எறிவு செய்யப்பட்டுள்ளதோடு செலாவணி வீதத்தின் மீதான அழுத்தம் கட்டுப்படுத்தப்படும்.

முதலீட்டாளர் நம்பிக்கையின் மேம்பாடு மற்றும் விரைந்த தனியார் மயமாக்கல் செயல்முறை என்பனவற்றினால் நன்மையடைந்து மூலதனப் பாய்ச்சல்கள் கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2001ஆம் ஆண்டில் தாமதப்படுத்தப்பட்ட தனியார் மயமாக்கல் பெறுகைகளும் நிகழ்ச்சித்திட்டக் கடன்களும் 2002ஆம் ஆண்டில் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளையில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டு விடயங்களில் தனியார்துறையினரின் பங்கேற்பின் அதிகரிப்பு என்பனவற்றை பிரதிபலிக்கும் வகையில் வெளிநாட்டு நேரடி மற்றும் சொத்துப்பட்டியல் முதலீடுகள் என்பன அதிகரிக்கும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு நடைமுறை மற்றும் மூலதனக் கணக்குகளில் இந்த அபிவிருத்திகள் தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக 2002ஆம் ஆண்டிலும் சென்மதி நிலுவையில் பொது மிகையொன்றினை உருவாக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. துணைநில் ஒழுங்குபடுத்தல்களின் கீழ் எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்ட ஆதரவுடன் எறிவு செய்யப்பட்ட சென்மதிநிலுவை மிகை ஐ.அ.டொலர் 489 மில்லியனாகக் காணப்படுகின்றவேளையில் அவை நீங்கலாக அது ஐ.அ.டொலர் 256 மில்லியனாக அமையும். எனவே 2002ஆம் ஆண்டில் தற்போதைய துணைநில் ஒழுங்குபடுத்தல்களை வெற்றிகரமாக முற்றுப்பெறச் செய்தலும், துணைநில் ஒழுங்குபடுத்தல்களை விட குறைந்த வட்டி வீதங்களில் பாரிய உதவிகளை வழங்கும் வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி வசதிகளுக்குச் செல்லலும் வெளிநாட்டுத் துறையின் நிலைமையை வலுப்படுத்துவதற்கு மிக முக்கியமானவையாகும்.

சென்மதி நிலுவையில் எறிவு செய்யப்பட்டுள்ள பொதுமிகையுடன் நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கு மட்டம் 5.6 மாத இறக்குமதிகளை உள்ளடக்கக்கூடிய வகையில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படும் வேளையில் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்கு மட்டம் 3 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாக அமையும். தனியார் மாற்றல்களையும்

உள்ளடக்கி நடைமுறைப் பெறுகைளின் விகிதமொன்றாக வெளிநாட்டுப்படுகடன் பணி 2001ஆம் ஆண்டின் 12.9 சதவீதத்திலிருந்து 2002ஆம் ஆண்டில் 11.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. செலாவணி வீதமுறை நாட்டின் வெளிநாட்டுப் போட்டித் தன்மையினை பாதுகாக்கின்றவேளையில் தற்போதைய உறுதிப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு மத்திய வங்கிக்கு இயலச் செய்யும் மிதமான பணவீக்கம் வெளிநாட்டுச் சொத்துக்களின் மேம்பாடு என்பன காணப்படும்போது செலாவணி வீதத்தின் மீதான அழுத்தம் மிதமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னோக்கிய சந்தையின் நடவடிக்கைகள் விரிவடையும்போது குறிப்பாக குறுகிய சந்தையொன்றில் பாரிய இறக்குமதி உண்டியல்களைத் தீர்ப்பனவு செய்யும்போது செலாவணி வீதத்தின் பெருமளவிலான தளம்பல்களை ஆகக்குறைந்ததாக்கும்.

அண்மைய கடந்த காலத்தில் இறைச் செயலாற்றத்தின் மோசமான தன்மையினைக் கருத்திற்கொண்டு அரசிறைத் தொழிற்பாடுகளை ஒருங்கிணைக்கவும், மொத்தப் பற்றாக்குறையினையும் உள்நாட்டு நிதியிடல் தேவைப்பாடுகளைக் குறைப்பதற்காகவும் 2002ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ள வேளையில் அரசிறைப் பக்கத்தில் நீண்டகால தேவையான அமைப்புமுறை சம்பந்தப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொள்ளுவதற்காக பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சில வரிகளை இல்லாதொழித்தல், புதிய வரிகளை ஏற்றுக்கொள்ளல், ஏற்கனவேயுள்ள வரிவீதங்களில் மாற்றங்கள் மற்றும் அவற்றின் உள்ளடக்கம் என்பனவற்றைக் கொண்ட வரிக்கொள்கையின் முக்கிய புதுப்பித்தல் ஒன்று வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வவ்போதைக்கான அடிப்படையில் வழங்கப்பட்ட பலதரப்பட்ட விலக்களிப்புக்கள் மற்றும் நீக்கல்கள் என்பனவற்றின் காரணமாக வரிமுறையானது பெருமளவில் சிக்கலானதாகக் காணப்பட்டது. இதன் விளைவாக வரிமுறையின் வருவாய்ச் சேகரிப்பு இயலுமை நலிவடைந்தவேளையில் வரி ஏய்ப்பு அதிகரித்து அண்மைய ஆண்டுகளில் வரி அரசிறை மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தினை குறைவடையச் செய்தது.

முக்கிய வரிச்சீர்திருத்தங்களை அறிமுகப் படுத்தியதன் மூலம் அரசிறைத் திரட்டல் முயற்சிகளில் உள்ள அமைப்புமுறை நலிவுகளை இல்லாமல் செய்வதற்கு 2002ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் துணிகர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்படி ஏழு வரிகளில் (அதாவது பொருட்கள் பணிகள்வரி, தேசியபாதுகாப்புத்தீர்வை, கம்பனி வருமானவரியின் மீது 20 சதவீத மிகைக்கட்டணம், கம்பனி வரி முற்பணம், மூலதன இலாபங்களின் மீதான வரி, அரசாங்க முத்திரைத் தீர்வை, வதிவற்ற பிரசைகளினால் அசையாச் சொத்துக்களின் கொள்வனவின் மீதான மாற்றல்வரி 100 சதவீதம்) 2002ஆம் ஆண்டு ஏப்பிறலில் இருந்து செயற்படும் வகையில் நான்கு வரிகளும் மேயில் ஒரு வரியும் நீக்கப்பட்டும் 2002ஆம ஆண்டு யூலையில் இருந்து மேலும் இரண்டு வரிகள் நீக்கப்பட்டும் (பொருட்களின் பணிகள் வரி, தேசிய பாதுகாப்பு தீர்வை) இரண்டு வீதங்களில் அதாவது அத்தியாவசிய பொருட்கள் பணிகள் மீது 10 சதவீத தாழ்ந்த வீதமும் ஏனைய பொருட்கள் பணிகள் மீது தரப்படுத்தப்பட்ட 20 சதமும் ஆக 2002ஆம் ஆண்டு யூலையில் இருந்து செயற்படும் வகையில் பொருட்கள் பணிகள் வரியும் தேசிய பாதுகாப்புத்தீர்வையும் ஒழிக்கப்பட்டு புதிய கூட்டிய பெறுமதி வரி ஒன்று அறிமுகப்படுத்தப்படும். பொருட்கள் பணிகள் வரியின் கீழ் விலக்களிக்கப்பட்ட சில விடயங்களை உள்ளே கொண்டு வருவதன் மூலமும் விலக்களிப்பு மட்டங்களை சீராக்கம் செய்வதன் மூலமும் பெறுமதி கூட்டிய வரித்தளம் விரிவாக்கப்பட்டது. பெறுமதி கூட்டிய வரித்தளத்தினை மேலும் விரிவாக்குவதன் மூலம் 2003ஆம் ஆண்டில் சில்லறை வர்த்தகத்தினையும் இதற்குள் கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி தீர்வை மிகைக்கட்டணம் 40 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. தனிப்பட்ட வருமான வரிக்கும் இளைப்பாற்று நன்மைகளின் விலக்களிப்புக்கான அடிமட்டம் உயர்த்தப்பட்டது. இறக்குமதிகளின் மீதான முத்திரைத்தீர்வையினை துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையாக மாற்றம் செய்யப்பட்டவேளையில் தற்காலிக வழிமுறையொன்றாக பற்று வரியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. பங்கிலாபங்கள் மற்றும் வட்டி வருமானம் என்பனவற்றுக்குப் பிரயோகிக்கப்படும் வரிவீதம் 10 சதவீதத்துக்குக் கட்டுப்படுத்தப்பட்டதோடு வருமான வரிக்கணிப்பிலிருந்து நீக்கப்பட்டது. வரி ஊக்குவிப்புக்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு அத்தியாவசிய விடயங்களுக்கு மட்டுமே புதிய விலக்களிப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்ட வேளையில் ஆடைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வீடமைப்பு, கால்நடைத்துறைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

செலவுப் பக்கத்தில் அரச நிறுவனங்களுக்கான மாற்றல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் உண்மையில் உதவி தேவைப்படும் ஆட்களுக்கு மட்டுமே நன்மைகளை மட்டுப்படுத்துவதன் ஊடாக உதவிக் கொடுப்பனவுத் திட்டங்களின் கீழான கொடுப்பனவுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் வழிமுறைகள்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நலன்புரி மற்றும் உதவிக் கொடுப்பனவுத் திட்டங்களின் கீழான இலக்கிடலை மேம்படுத்துவதற்கு நலன்புரி நன்மைச் சட்டம் என்ற பெயரில் இயற்றப்படவுள்ள சட்டமொன்றின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள வேளையில், வளமாக்கி உதவிக்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் பண்ணை உள்ளீட்டு ஆதாரத் திட்டமாக மாற்றப்படவுள்ளது. யுத்தநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்புச் செலவுகள் குறைவடையும் என எதிர்பார்க்கப்படும் வேளையில் அரச முகவராண்மைகளையும் உள்ளடக்கி சில தொழில்நுட்ப மற்றும் தொழிற்துறை வகைகள் தவிர்ந்த அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு முடக்கி வைக்கப்படல் தொடர்ந்து காணப்படும். அரசதுறை ஓய்வூதிய கொடுப்பனவுத் திட்டத்தின் நிலைத்துநிற்கும் தன்மையை உறுதிசெய்வதற்காக ஊழியரினால் 8 சதவீதத்தையும் அரசாங்கத்தினால் 12 சதவீதத்தையும் உள்ளடக்கிய உதவுதொகை திட்டமொன்று புதிய அரச ஊழியர்களுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக வெளிநாட்டு நிதியடலை முன்னுரிமை முதலீட்டுச் செயற்றிட்டங்களுக்கு மட்டுப்படுத்துகின்ற வேளையில் மூலதனக் கணக்கின் கீழ் அரசதுறை நிறுவனங்களுக்கான மாற்றல்களை ஒழுங்குமுறைப் படுத்துவதன் மூலம் மூலதனச்செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.4 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று கடுமையான அதிகரித்துச்செல்லும் படுகடன் பணிக் கொடுப்பனவுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுப்படுகடன் முகாமைத்துவத்தினை மேம்படுத்து வதற்கான வழிமுறைகளும் உத்தேசிக்கப்பட்டள்ளன.

இந்த வழிமுறைகளுடன் 2002ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமானது வருவாய் முயற்சிகளை அதிகரிப்பதன் மூலமும் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் (இது தற்போதைய அரசிறைக் கொள்கை முறையினை பிரதிபலிக்கின்றது) முதன்மை நிலுவையினைக் குறைப்பதற்கும், அரசின் குறைச் சேமிப்புக்களை குறைவடையச் செய்து அரச கடன்பாடுகளைக் குறைப்பதற்கும் அதன்மூலம் பொதுப்படுகடன் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கும் முயற்சி செய்கின்றது. இதன்படி 2002ஆம் ஆண்டில் முதன்மை பற்றாக்குறையினை 2001ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.1 சதவீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.2 சதவீதத்திற்கும் நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.9 சதவீதத்திலிருந்து 3.4 சதவீதத்திற்கு குறைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. முதன்மை மற்றும் நடைமுறைக்கணக்கு நிலுவைகளின் மேம்பாடானது வருவாய் முயற்சிகளை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1 சதவீதத்திலிருந்து 17.5 சதவீதத்திற்கும் செலவினங்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.5 சதவீதத்தினால் 21.0 சதவீதத்திற்கு குறைப்பதற்குமான முயற்சியின் கூட்டு விளைவாகும். உள்நாட்டுச் சந்தையில் மூலவளக் கிடைப்பனவின் கட்டுப்பாடுகளைக் கருத்திற்கொள்கையில் மூலதனச்செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.4 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்படவுள்ளதோடு அதில் ஏறத்தாழ 80 சதவீதமானவை வெளிநாட்டு சலுகை மூலங்களிலிருந்து பெறப்படவுள்ளன. எனவே நடைமுறைக்கணக்கின் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைதலும், மூலதனச் செலவுகளை மொத்த உள்நாடடு உற்பத்தியின் 0.9 சதவீதத்தினால் குறைவடையச் செய்தலும் மொத்த அரசிறைப் பற்றாக்குறையை 2002ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10.9 சதவீதத்திற்கு குறைவடையச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பற்றாக்குறையை நிதியிடலில் வெளிநாட்டு சலுகை மூலங்களிலும் சொத்துக்களின் விற்பனையிலும் பெருமளவு நம்பிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. 2002ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூ. 26.5 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ள வேளையில் தனியார் மயமாக்கல் பெறுகைகள் ரூ.21 பில்லியனை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எஞ்சிய மூலவள இடைவெளியான ரூ.88 பில்லியன் உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்து திரட்டப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2001ஆம் ஆண்டின் ரூபா.123.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது ரூபா.35.6 பில்லியன் கொண்ட குறைப்பொன்றினை பிரதிபலிக்கின்றது. அரசிறைப் பற்றாக்குறையின் உள்நாட்டு நிதியிடலை ரூபா. 35.6 பில்லியனுக்கு குறைப்பதற்கு இலக்கிடப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நிதியிடலான ரூபா. 6.4 பில்லியன் மற்றும் தனியார் மயமாக்கல் பெறுகைகளான ரூபா. 12.4 பில்லியன் என்பனவற்றின் காரணமாக இது மொத்த அரசிறைப் பற்றாக்குறையின் குறைப்பு இலக்கினை விட (ரூபா 16.8 பில்லியன்) உயர்வானதாகும். வங்கித்தொழில் முறையிலிருந்து அரச கூட்டுத்தாபனங்கள் கடன் பெறுவதனைக் கட்டுப்படுத்துவதற்கும் அவற்றின் அடிப்படை நலிவுகளை கருத்திற்கொள்ளுவதற்கான திட்டங்களையும் வரவு செலவுத் திட்டம் அறிவித்தது. எனினும் 2002ஆம் ஆண்டில் உள்நாட்டு வங்கியல்லாத் துறையிலிருந்து கிடைக்கத்தக்கதாக உள்ள அனைத்து மூலவளங்களையும் அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன்பாடுகள் முன்னரே பெற்றுக்கொண்டுவிடும் என்பதை கவனிப்பது முக்கியமாகும். சாத்தியமான ஏதேனும் விலகிச் செல்லல்களை இனம் காணுவதற்காகவும் சரிசெய்யும்

வழிமுறைகளை விரைவாக மேற்கொள்வதற்கும் அரசிறை இலக்குகளிலிருந்தான எதேனும் விலகிச் செல்லல்களை கண்காணிப்பதற்காக கடுமையான வரவு செலவுத் திட்ட கண்காணிப்பும் பொறிமுறையொன்றான ஏற்படுத்துவது அத்தியவசியமாகும்.

2002ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் வருவாய்த் திரட்டல் கொள்கைகளை மேம்படுத்தி ஒருங்கிணைப்பதற்கான வருவாய் மேலாண்மையொன்றினை நிறுவுவது உட்பட பலதரப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களை முன்மொழிந்துள்ளது இலக்கிடலை மேம்படுத்துவதற்கான நிரந்தர தீர்வை ஆணைக்குழு மற்றும் நலன்புரி நன்மைகள் சட்டம், காணிப்பதிவுகளை இலகுபடுத்துவதற்கான உறுதிகள் பதிவுச் சட்டம், நிதியியல் துறையை உள்ளடக்கிய சட்டச் சீர்திருத்தங்கள், தீர்ப்பு மன்றங்களினாலும் நடுவர் தீர்ப்பு மன்றங்களினாலும் தொழிலாளர் பிணக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்காக வலுப்படுத்தக்கூடிய கால வரையறைகளினதும் தொழில் முடிவுக்குக் கொண்டுவரப்படும் போது செலுத்தப்படவுள்ள குறித்துரைக்கப்பட்ட இழப்பீட்டுக்கான அட்டவணையினதும் அறிமுகப்படுத்தல் ஆகியன ஏனைய சீர்திருத்தங்களாகும்.

இதேபோன்று சென்மதிநிலுவை மற்றும் நாணய இலக்குகளின் எய்தப்பெறுதலும் அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நிதியிடல் மற்றும் தனியார் மயமாக்கல் பெறுகைகளின் தேறலுக்கு உட்பட்டதாகும். இதற்கு மேலதிகமாக எதிர்பார்க்கப்படும் நாணய இலக்குகளின் பேணலும் அரச கூட்டுத்தாபனங்களின் நிதியியல் நிலைமைகளின் மேம்பாட்டுக்கு உட்பட்டதாகும். அரசதுறைக் கடன்பாடுகளில் எதிர்பார்த்த மட்டத்தினைவிட கணிசமான ஏதேனும் அதிகரிப்பானது பணவீக்கத்தின் குறைப்பினை அல்லது தனியார் துறைக்கான கடனினை வெளிச்செல்லவிடாது பணவீக்க அழுத்தத்தில் அதிகரிப்பு ஒன்றினை அனுமதிப்பதை உறுதி செய்துகொள்ளுவதற்காக தனியார் துறைக்கான கடன்பாடுகளின் மட்டுப்படுத்தலை வேண்டிநிற்கும். இவ்விரு விருப்பத்தேர்வுகளும் உறுதிப்பாட்டுடனான அதிஉயர் பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்கு சாதகமானதாக இல்லாமையினால் இந்த உள்ளார்ந்த இடர்நேர்வுகளை ஆகக்குறைந்ததாக்குவதற்கு குறிப்பாக அரசிறைச் சீராக்கங்களிலும் அரச கூட்டுத்தாபனங்களின் மேம்பாட்டிலும் இடர்நேர்வுகளை ஆகக்குறைந்ததாக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பணவீக்க அழுத்தத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான இறுக்கமான நாணயக் கொள்கைகளுக்கும் பொருளாதார மீட்சிக்கு ஆதரவு வழங்குவதற்காக பெருமளவு தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கைகளுக்கும் இடையில் காணப்படும் உள்ளார்ந்த முரண்பாட்டின் காரணமாக மிதக்கும் செலாவணிவீத முறையின் கீழ் 2002ஆம் ஆண்டின் நாணய முகாமைத்துவம் அறைகூவல்களைக் கொண்டிருக்கும். எனினும் அரசிறைத் திரட்சி பயனுறத் தொடங்கும் வரையிலும் மற்றும் பணவீக்க அழுத்தங்கள் மேலும் குறைவடையும் வரையிலுமாவது நாணயக்கொள்கை இறுக்கமாக இருக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது. செலவினால் உந்தப்பட்ட தற்போதைய பணவீக்கம் கேள்வியினால் உந்தப்பட்ட பணவீக்கமாக மாறுவதை தடுப்பதற்கு இது அத்தியவசியமானதாகும். 2001ஆம் ஆண்டு பெப்புருவரியிலிருந்து ஆறு தடவைகள் சீராக்கப்பட்டு 800 - 900 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்ட கொள்கை வட்டி வீதங்கள் முன்னெச்சரிக்கையுடன் தீர்மானிக்கப்பட வேண்டும். மேம்பட்ட சந்தை ரூபாத் திரவத்தன்மை மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புகளின் கீழ்நோக்கிய சீராக்கம் என்பனவற்றுடன் அரசதுறைச் சீராக்கங்கள் பயன்தரும்போது மத்திய வங்கிக்கு அதனது வட்டி வீதங்களை (மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு) படிப்படியாக ஆனால் ஆண்டுப் பகுதியில் உறுதியாக குறைப்பதற்கு இயலச்செய்யும். எனினும் வரிக்குறைப்பினை முழுமையான தாக்கங்களையும் கொள்கை வட்டி வீதங்களையும் பிரதிபலிக்கக்கூடிய வகையில் குறைக்கப்படாமையினால் பொது கடன்வழங்கல் வீதங்களை கீழ்நோக்கி சீராக்கம் செய்வதற்கான பாரிய இடைவெளியொன்று காணப்படுகின்றது.

பொதுவான பேரண்டப் பொருளாதார தோற்றப்பாட்டின் அடிப்படையில் 2003ஆம் ஆண்டில் நாணய விரிவாக்கம் 12.5 சதவீதத்தில் காணப்படும் என எறிவு செய்யப்பட்டுள்ளதோடு பெயரளவு வருமான வளர்ச்சியின் அதிகரிப்புக்கு இசைவாக உள்ளது. அரசதுறையின் உள்நாட்டுக் கொடுகடன் கேள்வியில் எதிர்பார்க்கப்படும் குறைப்பின் காரணமாக நாணய விரிவாக்கமானது வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் மேம்பாட்டிலிருந்தும் எதிர்பார்க்கப்படும் தனியார்துறை கொடுகடன் கேள்வியிலிருந்துமே பெறப்படும். பணநிரம்பலில் எறிவு செய்யப்பட்டுள்ள அதிகரிப்பான ரூபா 69 பில்லியனில் ரூபா. 55 பில்லியன் (80 சதவீதம்) தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பிலிருந்து எதிர்பார்க்கப் படுகின்ற வேளையில் ரூபா 14 பில்லியன் மட்டுமே தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கத்திலிருந்தான ரூபா 21 பில்லியனையும் அரசதுறைக் கூட்டுத்தாபனங்களிலிருந்தான ரூபா 7 பில்லியனையும் உள்ளடக்கி வங்கித்தொழில் துறையில் அரசதுறைக் கொடுகடனின்

எதிர்பார்க்கப்படும் ரூபா.28 பில்லியன் குறைப்பின் காரணமாக தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் எறிவு செய்யப்பட்டடுள்ள அதிகரிப்பு தாழ்வாகக் காணப்படுகின்றது. 2001ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா. 33 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2002ஆம் ஆண்டின் இந்த மதிப்பீடுகள் கிட்டத்தட்ட ரூபா.50 பில்லியன் கொண்ட அதிஉயர் தனியார்துறை கொடுகடனுக்கு இடமளிக்கும். எனவே தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் எறிவு செய்யப்பட்ட அதிகரிப்பு தரப்படும்போது பொருளாதார மீட்சி மேம்பாடடைவதுடன் தனியார் துறைக்கான கொடுகடனில் ஏற்படும் அதிகரிப்புக்கு இடமளிக்கலாம். எனினும் அரசதுறைக்கு அதனது கடன்பாட்டு இலக்குகளுக்குள் கருமமாற்ற இயலுமாயின் மட்டுமே விலைகளில் அழுத்தத்தை தவிர்த்து அவ்வாறு இடமளிக்கலாம். எனவே, 2002ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட அரசிறை இலக்குகளை எய்துதலும் அரச கூட்டுத்தாபனங்களின் நிதியியல் நிலைமைகளில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகளும் நாணய இலக்குகளை எய்துவதிலும் பணவீக்க எதிர்பார்ப்புக்களின் கீழ்நோக்கிய சீராக்கத்துக்கும் அதன்படி வட்டி வீதங்களின் சீராக்கத்துக்கும் அத்தியாவசியமானதாகும்.

இன முரண்பாட்டுக்கான தீர்வு உடனடியாகக் கொண்டு வரப்படல், உலக பொருளாதாரத்தின் உறுதியான மீட்சி, வானிலை நிலைமைகளின் விரைந்த மேம்பாடு என்பன 2002ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப் படும் அரசிறை இலக்குகளை எய்துவதற்கு இயலச்செய்து தற்பொழுது எதிர்பார்ப்பதை விட பேரண்டப் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தலாம். எனினும் குறிப்பாக நடைமுறைச் செலவினை கட்டுப்படுத்தி தனியார் மயமாக்கல் பெறுகைகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் உள்ளார்ந்த இடர்நேர்வுகளை குறைவாக மதிப்பிட முடியாது. இதேபோன்று 2002ஆம் ஆண்டு யூலையில் பொருட்கள் பணிகள் வரியினையும் தேசிய பாதுகாப்புத் தீர்வையினையும் அகற்றி பெறுமதி கூட்டிய வரி அறிமுகப்படுத்தப்படும்போது ஏற்படும் உள்ளாந்த வருவாய் இழப்புக்களைத் தவிர்ப்பதற்கு முன்னிருந்தே தயாராகுதல் அத்தியவசியமாகும். அதேபோன்று வரவு செலவுத் திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களை தாமதப்படுத்தி நலிவடையச் செய்வதற்கு பலதரப்பட்ட அக்கறைகளைக் கொண்ட குழுக்களிடமிருந்து உறுதியான அழுத்தங்களும் காணப்படலாம். இதேவேளையில் எதிர்பார்க்கப்படும் அரசிறை இலக்குகளை எய்துவதும் குறிப்பிடப்பட்ட சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டின் மேம்பாட்டுக்கும் முதலீட்டாளர் நம்பிக்கையை மேம்படுத்தி தனியார்துறையினருக்கு பெருமளவு மூலவளங்களை விடுவிப்பதன் மூலம் எதிர்காலத்தில் அதிஉயர் வளர்ச்சிக்கு அவசியமான அடிப்படையை தயாரித்து விரைந்த பொருளாதார மீட்சியை உறுதி செய்வதற்கும் அத்தியவசியமானதாகும்.

## நடுத்தர கால பேரண்டப் பொருளாதார வாய்ப்புக்கள்

இன முரண்பாட்டுக்கு நிரந்தர தீர்வு ஒன்றினைக் காண்பதற்கு மேலதிகமாக கொள்கைச் சீராக்கங்களின் அளவு மற்றும் விரைவு மற்றும் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் என்பனவற்றிலேயே இலங்கையின் நடுத்தரகால பேரண்டப் பொருளாதார வாய்ப்புக்கள் பெருமளவு தங்கியுள்ளன. நலிவுடைய கொள்கைச் சீராக்கங்கள் மற்றும் மெதுவான பொருளாதார சீர்திருத்தங்கள் என்பனவற்றுடனான பேரண்டப் பொருளாதார வரைச்சட்டமொன்று நிலைத்து நிற்கக்கூடிய ஒன்றல்ல ஆதலால், உறுதியான கொள்கைச் சீராக்கங்கள் மற்றும் விரைந்த பொருளாதாரச் சீர்திருத்தங்கள் என்பனவற்றின் அடிப்படையிலான நடுத்தரகால பொருளாதார தோற்றப்பாடு ஒன்று கருத்திற்கொள்ளப் பட்டுள்ளதோடு அதற்கான மதிப்பீடுகள் அட்டவணை 1.8இல் தரப்பட்டுள்ளன. இந்த தோற்றப்பாடானது நடுத்தரகால அரசிறை உறுதிப்பாட்டுக்கான உபாயமொன்றுடன் இசைந்துசெல்லும் வகையிலான அரசிறை உறுதிப்பாடு மற்றும் அரசபணிகளின் சீர்திருத்தம், அரசதொழில் முயற்சிகளின் சீர்திருத்தம் அவற்றின் செயற்திறன் மற்றும் பொருளாதார வளம், நிதியியல் துறை சீர்திருத்தங்கள், நிதியியல் முறையின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தல், அதிஉயர் இடையீட்டுச் செலவுகளைக் குறைத்தல், நெகிழ்ச்சித்தன்மையை அதிகரித்து தொழிற்சந்தை சீர்திருத்தங்கள், போதுமான அளவில் தரமான உட்கட்டமைப்பு வசதிகளின் கிடைப்பனவு, நிறுவனரீதியான சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், ஒளிவுமறைவு அற்ற தன்மையினையும் வகைகூறலையும் அதிகரித்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் முறைகளை சீர்திருத்துதல், சந்தை சார்ந்த பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு இசைவு இல்லாதவற்றை ஒழித்து தேவையானவற்றை இலகுபடுத்தல் என்பன தொடர்ந்து இடம்பெறும் என்ற ஊகத்தின் அடிப்படையிலானதாகும். இந்த சீராக்கங்களும், சீர்திருத்தங்களும் நாட்டின் நடுத்தரகால வளர்ச்சி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு மட்டுமன்றி, பெருமளவில் உலகமயப்படுத்தப்பட்டதும் வர்த்தகத்தில் தங்கியிருப்பதுமான நாடொன்றின் வெளிநாட்டு அதிர்ச்சிகளின் உள்ளார்ந்த இடர்நேர்வுகளின் போது பொருளாதாரத்தின் வலுப்படுத்தலுக்கும், ஆற்றலுக்கும் அத்தியவசியமானவையாகும்.

**அட்டவணை 1.8**
**நடுத்தரகால பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகள்**

| விடயம் | தற்காலிகம் 2001 | எறிவுகள் 2002 | எறிவுகள் 2003 | எறிவுகள் 2004 | எறிவுகள் 2005 | எறிவுகள் 2006 |
|---|---|---|---|---|---|---|
| நடுவாண்டுக் குடித்தொகை( மில்லியன்) | 18.7 | 18.9 | 19.0 | 19.2 | 19.4 | 19.6 |
| மொ.உ.உ. வளர்ச்சி (%) | -1.4 | 3.7 | 5.5 | 6.0 | 6.5 | 6.5 |
| முதலீடுகள் (மொ.உ.உ. %) | | | | | | |
| தனியார் | 22.0 | 24.0 | 26.0 | 28.0 | 29.0 | 30.0 |
| அரசு | 19.0 | 18.9 | 18.9 | 20.5 | 21.0 | 21.0 |
| உளநாட்டு சேமிப்பு (மொ.உ.உ.வளர்ச்சி %) | 3.0 | 5.1 | 7.1 | 7.5 | 8.0 | 9.0 |
| தனியாள் | | | | | | |
| அரசு | 15.3 | 16.8 | 19.5 | 20.8 | 21.3 | 22.8 |
| | 20.3 | 20.2 | 20.1 | 19.7 | 19.2 | 19.3 |
| கொ.நு.வி.சு.ஆண்டுச்சராசரி (%மாற்றம்) | -4.9 | -3.4 | -0.5 | 1.1 | 2.1 | 3.5 |
| ஏற்றுமதி அளவு (% மாற்றம்) | 14.2 | 9.0 | 6.0 | 5.5 | 4.5 | 3.8 |
| இறக்குமதி அளவு வானூர்திகள் நீங்கலாக(%மாற்றம்) | 8.0 | 5.0 | 16.3 | 13.0 | 13.1 | 12.3 |
| வெளிநாட்டு நடைமுறைக்கணக்குப் | 10.7 | 5.6 | 12.9 | 14.4 | 13.8 | 10.5 |
| பற்றாக்குறை (மொ.உ.உ %மாக) | -2.3 | -2.4 | -1.5 | -2.2 | -2.9 | -2.6 |
| அலுவல்சார் ஒதுக்குகள் (மாதத்திற்குப் | 2.7 | 3.4 | 3.5 | 3.6 | 3.6 | 3.8 |
| போதுமான இறக்குமதிகள்) | 16.5 | 17.5(அ) | 19.1 | 19.4 | 19.8 | 20.1 |
| அரசின் அரசிறை (மொ.உ.உ % மாக) | 27.4 | 26.1(அ) | 26.7 | 25.8 | 25.7 | 25.6 |
| அரசின் செலவினம் (மொ.உ.உ % மாக) | -10.9 | -8.5(அ) | -7.5 | -6.5 | -6.0 | -5.5 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (மொ.உ.உ % மாக) | | | | | | |
| விரிந்த பணம் ( % மாற்றம்) | 13.6 | 12.5 | 11.8 | 11.9 | 11.3 | 10.5 |

(அ) 2002 வரவு செலவுத் திட்டம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

முன் மதியுடைய அரசிறை மற்றும் நாணயக்கொள்கைகளினால் ஆதரவு வழங்கப்படும் மிதக்கும் செலாவணி வீத முறையும் தொடர்ச்சியான அமைப்புச் சீராக்கங்களும் நாட்டின் மூலவளங்களைப் பெருமளவில் பயன்படுத்தி அதிரித்த ஒருங்கிணைப்பைக் கொண்ட உலக பொருளாதாரமொன்றில் நன்மைகளை உச்சப்படுத்துவதற்கு இலங்கையை இயலச்செய்யும். வளர்ச்சி சார்ந்த கொள்கைச் சீராக்கங்களையும் அமைப்புச் சீர்திருத்தங்களையும் அது மேற்கொள்ளுமேயானால் இலங்கைக்கு நிலைத்து நிற்கக்கூடிய உயர்தரத்திலான வளர்ச்சியினை எய்துவதற்குச் சாதகமான சூழ்நிலைகள் காணப்படுவதை நடுத்தரகால உலக பொருளாதார வளர்ச்சி எறிவுகள் குறித்துக்காட்டுகின்றன.

இந்தத் தோற்றப்பாட்டின் கீழ் முதலீடுகளினாலும் ஏற்றுமதிகளினாலும் முக்கியமாக வழிநடத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி நடுத்தர காலத்தில் 6.5 சதவீதத்திற்கும் உயர்வாக இருக்கும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தைக் குறைத்து பணவீக்கம் படிப்படியாக 3.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய முதலீட்டு சேமிப்பு இடைவெளியைக் குறைப்பதில் அரசிறைப் பற்றாக்குறையின் குறைப்பு முக்கிய பங்கொன்றினை ஆற்ற உள்ள வேளையில் ஏற்றுமதிகளின் அதிகரிப்புக்கள் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையினை குறைவடையச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சேமிப்புக்களின் அதிகரிப்புடன் அதிகரித்த வளர்ச்சியானது உள்நாட்டுப்படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தினையும் குறைவடையச் செய்யும் என எதிர்பார்க்கப்படுவதுடன் நடுத்தர காலத்தில் படுகடன் தாக்குப்பிடித்தலையும் உறுதி செய்யும்.

மேலும் வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்து முதலீட்டில் ஏற்படும் விரைந்து அதிகரிப்பானது உள்நாட்டு வெளியீட்டை அதிகரிக்கச் செய்து வெளிநாட்டு ஒதுக்குகளையும் உயர்த்தி வெளிநாட்டு நிலைமையினையும் மேம்படுத்தும். இதன்மூலம் தரப்பட்ட தோற்றப்பாட்டின்படி கீழ், செலாவணி வீதத்தினதும் உள்நாட்டு விலைகளினதும் உறுதிப்பாட்டை எய்துவதற்கு இயலச் செய்யும். தொடர்ந்து காணப்பட்ட அதிஉயர் பணவீக்க எதிர்பார்ப்புக்களை கீழ் நோக்கிச் சீராக்கம் செய்வதற்கு மக்களை ஊக்குவிக்கும் நலமான தாக்கமொன்றினை இத்தகைய பெறுபேறுகள் கொண்டிருக்கும். பணவீக்க எதிர்பார்ப்புக்களில் அத்தகைய குறைப்பொன்று நாணய முகாமைத்துவத்துக்கு வசதியளிப்பதோடு சந்தை நம்பிக்கையையும் படிப்படியாக மேம்படுத்தும்.

நடுத்தர காலத்தில் அரசிறைப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3- 4 சதவீதத்திற்குக் குறைவடையச் செய்கின்ற வேளையில் பொது முதலீட்டினை 7 - 8 சதவிதத்திற்கு அதிகரிப்பதானது தேவையான முதலீடுகளை அதிகரிப்பதற்கும் 6.5 சதவீதத்திற்கும் மேலான நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியினை எய்துவதற்கும் போதுமான உள்நாட்டுச் சேமிப்புக்களை உருவாக்குவதற்கும் மிக அவசியமானதாகும். தற்போதைய முதலீடான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 22- 24 சதவீதம் நடுத்தர காலத்தில் 5 சதவீதத்திற்கும் மேலான வளர்ச்சி வீதத்தினை உருவாக்குவதற்குப் போதுமானதல்ல. எனவே நடுத்தர காலத்தில் வளர்ச்சி வீதத்தினை 6 சதவீதத்திற்கும் மேலாக உயர்த்துவதற்கு முதலீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 30 சதவீதத்திற்கு அதிகரிக்கப்படல் வேண்டும். முதலீட்டுப் பக்கத்தில் பொது முதலீடானது வெளிச்செல்லும் முதலீடுகளைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக தனியார் துறையினரை உள் இழுக்கும் முதலீடுகளை தேர்ந்தெடுப்பதில் முக்கிய பங்கொன்றினை ஆற்ற வேண்டும். இலங்கையைப் போன்ற வளர்முக நாடொன்றில் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் பொது முதலீடானது தனியார்துறை முதலீட்டின்மீது உள் இழுக்கும் தாக்கமொன்றினைக் கொண்டிருப்பதுடன் உட்கட்டமைப்பு வசதிகளின் கிடைப்பனவுக்கு தனியார்துறை முதலீடுகள் நேர்க்கணிய பதிலிறுத்தலைக் கொண்டுள்ளமையினால் நாட்டின் மொத்த முதலீடு உயர்த்தப்படும்.

எனினும், மொத்த முதலீட்டில் ஏறத்தாழ 75 சதவீதம் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 22- 23 சதவிதம் இன்னமும் தனியார் துறையிலிருந்தே எதிர்பார்க்கப்படுகின்றது. தனியார் மேலெழுவதற்கான சமிக்ஞைகள் காணப்பட்டபோதும் இந்த அறைகூவலை தனியார்துறை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளும் என்பது தெரியவில்லை. இந்த உயர் முதலீட்டுக்கான நிதியிடலின்போது உள்நாட்டுச் சேமிப்புக்களின் கூடியளவு வலியுறுத்தல் காணப்பட வேண்டும். சலுகை நிதியிடலின் கிடைப்பனவு படிப்படியாகக் குறைவடைந்து செல்லுவதே இதற்கான காரணமாகும் இந்த அதிஉயர் முதலீட்டுத் தேவையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5- 6 சதவீத தேசிய சேமிப்புக்களை ஏனைய பல வளர்முக நாடுகளைப் போன்றே தனியார் சேமிப்புக்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஊக்குவிப்பதன் மூலம் மட்டுமே திரட்டுவது கடினமானதாகும். எனவே நடுத்தரகாலத் தோற்றப்பாட்டில் குறிப்பிடப்பட்டதுபோல நடுத்தரகாலத்தில் போதுமான அளவு சேமிப்புக்களை உருவாக்குவதற்கு தற்போதைய நடைமுறைக்கணக்கில் பற்றாக்குறையை (அரசாங்க குறைச் சேமிப்புக்கள்) மிகையொன்றுக்கு (அரசாங்கச் சேமிப்புக்கள்) நேர்மாற்றம் செய்வது அத்தியாவசியமாகும். இதேபோன்று தனியார்துறையினரின் அதிகரித்துச் செல்லும் முதலீடுகளை எதிர்கொள்ளுவதற்கான உள்நாட்டு மூலவளங்களின் கிடைப்பனவை உறுதி செய்துகொள்வதற்காக மொத்த அரசிறைப் பற்றாக்குறையை தற்போதைய அதிஉயர் மட்டமான 8 சதவீதத்திலிருந்து நடுத்தர காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 3- 4 சதவீதத்திற்கு அரசாங்கம் குறைவடையச் செய்தல் வேண்டும். இதன்படி, தரப்பட்டுள்ள நடுத்தரகால தோற்றப்பாட்டின்கீழ் எதிர்பார்க்கப்படும் உயர்முதலீடு, சேமிப்பு மற்றும் வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்கு அரசிறைத் திரட்சி மிக முக்கியமானதாகும்.

இதேபோன்று தனியார் துறையினருக்கு போதுமான அளவு மூலவளங்களின் கிடைப்பனவை உறுதிசெய்வதற்காக வேண்டி மொத்த அரசதுறைப் பற்றாக்குறையினையும் அதன்படி அரசதுறைக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளையும் குறைப்பதற்கு அரச கூட்டுத்தாபனங்களின் சீராக்கங்கள் அத்தியாவசியமானவையாகும். இந்தச் சூழலில் அரச கூட்டுத்தாபனங்களின் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளைக் குறைப்பதற்கு தன்னியக்க விலைச்சீராக்க முறைகளும் செலவுகளை ஆகக் குறைந்ததாக்குவதும் உதவியாக அமையும்.

இந்த அனைத்துச் சீராக்கங்களுடனும் தேசிய சேமிப்பிலிருந்து தேவையான நிதியியல் மூலவளங்களை உருவாக்குவது குறிப்பாக அதிஉயர் முதலீட்டுக் கேள்வியை எதிர்கொள்ளுவதற்கான வளர்ச்சி விரைவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் ஆரம்ப கட்டங்களில் கடினமானதாக இருக்கும். எனவே தற்போது மிகத்தாழ்ந்த மட்டங்களில் காணப்படும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பது அத்தியாவசியமானதாகும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நிதியியல் மூலவளங்களை மட்டுமன்றி புதிய தொழில்நுட்பங்களையும் சந்தைகளையும் பெற்றுக்கொள்ளுவதன் மூலம் வெளிப்புற நிலைமைகளையும் உருவாக்குகின்றன.

அதிஉயர் முதலீட்டு வளர்ச்சியின் ஊடாக இயலளவு உருவாக்கத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிக்கு மேலதிகமாக, வளர்ச்சிக்கான பங்களிப்பு உற்பத்தித்திறனை உயர்த்தும் செயல்திறன் மேம்பாடுகளிலிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச் சூழலில் மூலவள ஒதுக்கீடு செயல்திறன் மற்றும் உற்பத்தியாக்க மேம்பாடு என்பனவற்றில் தாக்கத்தினைக் கொண்ட அமைப்பு முறைச்சீராக்கங்கள் முக்கிய பங்கொன்றினை வகிக்கின்றன. எனவே அமைப்புச் சீராக்கங்களின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்துவதானது நடுத்தரகால நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியினை எய்துவதில் உள்ளார்ந்த முக்கிய பாகமொன்றாக அமைதல் வேண்டும்.

## 1.13 பொருளாதார விடயங்களும் கொள்கைகளும்

காலத்துக்குக் காலம் தற்காலிக பின்னடைவுகள் காணப்பட்டபோதும் 1977ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட சந்தை சார்ந்த கொள்கை வரைச்சட்டத்தினுள் இலங்கைப் பொருளாதாரத்தின் செலாற்றமானது ஊக்கமூட்டுவதாக இருந்தது. ஆண்டுச் சராசரி பொருளாதார வளர்ச்சி 1950-1977இன் 3.5 சதவீதத்திலிருந்து 1977-2001 காலப்பகுதியில் 4.5 சதவீதத்துக்கு உயர்வடைந்தது. மெதுவடையும் குடித்தொகை வளர்ச்சியுடன் இணைந்த இந்த உயர் வளர்ச்சி வீதமானது தலைக்குரிய வருமானத்தினை 1950ஆம் ஆண்டின் ஐ.டொலர் 106இலிருந்து 1977ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 294 இற்கு அதிகரிக்கச் செய்ததுடன் 2001ஆம் ஆண்டில் மேலும் ஐ.அ.டொலர் 838இற்கான வளர்ச்சியையும் பதிவு செய்தது. ஆண்டுக்கான சராசரி தலைக்குரிய வருமான வளர்ச்சி 1950-1977 காலப்பகுதியின் 3.7 சதவீதத்திலிருந்து 1977-2001 காலப்பகுதியில் 4.3 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இதேபோன்று உற்பத்திகளின் நவீனமயப்படுத்தல் மற்றும் பன்முகப்படுத்தல் என்பனவற்றினால் பொருளாதாரத்தின் ஆற்றல் வலுப்படுத்தப்பட்ட வேளையில் உலக பொருளாதாரத்துடனான இணைப்பு அதிகரித்தது. பொருளாதாரத்தின் செயல்திறனை உயர்த்தும் வகையில் தனியார்துறை பொருளாதார நடவடிக்கைகளின் பங்கு படிப்படியாக அதிகரித்துள்ளது.

எனினும், பல பக்கங்களில் நேர்க்கணிய பொருளாதார பெறுபேறுகளின் மத்தியிலும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியானது கிழக்காசிய நாடுகளை விட பெருமளவு பின்தங்கியுள்ளது. இதற்கும் மேலதிகமாக நலிவான கொள்கைச் சீராக்கங்கள் மற்றும் மெதுவான பொருளாதார சீர்திருத்தங்கள் என்பனவற்றின் காரணமாக, பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தாமதித்து மேற்கொண்ட ஆசிய வளர்முக நாடுகள் பல நாட்டின் செயலாற்றத்தை விஞ்சியுள்ளன. இதன் விளைவாக மெதுவான வளர்ச்சி மற்றும் போதுமான சேமிப்புக்களும் முதலீடுகளும் இன்மையால் தாழ்ந்த உற்பத்தியாக்கம் மாறாத உயர் பணவீக்கம், தொழில்வாய்ப்பின்மை, குறைத்தொழில் வாய்ப்பும் வறுமையும், கடுமையான பேரண்டப் பொருளாதார சமமின்மைகள், சிலவேளையில் தொடர்ந்து காணப்படுவதுடன் வெளிநாட்டு அதிர்ச்சிகளிலிருந்தான பாதிப்புக்கள், என்பன பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்துக்கு பாரிய அறைகூவல்களாகவும் உள்ளன. நாட்டின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சில காரணிகளும் இந்த நிகழ்வுகளுக்கும் பங்களிப்புச் செய்திருக்கலாம் என்பதில் சந்தேகமில்லை. எனினும் நலிவான செயலாற்றத்துக்கு அது ஒரு காரணமாக அமையாது. உண்மையில் அவற்றின் எதிர்விளைவுகளை ஆகக்குறைந்ததாக்குவதற்கான காலத்துக்கேற்றதும் போதுமானதான நிவாரண வழிமுறைகளின் மூலமான முன்மதியுடைய பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் அத்தகைய காரணிகளை நாம் அறைகூவலாகக் கொள்ளவேண்டும். விரைந்து மாற்றமடையும் உலகளாவிய நிகழ்வுகள், சமாதானம் ஏற்படுவதைத் தொடர்ந்து விரைந்த வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஆற்றல் என்பனவற்றின் சூழலில் சூழலில் பொருளாதாரத்துக்கும் சமூக வாழ்க்கைக்கும் மிகக் குறைந்த செலவுடன் குறுகிய மற்றும் நடுத்தர காலத்தில் தவிர்க்க முடியாத மாற்றங்களை முகாமைப்படுத்துவது கொள்கை வகுப்பாளர்களுக்கு பாரிய செயலொன்றாகும். இது பொருளாதாரத்தில் மட்டுமன்றி பண்பாட்டு மற்றும் சமூக விடயங்களிலும் மாற்றங்களை வேண்டி நிற்கின்றது.

மேலும் தாமதமின்றி உறுதியான கொள்கைச் சீராக்கங்களினதும் விரைந்த பொருளாதார சீர்திருத்தங்களினதும் அவசியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் வெளிநாட்டு அதிர்ச்சிகளினால் பொருளாதாரம் எளிதில் பாதிப்படைவதையும், குறுகிய காலத்தில் கொள்கை விருப்பத்தேர்வுகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதையும் 2001ஆம் ஆண்டின் நிகழ்வுகள் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன. அத்தகைய சீர்திருத்தங்களின் இடர்களும், கடினமும் அரசியலில் அவற்றின் தாக்கமும் தெளிவானதாகும். எனினும் அவை குறுகிய காலத்துக்கானவை ஆவதோடு ஒருங்கிணைப்பை மேம்படுத்தல், அபிவிருத்திப் பங்காளர்களுக்கிடையில் பொருத்தமான புரிந்துணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றின் ஊடாக அவற்றினை ஆகக்குறைந்ததாக்கலாம். இதற்கு மேலதிகமாக மேலும் கொள்கை வழுக்கல்களுக்கு இடமளிப்பதற்கு எத்தகைய இடமும் கிடையாததோடு தேவையான கொள்கை சீராக்கங்களும், கொள்கைச் சீர்திருத்தங்களும் தாமதப்படுத்தப்படுவதாவது பொருளாதார ரீதியில் செலவுமிக்கதாகும். ஏனெனில் அது நாட்டினை பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் செல்லலாம். விரைந்த பொருளாதார வளர்ச்சி, 2002ஆம் ஆண்டில் வலுப்படுத்தப்பட்ட பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் நடுத்தர காலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய உயர்தர வளர்ச்சி என்பனவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான உறுதியான கொள்கைச் சீராக்கங்களை மேலே கலந்துரையாடப்பட்ட 2002ஆம் ஆண்டுக்கான பொருளாதார தோற்றப்பாடும் இலங்கைக்கான பொருளாதார வாய்ப்புக்களும் வலியுறுத்துகின்றன.

***சமாதானம்:*** பொருளாதார அபிவிருத்தி, உற்பத்தியாக்கமற்ற செலவுகளை ஆகக் குறைந்ததாக்குதல் மற்றும் முதலீட்டாளர்களுக்குச் சாதகமான வாணிப சூழலை உருவாக்குதல் என்பன வற்றுக்காக சமாதானம் அத்தியவசியமானதாகும் என்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். இந்த சூழலில் அனைவரும் இல்லாவிட்டாலும் பெரும்பாலானோர் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வடக்கு கிழக்கு முரண்பாட்டுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டியது அத்தியாவசியமாகும். நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முரண்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பங்காளர்களுக்கிடையிலும் கருத்தொற்றுமை எய்தப்பெறலானது கடுமையாக வேரூன்றியுள்ள இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான இறுதி இலக்குக்கு நகருவதற்கான அத்தியாவசிய விடயங்களாகும். இந்த முயற்சியில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆதரவு வழங்கப்படும் தற்போதைய சமாதான முயற்சிகள் ஊக்கம் ஊட்டக்கூடியதாக உள்ளன. சிக்கலான இந்த விடயத்துக்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பது இலகுவானதல்ல. ஆனால் நாட்டின் எதிர்கால வளத்துக்கு இது அத்தியவசியமானதாகும். அனைத்துப் பங்காளர்களும் உண்மையான கடப்பாட்டுடனும் ஒவ்வொருவருடனான நம்பிக்கையுடனும் இந்தக் கடினமான பாதையில் முன்னேறிச் செல்லுவதற்குத் தயாராக இருப்பின் இவ்வகையான விடயங்களுக்கு நிரந்தர தீர்வினைக் காணுவது சாத்தியமாகும் என்பதை ஏனைய நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. சருவதேச சமூகமானது இந்தப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு ஒன்றைக் காணுவதற்கு உதவுவது மட்டுமன்றி அதனைத் தொடர்ந்து நாட்டின் புத்தாக்கத்துக்கும் இணக்கப்பாட்டு முயற்சிகளுக்கும் உதவி புரிவர். எனினும் அத்தகைய தீர்வு ஒன்றைக் காணுவதற்கான இயலுமையும் பொறுப்பும் இலங்கையர்களிடமின்றி வேறு எவரிமும் இல்லை.

நிலைத்துநிற்கக் கூடிய வகையில் இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு தரமான பொருளாதார வளர்ச்சியின் தேவை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று தேவையான உயர் வளர்ச்சியினை எய்துவதற்குப் பொருத்தமான பேரண்டப் பொருளாதார வரைச்சட்டமாக சந்தை சார்ந்த பொருளாதாரக் கொள்கை உபாயத்தினை இலங்கையின் பெரும்பாலும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. அரசாங்க மாற்றங்களைத் தொடர்ந்து பொதுவான பொருளாதாரக் கொள்கை வரைச்சட்டத்தினை நேர்மாற்றம் செய்வதற்கான அரசியல் இடர்நேர்வுகளை இந்த ஏற்றுக்கொள்ளல் கணிசமான அளவில் குறைவடையச் செய்கின்றது. இதற்கும் மேலதிகமாக அனைத்து அரசியல் கட்சிகளும், தனியார் துறையினரும் இலங்கைக்கு ஆதரவு வழங்கும் சருவதேச சமூகமும் அதிஉயர் பொருளாதார வளர்ச்சியினை உறுதிசெய்து கொள்ளுவதற்காக உறுதியான கொள்கைச் சீராக்கங்களும் பொருளாதார சீர்திருத்தங்களும் அவசியம் என்பதை திரும்பத்திரும்ப ஏற்றுக்கொண்டுள்ளன. எனினும் அத்தகைய கொள்கை மாற்றங்களினதும் சீர்திருத்தங்களினதும் அளவு மற்றும் விரைவு அதேபோன்று காலவரையின் தொடர்ச்சி என்பன தொடர்பாக அவர்களுக்கிடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனினும் அத்தகைய விடயங்களின் மீது பரவலான பங்கேற்பின் மூலமும் திறந்த கலந்துரையாடல்களின் மூலமும் இணக்கப்பாட்டினை அபிவிருத்தி செய்யலாம். இதற்கும் மேலதிகமாக பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து பிரிவுகளினதும் போதுமான ஆதரவு இன்றி அத்தகைய கொள்கைச் சீராக்கங்களினதும் சீர்திருத்தங்களினதும் உச்ச நன்மையினை எய்துவது செயல்முறையில் சாத்தியமாகாது. எனவே அத்தகைய முக்கிய விடயங்கள் சம்பந்தமாக தேசிய கருத்தொற்றுமையைக் கட்டியெழுப்புவதற்காக தேவையான முக்கிய கொள்கைச் சீராக்கங்களை அவற்றின் தொடர்ச்சி, விரைவு மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக கருத்திற் கொள்ளப்படும் கால அட்டவணை என்பனவற்றை வெளிப்படையாகக் குறிப்பிடல் வேண்டும். பொதுமக்களும் குறிப்பாக அத்தகைய கொள்கை மாற்றங்களினால் முன்னர் பாதிக்கப்பட்ட அக்கறை கொண்ட குழுக்களும் தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் கொள்கை நடைமுறைப்படுத்தல் என்பனவற்றின் மீத ஒளிவுமறைவு இன்மை மற்றும் வகைகூறல் சம்பந்தமாக தமது கருத்துக்களை திரும்பத்திரும்ப வெளிப்படுத்தியுள்ளனர். எனவே பொருளாதார சீர்திருத்தங்களுக்கான பொதுமக்கள் ஆதரவை கட்டியெழுப்புவதற்கான செயல்முறையில் முக்கிய பொருளாதாரக் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் திறந்த கலந்துரையாடல் ஒன்றினதும் உறுதியான திறனாய்வுகளை ஏற்றுக்கொள்ளுவதையும் குறைவாக மதிப்பிட முடியாது.

***உயர் வளர்ச்சி:*** அதனது தேவைப்பாடு அனைவரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையினால் பலதரப்பட்ட கருத்தரங்குகளில் தற்போது விவாதிக்கப்படும் முக்கிய பொருளாதார விடயங்களாவன நிலைத்து நிற்கக்கூடிய அதிஉயர் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்கான வழிமுறைகளாகும். தரப்பட்ட உள்ளீடுகளினதும் தொழில்நுட்பங்களினதும் தொகுதியொன்றில் பலதரப்பட்ட பொருட்களினதும், பணிகளினதும் சாத்தியமான உச்ச உற்பத்திக்கான பலதரப்பட்ட கூட்டுக்களைக் குறித்துக்காட்டும் கோடான உற்பத்திச்

சாத்திய எல்லைக்கு குறிப்பாக குறுகிய காலத்தில் நகருவதன் மூலமாக மூலவள ஒதுக்கீட்டின் செயல்திறனை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியினை விரைவுபடுத்த முடியும் என பொருளாதாரக் கோட்பாடுகள் விளக்கமளிக்கின்றன. அதேபோன்று நடுத்தர காலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியினை, காரணிகளை ஒன்று திரட்டுவதன் ஊடாக அல்லது தொழில்நுட்ப மேம்பாடுகளின் ஊடாக உற்பத்திச் சாத்திய எல்லையை (அதாவது பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவை விரிவாக்குவதன் மூலம்) வெளிநோக்கி நகர்த்துவதற்கான இயலுமையிலேயே தங்கியுள்ளது என இந்தக் கோட்பாடுகள் குறித்துக்காட்டுகின்றன. எனவே, மூலவள ஒதுக்கீட்டின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் அதேபோன்று உள்ளீடுகளின் கிடைப்பனவை அதிகரிப்பதற்கும் தொழில்நுட்பத்தினை மேம்படுத்துவதற்கும் உதவியாக அமையும் கொள்கைச் சீராக்கங்களையும், சீர்திருத்தங்களையும் மேற்கொள்ளுவது அத்தியவசியமானதாகும்.

மறு வார்த்தைகளில் கூறின் நடுத்தரகால நிலைத்து நிற்கக்கூடிய உயர்வளர்ச்சியைப் பெறுவதற்கான குறிக்கோளானது தொடர்ச்சியான காரணி ஒன்றுசேர்த்தலை அல்லது மொத்த காரணி உற்பத்தியாக்கத்தின் மேம்பாட்டை தேவைப்படுத்துகின்றது. முதலீடுகளின் விரிவாக்கமும் (அதாவது மூலதன ஆக்கம்) புதிய முதன்மை மூலவளங்களைக் கண்டுபிடித்தல் அல்லது கைக்கொள்ளல் என்பனவே பொருளாதாரத்தில் கிடைக்கக்கூடிய உள்ளீடுகளை அதிகரிப்பதற்கான வழிமுறைகளாகும். இதேவேளையில் மூலவள ஒதுக்கீட்டுச் செயல்திறனை மேம்படுத்தல், உற்பத்திச் செயல்முறையில் விரயங்களை ஆகக்குறைந்ததாக்கல் மற்றும் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தல் என்பனவே பொருளாதாரத்தில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்குக் கிடைக்கத்தக்கதாக உள்ள முக்கிய வழிகளாகும். எனவே மூலவள ஒதுக்கீட்டு செயல்திறைன மேம்படுத்தல் தொழில்நுட்ப மேம்பாடு தொழிற்படையில் முதலீடு மற்றும் பங்கேற்பு என்பனவற்றினை ஊக்குவித்து வசதி செய்துகொடுக்கும் கொள்கை வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமானதாக உள்ள வேளையில் நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியினை உறுதிசெய்து கொள்ளுவதற்காக அவற்றில் தாக்கத்தினைக் கொண்டுள்ள தடைகள் அகற்றப்படல் வேண்டும்.

குறிப்பாக பொருளாதார வளர்ச்சிக்கு புதிய வலுவினை ஊட்டுவதில் இலங்கையைப் போன்ற மூலதனப் பற்றாக்குறையைக் கொண்ட நாடொன்றில் முதலீட்டுக்கும் (மூலதனவாக்கம்) வெளியீட்டுக்கும் இடையிலான உறவுமுறை பெரும் முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. மூலதன ஒன்று திரட்டல் தலைக்குரிய மூலதன வெளியீட்டில் 60-70 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்வதுடன் (சருவதேச நாணய நிதியம் 2000) தொடர்ந்தும் வளர்ச்சியின் முதன்மைப் பொறியாக விளங்குகின்றது என ஆய்வுகள் பொருத்தமான முறையில் காட்டியுள்ளன. ஏறத்தாழ 22 சதவீதத்தில் உள்ள இலங்கையின் தற்போதைய முதலீடு/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதமானது நடுத்தர காலத்தில் பெறப்படவுள்ள 8 சதவீதத்திற்கும் மேலான வளர்ச்சியை எய்துவதற்கு எந்த வகையிலும் போதுமானதல்ல. எனவே அதனை ஆகக்குறைந்தது ஏறத்தாழ 30 சதவீதத்திற்கு உயர்த்த வேண்டும். முதலீடுகளை உயர்த்துவதில் உள்நாட்டு முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் ஆகிய இரண்டினையும் ஊக்குவிப்பதில் பெருமளவு நம்பியிருத்தல் வேண்டும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீட்டைக் கொண்டுவந்து வெளிநாட்டுச் சந்தைகளை எய்துவதை இயலச்செய்வது மட்டுமன்றி நவீன தொழில்நுட்பங்களையும் முகாமைத்துவ தேர்ச்சியினையும் கிடைக்கச்செய்வதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியில் நன்மை பயக்கும் வெளிப்புறக் காரணிகளையும் உருவாக்குவர்.

உள்நாட்டு முதலீட்டினை உயர்த்துவதில் தனியார் மற்றும் பொது முதலீடுகள் ஆகிய இரண்டும் பங்கொன்றினை ஆற்றுகின்றன. எனினும் பொதுமுதலீடானது அரசிறை உறுதிப்பாட்டில் "இலகு இலக்கொன்றாக" மாறியுள்ளது. பொது முதலீட்டுக்காக போதுமான அளவு ஒதுக்கீடுகளை மேற்கொண்டு அதனை அடைவதற்கான வழிமுறைகளை மேற் கொள்ளுகின்ற வேளையில் நடைமுறைச் செலவினை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் இதனை நேர்மாற்றம் செய்ய வேண்டும். குறிப்பாக தற்போது இடம்பெற்று வரும் பொருளாதார சீர்திருத்தங்களின் பாகமொன்றாக தனியார் துறையினருக்கு இடமளிப்பதற்காக பல விடயங்களில் பொது முதலீடு அகற்றப்படும் சூழலில் மொத்த உள்நாட்டு முதலீட்டை உயர்த்துவதில் இன்னுமொரு முக்கிய விடயம் என்னவெனில் அரச மற்றும் தனியார் முதலீடுகளுக்கிடையிலான உறவு முறையாகும். பொது முதலீட்டின் உச்ச நன்மையினைப் பெறுவதை உறுதி செய்வதற்கு தனியார்துறையின் முதலீடுகளை உள்இழுக்கும் விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியதோடு அவற்றினை வெளிச்செலுத்தும் விடயங்களில் கவனம் செலுத்தலாகாது. உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் பொதுமுதலீடானது தனியார் துறைமுதலீடுகளை வெளிச்செலுத்தும் என பொதுவாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. நாட்டில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் போதாமையானது தனியார்துறை முதலீடுகளை ஊக்கமிழக்கச் செய்யும் பாரிய தடையாக இருப்பதனால்

உண்மையில் அத்தகைய பொதுமுதலீடுகள் தனியார் துறையினரை ஊக்குவித்து உள்இழுக்கும் தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும்.

அரசதுறை முதலீடுகள் தனியார்துறை முதலீடுகளை தூண்டக்கூடியதும் குறைநிரப்பக் கூடியதுமான தாக்கங்களைக் கொண்டிருந்தபோதிலும் அரசதுறை முதலீடுகளை அதிகரிப்பதன் விளைவான அரசிறைப் பற்றாக்குறையின் விரிவாக்கமானது நிதியியல் வெளிச்செல்லலை ஏற்படுத்தி பெயரளவு வட்டி வீதங்களின் அதிகரிப்பின் ஊடாக உண்மை வட்டி வீதங்களை உயர்த்தலாம். மறுபுறத்தில் இது தனியார் முதலீட்டையும் உள்ளடக்கி கூட்டுக்கேள்வியில் கீழ்நோக்கிய தன்மையொன்றை உந்தச் செய்யலாம். இதன்படி வளர்ச்சி வாய்ப்புக்களை உயர்த்துவதில் அரசதுறை முதலீட்டுத் தூண்டலானது அரசிறைப் பற்றாக்குறையில் கட்டற்ற விரிவாக்கம் ஒன்று இன்றி உட்கட்டமைப்பில் பொதுமுதலீட்டின் சார்பாக அரசிறைச் செலவில் உள்ளடக்க மாற்றமொன்றில் தங்கியிருக்க வேண்டும்.

சலுகைரீதியான வெளிநாட்டு நிதியிடலின் வீழ்ச்சியுறும் போக்கின் காரணமாகவும் பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் அடிக்கடி மாறும் தன்மை அதிகரித்து வருவதனாலும் பாரிய முதலீடுகளுக்கு நிதியிடும்போது உள்நாட்டுச் சேமிப்புக்களின் மீது பாரிய வலியுறுத்தல் காணப்பட வேண்டும். எனினும் ஏறத்தாழ 20 சதவீதமான தற்போதைய தேசிய சேமிப்பு/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 30 சதவீதத்திற்கு மேலான அதிஉயர் முதலீட்டுக் கேள்வியை எதிர்கொள்ளுவதற்கு எந்த விதத்திலும் போதுமானதல்ல. எனவே தேசிய சேமிப்புக்களை போதுமான மட்டத்திற்கு உயர்த்துவதற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 5 சதவீதத்திலுள்ள அரசதுறை குறைச் சேமிப்புக்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவீத நேர்க்கணிய சேமிப்பாக நேர்மாற்றம் செய்கின்ற வேளையில் தனியார் சேமிப்புக்களை ஊக்குவிப்பது அத்தியவசியமாகும். எனவே தனியார் சேமிப்புக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் தடைகளை அகற்றும் வேளையில் தனியார் சேமிப்புக்களை ஊக்குவிப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்தச் சூழலில், நடைமுறைப்படுத்தும் கட்டத்தில் போதுமான பாதுகாப்புக்கள் வழங்கப்படாவிட்டால் வட்டி வருவாயின் மீதான வரி முன்மொழிவுகள் தனியார் சேமிப்புக்களை ஊக்குவிப்பதில் எதிர்பாராத பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

உற்பத்தியாக்கத்தை அதிகரிப்பதில் ஆராய்ச்சியும், அபிவிருத்தியும், நவீன தொழில்நுட்ப மாற்றல் மற்றும் காரணிச்சந்தை நகர்வு மற்றும் நெகிழ்ச்சி என்பனவற்றில் முக்கியமாகத் தங்கியிருத்தல் வேண்டும். எனினும் வளர்முக நாடுகளின் குழுவொன்றாக சராசரிச் செலவுடன் (1990இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.64 சதவீதம்)[அ] ஒப்பிடுகையில் ஆராய்ச்சி அபிவிருத்திக்காக இலங்கையில் மேற்கொள்ளப்படும் செலவு மிகச் சிறியதாகவும் (உள்நாட்டு உற்பத்தியில் 0.08 சதவீதம்) அவர்களது சொத்துரிமையினால் பாதுகாப்பதன் ஊடாகவும் தனிச் சிறப்புரிமைகளை வலுப்படுத்துவதன் மூலமும் ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் அரசதுறையிலேயே முழுமையாகத் தங்கியிருப்பதற்கு முயற்சி செய்யாது கேள்வி வழங்கல் சக்திகளின் நியாயமான செயலாற்றத்துக்கு இடமளிப்பதன் மூலம் தனியார்துறைக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் தனியார் துறையினரை ஆராய்ச்சி அபிவிருத்தியில் ஈடுபடச் செய்வதன் மூலம் இதற்கு உறுதியான தீர்வு ஒன்று காணப்படலாம். இந்த வேளையில் நவீன தொழில்நுட்பத்தை மாற்றுவதற்கான காரணியாக வெளிநாட்டு முதலீடுகள் பயன்படுத்தப்படலாம்.

கூட்டுக்கேள்விப் பக்கத்தில் உள்நாட்டுச் சந்தையின் அளவு அதேபோன்று அதனை விரிவாக்குவதில் காணப்படும் மட்டுப்படுத்தல் என்பனவற்றின் நோக்கில் ஏற்றுமதிக் கேள்வியில் பெருமளவில் தங்கியிருத்தல் வேண்டும். உண்மையில், உயர் வளர்ச்சியுடனான வருமான அதிகரிப்பிலிருந்து நன்மைபெற்று அதிகரித்த உள்நாட்டு முதலீடுகளும் நுகர்வோரின் கேள்வியின் அதிகரிப்பும் கேள்விக்கான உந்துதலை ஏற்படுத்தும். எனினும் நிலைத்து நிற்கக்கூடிய உயர்வளர்ச்சிக்கு ஆதரவு வழங்குவதற்குப் போதுமானதாக இருக்காது. இதன்படி ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களின் சார்பான முதலீடுகளின் தன்மையிலான வலுப்படுத்தலும் மிகைக் குறிப்பீடு ஆகாது. தற்போதைய மிதக்கும் செலாவணிவீதமானது வெளிநாட்டுப் போட்டித்தன்மையை வலுப்படுத்துவதில் பெருமளவு உதவியாக இருக்கின்றபோதிலும் உற்பத்தியாக்க மேம்பாடுகளினால் வலுப்படுத்தப் பட்டால் அன்றி அது மட்டும் போதுமானதாகாது. இது தொடர்பாக மனித தேர்ச்சியை மேம்படுத்தல், உற்பத்தியாக்க அதிகரிப்புக்கு கூலி அதிகரிப்பினை இணைத்தல், தொழிலாளர் சந்தையின் நெகிழ்ச்சி, தொழில்நுட்பத்தினை நவீனமயப்படுத்தல், போட்டித்தன்மை கொண்ட சந்தை விலைகளில் செயல்திறன் மிக்க தரமான உட்கட்டமைப்பு வசதிகளின் கிடைப்பனவு பயன்பாட்டு விடயங்களின் விலையிடலில் குறுக்குவிலை உதவிக் கொடுப்பனவுகளின் அகற்றல் மற்றும் தேவையற்ற ஒழுங்குவிதிகளின் அகற்றலும் செயல்திறன் ஒழுங்குவிதிகளை செயல்திறன் மிக்க

(அ) அணிசாரா மற்றும் ஏனைய வளர்முக நாடுகளுக்கான ஆராய்ச்சி தகவல் முறைகள் உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் அபிவிருத்தி மீளாய்வு தொகுதி 4 எண் 1 ஏப்பிறல் 2001

ஒழுங்குவிதிகளினால் மாற்றீடு செய்தலும் நாட்டின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையினை மேம்படுத்துவதற்கு அத்தியாவசியமானவையாகும்.

**உள்ளார்ந்த வளர்ச்சித்துறைகள்:** தற்போது கருத்திற் கொள்ளப்படும் இதேபோன்றதொரு விடயம் என்னவெனில் பொருளாதாரத்தில் அதிஉயர் உள்ளார்ந்த வளர்ச்சிக்கான துறைகளை இனங்காணுவதற்கும் தற்போதைய செயல்திறன் இன்மைகள், தாழ்ந்த உற்பத்தியாக்கம் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் என்பனவற்றின் மத்தியில் விவசாயமும் அதனோடு இணைந்து நடவடிக்கைகளும் கைத்தொழில் மற்றும் பணிகள் ஆகிய முக்கிய மூன்று துறைகளிலிருந்தே உயர் வளர்ச்சிக்கான பங்களிப்பினை எதிர்பார்க்க முடியும். எனினும் பயிரிடப்படக்கூடிய நிலங்களின் மட்டுப்படுத்தப்படுத்தல்களின் காரணமாக பொருளாதார வளர்ச்சியின் விரைவுபடுத்தலில் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் மீது அதிகரித்த வலியுறுத்தல் காணப்படல் வேண்டும்.

**பணிகள்** :உலகளாவிய ரீதியில் பணிகளின் விரிவாக்கம் அதிசயத்தக்கதாக அமைந்து வளர்ச்சிக்கான உந்துவிசையொன்றாகவும் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு இன்றியமையாததொன்றாகவும் பணிகள் கருதப்படுவதற்கு வழிவகுத்துள்ளது. பணிகள் துறையின் பங்கு வளர்ச்சியடைந்த நாடுகளில் 70 சதவீதத்திற்கு மேலானதாகவும் இலங்கையில் ஏறத்தாழ 53 சதவீதமானதாகவும் காணப்படுகின்றது. மேலும் வர்த்தகத்தில் பெருமளவு தங்கியுள்ள தீவுப் பொருளாதாரம் என்ற வகையில் இலங்கையின் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்கள் பன்னாட்டு ரீதியில் போட்டித்தன்மைமிக்க பணிகள் நிலையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வதிலேயே பெருமளவிற்குத் தங்கியிருக்கும். பணிகள்துறை வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகளுக்கு பல்வேறு வகைப்பட்ட பணிகளை வழங்குவதனால் அத்தகைய பணிகளிலான மேம்பாடானது முழுப் பொருளாதாரத்தினதும் உற்பத்தியாக்கத்திறனை அதிகரிக்கும்.

நாட்டின் வெளிநாட்டு போட்டித்தன்மையை பேணுவதற்கு போக்குவரத்து மற்றும் துறைமுகப் பணிகளின் செயல்திறன் இன்றியமையாததாகும். அண்மைய மேம்பாடுகளுக்கு மத்தியிலும் கொழும்புத் துறைமுகத்தின் செயல்திறன் இப்பிராந்தியத்திலுள்ள சிங்கப்பூர், சலாலா ஆகிய ஏனைய போட்டி துறைமுகங்களைப் பார்க்கிலும் பெருமளவு வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. கொழும்புத் துறைமுகத்தின் தற்போதைய வருமானத்தின் பெரும்பகுதி மாற்றுக்கப்பலேற்றல் பணிகளிலிருந்து பெறப்படுவதுடன் துறைமுகப் பணிகளின் எதிர்கால வளர்ச்சி மாற்றுக்கப்பலேற்றல் வாணிபத்தை கவர்ந்திழுப்பதிலேயே தங்கியுள்ளது. இதனால் கொழும்புத் துறைமுகத்தின் பிராந்திய போட்டித் தன்மையை வலுப்படுத்துவதற்கும் அத்துடன் நாட்டின் வெளிநாட்டு வர்த்தக அபிவிருத்திக்கு உதவியளிப்பதற்கும் கொழும்புத் துறைமுகத்தின் செயல்திறனை மேம்படுத்துவது மிக முக்கியமாகும். கொழும்புத் துறைமுகத்தின் இயலளவு விரிவாக்கத்திற்கான மட்டுப்படுத்தல் மற்றும் இந்து சமுத்திரத்தின் மிகவும் சுறுசுறுப்பான கடல் போக்குவரத்து வழிகளில் ஒன்றுக்குச் சமீபமாக அம்பாந்தோட்டை துறைமுகத்தின் அபிவிருத்தியானது நாட்டின் துறைமுகப் பணிகளை விரிவாக்குவதற்கு பலமான தூண்டுதலை வழங்கும். இதைப்போன்றே சமாதானம் ஏற்படுமாயின் உலகிலுள்ள மிகப்பெரும் இயற்கைத் துறைமுகங்களுள் ஒன்றான திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்திக்கு வசதியளிப்பதில் குறிப்பாக மாற்றுக்கப்பலேற்றல் வசதிகள், கப்பல் பழுதுபார்ப்பு மற்றும் பேணல் பணிகளை வழங்கி துறைமுகப்பணிகளையும் அதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அதன் துறைரீதியான பங்களிப்பினையும் மேலும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரிக்கலாம்.

உயர் பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு திறமையான, செலவு குறைந்த, தரமுயர்ந்த நம்பகத்தன்மை கொண்ட போக்குவரத்து பணி இன்றியமையாததாகும். தற்போதைய செயல்திறனற்ற, தரம் குறைந்த, நம்பகத்தன்மையற்ற பயணிகள் போக்குவரத்து பணி முழுப் பொருளாதாரத்தினதும் உற்பத்தியாக்கத்தினை மோசமாகப் பாதிக்கின்றது. தனியார் மற்றும் அரச துறைகளினால் இயக்கப்படும் பொதுப் பயணிகள் போக்குவரத்தில் குறைந்த தூரத்திற்கு பயணம் செய்வதற்குக்கூட நீண்ட நேரம் எடுப்பதானது ஏனைய துறைகளின் தொழிலாளர் உற்பத்தியாக்கத்தினை கணிசமாக பாதிக்கின்றது. அவ்வப்போதைக்கான சீராக்கங்களின் அடிப்படையிலமைந்த பொதுப் பயணிகள் போக்குவரத்துப் பணிகளுக்கான நடைமுறையிலுள்ள கட்டணமுறை இத்துறையின் இலாபகரமான செயலாற்றத்தைப் பாதித்து புதிய முதலீடுகளை ஊக்கமிழக்கச் செய்வதுடன் பணிகளின் தரத்தினையும் குறைக்கின்றது. எனவே போக்குவரத்துத் தொழில்துறையின் செயலாற்றத்தினை உறுதிப்படுத்தி பெருமளவு முதலீடுகளை ஊக்கமிழக்கச் செய்வதுடன் பணிகளின் தரத்தினையும் குறைக்கின்றது. எனவே போக்குவரத்து தொழில்துறையின் செயலாற்றத்தினை உறுதிப்படுத்தி பெருமளவு முதலீடுகளை கவருவதற்கும், இயலளவினை விரிவுபடுத்துவதற்கும் பயணிகள் போக்குவரத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கும்

தன்னியக்கமானதும் ஒளிவுமறைவற்றதுமான போக்குவரத்துக் கட்டண சீராக்கல் முறையொன்றினை அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

செயற்றிறன் வாய்ந்த பயணிகள் புகையிரதமுறை குறிப்பாக கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வசதியான, மலிவான பொது போக்குவரத்து பணிகளை வழங்குவதுமட்டுமன்றி வீதிப்பயணிகள் போக்குவரத்திலான அதிகரித்த போக்குவரத்து நெரிச்சல்களை கட்டுப்படுத்துவதற்கும் உதவுகின்றது. எனினும் புகையிரதப் பணிகளின் நம்பகத்தன்மையும் தரமும் கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும் மோசமான பேணலின் காரணமாக புகையிரத விபத்துக்களும், கணிசமாக அதிகரித்துள்ளது. இந்த செயற்றிறனின்மை மற்றும் குறைபாடுகளுடன் இணைந்து அதிகரித்த உதவுதொகை அளிக்கப்பட்ட கட்டணங்கள் உயர்ந்த நிதிச்சுமையை விளைவித்தன. தனியார்துறையின் பங்கேற்பு மற்றும் தன்னியக்க கட்டண சீராக்கல் முறை என்பனவற்றுடனான அனைத்தையும் உள்ளடக்கிய மீளவொழுங்குபடுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்று நீண்டகால செயலாற்றத்தையும் புகையிரதப் பணிகளின் எதிர்கால வாய்ப்புக்களையும் மேம்படுத்துவதற்கு இன்றியமையாததாகும்.

தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் கேள்வி, நடைமுறையிலுள்ள மட்டுப்படுத்தப்பட்ட இயலளவு மற்றும் காலநிலை மாற்றத்தினால் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய தன்மை என்பன மின்வலுவிற்கான கேள்வி மற்றும் நிரம்பலுக் கிடையேயான இடைவெளி அதிகரிப்பதனை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இது வலுத்துறையில் எதிர்கால விரிவாக்கத்திற்கு இருக்கின்ற வாய்ப்புக்களையும் எடுத்துக் காட்டுகின்றது. உற்பத்தி செயற்பாடுகளில் மின்வலுவிற்கான கேள்வி அதிகரித்தமை மற்றும் அதிகரித்த மின் உபகரணங்களின் பாவனையுடன் நுகர்வோர் வலையமைப்பு விரிவடைந்தமை என்பன காரணமாக அதிகரித்த மின்வலுவிற்கான கேள்வி மின்வழங்கல் இரட்டைபுள்ளி வீதத்தில் வளர்ச்சியடைய வேண்டிய தேவையை எடுத்துக்காட்டுகின்றது. 1 சதவீதத்தினால் அதிகரிக்கும் பொருளாதார வளர்ச்சி மின்வலுவிற்கான கேள்வியை கிட்டத்தட்ட 2 சதவீதத்தினால் உயர்த்துமென தற்காலிக மதிப்பீடுகள் எடுத்துக்காட்டுகின்றன. அதனால் விரும்பத்தக்க உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதனை உறுதிப்படுத்துவதற்காக மின்வலு உருவாக்கமானது தற்போதைய மிகைக் கேள்வியை இல்லாதொழிக்க மட்டுமன்றி அதிகரிக்கும் புதிய கேள்வியையும் ஈடுசெய்யத்தக்கதாக விரிவாக்கப்படல் வேண்டும். மேலும் மழை வீழ்ச்சியில் ஏற்படும் மாறுபாடு மின்வலு வழங்கலில் ஏற்படுத்தும் பாதிப்பினை குறைப்பதற்காக வலு உருவாக்கத்தினை நிலக்கரி, அனல், சூரிய மற்றும் காற்று ஆகிய ஏனைய மூலவளங்களுக்கு பல்லினப்படுத்துவதன் மூலம் நீர்மின்வலுவில் தங்கியிருத்தலை மேலும் குறைத்தல் வேண்டும்.

மின்வலு வழங்கலில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை நாட்டின் உற்பத்தியாக்கத்திறன் மற்றும் உற்பத்தி இயலளவின் விரிவாக்கம் என்பனவற்றில் பாதகமான தாக்கத்தினைக் கொண்டுள்ளன. இலங்கையின் தற்போதைய வலுக் கட்டணமானது இப்பிராந்தியத்திலேயே அதியுயர்வானதாக அமைந்து நாட்டின் வெளிநாட்டு போட்டித்தன்மையை வெகுவாக நலிவுறச் செய்கின்றது. வலுத்துறையின் நீண்டகால செயற்பாடு மற்றும் எதிர்கால வாய்ப்புக்கள் என்பனவற்றை மேம்படுத்துவதற்கு இலங்கை மின்சபையின் வலு உருவாக்கம், மின் ஊடுகடத்தல் மற்றும் பங்கீடு ஆகிய செயற்பாடுகளை தனித்தனி கூறுகளாக பிரித்தல், குறுக்கு உதவு தொகையினூடான உற்பத்தி செயற்பாடுகளுக்கெதிரான விலையிடலை திருத்துவதற்காக தன்னியக்க ஒளிவுமறைவற்ற கட்டண சீராக்கல் முறையொன்று அறிமுகப்படுத்தல், அதியுயர்வான 20 சதவீத மின்வழங்கல் முறையிலுள்ள இழப்புக்களை குறைத்தல், வலுத்துறையில் தனியார்துறை பங்கேற்பிற்கு வழிவகுத்து அரசியல் நிலையீட்டினை அகற்றுதல் என்பன உள்ளிட்ட அனைத்தையும் உள்ளடக்கிய மறுசீரமைப்பு பொதியொன்று அவசியமாகும்.

நவீன பொருளாதாரமொன்றின் விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு செயற்றிறன்மிக்க நிதியியல்துறை இன்றியமையாததாகும். வெளிநாட்டு வங்கிகள் உள்ளிட்ட தனியார்துறைக்கு நிதியியல்துறை திறக்கப்பட்டு, ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை முறைமை பலப்படுத்தப்பட்டதற்கு மத்தியிலும் நிதியியல்துறை சில அக்கறைகளை பிரதிபலிக்கின்றது. அவற்றுள் அதிகரித்த வட்டிவீத வேறுபாடு, உயர்ந்த செயற்படாக் கடன் விகிதாசாரம், மூலதனச் சந்தைத் தொழிற்பாடுகளின் மந்தமான அபிவிருத்தி முறிகளின் சந்தை அபிவிருத்தியடையாமை மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளின் மெதுவான விரிவாக்கம் என்பன அவற்றுள் சிலவாகும். அதிகரித்த இடையீட்டு செலவுகள் கொண்ட இரு அரச வங்கிகளும் நட்டத்தில் இயங்கும் பல கிளைகளுடனும் அதிகரித்த செயற்படாக்கடன் விகிதாசாரத்துடனும் வர்த்தக வங்கித் தொழில் முறைமையின் மொத்த வைப்புக்கள் மற்றும் கடன்களின் 50 சதவீதத்திற்கு மேலானவற்றிற்கு வகைகூறுகின்றன. இதைப்போன்றே இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நாட்டின் காப்புறுதி வாணிபத்தில் 70 சதவீதத்திற்கும் மேலானவற்றிற்கு வகைகூறுகின்றது. இரு நீண்டகால இளைப்பாற்று

நன்மை நிதியங்களான ஊழியர் சேமநிதியமும், ஊழியர் நம்பிக்கை நிதியமும் நேரடியாக அரசதுறை முகாமைத்துவத்தின் கீழ் வருவதுடன் தனியார்துறைக்கு அவற்றின் நீண்டகால சேமிப்புக்களை போதியளவில் வழங்குவதில்லை. இப்பிராந்தியத்திலுள்ள ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் நாட்டின் நிதியியல் சந்தை விரிவாக்கம் தாழ்ந்த மட்டத்தில் காணப்படுவதானது இத்துறையின் எதிர்கால வளர்ச்சியாற்றலை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. அரசதுறை நிதியியல் பணிகளோடு இணைந்து நிதியியல் துறையினதும், உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தல் என்பன நிதியியல் முறைமையின் விரைந்த வளர்ச்சியையும், செயற்றிறனையும் வசதிப்படுத்தி மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அதன் துறைவாரியான பங்களிப்பினை அதிகரிக்கச் செய்யும்.

தீவொன்று என்றவகையில் இலங்கையின் மிகப்பாரிய சிறந்த இயற்கை மூலவளங்களுள் ஒன்றாக கடல் விளங்குகின்றது. எனினும் இந்த பெறுமதிமிக்க இயற்கை மூலவளத்திலிருந்தான முழுப் பயன்களையும் இலங்கையால் பெற்றக் கொள்ளமுடியவில்லை. அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் பல்வேறு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டதற்கு மத்தியிலும் நாட்டின் மீன் உற்பத்தி இன்னும் உள்நாட்டுக் கேள்வியைக் காட்டிலும் தாழ்வாகக் காணப்படுகின்றது. தனியார்துறையையும் உள்ளடக்கிய பொருத்தமான அபிவிருத்தி உபாயமானது உள்நாட்டுக் கேள்வியை ஈடுசெய்யத்தக்கதாக மீன் உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமன்றி ஏற்றுமதி வருவாய்களையும் தோற்றுவிக்கும். சுறுசுறுப்பான பன்னாட்டு கடல்மார்க்கங்களுக்கு மிக சமீபமாக பல இயற்கைத் துறைமுகங்களை இலங்கை கொண்டுள்ளபோதிலும் கொழும்பு துறைமுகம் மட்டுமே விரிவாக்கமடைந்து மாற்றுக் கப்பலேற்றல் வாணிபத்தை கவர்ந்திழுத்து மேம்பாடடைந்துள்ளது. அத்தியாவசியமான ஒழுங்குமுறைப்படுத்தல் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படுமாயின் நாட்டின் எதிர்கால வளர்ச்சியை துரிதப்படுத்துவதில் கடல்சார்ந்த பொருளாதாரச் செயற்பாடுகளை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இலங்கையின் சுற்றுலாத் தொழில்துறை மந்தமான அபிவிருத்திகளை எதிர்நோக்கியமைக்கு குறிப்பாக மந்தமான அபிவிருத்திகளை எதிர்நோக்கியமைக்கு குறிப்பாக பயங்கரவாத தாக்குதல்களின் மோசமான தாக்கங்களே காரணமாகும். நாட்டின் அமைவிடம், இயற்கை மூலவளங்கள், கலாச்சார அம்சங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என்பவற்றை கருத்திலெடுக்கையில் எதிர்கால அபிவிருத்திகளுக்கு பாரிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன. கடல்சார்ந்த விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்குச் சார்ந்த செயற்பாடுகள் என்பவற்றின் அபிவிருத்தி சுற்றுலாத் தொழில்துறையின் வளர்ச்சியாற்றலை மேலும் மேம்படுத்தும். சமாதானம் ஏற்பட்டு செயற்திறன்மிக்க மேம்பாட்டு பிரச்சனைகள் முன்னெடுக்கப்படும்போது சுற்றுலாத் தொழில்துறையின் வளர்ச்சி அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அதன் பங்களிப்பு அதிகரிப்பதோடு தொழில் வாய்ப்புக்களும் உருவாக்கப்படும். இதைப்போன்றே சுற்றுலாத் துறையின் அபிவிருத்திகள் தொடர்புபட்ட ஏனைய பணிகள் மற்றும் சில கைத்தொழில்துறைகள் என்பவற்றின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதனூடாக பொருளாதார வளர்ச்சிக்கு மறைமுகமாக பங்களிப்பினை வழங்கும். நாட்டிற்கு அதிகூடிய நன்மைகள் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு மேம்பாட்டு பிரச்சார நடவடிக்கைகளில் உயர் பெறுமதி கூட்டப்பட்ட சுற்றுலாவினை இலக்கிடுவது இன்றியமையாததாகும்.

**கைத்தொழில்:** 1977இலிருந்து இலங்கை பின்பற்றிவரும் தனியார்துறையினால் வழிப்படுத்தப்படும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் மயமாக்கல் உபாயமானது கடந்த இரு தசாப்த காலத்தில் கைத்தொழில் துறையின் பல்லினப்படுத்தலை ஊக்குவித்து பெருமளவு தொழில் வாய்ப்புக்களை வழங்கியதுடன் பொருளாதார வளர்ச்சிக்கும் ஏற்றுமதி வருவாய்ப் பெருக்கத்திற்கும் பங்களிப்புச் செய்தது. எனினும் தற்போது கைத்தொழில்துறை வெளிநாட்டுச் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு அதிகரித்தளவில் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் காணப்படுகின்றமைக்கு இது ஒருசில உற்பத்திப் பொருட்களிலேயே அதிகரித்தளவில் தங்கியிருப்பது மட்டுமன்றி ஒருசில வெளிநாட்டு சந்தைகளிலேயே தங்கியிருத்தலுமாகும். ஆடைகள், தயாரிப்புத்துறை தற்பொழுது உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்தியின் 45 சதவீதத்திற்கும், மொத்தக் கைத்தொழில் ஏற்றுமதிகளில் 69 சதவீதத்திற்கும் வகைகூறுகின்றது. மேலும் நாட்டின் ஆடை ஏற்றுமதி சந்தையின் 64 சதவீதத்திற்கு ஐ.அமெரிக்கா வகைகூறுகின்ற வேளையில், ஐக்கிய இராச்சியமும் ஐரோப்பிய ஒன்றியமும் முறையே 19 சதவீதத்திற்கும், 30 சதவீதத்திற்கும் வகைகூறுகின்றன. இந்நாடுகளின் பொருளாதார நிலைமைகளிலேற்படும் மாற்றங்களும் இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு வழங்கப்பட்ட சிறப்பு சலுகைகளும் இலங்கையின் கைத்தொழில்துறை மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. குறிப்பாக இது பல்நூலிழை ஏற்பாடு 2005இல் அகற்றப்படவிருக்கும் ஒரு பின்னணியில் முக்கியத்துவம்

பெறுகின்றது. எனவே கைத்தொழில்துறையின் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களையும். தாக்குப்பிடிக்கும் தன்மையையும் மேம்படுத்துவதற்காக பொருட்கள் அடிப்படையிலும் ஏற்றுமதிச்சந்தை சேரிடம் அடிப்படையிலும் அமைந்த கைத்தொழில்துறைக்கான பல்லினப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்று மிக் முக்கியமாகும்.

அதேவேளை எதிர்கால கைத்தொழில் வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு உயர்பெறுமதி கூட்டப்பட்ட கைத்தொழில்களுக்கு நகர்வது அவசியமாகும். இதைப்போன்றே கட்டுப்பாடற்ற வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்திய சந்தையில் அதிகரித்த வாய்ப்புக்களை விரிவுபடுத்துவது மட்டுமன்றி நாட்டிற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவருவதற்கும் வழிவகுக்கும்.

பன்னாட்டு சந்தை வாய்ப்புக்கள் மற்றும் நாட்டின் கல்வியறிவு உடையவர்களின் உயர்ந்த வீதம் என்பவற்றை கருத்திற்கொண்டு தகவல் தொழில்நுட்ப தொழில்துறையை விரிவுபடுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளல் வேண்டும். தகவல் தொழில்நுட்ப தொழில்துறையின் விரிவாக்கமானது ஏனைய அனைத்து பொருளாதார துறைகளுக்கும் பரவிச் சென்று சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலம் அவற்றின் உற்பத்தியாக்கத் திறனையும் மேம்படச் செய்யும். தகவல் தொழில்நுட்ப தொழில்துறை விரிவாக்கத்தில் எதிர்நோக்கப்படும் முக்கிய சில கட்டுப்பாடுகளாக மட்டுப்படுத்தப்பட்ட தொலைத் தொடர்பூட்டல்கள்துறை இயலளவு மற்றும் தாழ்ந்த மட்டத்திலான கணனியறிவு என்பன விளங்குகின்றன. எனவே கணனி அறிவை விரிவுபடுத்துவதற்கும் போட்டித் தன்மைமிக்க சந்தைமுறைமையொன்றின்கீழ் தொலைத் தொடர்பூட்டல் வசதிகளை விரிவுபடுத்துவதற்குமான நடவடிக்கைகள் அவசியமானதமாகும்.

சமனிலையான உயர் வளர்ச்சியை தோற்றுவிப்பதிலும் பெருமளவு தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதிலும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் மிக முக்கிய பங்கினை ஆற்றமுடியும். உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளை துணை ஒப்பந்தங்களில் வழங்குவதை பிரபல்யப்படுத்தல் என்பன சிறிய நடுத்தர கைத்தொழில்துறை விரிவாக்கத்தினை ஊக்குவிக்கும்.

இலங்கையிலிருந்து தொகை வடிவில் ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் பங்கு அதிஉயர் 60 சதவீதமாக விளங்கி தேயிலை தொழில்துறையில் கூட்டப்பட்ட பெறுமதியினை மேலும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதனை பிரதிபலிக்கின்றன. இப்பின்னணியில் தேயிலை கலவைத் தொழில்துறையின் விரிவாக்கம் முக்கியவொரு பங்களிப்பினை செய்யமுடியும் தேயிலைத் தொழிற்துறையின் பங்கேற்பாளர்கள் சிலர் வெளிப்படுத்திய எச்சரிக்கையுணர்வுகளுக்கு செவிமடுத்து தேயிலை இறக்குமதிகளை தாரளமயப்படுத்துவதானது நாட்டின் தேயிலைக் கலவை தொழில்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு தூண்டும். இதைப் போன்றே நவீன கணனி தொழில்நுட்பத்தின் உதவியுடன் உலகின் பாரிய தேயிலை ஏலமான கொழும்பு தேயிலை ஏலத்தை நவீனமயப்படுத்துவதானது போட்டித்தன்மைமிக்க ஏலமிடல் முறையினூடாக போட்டிகரமான விலையை பெறுவதற்கு வசதியளிப்பது மட்டுமன்றி ஏற்றுமதியாளர்களின் (கொள்வனவாளர்களின்) நேரத்தையும் சேமித்து தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமான கூட்டலுக்கும் வசதியளிக்கமுடியும்.

அதிகரித்த உள்நாட்டு பெறுமதி கூட்டலுக்கான வாய்ப்பினையும் பெருமளவு, தொழில்வாய்ப்புக்களை உருவாக்கக்கூடிய ஆற்றல்களையும் கொண்டுள்ள கட்டுமானத் தொழில்துறை பல் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றது. முதலாவதாக, வீதி அபிவிருத்தி அதிகாரச்சபை, போன்ற அரசதுறை நிறுவனங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதி முறைகள் என்பன கட்டுமானத் தொழிற்றுறையின் விரைந்த வளர்ச்சிக்கு உகந்ததாக காணப்படவில்லை. வரவு செலவுத்திட்ட முகாமைத்துவ மூலோபாயத்தின் பகுதியொன்றாக அரசதுறைக் கட்டுமானச் செயற்பாடுகளை பொறுப்பேற்கும் ஒப்பந்தக்காரர்களுக்கான கொடுப்பனவுகளை கிரமமாக தாமதப் படுத்துகின்றமையானது திரவத்தன்மை பிரச்சனைகளை விளைவித்து இத்தொழில்துறையின் ஆற்றலையும் செயற்றிறனையும் மோசமாக பாதிக்கச் செய்கின்றது. இப் பிரச்சனைகளுக்கான தீர்வானது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான கட்டுமானத்துறையின் பங்களிப்பினையும் செயற்றிறனையும் மேம்படுத்துவதற்கு உதவும்.

**விவசாயம்:** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 20 சதவீதத்திற்கு அதேபோன்று ஏற்றுமதி வருவாய்களுக்கும் நேரடியாக வகைகூறுவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் விவசாயத்துறை இன்னமும் ஆதிக்கம் செலுத்துகின்றவேளையில் விவசாய பதனிடலுக்கான உள்ளீடுகளை வழங்குவதன் மூலமும் உள்நாட்டு உணவுத் தேவையின் பாரிய பாகமொன்றினை வழங்குவதன் மூலமும் தொழிற்படையின் மூன்றில் ஒரு பங்கிற்கும் (36 சதவீதம்) மேலான ஆட்களை நேரடியாக தொழிலில் ஈடுபடுத்துகின்றது. சுதந்திரம் பெற்றதிலிருந்து தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால்

வழங்கப்பட்ட பலதரப்பட்ட ஆதாரத்திட்டங்கள் தொடர்ந்து காணப்பட்டபோதிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சார்புரீதியான பங்கினை குறைவடையச் செய்து விவசாயத்துறையின் வளர்ச்சி தாழ்வாகவே காணப்பட்டது. அதேபோன்று ஏனைய வளர்முக நாடுகள் சிலவற்றுடன் ஒப்பிடுகையில் அதிஉயர் சராசரி உற்பத்திச் செலவினை விளைவித்து விவசாய உற்பத்தியாக்கம் தாழ்வாகவே காணப்பட்டுள்ளது. இதன் விளைவாக காலநிலையின் மாற்றங்களினால் மந்தநிலையில் காணப்படல் மற்றும் சில விடயங்களில் துறைவாரியான வெளியீட்டையே வீழ்ச்சியடையச் செய்தல் என்பனவற்றின் காரணத்தினால் நாட்டின் வளர்ச்சிக்கான கட்டுப்பாடுகள் என்பன சம்பந்தமாக அண்மைய ஆண்டுகளில் பெருமளவில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அவ்வப்போதைய தீர்வை மட்டும் தீர்வையல்லா மாற்றல்களுடன் கொள்கை முரண்பாடுகளும் நேரகாலத்தில் போதுமான அளவில் தரமான விதைகள் இடைக்காமையும், நவீன உயர் தொழில் பயிர்ச்செய்கை முறைகளைப் பயன்படுத்தாது மரபுவழியான உயர் உள்ளீட்டுச் செறிவு கொண்ட பயிர்ச்செய்கைப் பிரேயாகங்களை மேற்கொள்ளல், நலிவுடைய சந்தைப்படுத்தல் முறை, மற்றும் அறுவடைக்குப் பின்னான இழப்புக்கள் என்பன இத்துறையின் மோசமான செயலாற்றத்தில் தாக்கம் கொண்டுள்ள காரணிகளாகும்.

எனினும் உறுதியானதும் சாதகமானதுமான கொள்கைகளினாலும் பொருத்தமான நிறுவனமுறைகளினாலும் விவசாயத்தில் உயர் வளர்ச்சியினை எய்தலாம் என்பதை முக்கியமான விவசாய நாடுகளின் (சிலி, இந்தோனேசியா, மலேசியா,மொரிசஸ்) அண்மைக்கால வெற்றிகரமான அனுபவங்கள் குறித்துக்காட்டுகின்றன. காணிகளின் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் விவசாயத்தில் அனைத்து அதிகரிப்புக்களும் விளைச்சலை அதாவது உற்பத்தியை அதிகரிப்பதனாலேயே பெறப்படவுள்ளது. பொதுவான சந்தை சார்ந்த கொள்கை வரைச்சட்டமொன்றுடன் இசைவுடைய அனைத்தையும் உள்ளடக்கிய கொள்கைத் தொகுதியொன்றானது விவசாய வெளியீட்டுக்கு புத்துயிரளிப்பதற்கு அத்தியாவசியமானதாகும். இந்த விடயத்தில் காணிச்சந்தையை மேம்படுத்தும் வேளையில் விதை மற்றும் வளமாக்கி போன்ற உள்ளீட்டுச் சந்தைகளை தாராளமயப்படுத்தல் அதிஉயர் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளுவதற்கு உதவக்கூடும். அதேபோன்று ஆராய்ச்சி அபிவிருத்தியில் ஈடுபடும்படி தனியார் துறையினை ஊக்குவிப்பதும் விரிவாக்கப் பணிகளின் வழங்கலில் அவர்களை ஈடுபடச் செய்வதும் நவீன பயிர்ச்செய்கைப் பிரேயாகங்களுக்கான நகர்வினை விரைவுபடுத்தும். இதற்கு மேலதிகமாக பொருட்கொண்டு செல்லல், பொதியிடல், களஞ்சியப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பன அறுவடைக்குப் பின்னரான இழப்பினைக் குறைவடையச் செய்து அவர்களது உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலையொன்றை உறுதிசெய்து விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் பாதை வலையமைப்பை அபிவிருத்தி செய்வதானது உற்பத்தி வெளியீட்டை கொண்டு செல்லுவதற்கு மட்டுமன்றி விவசாய உள்ளீடுகளின் வழங்கலை செயல்திறன் மிக்கதாகும்.

விவசாய சந்தைகளின் செயல்திறனை மோசமாகப் பாதிக்கும் ஏனைய முக்கிய காரணிகளாக செயல்திறன் மிக்க முன்னோக்கிய சந்தைகள் காணப்படாமை, போட்டித்தன்மை கொண்ட விலைத்தேர்வு முறை காணப்படாமை, பொருத்தமான விலைச்சமிக்ஞைகளை வழங்குவதற்கு சந்தைக்கு இயலாது காணப்படுகின்றமை என்பன விளங்குகின்றன. பொருத்தமான விலைச் சமிக்ஞைகள் இல்லாமையினால் விவசாயி மேற்கொள்ளும் தீர்மானமானது கேள்வி நிரம்பலில் அன்றி நிருவகிக்கப்பட்ட விலை போன்ற செயல்திறன் குறைந்த முறைகளில் தங்கியுள்ளதோடு தெளிவாகவே செயல்திறன் அற்ற மூலவள ஒதுக்கீட்டுக்கு இட்டுச் செல்கின்றது. இதற்கு மேலதிகமாக துண்டிக்கப்பட்டதும் போட்டித்தன்மையற்றதுமான சந்தைகள் காணப்படுவதானது விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு பொருத்தமான விலைகளைக் கண்டுபிடிப்பதை தடைசெய்கின்றது. எனவே, முன்னோக்கிய சந்தைகளையும் பெறப்பட்ட உற்பத்திப் பொருட்களையும் பண்டப் பரிவர்த்தனைகளையும் அபிவிருத்தி செய்வதும் கிரமமாக சந்தைத் தகவல்களின் வெளியீடு என்பனவற்றை அபிவிருத்தி செய்வதும் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான போட்டித்தன்மை கொண்ட விலைகளைக் கண்டுபிடிப்பதை உறுதிசெய்து மிகையான விலைத்தளம்பல்களை ஆகக் குறைந்ததாக்கும் கிராமிய மட்டத்தில் அத்தகைய சந்தை வசதிகள் குறைவாகக் காணப்படுவதானது குறிப்பாக சிறிய மற்றும் சிறிதளவு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மோசமான விலைகளைப் பெற்றுக்கொடுக்கும் அத்தகைய தாழ்ந்த விலைகளானது விவசாயத்தில் முதலீடுகளை மேற்கொள்ளுவதற்கான அவர்களின் இயலுமையில் பாதிப்பைக் கொண்டிருப்பதோடு அதன் மூலம் விளைச்சலிலும் பாதிப்பைப் ஏற்றுபடுத்துகின்றன.

தொழில்நுட்ப தரமுயர்த்தல், உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு, போட்டித்தன்மை கொண்ட சந்தை முறையொன்றின் அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கிய சீர்திருத்த விடயங்களை இலங்கையின் விவசாயம் வேண்டி நிற்கின்றது. விவசாயிகளுக்கு

நலன்புரி கொடுப்பனவுகளை பகிர்ந்தளிப்பதற்குப் பதிலாக உட்கட்டமைப்பு வசதிகளை, மேம்படுத்துவதில் உள்ளீட்டு உதவுக் கொடுப்பனவுகளுக்குப் பதிலாக போட்டித் தன்மை சந்தை முறையொன்றினூடாக தரமுயர்ந்த உள்ளீடுகளைக் கிடைக்கச்செய்தல் என்பனவற்றின் ஊடாக விவசாய விளைச்சலை அதிகரிக்கச் செய்யலாம். அதேபோன்று பிறப்புமூல பொறியியல் போன்ற தோற்றம் பெறும் உயிரியல் தொழில்நுட்ப விடயங்கள் விளைச்சலை அதிகரிப்பதற்கு கணிசமான சாத்தியங்களை வழங்கும்.

இவ்வாறாக துறைவாரியான பகுப்பாய்வின்படி ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்துறை, உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பணிகள் துறைகள் என்பன நாட்டின் எதிர்கால பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு அவசியமான பாரிய வளர்ச்சி வாய்ப்பினைக் கொண்டுள்ளன.

**பொருளாதாரத்தின் நிலைத்து நிற்கும் ஆற்றல்:** பன்னாட்டு மட்டத்தில் நிகழும் திடீர் மாற்றங்களினால் இலங்கைப் பொருளாதாரம் பாதிப்பிக்குள்ளாகும் நிலையிருப்பதனையும். அதிகரித்தளவில் உலகமயமாகிவரும் பொருளாதாரமொன்றில் அத்தகைய வெளியுலக திடீர் மாற்றங்களின் பிரதிபலிப்புக்களை தவிர்க்க முடியாததாகையினால் பொருளாதாரத்தின் தாக்குப்பிடித்து நிலைத்துநிற்கும் ஆற்றலை பலப்படுத்துவதற்கு வழிமுறைகள் அவசியமென்பதனையும் 2001இன் அனுபவம் வெளிப்படுத்துகின்றது. 2001இல் பாரிய பொருளாதார சுருக்கத்தாக்கமானது நலிவுற்ற ஏற்றுமதிக் கேள்வியினால் விளைவிக்கப்பட்டதுடன் மொ.உ. உற்பத்தியின் மொத்த வளர்ச்சிக் குறைப்பிற்கு 13 சதவீதம் பங்களித்த நீண்ட வரட்சி, 2 சதவீதம் பங்களித்த பயங்கரவாதத் தாக்குதல்கள் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட 64 சதவீதத்திற்கு வகைகூறியது. ஆகையினால் பன்னாட்டுப் பொருளாதார சூழலில் ஏற்படுகின்ற பாரிய மாற்றங்கள் இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டின் கட்டுப்பாட்டிற்கு முழுமையாகவே அப்பாற்பட்டதுடன் ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் ஏற்றுமதி சந்தைகள் என்பவற்றை பல்லினப்படுத்தலே கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒரே தீர்வாகும். இப் பின்னணியில் ஏற்கனவேயுள்ள ஆடைகள் தவிர்ந்த ஏற்றுமதி வகைகளை விரிவுபடுத்துவதுடன் தகவல் தொழில்நுட்பப் பொருட்கள் மற்றும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் ஆகிய புதிய ஏற்றுமதிக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதும் இன்றியமையாததாகும். இதைப்போன்றே, ஏற்றுமதி மேம்பாட்டு பிரச்சாரங்கள், மற்றும் வர்த்தக பேச்சுவார்த்தை உபாயங்கள் என்பன ஏற்றுமதி சந்தைகளை பல்லினப்படுத்தலில் மிகமுக்கிய பங்கினை ஆற்றமுடியும். பிராந்தியத்திலுள்ள கைத்தொழில் களிடையே ஒருக்கிணைப்பை ஏற்படுத்தல், அதாவது இந்தியாவின் புடவை கைத்தொழிலையும் இலங்கையின் ஆடைக் கைத்தொழிலையும் ஒருங்கிணைப்பது சந்தைப் பல்லினப்படுத்தலுக்கான மற்றுமொரு மாற்றீடாக அமையும்.

போதியளவு மழைவீழ்ச்சியின்மையானது உள்நாட்டு வேளாண்மை மற்றும் நீர்மின்வலு உருவாக்கம் என்பவற்றை மோசமாக பாதிப்புறச்செய்து புறத்தாக்கங்களின் மற்றுமொரு மூலமாக விளங்குகின்றது. இலங்கையின் வேளாண்மை தொடர்ந்து அதிகரித்த நீர்ப்பயன்பாட்டு பயிர்ச்செய்கை நடைமுறைகளை கொண்டிருப்பதற்கு முழுமையாக உதவிதொகையளிக்கப்பட்ட நீர்ப்பாசன நீர் வழங்கல் முறைமை மற்றும் குறைந்த நீர்ப்பயன்பாட்டு புதிய வேளாண்மை நடைமுறைக்களுக்கான குறைந்த ஊக்குவிப்பு என்பனவே பெருமளவிற்கு காரணமாகும். பண்ணையாளர்களது அக்கறைகளை கருத்திற்கொண்டு நீர்ப்பாசனத் திட்டங்களிலிருந்து வழங்கப்பட்டு நீருக்கு உரியதொரு விலையிடல் முறைமையினை விருத்தி செய்தல், நவீன பயிர்ச்செய்கை நடைமுறைகள் குறித்த தகவல்களை பரப்பும் வேளையில் அவற்றின் பிரயோகத்தை ஊக்குவித்தல் என்பன மழைவீழ்ச்சி மாறுபாடடைவதனால் வேளாண்மைத்துறைக்கு ஏற்படும் பாதிப்பினை குறைப்பதற்கு எடுக்கவேண்டிய அவசியமான நடவடிக்கைகளாகும்.

இதைப் போன்றே அண்மையில் குறைவடைந்துள்ள போதிலும் நீர்மின்வலு உருவாக்கத்தில் அதிகரித்தளவில் தங்கியிருக்கின்ற மையானது மழைவீழ்ச்சி மாறுபாட்டினால் பொருளாதார பாதிப்பிற்குள்ளாகக் கூடிய மற்றுமொறு சந்தர்ப்பமாகும். மேலும் அனல் மின்வலுவிற்கு மாத்திரம் விரிவுபடுத்துவது பன்னாட்டு எண்ணெய்ச் சந்தையில் விலைகள் மிதமிஞ்சிய அளவில் அடிக்கடி மாறுபாடடைந்து நாட்டினை பாதிப்பிற்குள்ளாக்கக்கூடிய தன்மையினை அதிகரிப்பதனால் நீர்மின்வலுவில் தங்கியிருத்தலை மாத்திரம் குறைப்பது போதுமானதன்று. இப்பின்னணியில் ஏனைய வலு மூலங்களான நிலக்கரி வலு உருவாக்கத்தையும் படிப்படியாக அபிவிருத்தியடையும் ஏனைய வலு மூலங்களான சூரிய வலு மற்றும் காற்று வலு என்பவற்றுக்கு விரிவுபடுத்துவது பொருளாதாரத்தின் நிலைத்து நிற்கும் ஆற்றலை மேம்படுத்துவதற்கு இன்றியமையாததாகும்.

இதைப்போன்றே பொருளாதாரத்தின் எளிதில் இசைந்து கொடுக்கும் தன்மையை மேம்படுத்துவதானது புறதிடீர் மாற்றங்களின் ஊடுகடத்தல் தாக்கத்தினை

அதிகரித்து பொருளாதாரத்தின் பெரும் பாகங்களுக்கு இடையில் பகிர்வு செய்வதன் வாயிலாக பொருளாதாரத்தின் விரைந்த சீராக்கத்திற்கு வசதியளிக்கும். உதாரணமாக உள்நாட்டு பெற்றோலிய உற்பத்திகள், ஏனைய தொடர்புபட்ட உற்பத்திகள் மற்றும் வலு, போக்குவரத்துப்பணிகள் ஆகிய பணிகள் என்பவற்றுக்கான தன்னியக்கவிலை சீராக்க முறையினை அறிமுகப்படுத்துவதிலான தாமதமானது 1999 – 2001இல் உயர்வடைந்த எண்ணெய் இறக்குமதி விலைகளின் தாக்கத்தினை விரைந்து ஊடுகடத்துவதனை தடுத்துநிறுத்தி பெற்றோலியத் தொழிற்துறை மற்றும் வலுத்துறை என்பவற்றுக்கு கடுமையான பிரச்சனைகளை விளைவித்து பொருளாதாரத்தில் மோசமான சமநிலையற்ற தன்மையை அதிகரிக்கின்றது. இதைப் போன்றே இறுக்கமான தொழிற் சட்டங்கள், ஒழுங்கு விதி முறைகள் மற்றும் தொழில்துறை தொடர்பான ஒழுங்கு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதிலான தாமதம் என்பன 2001இல் ஆடைகளுக்கான ஏற்றுமதி கேள்வியிலேற்பட்ட கணிசமான வீழ்ச்சியின் தாக்கத்தினை ஊடுகடத்துவதனை தடுத்துநிறுத்தி இத்தொழில் துறையிலுள்ள முதலீட்டாளர்கள்மீது மிதமிஞ்சிய பழுவினை சுமத்தின. எனவே குறிப்பாக விலையிடல் முறையை மற்றும் கைத்தொழில்துறையை மீளவொழுங்குபடுத்தல் என்பவற்றின் நெகிழ்ச்சித் தன்மையை மேம்படுத்தல், தீர்மானமெடுப்பதிலுள்ள காலதாமதங்களை குறைத்தல் என்பனவும் புறதிடீர்த் தாக்கங்களுக்கெதிரான பொருளாதாரத்தின் தாக்குப்பிடித்து நிலைத்து நிற்கும் ஆற்றலை பலப்படுத்துவதற்கு பயனுள்ளனவாகும்.

**பணவீக்கம்:** கலந்துரையாடலின் கீழ் உள்ள மற்றுமொரு முக்கிய பேரண்டப் பொருளாதார விடயம் சில தளம்பல்களுடன் கூடிய தொடர்ச்சியான பணவீக்கமாகும். பண வீக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கைகளுக்காக பெறுமதிமிக்க உற்பத்தியாக்க மூலவளங்களை விரயப்படுத்தி வருவதனாலும், அதிகரித்துச் செல்லும் நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் சாதகமற்ற ஊக நடவடிக்கைகளின் காரணமாக உற்பத்தி முதலீடுகளை ஊக்கம் குன்றச் செய்வதனாலும் உயர்ந்த பணவீக்கம் வலுவான உயர்ந்த வளர்ச்சியை அடைந்துகொள்ள தூண்டுதலாக அமையாது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இதேபோன்று, தொழிற்பாட்டு மட்டத்தில் வளர்ச்சி - பணவீக்க எதிரீட்டு வளைகோடு கோடுகள் அற்ற பிரிவு ஒன்றைக் கொண்டுள்ளது என ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது தாழ்ந்த மட்டமொன்றைக் கொண்ட பணவீக்கம் பொருளாதார வளர்ச்சிச் சக்கரத்திற்கு உராய்வு நீக்கியாக அமைந்து வளர்ச்சியின் மீது நேர்க்கணிய தாக்கமொன்றைக் கொண்டிருக்கும். எனினும் குறிப்பிட்ட புள்ளிக்கு அப்பால் பணவீக்கம் செல்லுமாயின் அது வளர்ச்சிக்குத் தீங்கிழைப்பதாக அமையும். இவ்வெதிரீட்டு வளைகோட்டிலுள்ள திருப்புமுனை நாடுகளிடையேயும் அதேபோன்று குறிப்பிட்ட நாடொன்றில் அதன் வேறுபட்ட நேர காலத்திற்கேற்பவும் மற்றைய பேரண்டப் பொருளாதார காரணிகளுக்கேற்பவும் வேறுபடுகிறது. ஆகவே எந்த ஒரு நாட்டிலும் அத்தகைய பணவீக்க திருப்புமுனையை துல்லியமாகக் கண்டறிந்து கொள்வது இலகுவானதல்லவெனினும் அனுபவ பூர்வமான ஆய்வுகளின்படி பெரும்பாலான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஏறத்தாழ 4- 5 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சுதந்திரமாக மிதக்கும் செலாவணிவீத அமைப்பிற்குள் நாடு நுழைந்துள்ளமையின் காரணமாக நாணயக் கொள்கையின் கவனம் விலை உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதன் மீதே குவிந்து காணப்பட்டது. அரசதுறையின் தொடர்ச்சியான உயர்ந்த கடன்பாடுகள் இலங்கையின் நாணய விரிவாக்கத்திற்கான முக்கிய ஏதுக்காரணியாக விளங்கியமையினால் அரசதுறைப் பற்றாக்குறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பு அதன் விலை உறுதிப்பாட்டு குறிக்கோளினை அடைவதில் நாணய முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்கு மிக இன்றியமையாததாகும். எனினும் குறிப்பாக குறுங்காலத்தில் நாணயக் கொள்கையினால் மட்டும் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தமுடியாது. குறுங்காலத்தில் விலை மாற்றங்கள் நாணயக் கொள்கைத் தூண்டுதல்களின் காரணமாக ஏற்படும் ஒன்றுசேர்ந்த கேள்வி மாற்றங்களினால் மட்டுமன்றி செலவினை அதிகரிக்கும் காரணிகளினாலும் தற்காலிக வழங்கல் பற்றாக்குறையினாலும் அதேபோன்று பணவீக்க அழுத்தத்தினை உருவாக்குமாகையால் கூலிநிர்ணய நடைமுறைகள் பணவீக்க நிர்ணயங்களின்மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கும். ஆகவே விலை உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதில் நாணயக் கொள்கை கூடியளவிற்கு வலியுறுத்தல்களைக் கொண்டிருக்கின்றவேளையில் உள்நாட்டுக்காரணி உற்பத்தியாக்கத்தை அதிகரிப்பதற்கும் உற்பத்தியாக்க அதிகரிப்புக்கான தொடர்பான கூலி அதிகரிப்புக்களுக்கும் வழிமுறைகளை மேற்கொள்ளுவது பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும். கொள்கை சார்ந்த நம்பகத்தன்மையை வலுப்படுத்துவதும் தற்போதைய உயர்ந்த பணவீக்கத்தினைத் தொடர்ச்சியாகக் குறைப்பதும் பணவீக்க எதிர்பார்ப்புக்களில் கீழ் நோக்கிய சீராக்கத்தினை மேற்கொள்வதனை ஊக்குவிக்கும். இது வலுவான அடிப்படையில் விலை உறுதிப்பாட்டினை

எய்துவதற்கு மிக இன்றியமையாததாகும்.

**தொழில்வாய்ப்பின்மை:** கடந்த சில தசாப்தங்களாக கலந்துரையாடப்பட்டுவரும் முக்கியமான பொருளாதாரப் பிரச்சனைகளிலொன்றாக தொழில் வாய்ப்பின்மை இருந்துவருகிறது. 2001ஆம் ஆண்டில் காணப்பட்ட சிறிதளவு அதிகரிப்பு தவிர, அண்மைய ஆண்டுகளில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு காணப்பட்டபோதும் தொழிலின்மை வீதம் இன்னமும் உயர்வாக, தொழிற்படையில் 7 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டது. இது படித்த இளைஞர்களிடையே மிகக் கூடுதலாகக் காணப்பட்டது. தொடர்ச்சியான போதுமானதற்ற மூலதனமும் அதன் விளைவாக ஏற்பட்ட தாழ்ந்த பொருளாதார வளர்ச்சியும் தொழிற்படையின் அனைத்து தொழில் பிரிவுகளிலும் போதுமான தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு இயலாமையை தோற்றுவித்தமையும் தொடர்ச்சியான உயர்ந்த தொழில் வாய்ப்பின்மைக்கு முக்கிய காரணங்களாக இருந்தன. இவ்வாறிருந்துங்கூட உயர்ந்த தொழில் வாய்ப்பின்மையும் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்கள் போன்ற சில பொருளாதாரத் துறைகளில் நிரப்பப்படாது காணப்பட்ட வெற்றிடங்களும் ஒரே நேரத்தில் காணப்பட்டமை, மற்றும் சில பெருந்தோட்டத்துறைகளில் காணப்பட்ட தொழிலாளர் பற்றாக்குறை என்பன தொழிற்சந்தை பொருத்தப்பாடின்மையை எடுத்துக்காட்டியதுடன் உயர்ந்த தொழில்வாய்ப்பின்மைக்கும் பங்களித்தது. தொழிலின்மைக்குப் புறம்பாக, தொடர்ச்சியாகக் காணப்படும் உயர்ந்தமட்ட கீழுழைப்பும் இதனை மேலும் எடுத்துக்காட்டுவனவாகவுள்ளன. அதேபோன்று படித்த இளைஞர்களிடையே காணப்படும் செறிந்த உயர்ந்தமட்ட தொழிலின்மை கல்விமுறைக்கும் தொழிலாளர்களுக்கான கேள்விக்குமிடையில் காணப்படும் பொருத்தப் பாடின்மையை கோடிட்டுக் காட்டுவதாகவுள்ளது. ஆகவே, தொழிலாளர் கேள்விப் பக்கத்திலும் அதேபோன்று தொழிலாளர் வழங்கல் பக்கத்திலும் தொடர்பானதாகக் காணப்படும் தடங்கல்களைக் கட்டுப்படுத்துவது தொழில் வாய்ப்பின்மையையும் அதேபோன்று கீழுழைப்பையும் வலுவான அடிப்படையில் குறைப்பதற்கு இன்றியமையாததாகவுள்ளது.

கேள்விப் பக்கத்தில், முதலீட்டின் விரிவாக்கமும் விரைவான பொருளாதார வளர்ச்சியும் தொழில் வாய்ப்பின்மையையும் கீழுழைப்பினையும் வலுவான அடிப்படையில் குறைப்பதற்கு இன்றியமையாததாக வுள்ளது. மேலும், உள்ளார்ந்த தொழில்நிலையினை உருவாக்கத்தினை தொழிலாளர் செறிவுமிக்க கைத்தொழில்களையும் உற்பத்திச் செயற்பாடுகளையும் ஊக்குவிப்பதன் மூலம் மேலும் விரைவுபடுத்த முடியும். எனினும் தரப்பட்டுள்ள முதலீட்டில் அத்துடன் / அல்லது பொருளாதார வளர்ச்சியில் தொழில் வாய்ப்பை உருவாக்குவதற்கான உள்ளார்ந்த வளம் பொருளாதாரத்தின் தொழில் செறிவிற்கான தற்போதைய ஊக்குவிப்பு மற்றும் ஊக்குவிப்பின்மை அமைப்பிற்கு ஏற்ப வேறுபடும். துரதிஷ்டவசமாக தற்போதுள்ள பெரும்பாலான தொழிலாளர் சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் நடைமுறைகள் எல்லாம் உற்பத்தியில் தொழிலாளர் செறிவாக்கத்திற்கு எதிரான ஒரு பக்கச்சார்பானவையாகவுள்ளன. தற்போதைய தொழிலாளர் சட்டங்களின்கீழ் கைத்தொழிலொன்று தொழிலாளர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களின் காரணமாக கடுமையான இடர்பாடுகளை எதிர்நோக்கும்போதுகூட தொழிலாளர் களைக் குறைப்பதன் மூலம் கைத்தொழில்களை மீளவமைப்பது இடர்பாடானதாக உள்ளமையினால் முதலீட்டாளர்கள் தொழிற் செறிவுகுறைந்த உற்பத்திச் செய்முறைகளைத் தெரிவு செய்வதற்கு முன்னுரிமையளிக்கின்றனர். இதேபோன்று அரசியல் ரீதியான உள்நோக்கத்தைக் கொண்ட காளான்கள் போன்று தோன்றும் தொழிற்சங்கங்களினால் உருவாக்கப்படும் தொழிலாளர் தகராறுகளைத் தீர்ப்பதில் காணப்படும் தாமதங்கள் தொழிலாளர் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் இடர்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. வேலை நிறுத்தம் போன்ற முக்கிய தொழிற்சங்க தீர்மானங்களுக்கு இரகசிய வாக்கெடுப்பு வசதி இல்லாமல் இருப்பதும், சில நேரங்களில் தொழிற்சங்கங்களின் வன்முறை நடத்தை சொத்துக்களின் சேதத்திற்கும் முகாமைத்துவத்தின் உயிருக்கு அச்சுறுத்தலையும் கூட தோற்றுவிப்பது தொழிற்செறிவு மிக்க முதலீடுகளில் முதலீடு செய்வதனை ஊக்கம் குன்றச் செய்கின்றன. இதேபோன்று அந்தந்தநேர அடிப்படையில் அரசதுறையில் செய்யப்படும் ஆட்சேர்ப்புக்களும் அரசதுறையில் காணப்பட்ட செயலாற்றம் சாராத அடிப்படையில் கிடைக்கத்தக்கதாக இருந்த நன்மைகளும் வேலைக்காகக் காத்திருக்கும் வேலையற்றோரை உயர்மட்ட கூலிகளின் ஊடாக உழைப்புச் செறிவுமிக்க தனியார் கைத்தொழில்களில் ஊக்கம் குன்றச் செய்கின்றன. தொழிலாளர் செறிவுமிக்க முதலீடுகளுக்கு எதிராகக் காணப்படும் இத் தடைகளை தீர்ப்பதற்கான சரியான வழிமுறைகள், கூடுதலான தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதனூடாக தொழில்வாய்ப்பின்மைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இன்றியமையாதனவாகும். இப்பின்னணியில் தொழிலாளர் பிரச்சனைகளை விரைவாகத் தீர்த்துவைத்தல், இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கான தெளிவான வழிகாட்டல்களை வரைவிலக்கணம் செய்தல், அரசதுறைப் பதவிகளை ஒழுங்குமுறைப்படுத்தல், புதிய


அரசதுறை ஊழியர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை அறிமுகம் செய்தல், சம்பளங்கள் நீங்கலான அரசபணி வருமானங்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் வருமான வரிகளை விரிவாக்கல் ஆகிய அண்மைய தீர்மானங்கள் சரியான நோக்கில் எடுக்கப்பட பயன்மிக்க வழிமுறைகளாகும்.

வழங்கல் பக்கத்தில், முக்கிய நலிவுகளாக அலுவலக வேலைகள் சார்பில் தேர்ச்சி, தொழிற்பயிற்சி மற்றும் மனச்சார்பு போன்றன போதுமானதாக இல்லாமை காணப்பட்டன. இலங்கையில் கல்வியறிவு வீதம் உயர்வாக ஏறத்தாழ 90 சதவீதமாகக் காணப்பட்டபோதும் நவீன பொருளாதார நடவடிக்கைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப தேர்ச்சியின் கிடைப்பனவு மற்றும் பன்னாட்டு தொழில்களில் தேர்ச்சி என்பனவற்றைப் பொறுத்தவரையில் நாட்டின் தொழிற்படையில் நலிவான தன்மை காணப்பட்டது. இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி மட்டத்தில் ஒரு பன்னாட்டு மொழியினையாவது பயின்று கொள்ள ஊக்குவிப்பதும் நிரம்பலை அதிகரிக்கின்ற தொழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை கேள்வியை அதிகரிக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களான மீள ஒழுங்கமைப்பதும், படித்த இளைஞரிடையேயான உயர்ந்த தொழில்வாய்ப்பின்மையினையும் கீழுழைப்பையும் குறைப்பதற்கு அவசியமான வழிமுறைகளாகவுள்ளன. அத்தகைய கொள்கைகள் தொழில்வாய்ப்பின்மையைக் குறைப்பது மட்டுமன்றி மனித மூலவளங்களைக் கட்டியெழுப்புவதனூடாக நாட்டின் தொழிலாளர் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதற்கும், ஒப்பீட்டுரீதியில் குறைந்த உற்பத்தியாக்கத்தினைக் கொண்ட இடங்களில் உள்ள கீழுழைப்பினைக் குறைக்கவும் உதவும்.

உலகின் உலக மயமாக்கல் அதிகரித்து வருமிடத்து தேசிய எல்லைகள் படிப்படியாகத் தாக்கம் குறைந்தனவாக மாறிவரும் தன்மை தொழிலாளர் சுதந்திரமாக இயங்க வசதியளித்தமை, இலங்கைத் தொழிலாளர்களுக்கு அதிகரித்த வெளிநாட்டுக்கேள்வி என்பனவும் நாட்டின் தொழிலின்மைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பயன்மிக்கனவாக இருந்தன. ஏற்கனவே ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வெளிநாடுகளில் தொழில்புரிவதனை தற்காலிக மதிப்பீடுகள் எடுத்துக்காட்டின. அவர்கள் பெறுமதிமிக்க வெளிநாட்டு வருவாய்கள் நாட்டிற்குள் கொண்டுவருவது மட்டுமன்றி, உள்நாட்டுத் தொழிலாளர் சந்தையில் காணப்படும் மிகையான நிரம்பல் அழுத்தங்களை விடுவிக்கும் பாதுகாப்பானதொரு வாயிலாகவும் தொழிற்பட்டனர். இதுவரை வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கள் முக்கியமாக தேர்ச்சியற்றதும் வீட்டுப்பணிப் பெண்கள் போன்ற சம்பளம் குறைந்த வகைகளிலுமே குவிந்து காணப்பட்டன. எனினும், முன்னேற்றம் கண்ட நாடுகளினால் தேவைப்படுத்தப்படும் தேர்ச்சியை மேம்படுத்துவதற்கான நன்கு இணைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் ஆங்கிலம் போன்ற பன்னாட்டு மொழியில் அதிகரித்த தேர்ச்சியும் முன்னேற்றம் கண்ட நாடுகள் கூட தேர்ச்சி பெற்ற இலங்கைத் தொழிலாளர்களுக்கு கதவினைத் திறக்கச்செய்யும். அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்கனவே உயர்ந்த கல்வியறிவு வீதத்தினைக் கொண்டுள்ள தொழிற்படையிலிருந்து உச்சமட்ட நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நாட்டிற்கு வசதியளிக்கும். இதனை உத்தேசிக்கப்பட்டுள்ள இளைஞர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திலும் தொழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட சீர்திருத்தங்களிலும் முக்கியமான மற்றும் உள்ளார்ந்த பாகமொன்றாகவும் ஒருங்கிணைத்துக் கொள்ளமுடியும்.

**முதனிலை உள்ளீட்டுச் சந்தைகளில் சீர்திருத்தங்கள்:** வெளியீட்டுச் சந்தைகளில் இலங்கை குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்கள் மேற்கொண்டுள்ள போதும், காணி மற்றும் தொழிலாளர் போன்ற முதனிலை உள்ளீட்டுச் சந்தைகளே சீர்திருத்துவதில் பெருமளவு முன்னேற்றங்களை அடைந்திருக்கவில்லை. காணிகளைப் பதிவுசெய்தலில் காணப்படும் தாமதம் மற்றும் வினைத்திறனின்மை காணித்தகராறுகளைத் தீர்ப்பதில் காணப்படும் நீண்ட தாமதங்கள், தற்பொழுது வசிப்போரினால் அனுமதிப் பத்திர முறையின் கீழ் வைத்திருக்கப்படும் அரச காணிகளை சந்தைப்படுத்த முடியாமை, முக்கியமான நகரங்கள் போன்ற பிரதான மையங்களில் பயனின்றி இருக்கும் நிலங்கள் உட்பட பெருமளவான நிலங்கள் தனியாருக்குச் சொந்தமான உள்ளமை என்பன வினைத்திறன் மிக்கதும் சுறுசுறுப்பானதுமான காணிச் சந்தையின் அபிவிருத்தியைத் தடைசெய்கின்றன. இப்பின்னணியில், காணிப்பதிவு நடைமுறைகளின் வினைத்திறனையும் இலகுத்தன்மையினையும் முன்னேற்றவும், அனுமதிப்பத்திர முறையின் கீழ் அரச காணிகளில் தற்பொழுது குடியிருப்போருக்கு பூரணமான உறுதியினைக் கையளிப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ள வழிமுறைகள் சரியான திசையில் எடுக்கப்பட்ட பயன்மிக்க நடவடிக்கைகளாகும். இதேபோன்று அரச காணிகளைப் பொறுத்தவரையில், தற்பொழுது அரச நோக்கங்களுக்கு இவை தேவையில்லை எனினும், வர்த்தகரீதியில் பெறுமதிமிக்கவையாகையால் நீண்டகாலக் குத்தகை ஒழுங்குகளின்கீழ் வர்த்தக விலைகளில் அவற்றைத் தனியார்துறைக்கு வழங்குவது மிக்க முன்மதியுடைய செயலாகும். மேலும் வெளிநாட்டினரால் கொள்வனவு செய்யப்படும் அசையாச் சொத்துக்கள் மீதான 100 சதவீத மாற்றல்வரி

வரைபடம் 1.9
இறைத் தொழிற்பாடுகள் 1991 - 2001
(வரவு செலவுத் திட்ட மற்றும் உண்மையான)




அண்மையில் நீக்கப்பட்டமையும் காணிச்சந்தையில் அபிவிருத்தியை ஊக்குவிக்கும்.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு, ஏற்கனவேயுள்ள சில தொழிலாளர் சட்டங்கள் வினைத்திறனற்றவை என நிரூபிக்கப்பட்டுள்ளதுடன் கடந்த சில ஆண்டுகளாக தொழில்நிலை உருவாக்கத்தினையும், நாட்டின் பொருளாதார முன்னேற்றங்களையும் குறிப்பிடத்தக்களவு சேதமாக்கவும் காரணமாயின. அத்தகைய தொழிலாளர் சட்டங்கள் தொழிற்சந்தையின் சிறிய பிரிவிற்கு மட்டுமே நன்மையளித்த வேளையில் பெரும்பான்மையானோர் இயக்க ஆற்றல் அற்ற தொழிற்சந்தையினால் பாதிக்கப்பட்டனர். கடுமையான இச் சட்டங்களின் காரணமாக, குறைந்த கூலியைக் கொண்ட தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் போட்டித்தன்மை கொண்ட தொழிலாளர் சந்தையில் நுழைவதில் இடர்பாடுகளைக் கொண்டிருந்தனர். உண்மையில் அத்தகைய கடுமையான சட்டங்கள், அச்சட்டங்களின் மூலம் தான் நன்மையைப் பெறுகிறார்கள் எனக் கருதப்படுகின்ற தற்போதுள்ள ஊழியர்களின் தொழிற்பாதுகாப்பினைக் கூட பாதுகாத்துக் கொள்வதில்லை. இடர்பாடுகளை எதிர்நோக்குகின்ற கைத்தொழில்கள் தொழிலாளர் சட்டங்களிலுள்ள தற்போதைய கடுமைகளின் காரணமாக மூடப்படக்கூடுமாகையால் இந் நிலைமைகளை மாற்றுவது தவிர்க்க முடியாததாக இருக்கும். தொழிலாளர் சட்டங்கள் கூடியளவிற்கு நெகிழ்ச்சித்தன்மை கொண்டனவாக இருந்திருப்பின் இக் கைத்தொழில்களில் பல மீளமைத்தலுடன் வெற்றிகரமாக தொடர்ந்து இயங்கியிருக்கும். ஆகவே தொழிலாளர் சந்தையினை மேம்படுத்தவும் அவற்றை கூடியளவிற்கு நெகிழ்ச்சித் தன்மையுடையதாக்குவதற்குமான சீர்திருத்தங்கள் எதிர்கால தொழிலாளிகள் மற்றும் முதலாளிகளின் எதிர்கால நன்மைகளுக்கு மட்டுமன்றி ஏற்கனவே தொழிற்படையிலுள்ள ஊழியர்களின் நன்மைக்கும் இன்றியமையாததாகும். அத்தகைய சீர்திருத்தங்கள் உற்பத்தியாக்க ரீதியிலும் தொழில்நுட்ப ரீதியிலும் முன்னேற்றங் கண்ட சமூகத்தின் அபிவிருத்தியை மேம்படுத்தி இப்பிராந்தியத்தில் மனித மூலவள மையமாக இலங்கை மாறுவதனை இயலச் செய்யும்.

**இறை உறுதிப்பாட்டுத்தன்மை:** நீண்ட காலமாகக் காணப்படும் தொடர்ச்சியான உயர்ந்த இறைப்பற்றாக்குறை மற்றும் அரசபடுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் என்பனவற்றின் காரணமாக இறைச் சூழ்நிலை மோசமடைந்தமையானது நாட்டின் நடுத்தரகால இறை உறுதிப்பாட்டினைப் பொறுத்தவரையில் கரிசனைகளைத் தோற்றுவிப்பதாகவுள்ளது. தொடர்ந்துவரும் அரசாங்கங்கள் தமது கொள்கை அறிக்கைகளிலும் வரவு செலவுத் திட்ட உரைகளிலும் வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக் கணக்கு மிகையினை எய்துவதில் தமக்குள்ள விருப்பினை மீண்டும் மீண்டும் அறிவித்து வந்தபோதும் வீழ்ச்சியடைந்து வருகின்ற அரசின் அரசிறை/மொ.உ.உற்பத்தி விகிதமும் அதிகரித்துவரும் நடைமுறைச்செலவு / மொ.உ.உற்பத்தி விகிதமும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை அதிகரித்துள்ளன. அதிகரித்துச் செல்லும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை அரச மூலதனச் செலவினத்துடன் சேர்ந்து உயர்ந்த இறைப் பற்றாக்குறையைத் தோற்றுவித்தது. செலவினத்தில் பெரும்பகுதி வளர்ச்சியடைத் தடைப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், உண்மையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்கூட (வளர்ச்சியைத் தூண்டுகின்ற) ஆரம்ப செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்தும் இறைப் பற்றாக்குறை விஞ்சுவதனைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாக அடிக்கடி குறைக்கப்பட்டன. இறுதியாக பற்றாக்குறையை நிதியிடுவதற்கான எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நிதியிடலையும் தனியார் மயமாக்கல் பெறுகைகளையும் பெற்றுக் கொள்ளுவதில் தொடர்ச்சியான பெருமளவு வீழ்ச்சி காணப்பட்டமையின் காரணமாக அரசாங்கம் பற்றாக்குறையில் பெரும்பகுதியை நிதியிடுவதற்கு உள்நாட்டுக் கடன்பாடுகளை நாடியது. இதன் விளைவாக, அரசபடுகடன் அதிகரித்து ஆண்டு மொ.உ.உற்பத்தியையும் கூட விஞ்சியதன் மூலம் வரவு செலவுத்திட்டத்தில் வட்டிச் செலவு மொத்த நடைமுறைச் செலவினத்தில் ஏறத்தாழ 31 சதவீதத்திற்கு அல்லது 2001ஆம் ஆண்டு அரச அரசிறையில் 41 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

மோசமான பேரண்டப் பொருளாதார சமநிலையின்மை, தனியார் முதலீடுகளை இல்லாமல் செய்தமை, என்பனவற்றிற்கு இவ் இறை அபிவிருத்திகள் காரணமாக இருந்ததன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தின்மீது மோசமான பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன் இதன்மூலம் வளர்ச்சி வாய்ப்புக்களும் தொழில் விரிவாக்கமும் தடுக்கப்பட்டன. இவை வட்டிவீதங்களை உயர்த்தின. பணவீக்க அழுத்தங்களை அதிகரித்து செலாவணி வீதங்கள் தேய்வடைவதற்கு அழுத்தங்களை ஏற்படுத்திய நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின்மீது மேலதிக அழுத்தங்களை தோற்றுவித்தன. மேலும் உண்மையாகப் பெறப்படுகின்ற இறைப் பெறுதிகள் மூல வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்தும் அடிக்கடி குறிப்பிடத்தக்களவிற்கு பிறழ்ந்து காணப்படுவது வரவு செலவுத் திட்ட மதிப்பிடுகளின் நம்பகத் தன்மையும் இறைக் கொள்கையின் நன்மதிப்பும் சிதைவடைவதற்கு வழிவகுத்தது. அதேவேளை சில உற்பத்திசாராத உத்தேசிக்கப்பட்டிராத நடைமுறைச் செலவினத்தின் பெருமளவு விடயங்கள் பொருளாதாரத்தின் மீது மறைமுகமான வளர்ச்சித் தடைத்தாக்கங்களைக் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக, இலக்கிடப்படாத தொடர்ச்சியான உயர் குடியிருப்பாளர் உதவு தொகைத் திட்டங்கள் தேர்ச்சியற்ற தொழிலாளர்களுக்கான தொடர்பான கீழ்மட்ட கூலிகளை உயர்த்தி தொழிற்படையில் தீவிரமாக பங்கேற்பதிலிருந்தும் அவர்களை ஊக்கமிழக்கச் செய்தது. பொதுவாக்கப்பட்ட கோதுமை உதவுதொகை உள்நாட்டு வரி செலுத்துவோருக்கு இழப்புக்களை ஏற்படுத்தி அதன்மூலம் வெளிநாட்டு கோதுமை பயிரிடுவோருக்கு நன்மைகளை அளிப்பது மட்டுமன்றி மிக அண்மித்த பதிலீடுகளை (அரிசி) உற்பத்தி செய்யும் உள்நாட்டு நெல் வேளாண்மையாளர்களின் மீது மோசமான தாக்கத்தினையும் கொண்டிருந்தது. மிகையான அரசதுறைக் தொழிற்படை அரச பணிகளின் வினைத்திறனை குறைவடையச் செய்தவேளையில் அரச தொழில் முயற்சிகள் அவற்றின் தொழிற்பாட்டு இழப்புக்களை ஈடுசெய்து கொள்வதற்காக அவற்றிற்கு தொடர்ச்சியாக வழங்கப்படும் மாற்றல் கொடுப்பனவுகள் அவற்றின் வினைத்திறனை மேம்படுத்தக்கூடிய சரியான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதனை தடுத்து விடுவது மட்டுமன்றி அவற்றின் இயலளவு விரிவாக்கத்தினையும் தரமேம்பாட்டினையும் கூட தடைசெய்து வருகின்றது..

ஆகவே நடுத்தர காலத்தில் தற்போதைய இறைச் சூழல் தொடர்வது விரும்பத்தக்கதல்ல. அதுபோல் உறுதியானதுமல்ல என்பது உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, நடுத்தரகால இறை உறுதிப்பாட்டுத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும் உறுதியான உயர்ந்த வளர்ச்சியை அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கும் விரைவில் இறைச் சீராக்க உபாயத்தினை உடனடியாகப் பின்பற்றுவது அவசியமானது என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வுபாயமானது அனைத்து நான்கு தூண்களான அரசிறை அதிகரிப்பு, செலவினக் கட்டுப்பாடு, வினைத்திறன்மிக்க பற்றாக்குறை நிதியிடல், மற்றும் முன்மதியுடைய படுகடன் முகாமைத்தவம் ஆகிய வழிமுறைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

அரசிறை அதிகரிப்பு வழிமுறைகளின் கீழ், வரி இணங்குவிப்புக்களை ஊக்குவிப்பதனையும் திரிபுத் தாக்கங்களைக் குறைப்பதனையும் கருத்திற்கொண்டு வரி வீதங்களை உயர்த்துவதில் நம்பிக்கை வைப்பதனைக் குறைத்து வரித்தளத்தினை விசாலிப்பது இன்றியமையாததாகும். மேலதிக வரித்தளத்தினை பாதுகாக்கும் பொருட்டு அனைத்து வரிச் சலுகைகளையும் தளர்த்தல்களையும் சாத்தியமானளவிற்கு உடனடியாக இடைநிறுத்துவது அவசியமானதாகும். வரி நிருவாகத்தினை மேம்படுத்துவதும் அரசிறை இலக்கினை அடைந்து கொள்வதற்கு இன்றியமையாததாகும். இதேபான்று அரச பணிகளுக்கான கட்டணங்களும் அவற்றின் சந்தைச் செலவுகளை ஈடுசெய்யும் அளவிற்காவது கிரமமாக சீராக்கப்படுவது இன்றியமைததாகும். செலவினப் பக்கத்தில் வளர்ச்சிக்குத் தடையான செலவின மட்டங்களைக் கட்டுப்படுத்துவதன் மீதும் அதேபோன்று செலவினத் தரத்தினை மேம்படுத்துவதன் மீதும் வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்து உதவுத் தொகைத் திட்டங்களும் குடித்தொகையின் உண்மையில் தகுதியான பிரிவினருக்கு மாத்திரம் நன்மைகளை வழங்கத்தக்க விதத்தில் இலக்கிடப்பட வேண்டும். அரசதுறை தொழில் முயற்சிகளுக்கான அரசிறை மூலங்களைக் கொண்டுள்ள அனைத்து நடைமுறை மாற்றல் கொடுப்பனவுகளும், கட்டம் கட்டமாக நீக்கப்பட்டு சமப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட (தொழிற்பாட்டு) தத்துவத்தையாவது பின்பற்றுமாறு அவற்றைக் கேட்டுக் கொள்ளவேண்டும். அதிகரித்துச் செல்லும் கூலிச் செலவு மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்தவும் அதேபோன்று அரச பணிகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் அரசபணி சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பற்றாக்குறையை நிதியிடுவதில் இலக்கிடப்பட்ட வெளிநாட்டு நிதியிடலையும் தனியார் மயமாக்கல் பெறுகைகளையும் திரட்டுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். உள்நாட்டு நிதியிடலைப் பொறுத்தவரை அனைத்து மூலவளங்களும் கடந்த சில தசாப்தங்களாக பற்றாக்குறையை நிதியிடுவதில் நடைமுறைப்படுத்தப்பட்ட உபாயத்தின் காரணமாக நலிவுற்றுப்போன நிதியியல் தகைமையினால் ஏற்கனவே சுமைக்கு ஆட்பட்டுள்ள ஊ.சே.நிதியம், ஊ.ந. நிதியம் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் போன்ற கட்டுப்பாட்டிற்குட்பட்ட வகை மூலவளங்களின் மீது சுமைகளை ஏற்படுத்தாமல் சந்தைசார்ந்த கருவிகளினூடாக திரட்டப்பட வேண்டும். படுகடன் முகாமைத்துவமானது, தற்போதைய செலவுகளைக் கருத்திற்கொள்வதன் மூலம் மட்டுமன்றி நீண்டகாலத் தாக்கங்களையும் படுகடன் உறுதிப்பாட்டுப் பிரச்சனைகளையும் கருத்திற்கொண்டு மேம்படுத்தப்பட வேண்டும். திட்டமிடப்பட்ட இறை இலக்குகளை எய்திக் கொள்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் கிரமமான கண்காணிப்பு முறையின் கீழும் அவசியமாயின் இறையாண்டில் மேலதிக சரிப்படுத்தல் வழிமுறைகளின் மூலமும் இவ்வனைத்து வழிமுறைகளும் பயன்மிக்க முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது வரவு செலவுத் திட்டமதிப்பீடுகளின் நம்பகத் தன்மையினையும் இறைக் கொள்கையின் நன்மதிப்பினையும் வலுப்படுத்திக் கொள்ள இன்றியமையாததாகும்.

இறை உறுதிப்பாட்டுத் தன்மையினை எய்துதல் வளாச்சிக்கு மிக உயர்வான தூண்டுதல் என்பதைன தற்காலிக மாதிரி பரிசோதனைகள் எடுத்துக்காட்டின. மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 4 சதவீதத்திற்கு திரண்ட இறைப் பற்றாக்குறையைக் குறைக்கும் பலமான சீராக்கங்கள்கூட, குறுங்காலத்தில் குறைந்தது 2 சதவீத ஆண்டு மொ.உ.உற்பத்தி வளர்ச்சியாவது பேணப்படாவிடின் படுகடன்/மொ.உ.உற்பத்தி விகிதம் உயர்வடைய வழிவகுக்கும். ஆகவே நடுத்தரகால இறை உறுதிப்பாட்டினை எய்துவதில் வளர்ச்சியை அதிகரிக்கும் அமைப்பியல் சீர்திருத்தத்தினை நடைமுறைப்படுத்தல் இணையான முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. எனவே நடுத்தரகால இறை உறுதிப்பாட்டினை இலங்கையில் உறுதிப்படுத்துவதற்கு பலமான இறைத் திரட்சி முயற்சிகள் மற்றும் வழிமுறைகள் வளர்ச்சியை விரைவுபடுத்துகின்ற அமைப்பியல் சீர்திருத்தங்கள் ஆகிய இரண்டும் மேலும் தாமதமின்றி அவசியமாகின்றன.

அரசதுறையின் மொத்தப் பற்றாக்குறையினையும் கடன்பாடுகளையும் குறைப்பதற்கு அரசிறைச் சீராக்கங்கள் மட்டும் போதுமானதல்ல. தன்னியக்க விலைச் சீராக்கல் பொறிமுறை மற்றும் செலவுக் குறைப்பு வழிமுறைகளையும் உள்ளடக்கி உறுதியான அரச தொழில் முயற்சி சீராக்கங்களினால் இந்தமுயற்சிகள் முழுமைப்படுத்தப்படல் வேண்டும். அத்தகைய சீர்தீருத்தங்களுக்கு மக்களின் ஆதரவை அதிகரிப்பதற்காக உதவிக் கொடுப்பனவுடனான பொருட்களினதும் பயன்பாட்டளர்கள் மட்டுமன்றி அனைத்து இலங்கையர்களும் நேரிணையான உற்பத்திச் செலவுக்கும் கீழாக அவற்றினது உற்பத்தி விலையைப் பேணுதல் அரசதொழில் முயற்சிகளில் ஏற்பட்ட இழப்புக்கு வட்டிச் செலவுடன் இன்றோ அல்லது பின்னரோ செலுத்த வேண்டியேற்படும் என்பது மெய்ப்பிக்கப்படல் வேண்டும்.

சிறப்புக்குறிப்பு - 4

## இலங்கையில் ஒழுங்கு முறை தளர்வு செய்யும் செயன்முறை

சந்தையொன்று போதியளவு போட்டித் தன்மையற்று காணப்படுகின்றபோதும் முன்மதியுடைய நியமங்களை ஈடுசெய்யும் தேவைப்பாடு மற்றும் சமூகவாழ்க்கை, சுற்றாடல் போன்றவற்றில் தனியாரினதும், அரசதுறையினதும் செயற்பாடுகள் கடுமையான பாதிப்புக்களை விளைவிக்கும் சந்தர்ப்பங்களில் ஒழுங்குவிதி அவசியமானதென கருதப்படுகின்றது. கிப்ஸ் (1992) மற்றும் கூம் (1739)[1] விபரிப்பதனைப் போன்று நாட்டின் பிரசைகள் தனிப்பட்ட ஊக்குவிப்புக்களில் மட்டுமே ஆர்வம் கொள்வார்களாயின் பொதுப் பொருட்கள் குறைவாக வழங்கப்பட்டு பொது மூலவளங்கள் மிகையாகப் பயன்படுத்தப்படும் என்பதனை காலத்திலிருந்தே அரசியல் தத்துவாசிரியர்களும், பொருளியலாளர்களும் விளங்கிக் கொண்டுள்ளனர். பண்ணையாளர்கள் பொதுவான மேய்ச்சல் நிலங்கள் திருத்தப்பட்டு ஒருசில பசுக்கள் மட்டும் மேய்ச்சலுக்காக அனுப்பப்படுமாயின் மேய்ச்சல் நிலங்களுக்கு பாதிப்பின்றி பசுக்கள் ஆரோக்கியமான வளர்ச்சியை பெற்றுக்கொள்ள முடியும். எனினும் பொதுவான மேய்ச்சல் நிலத்திற்கு கட்டுப்பாடற்ற அனுமதி வழங்கப்படுமாயின் அது நிலத்தின் மிதமிஞ்சிய பாவனைக்கும், பசுக்களின் குறைந்த உணவூட்டலுக்கும் வழிவகுத்துவிடும். இதனால் நன்கு வடிவமைக்கப்பட்ட போதியளவிலான ஒழுங்கு விதிமுறையானது சமுதாயத்திலுள்ள பல்வேறு குழுக்களினது ஒன்றுக்கொன்று முரண்பாடான தேவைகளை தீர்த்துவைத்து அவற்றிலிருந்து உரிமைகளை பாதுகாத்து, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தி சமூக நலன்களை அதிகரித்து, சமமான வருமான பங்கீட்டை உறுதிப்படுத்துவதுடன் இயற்கை மூலவளங்கையும் சூழலையும் பாதுகாக்கும். ரொனால்ட் கோசினால் காட்டப்பட்டவாறு மோசமான பாதிப்புக்களினால் ஏற்படும் தாக்கத்தினை அப் பாதிப்புக்களை உருவாக்குபவர்களையே தாங்கிக்கொள்ளச் செய்யக் கூடியதாயிருந்தால் ஒழுங்கு விதிமுறை அவசியமற்றதாகும். எனினும் காலத்திற்குக்காலம் குறிப்பாக வளர்ச்சியையும் அபிவிருத்தியடையும் மட்டுப்படுத்துகின்ற விதத்தில் சந்தை பங்கேற்பாளர்கள் தடுக்கப்படுகின்றார்கள் அல்லது விலக்கி வைக்கப்படுகின்றார்கள் என உணரப்படுகின்றபோது ஒழுங்குவிதி முறை காலத்திற்குக்காலம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

### ஒழுங்கு விதிமுறையை தளர்வு செய்வதற்கான தேவைப்பாடு

செயற்றிறன் வாய்ந்த ஒழுங்குவிதி முறையானது எப்போதும் அதன் திட்டமிடப்பட்ட பணிகளை குறைந்த செலவிலும் பொருளாதாரத்திற்கு குறைந்த இடையூறுடனும் நிறைவேற்ற வேண்டும். அது பொருளாதாரத்தில் பங்கேற்பவர்களது தீர்மானமெடுக்கும் செயன்முறையை அநாவசியமாக தாமதப்படுத்தக்கூடாது. இதற்கு மாறாக, இலங்கையில் பெரும் எண்ணிக்கையான ஒழுங்குவிதி முறைகள் வியாபாரத்தினைக் கொண்டு நடாத்துவதற்கான செலவினை அதிகரிக்கச் செய்ததுடன் புதிய கண்டுபிடிப்புக்களையும் பொருளாதார வளர்ச்சியினையும் தடுத்து நிறுத்தியுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிமுறைகள் நிறுவனங்களினதும் மேந்தலை மற்றும் தொழிற்பாட்டு செலவுகளை அதிகரிப்பதோடு அவற்றின் தீர்மானமெடுக்கும் செயன்முறைகளையும் மெதுவடையச் செய்கின்றது. அத்துடன் பயன்மிக்க நோக்கங்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்களையும் இது முடக்கி வைக்கின்றது. மிதமிஞ்சிய ஒழுங்குவிதி முறைகள் தொழில்வாய்ப்பு இழப்புக்களையும் பொருளாதாரத்தில் குறைந்த தொழிலுருவாக்கத்தையும் ஏற்படுத்த முனைவதுடன் அதிகரித்த அரசியல் தலையீடுகளுக்கும் அனுசரணைகளுக்கும் வழிவகுக்கின்றன. பெரும் எண்ணிக்கையானதும் சிக்கல் நிறைந்ததுமான ஒழுங்குவிதி முறைகள் அவ் வழிமுறைகளை நிருவாகம் செய்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளவர்கள் தமது அதிகாரத்தினைப் பயன்படுத்தி தகாதமுறையில் பணம் உழைப்பதனை ஊக்குவிப்பது, ஊழல் காலதாமதம், குறைந்த உற்பத்தியாக்கத்திறன், திறமையின்மை, மூலவளங்களின் விரயம் மற்றும் அரசிற்கான வருவாய் இழப்பு என்பவற்றிற்கு வழிவகுக்கின்றது. அரசும் இதனால் வரி இறுப்பாளர்களுக்கும் ஒழுங்கு விதிமுறைகளின் நடைமுறைப்படுத்தலுக்கும் நிர்வாகப்படுத்தலுக்குமென மிதமிஞ்சிய செலவினை செய்யவேண்டியுள்ளது. இதனையும்விட மிகக் கடுமையாக மிதமிஞ்சிய ஒழுங்கு விதிமுறைகள் மூலதன உட்பாய்ச்சல்களை ஊக்கமிழக்கச் செய்து வெளிப்பாய்ச்சல்களை ஊக்குவிக்கின்றன.

**சிறப்புக்குறிப்பு - 4 (தொடர்ச்சி)**

## இலங்கையில் ஒழுங்கு விதிமுறைகளை தளர்வு செய்தல்

இலங்கையின் ஒழுங்குவிதி முறைகளை தளர்வு செய்யும் முலோபாயமானது தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒழுங்குவிதி முறைகளை தொடர்ந்து பேணும் வேளையில், நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதி முறைகளையும், சட்டங்களையும் அவற்றை வியாபாரத்திற்கு சார்பானதாக செய்வதற்காக மீளாய்வு செய்தல் வேண்டும். இந்தப் பின்னணியில் தேவைப்படும் ஆகக்குறைந்த ஒழுங்குவிதி முறைகள் முன்மதியுடைய நியமங்களை பேணல் மற்றும் பொதுமக்கள் நலம் சார்ந்த குறிக்கோள்கள் என்பன உள்ளிட்ட முக்கிய தொழிற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும். ஒழுங்கு விதிமுறைகள் அரசு பொருளாதார செயற்பாடுகளை வசதிப்படுத்தும் பங்கினையாற்றுவதற்கு அனுமதியளித்து அலுவலர்கள் தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரத்தை ஒப்படைப்பதை ஊக்குவித்து உறுதிப்படுத்துவதுடன் பொருளாதாரத்திலுள்ள ஒன்றுக்கொன்று போட்டியான பங்கேற்பாளர்களின் நியாயமானதும் சமமானதுமான பங்கினையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

இலங்கை பொருளாதார மற்றும் வர்த்தக தாராளமயப்படுத்தல், அமைப்புச் சீராக்கங்கள், தனியார் மயமாக்கல் உள்ளிட்ட அரசதுறை மீளவமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை 1977 இலிருந்து நடைமுறைப்படுத்தியது. தொலைத்தொடர்பூட்டல், போக்குவரத்து, காப்புறுதி, வங்கித்தொழில், வர்த்தகம் மற்றும் எரிசக்தி போன்ற துறைகளை ஆளுமை செய்கின்ற நடைமுறையிலுள்ள பெரும்பாலான ஒழுங்குவிதி முறைகள் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்காக பகுதியளவில் அகற்றப்பட்டுள்ளன அல்லது தளர்த்தப்பட்டுள்ளன. எனினும் நடைமுறையிலுள்ள சில ஒழுங்குவிதி முறைகள் செயற்றிறனற்றன. முழுமையாகவே பொருத்தமற்றன அல்லது தற்போதைய வடிவில் நிகழ்கால உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார சூழல்களுக்கு பொருத்தமற்றன. ஏதேனும் வியாபாரங்களை அல்லது கைத்தொழில்களை நிறுவும் மற்றும் கொண்டுநடாத்தும் செலவினை அதிகரிக்கின்றன. புதிய முதலீடுகளையும், பொருளாதார வளர்ச்சியினையும் தடுக்கின்றன என அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதி முறைகளின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள், செயற்றிறன் என்பன தொடர்பாக சீரான முறையில் பகுப்பாய்வு செய்து அவற்றுள் முற்றாகவே நீக்கிவிட வேண்டிய அல்லது குறைந்த செலவில் செயற்றிறன் வாய்ந்ததாக மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டிய ஒழுங்குவிதி முறைகளை இனங்காணல் அவசியமானதாகும். இது தொடர்பில் குறிப்பாக டுபாய், சிங்கப்பூர், கொங்கொங் போன்ற கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ள பல நாடுகளுடன் போட்டியிட்டு முதலீட்டினை ஈர்ப்பதற்காக இலங்கையின் போட்டித்தன்மை நிலையினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு 1990இன் 46ஆம் இலக்க கைத்தொழில் மேம்பாட்டு சட்டத்தின் கீழ் 2001, சனவரி 19இல் தளர்த்துவதற்கான குழுவொன்று அமைக்கப்பட்டது.

இக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய பணிகளாக போட்டித்தன்மையை கட்டுப்படுத்தி உயர்வானதும் அநாவசியமானதுமான இணங்கியொழுகுதல் செலவுகளை விதிக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதி முறைகளை மீளாய்வு செய்தல், அறிக்கையிடல் தேவைப்பாடுகள், அனுமதி பதிவுகளை வைத்திருத்தல், ஒப்புதல்களை வழங்குவதற்கு அரச அலுவலர்களுக்குள்ள தற்றுணிபு அதிகாரம் ஆகிய செயற்பாடுகளிலான அரச-தனியார்துறை ஒன்றின் மீதொன்றான செயலாற்றுகையை இழிநிலைக்கு குறைத்தல், ஒழுங்குவிதி முறைகளை செம்மைப்படுத்தி சந்தை அபிவிருத்தியை வசதிப்படுத்துவதற்காக இலங்கையிலுள்ள சந்தை மற்றும் சந்தை அபிவிருத்தி தொடர்பாக மீளாய்வு செய்தல், தொழிலொன்றை ஆரம்பிப்பதற்கு இருக்கும் தடைகள் இனங்கண்டு அகற்றுதல், தொழில்துறையிலிருந்து வெளியேற விரும்பும் நிறுவனங்கள் உரிய நேரத்திலும் சுலபமாகவும் வெளியேறுவதை உறுதிப்படுத்தல், உற்பத்தியாளர்களினால் பரஸ்பரம் இணங்கப்பட்டு உயர்விற;கான பேணல் கட்டுப்பாடுகள், தனியுரிமை என்பன காணப்படுமாயின் அவற்றை இனங்கண்டு நீக்குவதற்கான விதந்துரைப்புக்களை செய்தல், இலங்கை உலகச் சந்தையில் நுழைவதனை தடுக்கும் கொள்கை அல்லது நடைமுறை ரீதியான கட்டுப்பாடுகளை இனங்கண்டு நீக்குதல் என்பன அமைந்திருந்தன.

இம்முயற்சியினை நோக்கிய முதல் நடவடிக்கையாக இக்குழு நான்கு முக்கிய துறைகள் தொடர்பில் ஒரு வேலை நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பித்தது. அவையாவன, ஏனைய நாடுகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகளினதும் ஒழுங்குமுறைப்படுத்தல் மறுசீரமைப்பு செயல் முறைகளினதும் அனுபவங்களையும் அவற்றிலிருந்தான இலங்கைக்கான படிப்பினையும் மதிப்பீடு செய்தல், இலங்கையில் தொழில்துறைகள் எதிர்நோக்கும்

### சிறப்புக்குறிப்பு - 4 (தொடர்ச்சி)

முட்டுக்கட்டைகளை இனங்கண்டு அளவு செய்தல், இலங்கையிலுள்ள அனைத்து தொழில்துறைகளையும் பெரும்பாலான தனிப்பட்ட நபர்களையும் பாதிப்பிற்குள்ளாக்கும் இரு முக்கிய ஒழுங்குவிதி முறை ஏற்பாடுகளான சுங்கம் மற்றும் வரிவிதிப்பு என்பவற்றை மீளாய்தல், தேயிலை மற்றும் எரிசக்தி துறைகள் தொடர்பான ஒழுங்குவிதி முறைகள் ஏற்பாடுகளை மீளாய்வு செய்தல் என்பனவாகும். இவ்வேலை நிகழ்ச்சித் திட்டங்கள் முக்கியமான பல கண்டுபிடிப்புக்களை தோற்றுவித்துள்ளன. முக்கியமான பல கண்டுபிடிப்புக்கள் பின்வருமாறு. சிங்கப்பூர், கொங்கொங், டுபாய், மொரிசியஸ் ஆகிய நாடுகள் குறைந்தளவு மிகக் குறைந்த ஒழுங்கு விதிகளுடன் நன்கு செயலாற்றின. காலத்திற்கு ஒவ்வாத ஒழுங்குவிதி முறைகளும் அரசதுறை நிறுவனங்களினால் விதிக்கப்படும் நெகிழ்ச்சியற்ற நிருவாக நடைமுறைகளும் செலவுகளை அதிகரிக்கச் செய்து வர்த்தகம் மற்றும் கைத்தொழில்களின் வளர்ச்சியாற்றலை ஊக்கமிழக்கச் செய்கின்றன. இலங்கையின் நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிமுறைகளை நிறுவனங்கள் இணங்கி ஒழுங்குவதற்கான நேரம் மற்றும் பணச்செலவுகள் சராசரியாக செலவுகளை 9 சதவீதத்தினால் உயர்வடையச் செய்தவேளையில் இலாபம் 30 சதவீதத்தினால் குறைவடைந்தது. மோசமாக தொழிற்படுகின்ற காணி மற்றும் தொழில்சந்தைகள் இலங்கையில் முதலீடு மற்றும் வருமான உருவாக்கத்துக்கான இரு பாரிய தடைகளாக விளங்குகின்றன. காணி மற்றும் தொழிற்சந்தை ஒழுங்குவிதி முறைக்கு புறம்பாக அதிகரித்த அநாவசியமாக இணங்கி ஒழுகுதல் செலவினை விளைவிக்கும் ஏனைய ஏதுக்களாக வரியுடன் தொடர்புட்ட ஒழுங்கு விதிமுறைகள், சுங்க ஒழுங்குவிதி முறைகள், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் ஒழுங்குவிதி முறைகள், சுற்றாடல் ஒழுங்குவிதி முறைகள் என்பன விளங்குகின்றன. மின்சாரத்தினைப் பொறுத்தமட்டில் இத்துறையில் தனியார் பிரவேசிப்பதற்கும் கட்டுப்பாடுகள் மற்றும் அவ்வப்போது அரசினால் மேற்கொள்ளப்படும் மேலதிக தலையீடுகள் என்பன பாரிய வரவுசெலவுத்திட்ட மாற்றல்கள் மின்சாரத் தட்டுப்பாடு, மேலதிக தனியார் முதலீடுகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஊக்குவிப்புக்கள் என்பவற்றை விளைவித்துள்ளன. தேயிலை துறையானது ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் மற்றும் மேம்பாட்டு செயற்பாடுகளுக்காக கட்டாய வரிவிதிப்புக்களை எதிர்கொள்கின்றது.

மேலே கண்டறியப்பட்டவை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக இக்குழு 2002 பெப்புருவரியில் மாநாடொன்றை ஒழுங்கு செய்ததுடன், கலந்துரையாடலின் பின்னர் முக்கிய விதந் துரைப்புக்களை மேற்கொள்ளக் கூடியதாயிருந்தது. எனினும் இவ்விதந்துரைப்புக்கள் குறிப்பிட்ட சில துறைகளுடன் தொடர்புபட்ட சில ஒழுங்குவிதி முறைகளை மாத்திரமே மதிப்பாய்வு செய்து மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளுடனும் தொடர்புட்ட நடைமுறையிலுள்ள அனைத்து ஒழுங்குவிதி முறைகளையும் உள்ளடக்கவில்லை என்பதனை கருத்திற்கொள்வது அவசியமானதாகும்.

#### ஒழுங்கு விதிமுறைகளை மீளாயும் செயல்முறை

- அனைத்து ஒழுங்குவிதி முறைகளும் பொதுமக்களின் நன்மைக்காகவே இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவற்றினை சுயாதீனமாகவும் ஒளிவுமறைவு இன்றியும் பரீட்சிப்பிற்குள்ளாக்கும் வகையில் தொடர்ந்து செயல்படும் ஒழுங்கு விதிமுறை மீளாய்வு நிகழ்ச்சித் திட்டமொன்றினை அரசு நிறுவ வேண்டும்.

#### சுங்கம்

- வியாபாரிகளினால் மின்னியல் ஊடாக இணைப்பினை ஏற்படுத்திக்கொள்ளப் பொருத்தமான சுங்கம், இறைவரித் திணைக்களம், துறைமுகம் என்பவற்றிடையே ஒன்றோடொன்று இணைந்து செயல்படக்கூடிய வெளியாரினால் பணி வழங்கப்படும் மின்னியல் தரவு தகவல் முறையொன்று உடனடியாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
- சுங்கக் கட்டளைச் சட்டம் முழுமையாக மீளாய்வு செய்யப்பட்டு மீள எழுதப்படல் வேண்டும்.

#### காணிச் சட்டங்கள்

- வர்த்தக ரீதியாக ஆற்றல்மிக்க காணிகள் விடுவிக்கப்பட்டு வர்த்தக பெறுமதி விலைகளில் விற்பனை செய்யப்படல் வேண்டும்.
- 1997ஆம் ஆண்டின் உறுதிப்பத்திர சட்டத்தினை தொழிற்பாட்டில் இடவேண்டும்.
- 1972இன் வாடகைச் சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

#### தொழில் சட்டங்கள்

- தொழில் நீதிமன்றத்துக்கு செல்லாமல் குறித்துரைக்கப்பட்ட இழப்பீடுகளை கொடுப்பனவு செய்து ஊழியர்களை சேவையிலிருந்து நீக்குவதனை அனுமதிப்பதற்கு தொழில் சட்டங்கள் திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

### சிறப்புக்குறிப்பு - 4 (தொடர்ச்சி)

- மீள் பயிற்சியளித்தல், புதிய உபகரணங்கள் வழங்கல் என்பன வலுப்படுத்தப்பட்டு அவ்வாறு பதவியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் மீண்டும் தொழில்படையில் சேருவதற்கு உதவியளித்தல் வேண்டும்.
- இலங்கையின் சட்டரீதியான விடுமுறை நாட்களின் எண்ணிக்கையை ஏனைய நாடுகளின் எண்ணிக்கைக்கு இணைந்ததாக கொண்டுவரல் வேண்டும்.

**வரிவிதிப்பு**

- தேசிய பாதுகாப்பு வரியும் ஏனைய புரள்வு வரிகளும் இல்லாதொழிக்கப்பட்டு அதிகரித்த வீதமொன்றுடனாவது பொருட்கள் பணிகள் வரிக்குள் சேர்க்கப்படல் வேண்டும்.
- தனியாளுக்கான வரிக் கூற்றானது சிங்கப்பூரினைப் போன்று ஒரு பக்கத்திற்கு குறைக்கப்படல் வேண்டும்.
- பிரச்சனைகளை கண்டறிவதற்கான செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்களை குறிப்பாக வரிவிதிக்கத்தக்க இலாபத்தை வர்த்தக இலாபத்திற்கு இசைந்துசெல்லும் விதத்தில் மாற்றியமைக்கும் விதந்துரைப்பினை நடைமுறைப்படுத்தி வரிஇறுப்பாளர்களை எதிரிகளாகவன்றி வாடிக்கையாளர்களாகப் பார்க்கும் கலாச்சாரத்தினை பேணிவளர்க்க வேண்டும்.

**எரிசக்தி**

- குறுக்கு உதவுதொகை, விலைக்கட்டுப்பாடுகள், வரவுசெலவுத்திட்ட மாற்றல்கள் என்பவற்றை நீக்கல்.
- மின்சக்தி உருவாக்கம், பகிர்ந்தளிப்பு மற்றும் மின்கடத்தல் என்பவற்றில் ஈடுபடுவதற்கிருக்கும் கட்டுப்பாடுகளை நீக்கல்.
- முதலீடு மற்றும் போட்டித்தன்மை என்பவற்றை கண்காணிப்பதற்கு ஒழுங்குமுறைப்படுத்தல் வரைச்சட்டமொன்றை நிறுவுவதல்.
- பெற்றோலிய துறையிலான தனியார் துறையின் செயற்பாட்டின் மீது காணப்படும் கட்டுப்பாடுகளை களைதல்.
- உத்தேசிக்கப்பட்ட நிலக்கரியில் இயக்கப்படும் வலுப்பொறியினை அமைக்கும் வேலைகளையும் மேலும் மூன்று பொறிகளை நிறுவுவதற்கான அமைவிடங்கள் தொடர்பான சுற்றாடல் தாக்கம் பற்றிய ஆய்விற்கான ஆயத்த வேலைகளையும் உடனடியாக ஆரம்பித்தல் வேண்டும்.

**தேயிலை**

- தேயிலை சிறு உடமையாளர்கள் மற்றும் தூய இலங்கை தேயிலையை சந்தைப்படுத்தல் என்பனவற்றின் மீதான தாக்கங்களை கவனமாக கண்காணிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்ட விதத்தில் பலதரப்பட்ட தேயிலை வகைகளின் வர்த்தகத்தை அனுமதிப்பதற்காக தேயிலை இறக்குமதிகளை தாராளமயப்படுத்தல்.
- தேயிலை மேம்பாட்டு நடவடிக்கைகள் தேயிலை சபைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படலாகாது.
- தேயிலை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படலாகாது.
- வரி இறுப்பாளர்கள் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி பலதரப்பட்ட ஆராய்ச்சி பணிகளை வழங்குபவர்களை கொண்டு ஆராய்ச்சியினை தொடங்கக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

**இலங்கையில் ஒழுங்கு விதிமுறைகளை தளர்த்துவதற்கான வழிகாட்டுதல்கள்**

பொருளாதாரத்தில் பங்கேற்பவர்கள் பகுத்தறிவுடன் நடந்துகொள்ள வேண்டுமென கட்டாயப்படுத்துவதற்கு ஒழுங்கு விதிமுறைகள் அல்லது ஏதேனும் அழுத்தம் இல்லாதிருப்பின், ஒவ்வொரு பொருளாதார பங்கேற்பாளரும் தனது சுயதேவையைப் பூர்த்திசெய்வதற்கே மும்மரமாகச் செயல்படுவர். இது சிலவேளைகளில் ஏனைய பொருளாதார பங்கேற்பாளர்கள் மற்றும் சுற்றாடல் என்பவற்றிற்கு கடுமையான இடையூறினையும் பாதிப்புக்களையும் விளைவிக்கலாம். இதனால் இத்தகைய அசாதாரணமான சூழ்நிலைகளில் ஒழுங்கு விதிமுறைகளின் பயன்கள் முழுமையாகவே கட்டுப்பாடுகளை அகற்றிவிடுவதற்கு சார்பாக புறக்கணிக்கப்படல் ஆகாது. எனினும் குறிப்பிட்டதொரு நிலைமையினை கையாளுவதற்காக குறிப்பிட்ட காலப்பகுதியில் பிரகடனப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் வேறுபட்ட காலப்பகுதியொன்றில் அதே நிலைமையினை கையாளுவதற்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். ஏனெனில் தற்போது நிலவும் புறச்சூழ் நிலை அக்காலப் பகுதியில் நிலவிய புறசூழ்நிலைகளிலிருந்து வேறுபாட்டுக் காணப்படலாம். இதனால் அனைத்து ஒழுங்கு விதிமுறைகளையும் அகற்றுவது சாத்தியமற்றது என்பதனையும்

## சிறப்புக்குறிப்பு - 4 (தொடர்ச்சி)

நடைமுறையிலுள்ள சில ஒழுங்குவிதி முறைகளின் செயற்றிறனை மேலும் அதிகரிப்பதற்காக அவற்றை மறுசீரமைக்கும் வேளையில் தேவையற்ற மிகையான அல்லது பயனற்ற ஒழுங்குவிதி முறைகளை அவர்கள் முற்றாக நீக்கிவிட முடியும் என்ற உண்மையை கொள்கை வகுப்பாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பிட்டதொரு தொழில்துறையை மீளவும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு முன்னர் அகற்றப்பட்ட ஒழுங்குவிதி முறையினை மீள அறிமுகப் படுத்துவதற்கான நிலைமையொன்று எதிர்காலத்தில் எழுகின்றபோது அகற்றப்பட்ட ஒழுங்குவிதி முறையை மீண்டும் அறிமுகப்படுத்துவது சாத்தியமான தென்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளல் வேண்டும். நடைமுறையிலுள்ள அனைத்து ஒழுங்குவிதி முறைகளினதும் செயற்பாட்டு திறனையும் அவை பொருளாதாரம், தொழில்துறைகள் மற்றும் போட்டித்தன்மை என்பனவற்றின் மீது கொண்டிருக்கும் நேரடி மற்றும் மறைமுக தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக அத்தகைய ஒழுங்குவிதி முறைகளை காலத்திற்குக் காலம் மதிப்பாய்வு செய்தல் வேண்டும். இம்மதிப்பாய்வுகளை அடிப்படையாகக் கொண்டு தேவையற்றதும் மிகையானதுமான ஒழுங்குவிதி முறைகளை முற்றாக நீக்கிவிட்டு, செயற்றிறன் அற்றதும் செலவுமிக்கதுமான ஒழுங்குவிதி முறைகளை அவற்றிற்கான தேவைப்பாட்டினை பொறுத்து ஒன்றில் மறுசீரமைக்க வேண்டும் அல்லது நீக்கிவிட வேண்டும். அதேவேளை செயற்றிறன் மிக்கதும் அத்தியாவசியமானதுமான ஒழுங்குவிதி முறைகளை மட்டுமே தொடர்ந்தும் பேணல் வேண்டும். வெற்றிகரமான ஒழுங்குவிதி முறையை தளர்த்தலானது இறுதியில் அரசு அதன் மூலவளங்களை செயற்றிறனற்ற ஒழுங்கு விதிமுறைகளிலிருந்து மிகவும் செயற்றிறன் வாய்ந்த ஒழுங்குவிதி முறைகளுக்கு நகர்த்தவும் தொழில்துறை நிறுவனங்கள் பொருளாதார வினைத்திறனை எய்துவதற்காக அவற்றின் அருமையான மூலவளங்களை உற்பத்தியாக்கம் மிக்க புதிய கண்டுபிடிப்பு நோக்கங்களுக்காக நகர்த்தவும் வழிவகுக்கும்.

குறிப்பிட்ட இலக்கு ஒன்றினை ஏதேனும் வழிமுறையினால் எய்தும் சாத்தியம் இல்லாத சந்தர்ப்பத்தில் அவ் இலக்கினை எய்துவதற்காக புதிய ஒழுங்குவிதி முறைகளை அறிமுகப்படுத்தும் தேவையேற்படுகின்றபோது கொள்கை வகுப்பாளர்கள் முதலில் உத்தேசிக்கப்பட்ட ஒழுங்குவிதி முறைகள் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை அவற்றினை நடைமுறைப்படுத்தலுக்கு ஏற்படும் செலவு மற்றும் அவற்றினால் ஏற்படும் நன்மைகள் என்பவற்றின் நியதிகளில் மதிப்பீடு செய்தல் வேண்டும். பிரகடனப்படுத்தப்பட்ட அவ் இலக்கு எய்தப்பெற்றதன் பின்னர் அல்லது அத்தகைய இலக்கினை எய்துவதற்கு ஒழுங்குவிதி முறைகள் செயற்றிறனற்றதென உணரும்போது அவை சூழ்நிலையை பொறுத்து ஒன்றில் மறுசீரமைக்கப்படல் வேண்டும் அல்லது முற்றாக அகற்றப்பட வேண்டும். ஒழுங்குவிதி முறைகளை நிர்வகிப்பவர்கள் அவ் ஒழுங்குவிதி முறைகள் மூலம் எய்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள குறிக்கோளினை நன்கு அறிந்து வைத்திருப்பதுடன் உரிய நேரத்தில் உறுதியானதும் சரியானதுமான தீர்மானங்களை எடுப்பதற்கு தகுதிவாய்ந்தவர்களாகவும் இருத்தல் அவசியமாகும். அனைத்து தீர்மானங்களும் அவர்களால் அரசியல் அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக அன்றி தனியே பொருளாதார காரணங்களின் அடிப்படையில் சுயாதீனமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

செயற்றிறன் வாய்ந்த ஒழுங்குவிதி முறைகளை தளர்த்தும் செயன்முறையானது அரச பொது நிர்வாக பணியின் மறுசீரமைப்புடன் ஒன்றிணைத்து செல்லவேண்டும். பொது நிர்வாக பணியிலுள்ள அரச ஊழியர்களை உரிய முறையில் ஊக்குவிக்காவிட்டால் ஒழுங்குவிதி முறைகளை தளர்த்துவதற்கான விதந்துரைப்புக்களை நடைமுறைப்படுத்துவது கடினமாகும். இது குறிப்பாக ஒழுங்குவிதி முறைகளின் தளர்த்தல் முதல் சுற்றில் சமச்சீரற்ற நன்மைகளை தோற்றுவிப்பதுடன் அரச ஊழியர்கள் குறைந்தளவான அதிகாரங்களை ஏற்றுக்கொள்ளும்போது தொழில்துறைகளே முதலில் பயனடையும் பின்னணியில் தவிர்க்க முடியாததாகும். தொழில்துறை பெற்ற நன்மைகள் உறுதியான முறையில் பொருளாதாரத்தினை சென்றடைகின்றபோது இரண்டாவது சுற்றில் நாடும், நாட்டு மக்களும் பெரும் பயனடைவர்.

1. கூம். டி. 1739 மனித நடத்தை பற்றிய ஆய்வுநூல் மீள அச்சிடப்பட்டது.ஜே.எம். டென்ட் 1952

சிறப்புக்குறிப்பு - 5

## நிதியியல் துறையின் சீர்திருத்தங்களும் பலப்படுத்தலும்

இலங்கையின் மொ.உ.உற்பத்தியில் அரைப்பங்கிற்கும் மேலானவை தற்பொழுது பணிகள் துறையிலிருந்தே பெறப்படுகின்றது. அத்துடன் இத்துறை வளர்ச்சிக்கான அதியுயர் வாய்ப்பினையும் கொண்டுள்ளது. இத்துறையினுள் மிக முக்கியமானது நிதியியல் துறையாகும். நிதியியல்துறை அதன் நலனுக்காக மட்டுமன்றி பொருளாதாரத்தின் ஏனைய துறைகளின் தொழிற்பாடுகளை வசதிப்படுத்துவதில் அது கொண்டுள்ள வலுவான செல்வாக்கினாலும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆரம்பத்தில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட துறைகளுள் ஒன்றான நிதியியல் துறை தாராளமயமாக்கல் கொள்கைகளிலிருந்து பயனடைந்து கடந்த 20-25 ஆண்டுகாலப் பகுதியில் உறுதியாக விரிவடைந்துள்ளது. ஒழுங்கு விதிமுறைகளின் தளர்த்தல் இத்துறையில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களின் முதலீட்டினை ஊக்குவித்து இத்துறையின் விரிவாக்கத்திற்கு வழிவகுத்துள்ளது. 2000இன் (ஆண்டறிக்கையின் பகுதி I இலுள்ள நிதியியல் துறையின் உறுதிப்பாட்டுக்கும் செயல்திறனுக்குமான சீர்திருத்தங்கள் என்ற சிறப்புக் குறிப்பில் விபரிக்கப்பட்டுள்ளவாறு). நிதியியல் துறை தற்போது மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 8 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற வேளையில் கடந்த பத்து ஆண்டுகளில் இத்துறை 7.2 சதவீத ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதத்தினை கொண்டிருந்தது. இதுவரை அடையப்பட்டுள்ள மேம்பாட்டுக்கு மத்தியிலும் இத்துறை அதன் முழு உள்ளார்ந்த வளத்தினை அடைந்து பொருளாதார வளர்ச்சியை வசதிப்படுத்த வேண்டுமானால் இன்னும் எஞ்சியிருக்கும் குறைபாடுகள் மற்றும் விடயங்களில் உடனடிக் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

### வங்கித்தொழில் துறை

வங்கித்தொழில் துறை நிதியியல் துறையின் பாரிய கூறாக தொடர்ந்தும் விளங்கி வருகின்றது. வெளிநாட்டு வங்கிகளும் உள்ளூரில் ஒருங்கிணைக்கப்பட்ட தனியார் வங்கிகளும் வங்கித்தொழில் துறையின் செயல்திறனையும் செயற்பாட்டு ஆற்றலையும் மேம்படுத்துவதற்கு உதவின. எனினும் இரு அரச வங்கிகளும் வைப்புக்கள் தளத்தினதும் வழங்கப்பட்ட கொடுகடன்களினதும் அரைவாசிக்கு மேற்பட்ட வற்றிற்கு வகைகூறி சந்தையில் இன்னும் ஆதிக்கம் செலுத்துகின்றன. கடந்த காலத்தில் அரச வங்கிகளின் தொழிற்பாடுகள் பெரும்பாலும் வர்த்தக ரீதியான தேர்வுமுறையை அடிப்படையாக கொண்டமைந்திருக்காமையினால் அவற்றின் தொழிற்பாடுகளில் குறிப்பிட்ட சில திறமையின்மைகளை விளைவித்து முழு வங்கித்தொழில் துறையையும் பாதித்தது. எனவே இவ்விரு வங்கிகளினதும் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கான அவசரத் தேவையொன்று உள்ளது. அரசுடனான அவற்றின் எதிர்கால தொடர்புகளை கட்டுப்படுத்தி அவற்றின் வாணிப நடவடிக்கைகள் வர்த்தக ரீதியான தேர்வுமுறையை அடிப்படையாக கொண்டமைந்துள்ளன என உறுதிப்படுத்துவதே இச் செயன்முறையின் முக்கிய படிமுறையாக இருக்கும்.

எனினும் நிதியியல் துறையில் காணப்படும் குறைபாடுகள் தனியே இரு அரச வங்கிகளில் மட்டும் செறிந்திருக்கவில்லை. செயற்படாக் கடன் விகிதாசாரம் பெரும்பாலான வங்கிகளில் சார்பளவில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இத்துறைக்கான சிறிய வங்கிகள் பலவற்றினது பங்களிப்பு மிகச் சிறியதாகவோ அல்லது பற்றாக்குறையானதாகவோ காணப்பட்டது. விரைந்து மாற்றமடையும் இன்றைய வங்கித்தொழில் உலகில் இடர்நேர்வுகளை கட்டுப்படுத்துவதற்கு மிகவும் முக்கியமான தகவல் முறைமைகள் பல வங்கிகளில் போதுமானதாக இல்லை.

வங்கிகள் நடைமுறைச் சாத்தியமான கடன் அறவிடல் திட்டங்களை தீட்டுதல் வேண்டும் அல்லது மாற்றீடாக அறிவிடமுடியாக் கடன்களுக்கான ஏற்பாடு செய்வதற்கு அவற்றின் பங்குதாரர்களை மேலதிக மூலதனத்தையிடச் செய்தல் வேண்டும். பொதுவான நியமமொன்று அனைத்துக்கும் பொருந்தாதபோதிலும் இலங்கையிலுள்ள வங்கிகள் செயற்திறன் வாய்ந்த இடர்நேர்வு பகுப்பாய்வு மற்றும் இடர்நேர்வு கட்டுப்படுத்தல் பொதிகளை பெற்றுக்கொண்டு அவற்றின் சொந்த தேவைப்பாடுகளுக்கு பொருந்தத்தக்கதாக பின்பற்றல் வேண்டும்.

நிதியியல் பணிகள் செயல்திறன் மிக்கதாக வழங்கப்படுவதற்கு வங்கிகள் உறுதியானதாகவும் நிர்வாகத்தன்மை மிக்கதாகவும் இருத்தல் வேண்டும். இதனடிப்படையில் வங்கிகளுக்கான ஆகக்குறைந்த மூலதனப் போதுமை தேவைப்பாட்டினை அதிகரித்து எதிர்பாராத திடீர்மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து நிற்கக்கூடிய அவற்றின் ஆற்றலை பலப்படுத்துவது அறிவு பூர்வமானதாக இருக்கும். உலகளாவிய ரீதியில் தற்போது நிகழ்வதைப்

## சிறப்புக்குறிப்பு - 5 (தொடர்ச்சி)

போன்று வங்கிகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு இடம்பெற்று எதிர்காலத்தில் பாரிய, வலிமையான, ஆற்றல்மிக்க நிறுவனங்கள் தோற்றம் பெறுவதற்கு வழிவகுக்கலாம்.

### படுகடன் சந்தை

படுகடன் அல்லது நிலையான வருமானம் தரும் பிணையங்கள் சந்தை பெருமளவுக்கு அபிவிருத்தியடைந்த நிதியியல் சந்தைகளின் முக்கிய பாகமொன்றாக விளங்குகின்றன. இது வங்கிகளுக்கு மாற்றீடொன்றாக நிதியங்களின் மூலமாகவும், முதலீட்டுக்கான வழியொன்றினையும் வழங்குவதன் மூலம் நிதியியல் முறைமையில் போட்டியை அதிகரித்து முதலீட்டாளர்கள் மற்றும் சேமிப்பாளர்கள் ஆகியோரது விளைவுகளை அதிகரிக்கின்றது. இலங்கையின் படுகடன் சந்தை ஒப்பீட்டளவில் குறைந்த அபிவிருத்தியை கொண்டதாகும். அரசப் பிணைகளுக்கு ஒப்பீட்டளவில் தீவிரமானதொரு சந்தை காணப்பட்ட போதிலும் தனியார் படுகடன் சந்தை மிக சிறிதாகவே காணப்படுகின்றது. இந் நிலைமைக்கான முக்கிய ஏதுக்காரணியாக குறிப்பாக நீண்டகால நிதியங்களை அரசாங்கம் ஈர்த்துக்கொள்வதற்கு வழிவகுக்கும். தொடர்ச்சியான பாரிய வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையொன்று வாதிடப்படுகின்றது. நிலையான வருமானத்திலும் பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு ஏனைய பிணையங்களுக்கு குறியீட்டு வீதமாக தொழிற்படக்கூடிய நடுத்தரத்திலிருந்து நீண்ட காலத்துக்கான இடரற்ற விளைவு வளைகோடு தேவையென்றும் வாதிடப்படுகின்றது. எனவே சந்தை சார்ந்த நீண்டகால அரசப் பிணையங்களை வழங்கல், வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை குறைத்தல் என்பன சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் முன்னுரிமை பெறவேண்டிய விடயங்களாகும்.

நகரங்களிற்கு வெளியேயுள்ள முதலீட்டாளர்கள் போதிய அறிவினை கொண்டிராமை படுகடன் சந்தை அபிவிருத்தியை தாமதப்படுத்துவதற்கான மற்றுமொரு காரணமாக அமைகின்றது. வங்கிக் கிளைகள் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் வியாபித்திருப்பதுடன் பெரும்பாலான மக்கள் நன்கு அறிந்துள்ள ஒரு அம்சமாகும். ஆயினும் படுகடன் கருவிகள் பெரும்பாலான மக்களாலும் தொழில் நிறுவனங்களினாலும் புதியதொரு கண்டுபிடிப்பாகவே வழமையாக கருதப்படுகின்றது. எனவே நிதியியல் சந்தையின் இப்பிரிவினை பிரபல்யப்படுத்தும் பெரும் பொறுப்பு சந்தைப் பங்கேற்பாளர்களிடமே உள்ளது. இவ் விடயத்தில் கொடுகடன் தரமிடல் இந்த ஆண்டு அறிக்கையின் பகுதி I இலுள்ள 'தனியார் படுகடன் பிணையங்கள் அபிவிருத்தி செய்வதில் கொடுகடன் தரமிடலின் பங்கு' என்ற சிறப்புக் குறிப்பில் விபரிக்கப்பட்டுள்ளவாறு முக்கியவொரு பங்கினை ஆற்றமுடியும்.

மேலும் அரச பிணையங்கள் சந்தையின் அபிவிருத்தியை தடுக்குமொன்றாக தற்பொழுது இப் பிணையங்களின் வடிவில் வழங்கப்பட்டு கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுவது அமைகின்றது. இத்தாளினை அடிப்படையாகக் கொண்ட முறைமையினை 2003 நடுப்பகுதியளவில் பத்திரங்களற்ற செயற்றிறன் மிக்க பிணையங்கள் வர்த்தகப்படுத்தல் முறையொன்றுக்கு மாற்றியமைப்பதற்கான திட்டங்கள் செயல்பாட்டிலுள்ளன. பத்திரங்களற்ற பிணையங்கள் வர்த்தக முறைமை அரசப் பிணையங்களுக்கான மத்திய வைப்பகத்தை உள்ளடக்கியிருப்பதுடன் அதேநேரத்தில் மொத்த தீர்ப்பனவுகளை செய்யும் முறைமையுடன் ஒருங்கிணைக்கப்பட்டு விநியோகத்திற்கு எதிரான கொடுப்பனவுகளை வசதிப்படுத்தும்.

அரசப் படுகடன் பிணையங்கள் சந்தை மற்றும் முழு நிதியியல் முறையின் ஏனைய நிதி மாற்றல்கள் ஆகிய இரண்டையும் பாதிக்கின்ற தொடர்புபட்ட விடயமொன்றாக நாட்டின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை காணப்படுகின்றது. பொருளாதாரமொன்று மிகச் சிக்கலானதொன்றாகவும் நவீன தொழினுட்பங்களின் பயன்பாட்டில் பரீட்சியம் பெற்றதாகவும் அமைகின்றபோது அத்தகைய தொழினுட்பங்களுக்கு முற்றிலும் இசைவானதும் நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை வசதிப் படுத்துவதற்கு ஆற்றல் கொண்டதுமான பாதுகாப்பும் செயற்றிறனும் வாய்ந்த கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையினை விருத்தி செய்வது அவசியமாகியுள்ளது. எனவே மத்திய வங்கி பாரிய மற்றும் கால முக்கியத்துவம் பெற்ற பெறுமானக் கொடுப்பனவுகளை செயன்முறைப்படுத்துவதற்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையொன்றை நிறுவத் தொடங்கியுள்ளது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வர்த்தக முறைமை என்பவற்றுடன் இணைந்து தொழில்படும் வகையில் வங்கிக்குள் தன்னியக்கமாக்கப்பட்ட பொது பதிவேட்டு முறையினை (மேலதிக விபரங்கள் இவ் ஆண்டறிக்கையின் பகுதி I இலுள்ள கொடுப்பனவுகள் முறைமை சீர்திருத்தங்கள் என்ற சிறப்புக் குறிப்பில்) நிறுவுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நடவடிக்கைகள் ஏனையவற்றுக்கிடையே தற்போதுள்ள நாள் முடிவின் தீர்ப்பனவு செய்யும் முறையின் கொடுப்பனவுகள்

## சிறப்புக்குறிப்பு – 5 (தொடர்ச்சி)

மற்றும் தீர்ப்பனவுகள் இடர்நேர்வுகளை இல்லாதொழித்து அரச படுகடனின் நம்பகத் தன்மையையும் வர்த்தகப்படுத்தக்கூடிய வாய்ப்பினையும் அதிகரிக்கும்.

### ஒழுங்கு விதிமுறை

இந்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் இடம்பெறும் நிகழ்வுகள் நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தவதில் ஒழுங்குவிதியினதும், மேற்பார்வையினதும் முக்கியத்துவத்தினை மிகத்தெளிவாக வெளிக்காட்டியுள்ளன. நம்பகத் தன்மையே நிதியியல் துறை நீடித்து நிலைத்திருப்பதற்கு முக்கியமாகும். எனினும் அளவுக்கதிகமான ஒழுங்குமுறைப்படுத்தல் உண்மையில் நிதியியல் சந்தைகளை இல்லாதொழிக்கின்றது என்பதனை எடுத்துக் காட்டுவதற்கு குறிப்பிடத்தக்களவு சான்றுகளும் காணப்படுகின்றன. எனவே நடுநிலையான அமைப்பொன்று நன்கு சமனிலைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் முறையினை கொண்டிருத்தல் அவசியமாகும். இலங்கை நிதியியல் துறை பல ஒழுங்குமுறைப்படுத்துனர்களைக் உதாரணமாக மத்திய வங்கி, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, காப்புறுதிச்சபை என்பவற்றைக் கொண்டுள்ளது. போதியளவு ஒழுங்குமுறைப்படுத்தலை உறுதிசெய்வதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் மீது மேலதிக பழுவினை சுமத்தி செயல்திறனின்மையை அதிகரிக்கும் அநாவசியமான வேலை இரட்டிப்பாக்கலை தவிர்ப்பதற்காக இந்த நிறுவனங்கள் ஒன்றிணைந்து தொழிற்படுவது முக்கியமாகும். புற ஒழுங்குமுறைப்படுத்தல்கள் இச் செயல்முறையின் ஒரு பகுதி என்ற உண்மையை ஏற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும். ஒழுங்கமைக்கப்பட்டதும் நன்கு தொழில்படுகின்றதுமான சந்தையொன்று நிதியியல் துறையின் அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும். இதனால் சுய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் உள்ளக ஆளுகை ஆகிய நவீன ஒழுங்குமுறைப்படுத்தல் கோட்பாட்டிற்கான அடிப்படையான விடயங்களாக அமைகின்றன. சந்தைப் பங்கேற்பாளர்கள் தமது சொந்த செயற்றிறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை அமுல்படுத்தி நிறுவனங்களின் முகாமை அவற்றின் செயல்பாடுகளுக்கு வகைகூறச் செய்தல் வேண்டும். உலகளாவிய ரீதியிலான அண்மைய நிகழ்வுகள் வெளியாக கணக்காய்வாளர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்களையும் விபரமாக வெளிக்காட்டியுள்ளன.

ஒழுங்குவிதிகள் தொடர்பில் தகவல்களை வழங்குதல், பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களையும், விதிகளையும் பின்பற்றல் ஆகியன முன்னெப்போதும் இல்லாத வகையில் பெரும் முக்கியத்துவத்தினை பெற்றுவருகின்றன. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவங்களில் பொதுமக்களுக்கு தகவல்களை வெளிப்படுத்துமாறு கோருதல், உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிரந்தர நடைமுறைகள் விதிகளை பின்பற்றல் என்பன ஒளிவு மறைவற்ற தன்மையையும், பொறுப்பேற்கும் தன்மையையும் அதன் மூலம் நிதியியல்துறை உறுதிப்பாட்டினையும் ஊக்குவிப்பதில் பெரும் பங்காற்ற முடியுமென பல நாடுகள் உணர்ந்துள்ளன. இலங்கை தேவையான விடயங்களில் உரிய திருத்தங்களை செய்து இக் கொள்கைகளை பின்பற்றி பன்னாட்டு நியமங்களை ஏற்று பின்பற்ற வேண்டும்.

நிதியியல் துறையுடன் தொடர்புபட்ட சட்டவாக்கம் அவசர நடவடிக்கையை நாடிநிற்கும் மேலுமொரு விடயமாக காணப்படுகின்றது. பல ஆண்டுகளாக மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ள போதிலும் வங்கித்தொழில் சட்டம், நாணயவிதிச் சட்டம், செலாவணிக் கட்டுப்பாட்டு சட்டம் ஆகிய முந்திய சட்டவாக்கங்கள் தற்போதைய நிலைமைகள், போக்குகள், நடைமுறைகள் பயன்படுத்தும் குழுக்களின் தேவைப்பாடுகள் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையிலும் எதிர்கால தேவைகளுக்கான ஏற்பாட்டினை செய்யும் வகையிலும் திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

### மத்திய வங்கி

சட்டரீதியாக இலங்கை மத்திய வங்கிக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் அதனை இலங்கையின் நிதியியல் சந்தையில் முதன்மை பங்கினை ஆற்றுமாறு வேண்டிநிற்கின்றன. இது ஒழுங்குமுறைப்படுத்துனராகவும், மதியுரையாளராகவும், சந்தையை அபிவிருத்தி செய்பவராகவும், சந்தைப் பங்கேற்பாளராகவும் சிலவேளையில் ஒன்றுக்கொன்று முரண்படும் பல பாத்திரங்களையும் ஆற்றுகின்றது. மத்திய வங்கி அதன் பொறுப்புக்களை செயற்றிறன் வாய்ந்த முறையில் நிறைவேற்ற வேண்டுமாயின் அது நிதியிடல் சந்தையுடன் இணைந்து தொழில்படுவதுடன் அதன் பாத்திரத்தில் மாற்றங்களையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக வங்கியின் தொழில்பாடுகளில் நிச்சயமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. எனினும் விரைந்த உலக மயமாக்கல் மற்றும் நிதியியல் துறையின் மாற்றமடைந்து செல்லும் தேவைப்பாடுகள் என்பனவற்றின் பின்னணியில் சீர்திருத்தத்திற்கான பாரிய தேவை காணப்படுகின்றது.

## சிறப்புக்குறிப்பு - 5 (தொடர்ச்சி)

இத்தேவையை நன்கு முன்னறிந்து கொண்ட மத்திய வங்கி தன்னை நவீனமயப்படுத்திக் கொள்வதற்கான உள்ளக சீர்திருத்தங்களை ஆரம்பித்துள்ளது. இந்த நடவடிக்கைகளில் சில ஆண்டறிக்கை 2000இன் பகுதி II இலுள்ள "வங்கியை நவீனமயப்படுத்தல்" என்ற கட்டுரையில் விபரிக்கப்பட்டதுடன் இந்த ஆண்டறிக்கையின் பகுதி II இலுள்ள 'மத்திய வங்கியை நவீனமயப்படுத்தல்' என்ற சிறப்புக் குறிப்பில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது.

வங்கி அதன் மையத் தொழிற்பாடுகளான விலை உறுதிப்பாட்டினையும் நிதியியல் சந்தை உறுதிப்பாட்டினையும் எய்துவதில் பெருமளவு கவனம் செலுத்துகின்றது. இது விடயத்தில் நாணயக்கொள்கைக் குழுவொன்றும் நிதியியல் உறுதிப்பாட்டு குழுவொன்றும் வங்கிக்குள் நியமிக்கப்பட்டுள்ளன. இக் குழுக்கள் உரிய விடயங்கள் தொடர்பாக பரீட்சிப்பை மேற்கொண்டு பெருமளவு விவாதங்களை தோற்றுவித்து ஆளுனருக்கும், நாணயச்சபைக்கும் கொள்கை மதியுரைகளை வழங்கும். நடுத்தர காலத்தில் நாணயச்சபையின் அளவினை தற்போதைய மூன்று உறுப்பினர்களிலிருந்து ஐந்திற்கு அதிகரிப்பதற்கான திட்டமொன்று உள்ளது. இது பெருமளவு தொழில் தேர்ச்சியையும் அனுபவத்தையும் கொண்டுவந்து வங்கியின் தீர்மானமெடுத்தல் செயன்முறையை மேலும் மேம்படுத்துவதற்கு உதவும். நீண்ட காலத்தில் வங்கி அதன் மையமல்லாச் செயற்பாடுகளை உரிமை மாற்றஞ் செய்தல் அவசியமானதாகும். 2002 ஏப்பிறலில் வங்கி காசோலை தீர்ப்பனவு செயன்முறையை வர்த்தக வங்கிகளினால் முகாமை செய்யப்படும் 'லங்கா கிளியர்' என்ற கம்பனிக்கு உரிமை மாற்றல் செய்தது. மத்திய வங்கி இக் கம்பனியின் பங்குடமையில் 20 சதவீதத்தை தொடர்ந்து தன்வசம் வைத்துள்ளது. உரிமை மாற்றம் செய்யப்படவேண்டிய ஏனைய மிக முக்கிய விடயங்களாக அரசப்படுகடன் முகாமைப்படுத்தல், செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதி முறைகளை அமுல்படுத்தல், ஊழியர் சேம நிதியத்தின் நிதியங்களை முகாமைப்படுத்தல் என்பன விளங்குகின்றன. இத் தொழிற்பாடுகள் வேறுபட்ட சூழ்நிலையொன்றில் சட்டரீதியாக மத்திய வங்கிக்கு பாரப்படுத்தப்பட்டன. பொருளாதாரத்தில் இடம்பெற்றுள்ள மாற்றங்களை கருத்திற்கொள்கையில் வங்கி இத் தொழிற்பாடுகளை எதிர்காலத்தில் ஏன் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான முக்கியம் வாய்ந்த காரணங்கள் எதுவும் இல்லை.